# காரைநகர் மான்மியம்

F.X.C. நடராசா

காரை. செ. சுந்தரம்பிள்ளை

S. SUNDARAMPILLAI M.Phil., Ph.D.,
Principal - Emeritus
259/30, Nallaluxmy Avenue,
Jaffna.

S. Sundarampillai,
S. L. E. A. S.
Teachers' College,
KOPAY.

# காரைநகர் மான்மியம்

கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை
677/9, கடற்கரை வீதி
யாழ்ப்பாணம்

வித்துவான் F. X. C. நடராசா

S. Sundarampillai
S. L. E. A. S.
Teachers' College,
KOPAY.

வெளியீடு:

இரஞ்சனு பதிப்பகம்
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு–13.

காரைநகர் மான்மியம்

ஆசிரியர்: வித்துவான் F. X. C. நடராசா

முதலாம் பதிப்பு: தை '71

பிரதிகள்: 2000

விலை: ரூபா 5-00

அச்சுப் பதிப்பு: இரஞ்சனா அச்சகம்
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு-13 (இலங்கை)



இயம்பிடு ஆங்கிலக் கல்வியை
வியன்மிகு காரைநக ரதனில்
நயம்பெற உரைத்த நல்லாசான்
சயம்பர்க்கே இந்நூல் சமர்ப்பணம்

# பதிப்புரை

பெற்ற தாயைப் போற்றுவது கடமை; பிறந்த ஊரைப் பெருமைப் படுத்துவதும் அவ்வாறேதான்.

காரைநகர் தனக்கெனத் தனியானதோர் வரலாற்றைக் கொண்ட பெருநகர். ஈழத் தமிழகத்தில் வேறு எக்கிராமத்திற்கும் இல்லாத பல சிறப்பு காரைநகருக்கு உண்டு.

புவியியற் பான்மையில் காரைநகர் ஈழத் தமிழகத்தின் திலகமென அமைந்து விளங்குகின்றது. நாளை அது ஈழத் தமிழகத்தில் பெருநகராகவும் மாறலாம். அதற்கு வேண்டிய அத்தனை அம்சங்களும் காரைநகரின்கண் மண்டிக் கிடக்கின்றன. இந்த உண்மையினைக் கோடிகாட்டுவதாக அமைந்திருக்கின்றது காரைநகர் மான்மியம்.

மட்டக்களப்பு மான்மியம் மூலம் புகுந்த இடத்துப் பெருமையை உலகுக்கு எடுத்துக் காட்டிய வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா அவர்கள், காரைநகர் மான்மியம் மூலம் பிறந்த இடத்துப் பழைமையை உலகிற்கு எடுத்துக் காட்டிவிட்டார்.

காரைநகர் மான்மியத்தை அச்சியற்ற வேண்டுமென்ற எண்ணம் 1969 கார்த்திகைத் திங்களில் முளைவிட்டது.

அப்பொழுது என் கெழுதகை நண்பர் கோலாலம்பூர் ஆ. கந்தசாமி கொழும்பு வந்திருந்தார். அவரும் நானும் வித்துவான் அவர்களும் பொதுவிடயங்களைப்பற்றி கலந்துரையாடிக் கொண்டிருக்கும் நேரத்திலேயே காரைநகர் மான்மியம் பற்றிய பேச்சு எழுந்தது. எங்கள் கலந்துரையாடலிற் கருக்கொண்ட இம்முயற்சிக்குக் கந்தசாமி அவர்கள் திங்கள் தோறும் கடித மூலம் தூண்டுதல் கொடுத்தார். இன்று காரைநகர் மான்மியம் நூல் உருப்பெற்றுவிட்டது. அதனை நல்ல முறையில் வரவேற்க வேண்டிய பொறுப்பு தமிழ் கூறும் நல்லுலகிற்கு உரியது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

ஆ. நடராசா

இரஞ்சனா பதிப்பகம்,
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு-13.
14-1-'71

# தந்துரை

உலகமுவப்ப உயர்ந்தோங்கி நிற்கின்றது, காரைநகர். அனைத்துலகிலும் தனிப்பெருஞ் சீருடன் நிலவுகின்றது. உலக வரலாற்றில் உன்னத நிலையை வகிக்கின்றது. உலக மெங்கணுமுள்ள எந்த ஊருக்குமில்லாத பெருமையுடன் காரைநகர் திகழப் போகின்றது. பிறந்த ஊர் என்ற முறையில் அதனை மகிமைப்படுத்த வேண்டுமென்ற தன் மையில் வீண் புகழ்ச்சியாக நான் கூறவில்லை. தனி ஒரு இடத்தைப் பற்றிச் சரித்திரவரலாறு அடங்கிய நூல் ஒன் றேனும் இதுவரை உலகில் வெளிவரவில்லை. காரைநகர் தான் அவ்வித வரலாற்றுப் பெரும்பாக்கியம் பெற்ற சிற் றூர். ஆகவே பிறந்த பொன்னாட்டிற்கு என் கண்ணியமான சேவை இந்நூல் வடிவாகக் காட்சியளிக்கின்றது. பெரு மைப்படுகின்றேன். அளவுகடந்த மகிழ்ச்சியுமடைகின் றேன்.

மட்டக்களப்பு மான்மியம் என்ற நூலினைப் பதிப்பித்த ஞான்று இலங்கைச் சாகித்திய மண்டலம் அதன் தகுதி நோக்கி ஆயிரம் ரூபா பரிசிலாக அளித்தது. இதனையறிந்த என்னருமை நண்பர் க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்க ளும் மற்றும் அவர்களோடு சேர்ந்த என்னுற்ற நண்பர்க ளும் பெரியோர்களும் காரைநகரில் உபசார விழாவை நடாத்திப் பெருமைப்படுத்தினர்.

உபசார விழா நடாத்திய ஞான்று புகுந்த இடத்திற்கு நூல் வெளியிட்ட அதே பான்மையில் பிறந்த அகத்திற்கும் மான்மியம் அமைத்துத் தருதல் வேண்டுமென்ற அபிப்பிராயத்தைப் பலர் தெரிவித்தனர். இது நிகழ்ந்தது 1963ஆம் ஆண்டில்.

நிகழ்ந்து பல வருடங்களாகி விட்டன. ''காரைநகர் மான்மியம்'' வெளிவருகின்றது என்று விளம்பரமும் வரலாயிற்று. நூல் முற்றுப் பெறுமாறில்லை. முயன்று முயன்று பார்த்தேன். தகவல்கள் பெறுமாறில்லை. உள்ளூரில் வாழ்ந்திருப்பேனேயாகில் அவற்றைப் பெற்றிருக்கலாம். இருப்பதோ இருநூறு மைல்களுக்கப்பால். நாற்பது ஆண்டுகளாக வெளியகத்தில் நிவாசஞ் செய்துகொண்டு பிறந்த அகத்தைப்பற்றி எழுதுவது சாலாக்கருமம்; என்றாலும் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முயன்று கொண்டிருந்தேன்.

இது சந்தர்ப்பத்தில் இரஞ்சனா அச்சக உரிமையாளருடன் பழக்கம் ஏற்படலாயிற்று. சொந்தப் பிறவிபோன்ற மைத்துனர் திரு. ஆ. கந்தசாமி மூலம் அச்சக உரிமையாளர் திரு. ஆ. நடராசா அவர்களின் நட்புரிமை மேலும் வளரலாயிற்று. ''காரைநகர் மான்மியம்'' எழுதப்பட்டாலும் அதனை அச்சேற்றுவது எப்படியென்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தபோது அச்சேற்றும் பொறுப்புத் தமதாகுமென்ற உறுதியுரையை இரஞ்சனா அச்சக உரிமையாளர் திரு. ஆ. நடராசா அவர்கள் தந்தனர். தெரிந்த அத்தனையும் எழுதிவிட்டேன். தெரியாத அத்தனையும் விட்டுவிட்டேன். விடுபட்டமைக்குக் காரணம் அறியாமை. அறியாமை கொண்டு நூல்கள் எழுத முடியுமோவெனின் அற்றன்று. தகுதியுமன்று. எனினும் தொட்டுக் காட்டி நூலை வெளிப்படுத்தினால் தொட்டவை விட்டவை எல்லாவற்றையும் பூரணமாக்கி நிறைவுபெற்ற நூலாக வெளிவர வழி

வகுத்து வைத்தல் சாலச் சிறந்த தொண்டாகும் என்று மனதிற் கொண்டு இந்நூலை ஓரளவு நிறைவேற்றி வைக்கின்றேன்.

நூலுடன் காரைநகரின் படமொன்று சேர்த்தல் பொருத்தமானதெனஎண்ணி நண்பர் மு. பூபாலதுரை க. பரஞ்சோதி இவர்களிடம் உசாவினேன். இவர்களிருவரும் தேச அளவைத் துறையிற் கடமையாற்றுகின்றவர்களாக இருந்தபடியால் இலகுவிற் படத்தை அமைத்துத் தந்தனர்.

மகேச சர்மாவின் புத்திரன் யோகீசுவரன் தமது பிதாப் பிதாக்கள் வரலாறு அவர்கள் ஆக்கிய நூல் இவற்றைத் தந்துதவினர்.

நண்பர் வைத்தீசுவரக் குருக்கள் திருஉத்தரகோசமங்கையிலிருந்து வந்த பிராமணர்கள் வரலாற்று ஏட்டினையும் மற்றுந் தகவல்களையுந் தந்து உதவினர்.

இவ்வாருக இந்நூல் உருப்பெற நல்லுதவிதந்த இவர்களுக்கும் மற்றும் நண்பர்களுக்கும் நன்றியுடையேன்.

வீக்க தாக்க மின்றி எழுதினேன்; விருப்பு வெறுப்பு மின்றி எழுதினேன். வாசகர்கள் விருப்புடன் நோக்கும் தகவல் இல்லையெனின், கம்பரின் இலக்கிய வழியில்

நதியின் பிழையன்று நறும்புன லின்மை யற்றே
பதியின் பிழையன்று பயந்து நமைப்பு ரந்தாண்
மதியின் பிழையன்று மகன்பிழை யன்று மைந்த
விதியின் பிழைநீ யிதற்கென்னை வெகுண்ட தென்ருன்.

என்று விதந்தோதப்பட்டது போல, அவ்வகைத் தகவலின்மை என் பிழையன்று; வெகுளற்க.

எழுதக்கூடியவை யெல்லாம் எழுதிவிட்டேன். இன்னுங் குறிப்பிட்டும் விரித்தும் எழுதவேண்டிய விடயங்கள் இந்நூலிலமைந்துள்ள அதிகாரங்களைச் சார்ந்து இருக்கின்றன. விசேடமாக இடப்பெயர் விளக்கத்திலும் பெருமக்கள் வரலாற்றிலுஞ் சேர்க்கப்படவேண்டிய இடங்கள், பெரியார் நாமங்கள் உள. பெரியார்கள் பலர் இந்நூலில் மேலும் இடம் பெறவேண்டும். இக் குறையைக் காரைநகர் மக்கள் தீர்த்து வைத்தல் வேண்டும். காரைநகர் மண்ணிற் பிறந்தார் பெருமையை எடுத்துரைக்கும் பணி அம்மண்ணிற் பிறந்தார்க்கே உரியது. அப்பணியை பூரணமாகச் செய்து முடிக்குங் கடமையை அவர்களிடம் ஒப்படைத்து எனது தந்துரையை முடிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

53, மத்திய வீதி,
மட்டக்களப்பு.
14–1–1971.

F. X. C. நடராசா

# காரைநகர் மான்மியம்

# பொருளடக்கம்


| | |
|---|---|
| இடவிளக்கம் | 1 |
| இயற்கைத் தோற்றம் | 6 |
| பழமை | 10 |
| புதுமை | 54 |
| சமயம் | 58 |
| கல்வி | 66 |
| மடங்கள் | 72 |
| காரைநகர்ச் சபைகள் | 75 |
| இடப்பெயர் விளக்கம் | 77 |
| பெருமக்கள் | 86 |
| வகையுந் தொகையும் | 158 |

# இடவிளக்கம்

பண்டைக் காலந்தொட்டுக் ''காரைதீவு'' எனும் பெயராற் போற்றப்பட்டு வந்த இத்தீவானது அண்மைக் காலமாகக் ''காரைநகர்'' என்ற நாமத்தில் சீருஞ்சிறப்பு முற்ற பெருவாழ்வு மிகுந்த நிலப்பரப்பாக விளங்கிவருகின்றது. இத்தீவின் பழைமையும், பெருமையும் நோக்கி இப் பெயர் பெறலாயிற்றெனில் மிகையன்று.

இப்பெயர் 12–9–1923 தொட்டு ஆட்சியாளரின் அங்கீகாரத்துடன் வழங்கி வருகின்றது எனினும் முதன் முறையாக 1887இல் தட்சிண கைலாசபுராணம் பதிப்பித்த சிவசிதம்பர ஐயரால் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. சிவசிதம்பர ஐயரின் தந்தையாராகிய கார்த்திகேயப் புலவரியற்றிய திண்ணபுரத்திரிபந்தாதியின் காப்பிலும் காரைநகர் என்ற பெயருண்டு.

**திருவேளை யட்டவன் காரைநகருறுந் திண்ணபுரத்**
**தொருவேழை பங்கினன் மேலொரந் தாதியை**
**யோதுதற்குப்**
**பெருவேளை பூண்டு பிரார்த்திக்கு மன்பர் பிறவியெனுங்**
**கருவேழையுந்துடைத்தாளுங் கணபதி காப்பதுவே.**

வாணவாஸ் செல்லையா என்பர் பாடிய பாடலிலும் காரைநகர் என்ற பெயர் காணப்படுகிறது.

**ஊராற் பெருத்தது ஊர்காவல் யாழ்ப்பாணம் ஊர்**
**பருத்தி**
**சீராற் பெருத்தது சீதாரி மானிப்பாய் சேர் நவாலி**
**போரரற்பெரிய பெருத்ததும் கல்விப் பேருடனே**
**காராற் பெருத்தது காரைநகரெனக் கண்டிடுமே.**

நாவலந்தீவின் தென்னகத்தே கடலின் நாப்பண் இலங்கிக் கொண்டிருக்கும் ஈழவள நாட்டின் வடபால் அமைந்துள்ளது யாழ்ப்பாணக் குடாநாடு. இக்குடாநாட்டின் மேற்றிசையில் ஏழு பெருந் தீவுகள் செறிந்து கிடக்கின்றன. அவற்றுள் குடாநாட்டின் வெகு அண்மையிற் கிடக்குந் தீவே இந்தக் காரைதீவெனப்பட்ட காரைநகர் ஆகும். காரைச் செடிகள் நின்றமையாற் காரைதீவு எனப்படலாயிற்றென்பர். இஃது யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து பதின்மூன்று கல் தூரத்தில் இருக்கின்றது. நாற்புறமும் ஒரு காலத்திற் கடலாற் சூழப்பட்டிருந்ததெனினும் கற்றெருவினூற் குடாநாட்டுடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

கிழக்கேயுள்ள கடல் பரவைக் கடல். மற்றயவை ஆழமானவை. பரவைக் கடல் வழியாகவே மக்கள், ஆதி காலத்தே நடந்து வந்து குடா நாட்டினை அடைவர். இக்கடல் கோடைகாலத்தில் வற்றி வரண்டுமிருக்கும். இதிற் பிடிபடும் மீன்கள் சுவை மிகுந்தவை என்பர். பொன்னாலைக் கடல் என்றும் அழைக்கப்படும். கற்றெருவில் பாலங்கள் ஒன்பது இருக்கின்றன. கற்றெருவையும் பாலங்களையுஞ் சேர்த்துப் பொன்னாலைப் பாலம் என்பர். கற்றெருவின் நீளம் இரண்டேகால் மைல்.

காரைநகர் நாலரை மைல் நீளமும் மூன்றரை மைல் அகலமுமுடையது. பரப்பால் ஏறக்குறைய பதினெட்டு மைல் கொண்டது. கடல் மட்டத்திற் சற்று உயரமுடையது.

இதன் தென்பால் ஊர்காவற்றுறை எனப்படும் துறை முகம் அமைந்து கிடக்கின்றது. வடமேல் மூலையில் அஃதாவது கோவளம் என்ற குறிச்சியில் வெளிச்சவீடு—கலங்கரை விளக்கங் கட்டப்பட்டுண்டு.

வலந்தலை, களபூமி, பலிகாடு, கருங்காலி, தங்கோடை, கோவள்ம் முதலாம் பெருங் குறிச்சிகளையுடையது. இவற்றினிடையே சிறு சிறு குறிச்சிகளுமிருக்கின்றன.

குறிச்சிப் பெயர்கள் பலவற்றை நோக்குமிடத்து அவை காரணப்பெயர்களாகத் தோன்றினும் காரணந் தெரியுமாறில்லை. வலந்தலை என்பதன் பெயரிலுள்ள வலம், தலை, என்ற இரு சொற்களும் தமிழ்ப்பதங்களாக இருந்தும் பெயர்க்காரணம் தெரிவதற்கில்லை. எனினும் காரை நகரில் வலைந்தலை எனுங்கிராமமுண்டு என்பதைக் காட்டப் பாடிய தனிப்பாடல் ஒன்றுளது. அது வருமாறு;

**பத்தெழுத்தில் முதலிரண்டும் மரமதாகும்**
**பகர் நாலோ டாறீறும் கவலையாகும்**
**நத்திடு மூன்றோ டேழு மெட்டு நன்மை**
**நகர்ப்புறத்தில் மரமிருக்கும் நன்றாய்ப்பாரு**
**ஒத்தபடி ஈற்றிலே தலையைப் போடு**
**ஒவ்வொன்றாய் எடுத் தெடுத்து எனக்கேயோது**
**சத்தியமாய் வேறுஇடம் போகவேண்டாம்**
**சரசரென மறுமொழியைத் தருவீரே ***

களபூமி என்பதற்குப் போர்க்களம் என்று பொருள் கூறுவர். கடலையடுத்துள்ள கற்பூமி என்றும் பொருள்படும். இது கருத்துப் பொருத்தமுடைத்து.

---

* இச்செய்யுளின் பொருள் பத்தெழுத்துக்களையுடையது

| | | |
|---|---|---|
| முதலிரண்டும் மரம்: | காரை | 3 4 5 |
| நாலோடாறீறு: | கவல | காரை நகர் |
| மூன்றோடேழுமெட்டும்: | நலம் | 6 7 8 |
| நகர்ப்புறத்தில் மரமிருக்கும்: | காரைநகர் | வலந்தலை |
| ஈற்றிலே தலையைப்போடு: | தலை | |

பலிகாடு என்பதற்குப் பலிகொடுத்த காடு என்று பொருள் கூறுவர். இதற்கு ஆதாரம் எதுவுமில்லை. பாழ் காடு அதாவது அழிந்த காடு என்ற பொருள் சிறந்து தோன்றுகின்றது.

கருங்காலி, தங்கோடை இவற்றின் பொருள் விளங்குமாறில்லை. காரைதீவினையும் தங்கோடையில் வசித்த சைவன் சமைத்த உணவு பற்றி இக்காலப் புலவர் ஒருவர் பாடல் ஒன்றுளது. அது வருமாறு:

**காரைதீவிற் சோறும் கடுகடுத்த பச்சடியும்**
**ஊராருக் கன்றி மற்றையோர்க்குவப்பில்லை-பார்மீதில்**
**தங்கோடைச் சைவன் சமைத்த கறிசாதம்**
**எங்கே போய்க்காண்பேன் இனி.**

கோவளம்: இது தனித்தமிழ்ச் சொல். கடலுள் நீண்டிருக்கும் நிலப் பரப்பினைக் கோவளம் என்று சொல்வர். காரை நகரிலுள்ள இப்பகுதி கடலுள் நீண்டிருப்பது நோக்கத்தக்கது. இவ்விடம் காரைநகர் வடமேல் மூலையில் அமைந்திருக்க வடகீழ் மூலையில் தூம்பிற்பிட்டி என்றோர் இடமுண்டு. நீர்பாய்ந்தோடுமிடம் என்பதே இதன் பொருள். கோவளம், தூம்பில் என்ற இரு பெயர்களும் தனித்தமிழ்ச் சொற்களாக இருக்க மற்றையவை சிங்களச் சார்புள்ளவையாகக் காணப்படுகின்றன. தங்கோடை, பாலாவோடை, வியாவில், போசுட்டி, விளானை போன்றவையில் சிங்களச் சொற்கள் தொனிக்கின்றன எனினும் இவற்றிற்குரிய தமிழ்ச் சொற்களின் சிங்கள மொழி பெயர்ப்பு என்றே கொள்ள இடமுண்டு. *

கார்காத்த வேளாளர் பலர் பெருங்குடி மக்கள் எனத் தங்கள் குலப் பெருமை விளங்க இங்கு வாழ்கின்றனர். காரைக்காலிலிருந்து இங்குற்றனரெனவுங் கூறிக்கொள்

*யாழ்ப்பாணத்து இடப் பெயர்கள் யாவும் சிங்களமயமானவை என்பது "வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு" என்னும் நூலாசிரியரின் அபிப்பிராயமாகும்.

வர். உயர்குல மக்களுடன் பற்பல சாதி மக்களும் நெருங்கியும் பிரிந்தும் வதிகின்றனர். தாளாண்மை மிக்க வேளாண்மைத் தொழிலினரும் கற்றுத் தேறிய உத்தியோகத்தினரும் திரைகடலோடித் திரவியந் தேடும் வணிகரும் காரைநகரைப்பிறப்பிடமாகக் கொண்டுள்ளனர்.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட பலர் கல்வி, உத்தியோகம், வணிகம் என்று தாங்கள் மேற்கொண்ட தொழில்கள் காரணமாக இலங்கையின் வெவ்வேறு பாகங்களிலும் இந்தியா, மலாயா, இங்கிலாந்து போன்ற பிறதேசங்களிலுஞ் சென்று குடிபதிகளாகி பிறந்தகப் பெருமைக்குக் குந்தகம் விளைவிக்காது ஊரும் பேரும் போற்றச் சீரும் சிறப்புமுற்றுப் பெருவாழ்வு பெற்று வாழ்ந்தும் வருகின்றனர்.

*1901*ஆம் ஆண்டில் இதன் குடிசனத்தொகை *8850* ஆகும். பிற்றையாண்டுகளில் குடிசனம் பெருகிக்கொண்டே வந்துள்ளது. வறுமையால் நலிவோர் குறைவு; உறுபசி தீர்க்கவல்ல தனவந்தர் பலர் வாழ்கின்றனர். சிக்கனமாக வாழ்க்கை நடாத்தும் மத்திய வகுப்பினருக்குங் குறைவில்லை.

# இயற்கைத் தோற்றம்

இலங்கை மாதாவிற்கு யாழ்ப்பாணம் திலகமெனின் யாழ்ப்பாணத்திற்குக் காரைநகர் சூடாமணியெனின் அது மிகைபடக்கூறல் என்ற குற்றத்தின்பாற்படாது. நாலா பக்கமுங் கடலாற் சூழப்பட்டமையாற் காரைதீவு என்று பண்டைப் பெயர் பெற்ற இத்தீவு அம்புலிமானுக்கு ஆள னுப்பும் இருபதாம் நூற்ருண்டிலே ''காரைநகர்'' எனப் படலாயிற்றென்பது யாவருமறிந்த உண்மையாகும்.

இருபாற் பெயரிய இம்மூதூர் கடலாற் சமுத்திரத் தாற் சூழப்பட்டு நீரரண் பொருந்தி இயற்கைப் பாதுகாப்புடையதாயிருப்பினும் அந்த இயற்கையரணுக் குத் தலைவாசல் போல்ஊர்காவற்றுறையென்ற துறைமுக மும் ''ஆமன்கீல்'' என வழங்கும் கடற்கோட்டையும் தென்பால் விளங்குகின்றன. கடற்கோட்டை ஒல்லாந்தரி ஞற் கட்டப்பட்டது. துறைமுகமோ இயற்கையிலுருவா னது. உருமென முழங்கும் ஆழ்கடலிற் செல்லுங் கலங்களை நோக்கிக் கரைகாட்டக் கரையும் கலங்கரை விளக்கம் வானளாவி உயர்ந்தோங்கித் தன் பேரொளியை வரை போற் றிரையெழும்பும் ஆழியெங்கணும் பரப்பி நிற்கும்.

கடற்கரைகள் தோறும் வளிசெய் மணற்குன்றுகளை யும் சவுக்கு, தாழை இராவணன் மீசை போன்ற செடிகள் நிறைந்த ஓரங்களையும் தென்னை, பனை முதலாஞ் சோலை களையுஞ் காண்டல் கூடும்.

பெருந்தரைப்பாகத்தில் தரிசு நிலங்களுமுண்டு. தரவை நிலங்களுமுண்டு. பரந்துபட்ட வயல் வெளிகளைத் திரும்பின பாங்கர் எங்கணும் காண்டல் கூடும்.

தென்னஞ் சோலைகள் குறைவு; பனந்தோப்புகள் இனங்காட்டிச் சலசலப்புடன் காட்சியளிக்கும். கோவளப் பகுதியில் தென்னஞ்சோலைகள் அண்டியும் மண்டியும் கிடக் கின்றன.

வெளிகள் யாவும் வானம் பார்த்த வயல் வெளிகளா கக் காட்சியளிக்கும். மழைகாலத்தில் மாத்திரம் நெல்விளை விப்பர். சிறுபோகமாக எள்ளு, கத்தரி, குரக்கன், வெள்ளரி போன்ற பயிர்கள் செய்கை பண்ணப்படும். அங் குமிங்கும் சணலும் விதைக்கப்படும்.

கேணி, குளம், குட்டை என்பனவற்றை எங்குங்காண லாம். வீட்டுக்கு வீடு கிணறுகளிருக்கும். ஆழமற்றவை; நன்னீர்க்கிணறுகள் குறைவு எனினும் குடிநீர்த் தட்டுப் பாடு என்று சொல்லுமளவிற்கில்லை.

மணல் செறிந்த பூமியே தரையாகும். மணற்காடு, பெரியமணல் என்றபெயர்களும் குறிச்சிகளுக்கிருக்கின்றன. வயற்பூமிகள் முற்றும் களியாலானவையல்ல. களபூமிப் பகுதி பொதுவாகக் கற்பூமி எனினும் வளம் மிக்க வயல் வெளிகளுள்ள பிரதேசம் அதுவாகும். செம்பாட்டுப் பிர தேசம் தங்கோடையை அடுத்துத் தெட்டந் தெட்டமாகக் காணப்படுகின்றது. கோவளக்கரையோரங்களிற் முரு கைக் கற்பார்கள் வளர்ந்திருக்கும்.

மாரிகாலத்தில் மாத்திரம் மழை பெய்யும்; கோடை காலம்வரட்சியும் வெப்பமுமாயிருக்கும் எனினும்சோளகம் வீசும் போது சுகம் பேசும். வடகீழ்ப்பருவப் பெயர்ச்சிக்

காற்றுக் காலத்தில் மழைபெய்யும். இக்காற்றை வாடைக் காற்றென்பர். தென்மேற் பருவப் பெயர்ச்சிக் காற்றுக் காலத்தில் மழை பெய்வதில்லை. சித்திரைத் தூக்கம் ஆவணித் தூக்கம் என்று சொல்லப்படும் பவன அசைவின்மையும் நிலவும். சோளகம் பிறந்தால் உடம்புக்கு அலாதியாகவுஞ் சுகமாகவுமிருக்கும்.

மூலைமுடுக்கெல்லாந் தெருக்கள் ஓடும். பெருந் தெருக்களுமுள. கையொழுங்கைகளுக்கும் குறைவில்லை. வேலி வாசல்கள் சிக்காராகக் கட்டப்பட்டிருக்கும்.

கட்டிடங்கள் வரவரக் கூடிக் கொண்டே வருகின்றன. வீடு வாசல்கள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. கற்கட்டிடங்கள் எங்கணுங் காட்சிதரும். மாடகூடங்கள் இன்னுந் தோன்றவில்லை.

கோவில்களுக்கும் குளங்களுக்கும் பஞ்சமேயில்லை. தெருவிற்கொரு கோவில் என்றாற் புகழ்ச்சியல்ல. நித்திய நைமித்திய பூசைகள் உள்ள கோயில்கள் பல இருக்கின்றன. ஒரேயொரு சிவன்கோயில்; ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படுவதும் இக்கோயிலே. இக்கோயில் வடகீழ் பாலமைந்துள்ளதெனினும் காரைநகர் வாசிகள் யாவர்க்கும் பொதுவானது. பென்னம்பெரியது; பாரம்பரியம் மிக்கது. சைவ நன்மக்கள் பெரும்பான்மையாக வாழும் இவ்வூரிலே அமரிக்க மிசியோன்மார் கிறித்தவ விசுவாசிகளுக்காகக் கட்டிய வேதக்கோயில் ஒன்றுண்டு.

பெரியனவுஞ் சிறியனவுமான பாடசாலைகள் பல இங்குள. கல்லூரிகள் இரண்டு. மற்றையவை சிறிய பாடசாலைகள். இவற்றுள் அநேகமானவை அமரிக்க மிசியோன்மாராற் கட்டப்பட்டவை.

சயம்புச் சட்டம்பியாரற் கட்டப்பட்ட திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் ஆங்கிலப் பாடசாலை நாளானும் பொழுதானும் வளர்ந்து இந்துப் பள்ளிக்கூடமாகி இப்பொழுது இந்துக் கல்லூரியாக மலர்ச்சியுற்று விளங்குகின்

றது. நிலத்தானுங் கட்டிடத்தானும் இதனை வளப்படுத்திய வர், திரு. ந. நடராசா, கே.சி. அவர்களாவார். கல்வி வளமூட்டியவர் திரு. ஆ. தியாகராசா, எம். ஏ. அவர்கள்.

அமரிக்க மிசியோன்மாரால் கட்டப்பட்ட சாமிபள்ளிக்கூடம் சமயக்கிளர்ச்சி காரணமாக மூடப்படலாயிற்று. அதனிடத்திற்கு ஈடுமெடுப்புமாக யாழ்ரன் கல்லூரி தோன்றலாயிற்று. காரைநகர் வர்த்தகப் பெருமக்களின் பொருளுதவி கொண்டு இது நிறுவப்படலாயிற்று.

இந்துக் கல்லூரியும் யாழ்ரன் கல்லூரியும் கலவன் பாடசாலைகளாக அமைந்துள்ளன. பெண்களுக்கென்று தனித்தியங்கும் பெருங்கல்லூரி இங்கில்லாமை இவ்வூர் மக்களின் பண்பிற்கு இழுக்காகின்றதென்பர் பலர். பெண்களின் உயர்தரக் கல்விக்கு அத்தியாவசியகமான இத் தேவையைப் பூர்த்தி செய்வதில் மக்கள் இனிமேலும் தயங்கமாட்டார்.

இயற்கை வளன் காரணமாக இங்கு பிறந்து வளர்ந்த மக்களும் மனம் வாக்குக் காயங்களிலுஞ் சிறந்தும் பொலிந்தும் திடமுமுடையவர்களாக இருக்கின்றனர். இயற்றமிழ்ப் புலவர்களும் சட்ட நூல் வல்லுநரும் வானநூல்வல்லாரும் நாடும் ஏடும் புகழ வாழ்ந்துள்ளனர். மக்கள் வெகு முயற்சியாளர்கள்.

# பழைமை

பழைமைக்குப் பழைமையும் புதுமைக்குப் புதுமையும் என்ற பான்மையிற் காரைநகர் விளங்குகின்றது. பழம் பெருந்தீவு, பண்டைக்காலந் தொட்டு அறியப்பட்ட தீவு. சாதகக் கதைகளிற் பேசப்பட்ட தீவு. மணிமேகலையிற் பேசப்படும் மணி பல்லவமும் இத் தீவுதான் என்பதற்கும் ஆதாரங்கள் உள. பல்தேயசுபோதகர், மயில்வாகனப்புலவர், ஒல்லாந்தர் முதலியோரால் விதந்தோதப்பட்ட பல வரலாறுகளையுடையதும் இத்தீவு ஆகும்.

✤ புத்த சாதகக் கதைகளில் இதன் பெயர் வரலாறு கூறப்பட்டிருக்கிறது. காரை மரங்கள் நிறைந்திருந்ததால் காரைதீவு எனப்படலாயிற்றென்கின்றது, அதில் வரும் ஒரு கதை. அக்கதை வருமாறு.

காசியிலே சீருஞ்சிறப்புமுற்றோங்கிய பிராமணக் குடும்பம் ஒன்று; அக் குடும்பத்திலே அகித்தி என்பார் ஒருவர் பிறந்து வளர்ந்திருந்தார். தந்தை இறந்ததும் பெருஞ்

---

✤ The Jataka Stories Vol. V p. 150.

செல்வத்திற்கு வாரிசு ஆனுர். ஏழு நாட்களுள் தமது செல்வம் முழுவதையும் அறவழியிற் செலவு செய்தனர்; துறவி வேடம் பூண்டனர். தமிழ் இராச்சியமாகிய காவேரிப்பட்டினத்திற்கு வந்தனர். அங்கு உபவனமொன்றிலிருந்து தவஞ் செய்தனர்.

காவேரிப்பட்டினம் அவருக்கு உவப்பாக இருக்கவில்லே. ஆகவே ஆகாயமார்க்கமாகக் காரைதீவிற்கு வந்தனர். காரை மரத்தின் கீழ் குடிலமைத்துத் தவம் புரிந்தனர். நோற்ற நோன்பின் ஆற்றல் இந்திரனின் பளிங்காசனத்தை நடுங்கச் செய்தது. இது கண்ட இந்திரன் அங்குற்று அவரின் தவப் பெருமையையறிந்து பணிவிடை செய்து இந்திரலோகஞ் சென்றனன் என்று புத்த சாதகக் கதை கூறுகின்றது.

இலங்கையைப் பொதுவாக புத்த சாதகக் கதைகள் நாகதீபம் என்றே வழங்கும். நாகதீபம் எதுவாயினும் அதன் வடபாலுள்ளது காரைதீவு. காவிரிப்பூம்பட்டினத்திற்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதை மேற்போந்த கதை வலியுறுத்துகின்றது. பௌத்தர்களுக்கும் இத்தீவுடன் பெருந்தொடர்பு இருந்துண்டு என்பதற்கும் இக்கதை சான்ருகின்றது.

காரைதீவு என்று வழங்கிய இத் தீவிலேயிருந்த புத்த பீடிகையின் தரிசனத்தால் மணிமேகலே தன் பூர்வஞானம் பெற்றவள் என்று அவள் வரலாற்ருல் அறிகின்ரேம். இப் புத்த பீடிகை தேவர்கோனுல் இடப்பட்ட தென்கின்றது மணிமேகலே.

**"தேவர் கோனிட்ட மாமணிப் பீடிகை**
**பிறப்பு விளங்கவிர் ஒளியறத்தகை யாசனம்"**

மணி 8. 52

தேவர் கோன் இவ்வாசனத்தை இட்டவரலாறு யாது? மேலேக் கதையில் அகித்தி என்பார் செய்த தவ வலிமை காரணமாக இந்திரனிறங்கி வந்து சேவை புரிந்தனன்

என்று வருகின்றது. ஆகவே அப்போதுதான் இவ்வாச னத்தை இட்டிருப்பான் போலும்.

மேலும் இந்தப் புத்த பீடிகை பற்றி மணிமேகலை கூறு கின்றது. நாக நாட்டரசர் இருவர் அம்மணிப் பீடிகை யைப் பெற விரும்பித் தம்முட் பெரும் போர் புரிந்து வந்த னர். புத்த பகவான் இதனை உணர்ந்தனர்; அங்கு வந்து சேர்ந்தனர். தமக்குரியதென்று கூறி அதிலமர்ந்தனர். தரு மோபதேசம் புரிந்தனர். அரசர்களிருவரும் போர் மறந்த னர்; நண்பராயினர். உய்ந்தனர்.

**"கீழ்நில மருங்கின் நாகநாடாளும்**
**இருவர் மன்னவ ரொருவழித் தோன்றி**
**எமதீதென்று யெடுக்க லாற்றார்**
**தம்பெரும் பற்று நீங்கலும் நீங்கார்**
**செங்கண் சிவந்து நெஞ்சுபுகை யுயிர்த்துத்**
**தம்பெருஞ் சேனையொடு வெஞ்சமம் புரிநாள்**
**இருஞ்செரு ஒழிமின் எமதீதென்றே**
**பெருந்தவ முனிவன் இருந்தற முரைக்கும்**
**தரும பீடிகை."**

மணி 8. 54

இக்கதையினை இலங்கைச் சரித்திரமாகிய மகாவமிசம் சிறிது மாற்றங்களுடன் விரித்துரைக்கின்றது. நாகதீபத் தில் மகோதரன் சூலோதரன் என்ற அரசர்களிருவர். இவர்கள் மாமனும் மருமகனுமாவர். மணியிழைத்த சிங் காதனத்திற்காகப் பெரும் போரிட்டனர். இந்தப் பீடிகை எவ்வாறு இங்குவரலாயிற்று? தேவர்கோனிட்ட மாமணிப் பீடிகை போலும். அகித்தி என்பாருக்கு இந்திரனுலிடப் பட்டது போலும். புத்தபீடிகை என்று மணிமேகலையில் விதந்தோதப்பட்ட பீடிகையும் இது போலும்.

இந்தப் புத்த பீடிகைக்கே மணிமேகலை என்பாளை மணிமேகலாதெய்வம் இட்டுச் சென்றது போலும்.

**"பூங்கொடி தன்னைப் பொருந்தித் தழீஇ**
**யந்தரமாறு வாறைந் தியோசனைத்**

**தென்றிசை மருங்கிற் சென்று திரையுடுத்த**
**மணிபல்லவத்திடை மணிமேகலாதெய்வம்**
**மணியிழை தன்னை வைத்தகன்றது தானென்''**

மணி 6. 250

மணிபல்லவம் நாகதீபத்திலுள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டை நாகதீபம் என்று அறுதியிட்டுள்ளார் ஆராய்ச்சியாளர். யாழ்ப்பாணக் குடாநாடும் அதன் தீவுகளும் ஒருகாலத்தில் பரந்துபட்டுக் கிடந்த நிலப் பரப்புப் போலும். பின்னர் தீவுகள் தோன்றியிருத்தல் கூடும். அகித்தியின் காலத்திலே காரைதீவு புறம்பாகிவிட்டது. இந்தக் காரைதீவிலே இந்திரனுற் புத்த பீடிகை தாபிக்கப் பட்டதென்பதை மேலேயறிந்தாம். மேலும் இந்தக் காரைதீவுக்கும் காவிரிப்பூம்பட்டினத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்துண்டு. காரைதீவும் காவிரிப்பூம் பட்டினமும் ஒரு நேர் கோட்டில் வடக்குத் தெற்காக அமைந்து கிடக்கின்றன. தூரமுங் கிட்டத்தட்ட முப்பது யோசனை. ஆகவே மணிமேகலை கொண்டு சேர்க்கப்பட்ட இடம் காரைதீவு ஆகும். ஆகவே இக்கதைகள் மூலம் காரைதீவின் பண்டைப் பெருமை அறியப்படலாயிற்று.

புத்தசாதகக் கதை மூலமும் மணிமேகலை மூலமும் அறிந்த பண்டைய வரலாறுகளுக்குப் பிற்பட்ட காலத்தில் காரைதீவின் சங்கதி தெரிவதற்கில்லை. ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தில் ஒருசில குறிப்புகள் கிடைக்கின்றன.

வெடியரசன் சரித்திரத்தையே இங்கு நான் குறிப்பிடுகின்றேன். முற்குகர், குலத்தலைவனே வெடியரசன். இவன் யாழ்ப்பாணத்துக் கரையோரங்களிலும் விசேடமாகத் தீவுப்பற்றுகளிலும் அரசாட்சி செலுத்தி வந்தவன். இவன் பெயரால் இன்றும் நெடுந்தீவில் ஒரு கோட்டை வழங்கப்பட்டு வருகின்றது. காரைதீவில் இவன் இராசதானியிருந்தது என்பதற்கு அத்தாட்சியாக அங்கு தென்மேல் மூலையிலுள்ள ''இராசாவின் தோட்டம்'' என்ற பெயர் அமைந்து கிடக்கின்றது. இராசாவின் தோட்டத்தின் பக்கத்தில் வியாவில்✢ என்றோர் குறிச்சியுண்டு. இங்கு பழைமை மிக்கதோர் ஐயனுர் கோவிலிருக்கிறது. இந்த ஐயனுர் கோவில் வெடியரசனுல் நிறுவப்பட்டதென்

✢ பெருவெளி என்பதன் சிங்கள மொழி பெயர்ப்பு.

பர். முற்குகர் ஐயனுரையே தங்கள் குலதெய்வமாக வழி பாடு செய்வர். இன்றும் காரைநகர் சிவன்கோவில் பங்குனித் திருவிழாவில் நடைபெறும் ஏழாந்திருவிழா ஐயனுர் வேட்டைத் திருவிழாவாகும். இத்திருவிழாவுக்குரியவர்கள் அங்கு வதியும் முற்குகர் ஆவார்.

வியாவிலிலமைந்து கிடக்கும் ஐயனுர் கோவில் மிகவும் பழைமை வாய்ந்தது. இது போர்த்துக்கீசர் காலத்தில் இடிக்கப்பட்டது. இதன் கல் கொண்டே கடற்கோட்டை கட்டப்பட்டதென்பர். இது இடிபட்ட காலத்தே ஐயனுர் திரு உருவத்தைக் கோயிலிலிருந்து எடுத்து வந்து சிவன் கோயிலின் ஒருபாலமைந்து கிடந்த கேணியுள் மறைத்து வைத்தார் ஆண்டி ஒருவர். இந்த ஐயனுர் உருவந்தான் இன்று சிவன் கோவிலிற் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கின்றதென்பர். ஆகவே தான் இவரை ''ஆண்டி கேணி ஐயனுர்'' என்று இன்றும் அழைப்பர்.

வெடியரசனின் சரிதம் 14ம் 15ம் நூற்ருண்டுக்குரியதென்பர். மீகாமனுக்குத் தோல்வியுற்ற வெடியரசன் சந்ததியார் யாழ்ப்பாணத்தினின்றும் நீங்கிப் புத்தளம் மட்டக்களப்பு ஆதியாம் இடங்களிற் குடியேறினர் என்பர். இக் கதைக்கு ஆதாரமாகப் புத்தளத்தில் ஓர் காரைதீவும் மட்டக்களப்பில் இன்னேர் காரைதீவும் என்ற இடப் பெயர் காணப்படுகின்றது.

இனி, போர்த்துக்கீசர் காலத்திற்கு வருவோம். இங்கு போர்த்துக்கீசர் தமது ஆட்சியைச் செலுத்தி வந்தனர் என்பதற்கும், தமது மதகுருமாரை இங்கு இருத்திச்சத்திய வேதபோதகஞ் செய்து வந்தனர் என்பதற்கும் சான்றுகளிருக்கின்றன.

1545ல் யாழ்ப்பாணத்திற்கு வந்த பிராஞ்சிசு சவேரியார் தீவுப் பற்றிற்கும் போனதாகக் கதையிருக்கின்றது. சவேரியார் சங்கிலியைச் சந்தித்த பின்னர் கோட்டை பிடிபட்டதென்பர். ''சவுரியன் பறங்கி வந்து கோட்டையைப் பிடித்துக் கொடுத்தது''. என்ற பழமொழி இன்றும் வழக்கிலுண்டு. சவேரியார் காரைதீவில் அக்காலத்தில் வாழ்ந்த

மக்களின் மனந்திரும்பாத பிடிவாதக் குணத்தைக்கண்டு, தாம் நின்று பிரசங்கஞ் செய்த பூவரசு மரத்தைச் சபித்து எரித்தனர் என்பதற்குச் சான்றாக ''சவரியார் எரித்த பூவரசடி'' என்ற பிரயோகத்தை எடுத்துக் காட்டுவர். இது இப்படியிருப்பினும் போர்த்துக்கீசர் காலத்தில் காரை தீவிற் பல கத்தோலிக்க கோவில்கள் இருந்தன என்பதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன. இங்குள்ள சில கோவில் களை இன்றும் மக்கள் ''மாதாவின் கோவில்'' என்பர். களபூமியில் ஒன்றும் தங்கோடைப் பகுதியில் ஒன்றுமாக இரண்டு கோவில்கள் ''மாதாவின் கோவில்'' என்று வழங்கப்படுகின்றன. இன்று இவை சைவசமயக் கோவில் களாகப் பரிபாலிக்கப்பட்டு வரினும் அவற்றின் பழைய பெயரே நிலவுகின்றது. ''மாதாவின் கோவில்'' என்ற வழக்கு கத்தோலிக்க வேதத்திற்கே உரியது.

மேலும் களபூமியில் அமைந்து கிடந்த மாதாவின் கோவிலிற் கடமை புரிந்த சுவாமியார் ✝ ஒருவரை அவ ரின் வேலைக்காரன் கொலை செய்தனன் என்ற குறிப்பு ''இலங்கையில் யேசு சபைக் குருமார்'' என்ற நூலிற் காணப்படுகிறது. அதே நூலில் தங்கோடை, வடமூலை முதலாம் இடங்களிற் கோவில்களிருந்தன என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. ஆனால் இன்று இங்கு கத்தோலிக்கர் எவருமிலர்.

போர்த்துக்கேயரின் ஆட்சியை நினைப்பூட்டும் முகமாக இங்கு வாழும் சைவநன்மக்கள் இன்றும் தங்கள் மாட்டுக் குறியாகவும், போரடித்த நெற்குவியல் மேல் சாணக் குறியாகவும் குருசினைப்போட்டுவருகின்றனர். இதேபோல் ஒல்லாந்தரின் ஆட்சியை நினைப்பூட்ட விரதகாலத்து உண்டவாழையிலையைக் கூரையின் மேல் எறிகின்றனர். இவை மூடநம்பிக்கையாக மாறிவிட்டனபோலும்.

மேலும் போர்த்துக்கீசர் காலத்தில் யாக்கப்பட்ட ''திருச்செல்வர் காவியம்'' என்னும் நூல் பூலோகசிங்க

---

✝ **Father Francis Barbosa.**

அருளப்பநாவலராற் பாடப்பட்டதாகும். இவர் காரை தீவினைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வேதபோத கராய் இருந்த பல்தேயசு போதகர் காரைதீவைப் பற்றி யும் தமது நூலில் ✢ எழுதியுள்ளார்.

ஆமன்கீல் என்று வழங்கும் கடற்கோட்டையை ஒல் லாந்தர் போத்துக்கீசரிடமிருந்து கைப்பற்றிய போது காரைதீவிலிருந்து வெடிவைத்து வெற்றி கொண்டனராம்.

காரைதீவிற் கொண்டு வந்து சேர்த்த யானைகளைச் சோழமண்டலக் கரைக்கும் வங்காளத்திற்கும் ஊர்காவற் துறையிலேற்றியனுப்புவர்.

காரைதீவு சாயவேருக்குப் பேர்போனதென்று பல் தேயசு எழுதியது மாத்திரமின்றி ஒல்லாந்த தேசாதிபதி களும் எழுதியுள்ளார்கள். காரைநகரில் வாழும் மக்கட் சாதியினரில் ''வேர்க்குத்திப்பள்ளர்'' என்ற வகுப்பினர் இன்றும் வாழ்கின்றனர்.

ஒல்லாந்தர் மதக் கோயில் ஒன்று கல்லாற் கட்டப் பட்டிருந்ததாகப் பல்தேயசு எழுதியுள்ளார். இவர்களின் பாடசாலையில் 490 பிள்ளைகள் படித்தார்களென்றும் 1100 பேர் வேதானுசாரர்களாக இருந்தனர் என்றும் குறிப்பிட் டுள்ளார்.

காரைதீவிலும் புங்குடுதீவிலும் பாம்புகள் நிறைய இருந்தன என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இனி யாழ்ப்பாண வைபவமாலையிற் கூறியிருப்பதை நோக்குவாம்.

''அக்காலத்தில் காரைக்கால் முதலான பல இடங்க ளிலிருந்து பல குடிகள் வந்து வட்டுக்கோட்டையிலும் காரைதீவு முதலிய தீவுகளிலும் குடியேறினார்கள்.''

இஃதிவ்வாறு கூறியிருப்பதினால் காரைதீவில் வாழ்ந்த முதற் குடிமக்கள் காரைக்காலிலிருந்து வந்து குடியேறின

---

✢ **A true and Exact Description of the Great Island of Ceylon by Phillipus Baldaeus.**

வர்களென்றும், அது படியாற்றுன் காரைதீவு என்று ஆயிற்று என்றுங் கூறுவாருளர்.

மேலும் இந்நூலிற் கூறியிருப்பதாவது, ''சில காலத் துக்கு முன்னே உலகுகாவல முதலி என்னுமோர் உயர்குல வேளாளன் சோழநாட்டிலிருந்து இராச கலகத்திலேற் பட்டு இராச தண்டனேக்குத் தப்பி ஒளித்தோடி வந்து காரைதீவிலே களபூமி என்னும் இடத்திலே பெருஞ் செல் வனுயிருந்தான்.''

இவை சங்கதியால் இந்தியத் தென்னகத்திலிருந்து மக் கள் குடி கிளம்பி இங்கு வந்து குடியேறினர் என்பது கொள் ளக் கிடக்கின்றது.

வேளாளர்கள் அன்றிப் பிராமணர்களும் காரைதீவில் வந்து இறங்கிக் குடியேறினுர்களென்றும் யாழ்ப்பாண வைபவமாலே கூறுகின்றது.

அந்த நாட்களில் ஒரு பெருங்கலகம் உண்டுபட்டத ஞல் கலகத்துக்குப் பயந்து சில விட்டுணு சமயப் பிராம ணக் குடிகளும் சிவசமயப் பிராமணக் குடிகளும் உத்தர கோசமங்கை என்னுமிடத்திலிருந்து ஆணும் பெண்ணு மாகக் காரைதீவில் வந்திறங்கி அங்கே குடியிருந்தார்கள்.

மேற்படி வரலாற்றில் பொதிந்து கிடக்கும் உண்மை களைக் காரைநகர் சிவன்கோவிற் குருக்கள் பரம்பரையினரி டமுள்ள ஏட்டுப்பிரதி வலியுறுத்துகின்றது. அவ்வேட்டுப் பிரதி* கூறுவதாவது.

உ
சிவமயம்

திரு உத்தரகோசமங்கையென்னுந் திருத்தலத்திலி ருந்து மங்களேஸ்வர சுவாமிக்கு இப்போ பூசை செய்கிற வர்கள் முப்பத்திரண்டு குருக்கள்மார். அந்த முப்பத்தி ரண்டு குருக்கள்மாருக்கும் சோமசுந்தரச் சேதுபதி மகா

* காரைநகர் சிவன்கோவில் க. வைத்தீசுவரக்குருக்கள் இந்த ஏட்டி னைத் தந்துதவினர்.

ரர்சாவாகிய என்னல் குருக்கள்மார் முப்பத்திரண்டு பேருக்கும் ஒவ்வொரு செப்புப் பட்டயம் கொடுக்கப்படுகிறது. செப்புப்பட்டயத்திலெழுதப்படுகிற விஷயம் என்னவானல்.

## மங்களேசுவரர் துணை

**கலியப்தம் நாலாயிரத்து நானூறு. சாலிவாகன சகாப்தம் ஆயிரத்தி நூற்றைம்பத்தொன்று. பிரபவாதி வருஷம் முப்பத்திரண்டாவது விளம்பி வருஷம்* சித்திரை மாதம் இருபத்தைந்தாம் திகதியும் திங்கட்கிழமையும் சோதி நட்சத்திரமும் பூருவபக்கத் திரயோதசியும் மிதுன லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்தில்** எழுதப்படுகிற சர்தனம்.

திரு உத்தரகோசமங்கையென்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கின்ற மங்களேசுவர சுவாமி கோயிலுக்கு இப்போ முதற் பூசைப்பங்காளராக இருக்கிற காஞ்சிபுரம் கல்யாணசுந்தரக் குருக்கள் முதலாவதுமகன் சிவசுப்பிரமணியக் குருக்கள். முதல் ஸ்தானிகராகவும் மற்றவர்கள் தங்கள் தங்கள் பூசைப்பங்கு முறைப்படி ஸ்தானிகர்களாகவும் மகாராசாவாகிய என்னல் தத்துவங் கொடுக்கப்படுகிறது.

இன்று முதலாக சகலவிதமான காரியங்களையும் செய்யவும் செய்விக்கவும் தத்துவம் கொடுக்கப்படுகிறது. மேற்படி கோயிலிலேயுள்ள ஆபரணம் முதலாக சகல விதமான சாமான்களும் கஜனப்போக்கு முதலிய திறவுகோல்களும் மகாராசாவாகிய என்னலேயே கொடுக்கப்படுகிறது. இன்று தொடக்கம் மேற்படி கோயிலிலே பணிவிடை செய்கிறவர்கள் எல்லோரும் பூசைசெய்கிறவர்களும் ஸ்தானிகர்களுமாயிருக்கிற குருக்கள்மார் கட்டளைப்படி நடக்க வேண்டும். மேற்படி கோயிலுக்குரிய பூமியும் இவர்களாலேயே செய்விக்கப்பட வேண்டும். இவர்களுக்கு மங்களபுக்களமென்னுங் கிராமத்தை சீவியத்திற்காகக் கொடுக்கிறேன். இவர்களுக்கு கோயிலிலே சம்பளம் கிடையாது.

---

* கி. பி. 1358

இவர்கள் மங்களபுக்கள மென்னும் கிராமத்தை பூசைப் பங்கு ஸ்தானிகர் பங்குபோல முப்பத்திரண்டு பங்காகப் பகுந்துக் கொள்ளவேண்டியது. இவர்களினுல் ஒருகாலத்தி லும் கிரையத்திற்குக் கொடுக்கப்படாது. வாங்குகிறவர் களுக்கும் இராசசபையிலே தண்டம் விதிக்கப்படும். மற் றப் பணிவிடைகாரர்களுக்கும் இவர்களாலேயே சம்பளம் கொடுக்கப்பட வேண்டும்.

எப்பொழுதும் இவர்கள் மகாராசாவுக்கு வீபூதிப் பிர சாதம் அனுப்ப வேண்டியது. இந்தப் பட்டயத்தை சோமசுந்தரச் சேதுபதிமகாராசாவாகிய என்னுலும் என் னுடைய வம்சத்தினராலும் எந்தக்காலத்திலும் இராமநா தபுரத்தையும் திரு உத்தரகோசமங்கையையும் இராச்சிய பரிபாலனம் செய்கிற இராசாக்களாலும் இந்தப் பட்ட யத்தை அழிக்கப்படாது. மேற்படி கோயிலின் பூசைப் பங் காளராகவும் ஸ்தானிகர்களாகவும் தத்துவம் பெற்ற குருக்கள்மார்களுக்கு இந்தப் பட்டயமானது அவரவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் விபூதி உருத்திராட்சம் அழியாமல் இருக்கும் வரைக்கும் இந்தப் பட்டயமானது அழியாமல் மகாராசாவாகிய என்னுலேயே கொடுக்கப்படுகிறது.

இந்தப் பட்டயத்தை ஒருவராலும் அழிக்க முடி யாது. இதிலே என்னுடைய கையெழுத்தும் வைக்கிறேன்.

இப்படிக்கு

சோமசுந்தரச் சேதுபதி மகாராசா.

இதற்கு முதற் சாட்சி: எனது முதலாவது மந்திரி இராமசாமி.

இரண்டாம் சாட்சி: எனது முதலாவது சேனுதிபதி சொக்கலிங்கம்.

மூன்ருவது சாட்சி: எனது புரோகிதர் கிருஷ்ணசாமி ஐயர்.

இந்தச் சாட்சிகள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முப்பத்திரண்டுகுருக்கள்மார்களுக்கும் கொடுத்தேன். அவர் களும் தங்கள் கைச்சாத்திட்டு ஏற்றுக் கொண்டார்கள்.

இராமநாதபுரத்திலேயுள்ள திரு உத்தரகோசமங்கை தேவஸ்தானத்திலேயும் ஒரு பட்டயமிருக்கும். இவ்வளவு விஷயங்களும் சோமசுந்தரச் சேதுபதி மகாராசாவாகிய என்னுலேயே முப்பத்திரண்டு குருக்கள்மாருக்கும் எழுதிக் கொடுத்து இதோடு பட்டயமுங் கொடுக்கப்பட்டது. காஞ்சிபுரத்திலே இருந்து வந்த கல்யாணசுந்தரக் குருக்கள் முதலாவது மகன் சிவசுப்பிரமணியக் குருக்களாகிய நான் இந்தச் சரித்திரத்தை எழுதத் தொடங்குகிறேன்.

எனது தகப்பன் கல்யாணசுந்தரக் குருக்கள் காஞ்சிபுரத்திலே இருக்கிருர். எனது தம்பிமாராகிய ஏகாம்பரக் குருக்களும் சபாபதிக் குருக்களும் காஞ்சிபுரத்திலேயே இருக்கிருர்கள். நான் திரு உத்தரகோசமங்கையென்னும் இந்த இடத்திலே இருக்கிற சொக்கநாதக் குருக்கள். முதலாவது மகள் ஞானப்பூங்கோதை அம்மாளை விவாகம் செய்து இருபத்திரண்டு வருஷ காலம் முதற்பூசைப்பங்காளராக இருந்து வருகிறேன். எனக்கு முதற்பூசைப் பங்கு வந்த காரணம் நான் விவாகம் செய்து முதல்முறை இராசசபைக்குப் போனபோது இராசாவின் பேரிலே சமஸ்கிருதக் கீர்த்தனங்களைப் பாடிக்கொண்டுபோய் மகாராசா முன் வாசித்தேன். என்னுேடு வந்த மற்றவர்கள் மகாராசாவின் பேரிலே ஒன்றும் வாசிக்கவில்லை. நான் வாசித்தவுடன் மகாராசா சந்தோஷப்பட்டு நீர் சமஸ்கிருதம் நன்ருக வாசித்திருக்கிறீர்; மற்றவர்கள் நன்ருய் வாசித்ததாகத் தெரியவில்லை. ஆனதன்மையினுல் நீரே இன்றுமுதலாக உத்தரகோசமங்கையிலேயுள்ள மங்களேசுவரசுவாமி கோவிலுக்கு முதற்பூசைப் பங்காளராக இருக்கவேண்டியது என்று சோமசுந்தரச்சேதுபதி மகாராசா சொன்னுர்.

அந்தநாள் தொடக்கம் நானே முதற்பூசைகாரனுக இருந்துவருகிறேன். எனது மகன் (க) கார்த்திகேயக் குருக்கள்—இவர் மனைவி நீலாதாட்சி அம்மாள். (உ) திருச்சிற்றம்பலக் குருக்கள் — இவர் விவாகம் செய்யமுன் இறந்துவிட்டார்.

சோமசுந்தரச்சேதுபதி மகாராசவானவர் **சலியப்தம் (சச00) சாலிவாகன சகாப்தம் (கஉருக)பிரபவாதி வருஷம்**

முப்பத்திரண்டாவது விளம்பி வருஷத்திலே ஸ்தானிகர் வேலையையும் செய்யும்படியும் செய்விக்கும்படியும் ஒரு செப்புப்பட்டயம் குருக்கள்மார் முப்பத்திரண்டு பேருக்கும் எழுதிக் கொடுத்துத் தத்துவமும் கொடுத்தார். மகாராசா செப்புப்பட்டயம் கொடுத்த நாள் தொடக்கம் முப்பதிரண்டு குருக்கள்மாரும் பூசையையும் ஸ்தானிகர் வேலையையும் ஒழுங்காகவும் கிரமமாகவும் நடத்திவருகின்றோம். இவ்வளவும் சிவசுப்பிரமணியக் குருக்களாகிய என்னாலேயே எழுதப்பட்டது.

(க) கார்த்திகேசக்குருக்கள். இவர் மனைவி—நீலாதாட்சி அம்மாள். இவர் புத்திரர். (க) திருநீலகண்டக்குருக்கள் ஆதிசிதம்பரேசுவரக்குருக்கள் :—

இவர் மனைவி — மங்களநாயகி அம்மாள்.
இவர் புத்திரி — (க) குப்பம்மாள்.
இவர் புத்திரர் — (க) நடராசக் குருக்கள்.
இவர் மனைவி — மீனாட்சி அம்மாள்.

(2) ஏகாம்பரக் குருக்கள் — இவர் மனைவி சவுந்தரவல்லி அம்மாள். நடராசக் குருக்கள் இவர் புத்திரர்.

(க) விசுவநாதக் குருக்கள் — இவர் மனைவி அமிர்தவல்லி அம்மாள்.

(2) ஏகாம்பரக் குருக்கள் — இவர் புத்திரர் வைத்தியேசுவரக் குருக்கள். இவர் மனைவி — தெய்வயானை அம்மாள். விசுவநாதக் குருக்களாகிய எனது காலத்தில் முன்னே சொல்லப்பட்ட முப்பத்திரண்டு குருக்கள்மார்களில் நானும்வீட்டுக்காரர்சந்ததியின்றி அழிந்து போனார்கள். இப்போ இருப்பவர்கள் இருபத்தெட்டு வீட்டுக்காரரர். இருபத்தெட்டு வீட்டுக்காரருமே பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வருகிறோம்.

இப்படிப் பார்த்து வருங்காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. இந்தக் கலகத்திற்குப் பயந்து எனது சிற்றப்பா மகன் வைத்தியேசுவரக் குருக்களும் எங்

கள் பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் எங்களது அடுத்த பங்காளர் இரத்தினசபாபதிக் குருக்களிடம் ஒப்பித்துவிட்டு நாங்களிருவரும் எங்கள் சமுசாரமும் காஞ்சிபுரம் போய் அங்கே ஒரு வருஷம் வரையிலிருந்து மறுபடியும் திரு உத்தரகோசமங்கை வந்து பார்த்தபோது பதினறு வீட்டுக்காரரைக் காணவில்லை. இரத்தினசபாபதிக் குருக்களைக் கேட்டபோது அவர் சொன்னார் பதின்மூன்று வீட்டுக்காரர் இன்ன இடம் போனார்களென்பது தெரியவில்லை. மூன்று வீட்டுக்காரர் வைசூரியினாலிறந்து விட்டார்கள் என்பதாகச் சொன்னார். இப்போ இங்கே இருக்கிறவர்கள் பத்துவீட்டுக்காரர் என்பதாகவும் சொன்னார். இரண்டு வருஷ காலம் பன்னிரண்டு வீட்டுக்காரருமே, பூசைப்பங்கையும் ஸ்தானிகர் வேலையையும் பார்த்து வந்தோம். மறுபடி இராமலிங்கச் சேதுபதி மகாராசா முன்பாக நாங்கள் பன்னிரண்டுபேரும் போய் பூசையை விட்டுப் போனவர்களது பங்கையும் இறந்தவர்களினது பங்கையும் பற்றி முறையிட்டபொழுது மகாராசா அவர்கள் சரிவரப் பன்னிரண்டு பங்காகப் பகிர்ந்து எங்களுக்குள்ளே வியாச்சியமில்லாமல் மக்களம் புக்களம் முதலிய வயற்கிராமங்களையும் பன்னிரண்டு பங்காகவே பங்கிட்டுத் தந்தார்.

அந்தநாள் முதல் நாங்கள் பன்னிரண்டு வீட்டுக்காரருமே பூசையையும் ஸ்தானிகர் வேலையையும் நடத்தி வருகிறோம். இவ்வளவும் விசுவநாதக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது. எனக்கு வயது எண்பத்தாறு. எனது மகன் (க) காங்கேயக் குருக்கள். இவர் மனைவி பறுவதவர்த்தனி அம்மாள். இவர் புத்திரர் (க) ஆதிசிதம்பரேசுவரக் குருக்கள். இவர் மனைவி மங்களாம்பிகை அம்மாள். இவர் மகன் (க) மாணிக்கவாசக் குருக்கள். இவர் மனைவி கமலாம்பிகை அம்மாள். இவர் புத்திரர் (க) பரமேசுவரக் குருக்கள். இவர் மனைவி திருவேங்கிட அம்மாள். இவர் புத்திரர் பாலசுப்பிரமணியக் குருக்கள். இவர் மனைவி வாலாம்பிகை அம்மாள். இவர் புத்திரர் கனகசபாபதிக் குருக்கள். இவர் மனைவி நயனரோகணி அம்மாள். இவர் புத்திரி தர்மாம்பிகை அம்மாள். இவர் புத்திரர் வையாபுரிசுவரக் குருக்கள். இவர் மனைவி அன்னபூரணி அம்மாள். இவர் புத்

திரர் (௧) சுந்தரரேசுவரக் குருக்கள். இவ்வளவும் எனது பிதாமகர் குருசாமிக் குருக்களிடம் கேட்டு மங்களேசுவரக் குருக்களாகிய என்னாலேயே எழுதப்பட்டது.

எனது பிதா மாணிக்கவாசகக் குருக்களும் சுந்தரரேசுவரக் குருக்களின் பிதா வையாபுரீஸ்வரக் குருக்களும் நாங்களிருவரும் சிறுவர்களாயிருக்கும் போது இறந்துவிட்டார்கள். எனது பிதா மகர் குருசாமிக் குருக்களும் நாங்களிருவரும் எங்கள் பங்குகளைப் பார்த்து வந்தோம். நாங்கள் விவாகம் செய்யு முன் எனது பிதா மகர் குருசாமிக் குருக்களும் இறந்துவிட்டார். மறுபடியும் நாங்களிருவரும் எங்கள் பங்குகளை மிக ஒழுங்காகப் பார்த்து வந்தோம். சொற்ப காலஞ் சென்ற பின் நாங்களிருவரும் விவாகம் செய்ய நினைத்து காஞ்சிபுரம் சென்று நான் கந்ததாசக் குருக்கள் (௨) வது புத்திரி உமை அம்மாளையும் எனது மகன் முறையினராகிய சுந்தரேசுவரக் குருக்கள் கச்சியப்பக் குருக்கள், ஏகபுத்திரி சேஷ அம்மாளையும் விவாகம் செய்து அவ்விடம் சொற்ப காலமிருந்து மறுபடியும் உத்தரகோசமங்கை வந்து எங்கள் பங்குகளைக் கிரமமாயும் ஒழுங்காயும் நடத்தி வந்தோம்.

இப்படி நடக்குங் காலத்தில் இங்கே பெரும் கலகம் உண்டுபட்டது. கலகமானது ஒரு வருஷ காலம் தீராமலே நெடுக நடந்து கொண்டேயிருந்தது. இந்தக் கலகத்தை மங்களேசுவரச் சேதுபதி மகாராசவினாலும் அடக்கிக் கொள்ள முடியவில்லை. நாங்களும் கலகத்திற்குப் பயந்து மங்களேசுவரச் சேதுபதி ராசாவிடம் முறையிட்டபோது அவர் கவனிக்கவில்லை. நாங்கள் சொல்லியதை மகாராசாவும் கவனியாதபடியால் நாங்களொருவகையாலும் இங்கேயிருந்து பூசை செய்ய முடியாதவர்களாயிருக்கிறோம். சொற்ப காலம் இந்தத் தேசத்தைவிட்டு கலகம் தீர்ந்த பின் மறுபடி வருவோமென்று மனதில் நினைத்துக் கொண்டு நாங்கள் நாலுவீட்டுக்காரரும் மங்களேசுவரக் குருக்களாகிய நானும் சுந்தரரேசுவரக் குருக்களும் அருணாசலக் குருக்களும் இராமலிங்கக் குருக்களும் ஆகிய நாலுவீட்டுக்காரரும் மற்ற எட்டுக் குருக்கள்மார் வசம் எங்கள் பூசையை

ஒப்பித்துவிட்டு நாங்கள் நாலுபேரும் மற்றக் குருக்கள் மாரறியாதபடி எங்களிடத்திலே இருந்த ஆபரணம் முதலிய சாமான்களெல்லாவற்றையும் மங்களேசுவரசுவாமி கோயிலின் தெற்குப் பக்கத்திலேயிருக்கிற போக்கிலே அடக்கம் செய்து போக்கைக் கபாடபந்தனம் செய்து கொண்டு கோயில் மகாமண்டபத்தில் ஈசானிய பாகத்திலிருக்கும் தூணில் துவாரம் செய்து அதில் திறவுகோலை வைத்து அதன்மேல் அரக்குவைத்து அதில் யானைக்காசி முத்திரை செய்து வைத்துப் போட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரரேசுவரக் குருக்களும் அருணாசலக் குருக்களும், இராமலிங்கக் குருக்களும் அவரவர்கள் சமுசாரமும் பிள்ளைகளும் சுவாமிதரிசனம் செய்து அவ்விடத்தைவிட்டு நீங்கினோம்.

அவ்விடத்தைவிட்டு நீங்கும் போது எங்களெல்லோருக்கும் மனதிலே மிகுந்த துக்கமும், அழுகையுமாகவே இருந்தன. பிரயாணமாய்த் தெற்ப சயனம் வந்து வெற்றிலை மண்டபமடைந்து, இராமேசுரம் வந்து ஆறுமைல் தூரமுள்ள சேதுவையடைந்து, சங்கற்பமுடன் ஸ்நானம் செய்து கந்தமாதனத்தைச் தெரிசித்து சேதுமாதவரையும் சேதுகாவலனையும் தெரிசித்து வருகையில் சுந்தரரேசுவரக் குருக்கள் மனைவி சேஷம்மா வைசூரிநோயாலிறந்து விட்டாள்.

சுந்தரேசுவரக்குருக்கள் புநர்விவாகம் செய்ய மனமில்லாதவராய் இருந்தார். ஆறுமாசம்வரையில் ராமேசுரத்திலிருந்தோம். அப்போதும் உத்தரகோசமங்கையில் கலகந்தீரவில்லை. எவ்விடம் போகிறதென்று தெரியாமல் அதிகமான வியாகூலமாயிருக்கையில் வித்துவசிரோன்மணியும், சைவசமையப் பிரபுவும் தனவானுமாகிய ஒருவரைக் கண்டோம். ஒருவருக் கொருவர் யோக சேஷமங்களையும் ஊர் பெயரையும் விசாரிக்கும் போது வித்துவசிரோன்மணியும் சைவசமயப் பிரபுவுமாகிய தனவான் தன்னுடைய பெயர் முத்துமாணிக்க செட்டியாரெனவும் தாமிருப்பது யாழ்ப்பாணமெனவும் சொன்னார். யாழ்ப்பாணமென்ற தேசம் எந்த ஜில்லாவிலேயுள்ளதென்று விசாரித்தேன்.

அவர தற்கு இராவணனுல் இராச்சியம் செய்தஇலங்கை யிலே வடக்குப் பக்கத்திலேயுள்ள ஓர் தேசம் யாழ்ப் பாணமென்றும், பெயர் வந்த காரணம், இந்தியாவாகிய இங்கே சோழதேசத்திலே தொண்டை நாட்டிலுள்ள கவி வீரராகவனென்னும் குருடன், தனது மனைவியோடு கோபித்துக் கொண்டு இலங்கையிலே மணற்றி என்னும் இடத்திலிறங்கி செங்கடக நகரிலேயிருக்கிற செயதுங்கவர ராசசிங்கனெனப் பெயரையுடைய இராசனது சபையை டைந்து இராசாவின் பேரிற் பாடி அந்தப்பிரபந்தத்தை முடித்தான். இராசா யாழ்ப்பாடியின் பேரிற் சந்தோஷப் பட்டு அவனுக்கு மணற்றி என்னும் இடத்தையும், யானை, குதிரை, பல்லக்கு முதலிய சாமான்களையும் கொடுத்து அனுப்பினுர். யாழ்பாடி அரசனுக்குப் பல ஆசி கூறி அவற் றைப் பெற்றுக் கொண்டு மணற்றியை அடைந்து மணற்றி எங்கும் சுற்றிப்பார்த்து நல்லூருக்குச் சமீபத்திலே பாணன் என்னும் குளத்தையும் வெட்டுவித்து அவ்விடத் தில் தனது இராச்சியத்தை நடத்தினுன். தான் பரிசாகப் பெற்ற இடத்திற்கு ''யாழ்ப்பாணம்'' என்னும் பெயரை வைத்து அரசாட்சி செய்தான்.

அந்த யாழ்ப்பாணத்திற்கு வடமேற்குப்பக்கமாய் சமுத்திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலேயுள்ள ஊர் காவற்றுறைக்குச் சமீபமாக, இப்போ இருக்கிறவர் ராம சேதுமகாராசவின் மகன் குளக்கோட்டுமகாராசாவினுல் ''வியாவில்'' என்னுமிடத்திற் கட்டப்பட்ட ஐயனுர் கோயிற்பூசைக்கு குருக்கள்மாரை அழைத்துவரும்படிகுளக் கோட்டு மகாராசா என்னை அனுப்பினுர். குருக்கள்மாரை அழைத்தற்கு வந்து சேர்ந்தேன். என்று சொல்லியதைக் கேட்ட நான் யாழ்ப்பாணம் போவதே நல்லதென்று மன திலே தீர்மானம் செய்து கொண்டு என்னேடு வந்த மூவ ரையும் கேட்டேன். கேட்டதற்கு அருணசலக்குருக்களும் இராமலிங்கக் குருக்களும் தாங்கள் யாழ்ப்பாணம் வர வில்லையென்று சொல்லிவிட்டார்கள். சுந்தரேஸ்வரக்குருக் கள் என்னேடு யாழ்ப்பாணம் வருவதாகச் சொன்னுர். முத்துமாணிக்கஞ் செட்டியாருக்கு நான் சொல்லியது என் னவாஞல். நாங்களிருவரும் சம்சாரசகிதமாய் உம்மோடு

யாழ்ப்பாணம் வருகிறோம். நீர் வேறோரிடமும் குருக்கள் மாரை அழைக்கப் போகவேண்டாம் என்று சொல்லியதை முத்துமாணிக்கஞ் செட்டியார் கேட்டு மிகச் சந்தோஷப் பட்டு நான் உங்களையே அழைத்துப் போவதாக மனதிலே நினைக்க நீங்களாகவே யாழ்ப்பாணம் வருகிறோமென்று சொல்லியது எனக்கு மிகச் சந்தோஷமாயிருக்கிறது. ஆன படியால் காவிரிப்பூம்பட்டினத்துள்ள எனது தாய் தந்தை யரது தபத்தினாலும், இராமலிங்கப் பெருமானுடைய அனுக்கிரகத்தினாலும் நான் குருக்கள்மாருக்குத் தேடித் திரிந்து அலையாமல் நீங்கள் வருகிறோமென்று சொல்லியது மிகச் சந்தோஷம்.

நான் காவிரிப்பூம் பட்டினத்திற்குப் போய் எனது தாய் தந்தையரைக் கண்டு வருகிறேன். அதுவரையும் நீங்கள் இவ்விடத்திலிருக்கலாம் என்று சொன்னார். எங்க ளுக்குத் தான் வருமளவும் செலவுக்கு காசு தந்துவிட்டுப் போய்விட்டார்.

போய்த் தனது ஊரிலே இரண்டுமாசம் வரையில் நின்று மறுபடி இங்கே வந்தார். வந்தவுடன் சுந்தரேசு வரக் குருக்களைப் புனர் விவாகம் செய்து கொண்டே யாழ்ப்பாணம் வரவேண்டுமென்று சொன்னார்.

அதற்கவர் சம்மதியாமல் மறுத்தார். நானும் செட்டி யாரும் சொல்லியது நீர் கட்டாயம் விவாகம் செய்ய வேண் டியது என்று சொல்லி நானே விவாகச் செலவைத் தருகி றேனென்றும் செட்டியார் சொன்னார்.

சுந்தரேசுவரக்குருக்களும் இதற்குடன்பட்டுச் செட்டி யாரிடம் காசு வாங்கிக் கொண்டு நானும் எனது சம்சார மும் சுந்தரேசுவரக்குருக்களும் திருவையாற்றுக்குப் போய் அங்கே பஞ்சநதேஸ்வரக் குருக்களின் இரண்டாவது புத் திரி அமிருதாம்பிகை அம்மாளை விவாகம் செய்து அவ்விடம் ஒரு மாசம் வரையிலிருந்து மறுபடி இராமேசுவரம் வந் தோம்.

செட்டியாரைக் கண்டு யாழ்ப்பாணம் எப்போ போவது என்று கேட்டேன். அதற்கவர் பரிசாரகப் பிராம

ணரைச் சம்பாதித்துக் கொண்டு புறப்படுகிறதென்று சொன்னார். நான் மனதிலே யோசனை செய்து உத்தர கோசமங்கையிலே கலகமிருக்கிறபடியால் அங்கே போனால் பரிசாரகப் பிராமணரைக் கொண்டு வரலாமென்று சொன்னேன். அதைக் செட்டியார் கேட்டு நீங்களுமென் னுடன் வந்தால் இலகுவிற் கொண்டு வரலாமென்று சொன்னார்.

நானும் செட்டியாரும் உத்தரகோசமங்கைக்குப் போய் அங்கேயுள்ள நாலு வடகலை வைஷ்ணவப்பிரா மணர்களை சம்சாரத்தோடு அழைத்துக் கொண்டு இராமே சுவரம் வந்தோம்.

செட்டியார் எங்களெல்லோரையும் எங்கள் விடுதியில் விட்டு எங்களுக்குச் செலவுக்கு ரூபாய் தந்துவிட்டு சேது விலே போய்த் தீர்த்த மாடிக் கந்தமாதனத்தைத் தெரி சித்து இராமலிங்கப் பெருமானையும் பறுவதவர்த்தினி அம் மாளையும் தெரிசித்து வந்து எங்கள் விடுதியிலேயே இருந் தார். இரண்டுநாள் சென்ற பின் யாழ்ப்பாணம் போவோ மென்று யோசனை செய்தார். அப்படி யோசனை செய்து கொண்டிருக்கும்போது முத்துமாணிக்கம் செட்டியார் கப் பலில் கொழும்பு சென்றிருந்த தைரிய லட்சுமி என்று பெயர் தரித்த கப்பல் பாம்பன் வந்து விட்டதாக மாலுமி வழியாலறிந்து சந்தோஷமடைந்து என்னோடு நாங்களினி யாழ்ப்பாணம் போவதற்குப் புறப்படுவோமென்று சொன் னார். நானுமதற்குடன்பட்டு நானுமெனது சமுசாரமும் சுந்தரேசுவரக் குருக்களும் சமுசாரமும் வடகலை வைஷ்ண வப் பிராமணர்களும் அவர்களின் சமுசாரங்களும் பாம் பனை அடைந்தோம்.

செட்டியாரும் அவர் சமுசாரமும் பிள்ளைகளும் அவர் களது தேசத்திலிருந்து கொண்டு வந்த விக்கிரகங்களையும் கொண்டு பாம்பனை அடைந்தார். எல்லோரும் நித்யகர் மானுஷடானங்களை முடித்துக் கொண்டு காலை ஏழுமணிக் குக் கப்பலில் ஏறிப் பிரயாணமாய் சேதுக்கரையைக் கண்டு அது மறைந்த பின் கச்சைதீவு கண்டு அது மறைய பின் சஞ் சீவி என்னும் பொற் சீந்திலையுடைய நீடித்த ஆயுளைத் தாங்

கும் மானிடரைப் பெற்ற பூமியாகிய நெடுந்தீவு கண்டு அது மறைய நாகர்தீவு பப்பரவாகன் சல்லியன் குடியில் எழுந்திருக்கும் நாகபூரணி அம்மாள் கோயிலில் கோபுர சிகரத்தையும் நாகஞ் சுற்றிய கல்லையும் கருடன் சுற்றிய கல்லையும்* கண்டு பின் நாகேசுரன் கோயிலை கண்டு அதன் பின் அனலைதீவு கண்டு பின் ஏழுகடல் ஒருமித்துச் சேரும் சுளிக்குப் பாகமாயிருக்கும் எழுவதீவு கண்டு அதன்பின் பவளப்பூச்சிகளாலும் வருணராசன் முருகைக் கற்களாலும் உண்டுபண்ணிய காரைதீவு கண்டு ஊர்காவற்றுறை என்னும் துறைமுகத்தையடைந்து கப்பலை விட்டிறங்கினோம்.

ஊர்காவற்றுறையிலே நின்று கொண்டு செட்டியாரவர்கள் எங்கள் வரவையும் தனது வரவையும் ஏவலாளர்க

---

* கண்ணகி வழக்குரை: கப்பல் வைத்த காதை

சாற்றவேகேள் மீகாமா சமுத்திரயாத் திரையேகி
மாற்றரிய தனந்தேடி வருமளவிற் கடல்மேலே
காற்றுமறித் திடக்கப்பல் கரையடுக்கக் கல்லைபிட்டு
வேற்றொருவர் இறங்குமுன்னே விரையயான்
இறங்கினனே.

இறங்கியங்கே செலுமளவில் எண்ணரிய கெருடராசன்
மறங்கொண்ட நெஞ்சனுகி மறித்திருந்தான் பேரரவைத்
திறம்படவே அரவெனக்குச் சேர்ந்தபயமென்றது காண்
கறங்கொண்ட கெருடனுக்குக் கனகமீந்து காத்து
விட்டேன்.

கனகமீந்தே அரவினுயிர் காத்தபொழு தரவுசொல்லும்
நினைவெனக்கு மீதுன்பால் நீவேண்டும் வரங்களெல்லாம்
மனதின்படி தருவேன்காண் வணிகாவென விடை
கொடுத்தே
அனகரத்தின மணிவாங்க ஆள்விடுநீ என்றதுகாண்.

ஆளாக வுள்ளவரும் அவனிதலத் துன்னையன்றித்
தாளாண்மை வல்லவரும் தானுளரோ மீகாமர்
நாளாகச் செலுத்தாதே நாகராசன் தீவிற் சென்று
வாளாண்மை வல்லவனே மணிவாங்கித் தாருமென்றார்.

ளால் இராசாவுக்கு அறிவிக்க அரசர் சதுரங்க சேனைகளுடன் செட்டியாரையும் எங்களையுமடைந்து எங்களை முத்துப்பல்லக்கிலும் தானும் செட்டியாரும் முத்துச் சிவிகைகளிலுமமர்ந்து சதுரங்க சேனைகளுடனும், சகல வாத்தியங்களுடனும் இராசமாளிகையை அடைந்தோம். எங்களை முத்துப்பல்லக்கிலிருந்து இறங்கும்படி செய்து, தாங்களுமிறங்கி இராசமாளிகையை அடைந்து எங்களுக்கு வேண்டிய உபசரணைகள் செய்து வேண்டி திரவியங்களுந் தந்து மறுபடியும் எங்களை முத்துப்பல்லக்கிலேற்றி தாங்களும் முத்துச்சிவிகைகளிலேறி வியாவில் என்றும் வழங்கும் பதியையடைந்து புதிதாய்க் கட்டப்பட்ட ஐயனுர் கோயிலுக்கு ஈசான்ய பாகத்திலே எங்களுக்காகவும் பரிசாரகர்களுக்காகவும் கட்டப்பட்ட மடவளாகத்திலே எங்களை இறக்கித் தாங்களுமிறங்கி நாங்கள் ஸ்நானம் பூசை போசனம் முடித்தபின் அவர்கட்குமன்னங் கொடுத்து அவர்கட்கு வேண்டிய உபசரணைகள் செய்து அனுப்பினேம். சில நாட்கள் சென்ற பின் இராசா எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச் சொன்னுர். நாங்களிருவரும் இராச சபையை அடைந்து அரசர்க்கு முன்பாக இருந்து அதாவது முதல் நாளி கேரதாடனம் பண்ணினேம். நாளிகேரதாடனம் பண்ணும்போது கெவுளி சொல்லியது. கெவுளிச் சாஸ்திரம் பார்த்தோம். அது நல்லாயிருக்கவில்லை. கெவுளியின் பலனை அரசர்க்குச் சொன்னேம். இராசாவும் இன்றையிற் தினத்தை விட்டு இன்னெரு நாளைக்கு முகூர்த்தம் வைப்போமென்று எங்களை அனுப்பிவிட்டார்.

ஒருமாசம் சென்ற பின் மறுபடியும் எங்களை அழைப்பித்துக் கும்பாபிஷேக முகூர்த்தம் வைக்கச்சொன்னுர்கள். நாங்களுமவ்விடம் போய் அரசர் முகதாவில் முகூர்த்தம் வைக்க ஆரம்பித்து நாளிகேரதாடனம் செய்தோம். நாளிகேரம் கவிழ்ந்து போய் விட்டது. அதையும் அரசர்க்கறிவிக்க அரசர் வெகுவாய் யோசனை செய்துவிட்டு.

கோயில் கட்டி வெகுகாலமாகிவிட்டது ஆனபடியால் கும்பாபிஷேகம் செய்யாமலிருக்கிறதே துர்ச்சகுனமாய் வந்தது போலும். ஆனபடியால் முகூர்த்தம் வைப்பதே நல்

லது மறுபடி ஒரு தேங்காயெடுத்து உடைத்து வைத்து முகூர்த்தம் வைக்கத் தொடங்கினேம். அதாவது, பிரப வாதி ருரு. பிலவ வருடம் வைகாசி மாதம் உரு ந் திகதி வெள்ளிக்கிழமையும் திருவோண நட்சத்திரமும் சிங்க லக்கினமும் கூடிய சுபமுகூர்த்தத்திலே செய்யலாமென்று சொன்னேம். அதை இராசா கேட்டு முத்துமாணிக்கம் செட்டியாரை ஸ்தானிகராய் நியமித்து அவர் விருப்பப் படி கும்பாபிஷேகத்தைச் செய்யும்படி சொன்னார்கள்.

முத்துமாணிக்கஞ் செட்டியாருமிதற்குடன்பட்டு எங்க ளால் வைக்கப்பட்ட முகூர்த்தத்திலே கும்பாபிஷேகத் தைச் செய்து முடித்தார்கள். கும்பாபிஷேகமுஞ் செய்து பூசை உற்சவம் முதலியவைகளும் கிரமமாய் நடத்தி வந் தோம். வியாவில் ஐயனார்கோவில் கும்பாபிஷேகஞ் செய்த தினம் கலியப்தம் நாலாயிரத்து எழுநூற்றுமூன்று. சாலி வாகன சகாப்தம் ஆயிரத்தஞ்நூற்றுப்பதினெட்டு பிரப வாதி வருஷம் முப்பத்தைந்தாவது பிலவருடம்* வைகாசி மாசம் உரு ந் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சொற்பகாலஞ் சென்றபின் மகாராசா அவர்களால் எங்களிருவருக்கும் செப்புப்பட்டயம் தரப்பட்டன. அந் தச் செப்புப்பட்டயமாகிய சாதனத்திலே எழுதிய வாச கம் இலங்கையிலே யாழ்ப்பாணத்தில் வடமேற்குப் பக்க மாய் சமுத்திரத்தாற் சூழப்பெற்ற காரைதீவிலே வியா வில் என்னுமிடத்தில் இந்தியாவில் காவிரிப்பூம் பட்டினத் தில் இருந்து வந்து இப்போ காரைதீவிலே ஊர்காவற்று றையில் இருக்கிறவராம் சேதுமகாராசாவின் மகன் குளக் கோட்டு மகாராசாவாகிய என்னால் முற்சொல்லிய இடத் திற் கட்டுவிக்கப்பட்ட ஐயனார் கோயிலுக்குப் பூசகராயி ருக்கிற திரு உத்தரகோசமங்கையிலிருந்து என்னால் அழைக்கப்பட்ட மங்களேசுவரக் குருக்களுக்கும் சுந்தரேசு வரக் குருக்களுக்கும் எழுதுகிற சாதனம் கலியப்தம் நாலா யிரத்து எழுநூற்றைந்து. சாலிவாகன சகாப்தம் ஆயி ரத்தைநூற்றிருபது. பிரபவாதி வருஷம் முப்பத்தேழாவது

---

* கி. பி. 1661

சோபகிருது வருஷம் சித்திரை மாசம் ௧0 ந் திகதி வெள்ளிக்கிழமை† உத்தர நட்சத்திரம் கூடிய சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாதனம். மேலே சொல்லப்பட்ட குருக்கள்மார் இருவருக்கும் தங்களிஷ்டப்படி நித்திய நைமித்தியம் காமியம் முதலிய சகல கிரிகைகளையும் செய்யவும் செய்விக்கவும் புராணம் வாசிக்கவும் முத்துமாணிக்கஞ் செட்டியாற்குப் பிறகு இஸ்தானிகராகவும் கோயிலுக்குரிய சகல காரியங்களையும் செய்கிறவர்களாகவும் தங்களிஷ்டப்படி செய்விக்கிறவர்களாகவும் தத்துவம்பெறுகிறார்கள். இத் தத்துவமானது என்றும் எனது சந்ததியாராலும் அழிக்கப்படாது குருக்கள்மாருக்கும் அவர்கள் சந்ததி உள்ளவரைக்கும் மேலே சொல்லிய தத்துவமானது குளக்கோட்டுமகாராசா என்னும் பெயரையுடைய நான் எனது கையொப்பமிட்டுக் கொடுக்கிறேன். எனது கையொப்பம் குளக்கோட்டுமகாராசா முதலாஞ் சாட்சி சி. முத்துமாணிக்கஞ் செட்டியார். இரண்டாஞ் சாட்சி வைத்தியநாதபிள்ளை இராமுப்பிள்ளை. மூன்றாஞ் சாட்சி நாராயணபிள்ளை கந்தப்பிள்ளை. இவர்கள் முன்பாக இந்தப் பட்டயத்தை எழுதி முடித்து ஒரு பிரதியை நான் எடுத்துக் கொண்டு மற்ற இரண்டையும் இரண்டு குருக்கள் மாரிடமும் கொடுத்தேன்.

அவர்களும் தங்கள் கையெழுத்திட்டு ஏற்றுக்கொண்டார்கள். இராசா அவர்கள் தந்த செப்புப்பட்டயத்தை நாங்கள் பெற்றுக் கொண்டு கோயிற்பூசையும் மிக ஒழுங்காய் நடத்தி வந்தோம். சொற்பகாலஞ் சென்றபின் எனக்கு இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். முதலாவது புத்திரி மங்களாம்பிகை அம்மாள். இரண்டாவது புத்திரன் சூரியநாராயணக் குருக்கள். மறுபடியுமிருவரும் பூசை செய்து கொண்டுவந்தோம். எனது மகனுக்கு விவாகம்செய்கிறதற்கு இந்தியாவிற்குப் போய் இராமநாதபுரத்திலேயுள்ள சொக்கநாத கோயிலருச்சகர் வேதாரண்யேசுவரக் குருக்களின் இரண்டாவது மகன் சேதுமாதவக் குருக்களுக்கு நமது பெண்ணை விவாகம் செய்து விட்டு வந்தேன்.

---

† கி. பி. 1663

மறுபடியும் சிறிது காலஞ் சென்றபின் சுந்தரேசுவரக் குருக்களைப் பூசைக்கு வைத்துவிட்டு நானும் மனைவியும் மகனும் இந்தியாவுக்குப் போய் இராமநாதபுரத்தை அடைந்து மகனையும் மருமகளையும் அழைத்துக் கொண்டு கும்பகோணம் போய் உத்தரகோசமங்கையிலிருந்து என்னோடு புறப்பட்டுப் போன அருணாசலக் குருக்கள் மூன்றும் புத்திரி உருக்குமணியம்மாவை விவாகஞ் செய்து அவ்விடம் இரண்டு மாசம் வரையிலிருந்தோம். எங்களோடு உத்தரகோசமங்கையிலிருந்து புறப்பட்ட இராமலிங்கக் குருக்கள் எவ்விடம் போனாரென்று அருணாசலக் குருக்களைக் கேட்டேன். அவரதற்கு எனது சமாசாரம் கும்பகோணத்திலேயுள்ளது. நான் இங்கே வந்துவிட்டேன். அவரது தாய் செருத்தனியிலேயுள்ளவர். அவரும் சமுசாரமும் பிள்ளைகளும் அங்கே போய் விட்டார்கள் என்று சொன்னார்கள். மறுபடி நானும் சமுசாரமும் மகளும் மருமகனும் மகனும் மருமகளும் கும்பகோணத்தை விட்டுப் புறப்பட்டு இராமநாதபுரம் வந்து அங்கே மகளையும் மருமகனையும் அனுப்பி விட்டு நாங்கள் நால்வரும் யாழ்ப்பாணம் வந்தோம். இங்கே வந்து எங்கள் பூசைப்பங்கையுயும் ஊர்க் காரியங்களையும் நானும் எனது மகனும் பார்த்து வந்தோம். சுந்தரேசுவரக் குருக்களும் எங்களோடு ஒற்றுமையாய் தனது பங்கைப் பார்த்து வருகிறார். இப்படியாக இருபத்தைந்து வருடங்களாகப் பார்த்து வருகிறோம். இவ்வளவும் மங்களேசுவரக் குருக்களாகிய என்னால் எழுதப் பட்டது. எனக்கு இப்பொழுது வயது அறுபத்தெட்டு.

இப்படியாக நாங்கள் மூவரும் பூசையையும் ஊர்க்காரியங்களையும் பார்த்துவந்தோம். சில வருஷம் சென்றபின் எனது பிதா மங்களேசுவரக் குருக்கள் இறந்து விட்டார். நானுமெனது தமையனாரும் கோயிற்பூசை செய்துவரும் காலத்தில் தமிழ் இராச்சியம் போய்விட்டது. முத்து மாணிக்கம் செட்டியாரும் இறந்துவிட்டார். போர்த்துக்கீசர் என்னும் பறங்கியர் கிறிஸ்த வருஷம் கசாகஅ ஆண்டு காலயுத்தி* வருஷம் ஊர்காவற்றுறைக்கு வந்தார்கள். அநேக சைவசமையக் கோயில்களை இடித்துப் போட்டார்

---

* யாழ்ப்பாணவைபவமாலை பக்: 78

கள். இங்கேயுள்ள ஐயனார் கோயிலை இடிக்க வந்து கோபுர வாசலின் கதவைத் திறக்கப் போனார்கள். அவர்களின் வாயிலிருந்து இரத்தம் புறப்பட்டு இறந்துவிட்டார்கள்.

அந்தப் பயத்தினால் மறுபடி கோயிலை இடிக்க வர வில்லை. பறங்கியரசு வந்து 20 வருஷத்தின் மேல் பெரிய அம்மைநோய் வந்தது. அந்த நோயால் ஊர்களிலனேகம் பேர் இறந்துவிட்டார்கள். அந்த நேரத்தில் எனது தமையனார் சுந்தரேசுவரக் குருக்களும் அவர் மனைவியும் இறந்து விட்டார்கள். இங்கே வேறு குருக்கள்மார் ஒருவருமில்லை. நானும் வடகலை வைஷ்ணவப் பிராமணருமாக இருந்தோம். சுந்தரேசுவரக் குருக்களுக்கு பிள்ளையில்லாதபடியால் அவரது சந்ததி அவ்வளவில் அற்றுப்போயிற்று. அம்மைநோய் அகலுவதற்காக முத்துத்தாண்டவரென்பவர் மணற்காடு என்றழைக்கப்படும் இடத்தில் ஓர் முத்துமாரி ஆலயத்தை ஒரு மாசத்திற் கட்டி முடித்து என்னைக் கொண்டு கும்பாபிஷேகம் செய்வித்து திருவிழா வேள்வி முதலியவைகள் செய்து முடிய அம்மைநோயும் குறைந்து விட்டது. பறங்கிகள் தங்கள் சமயத்தின்படி எத்தனையோ ஆராதனை செய்தும் நோய் குறையவில்லை. ஆனபடியால் நாங்கள் செய்த வழிபாட்டைத் தடுக்க முடியவில்லை.

ஐயனார் கோயிற் பூசையையும் மாரி அம்மன் கோயிற் பூசையையும் நானே செய்து வருகிறேன். சொற்பகாலம் சென்றபின் எனக்கு கனகசபாபதிக் குருக்கள் பிறந்தார். பறுவதம் என்னும் பெண்பிள்ளையும் பிறந்தது. இவ்வளவும் சூரியநாராயணக் குருக்களாகிய என்னால் எழுதப்பட்டது.

எனது தகப்பன் சூரியநாராயணக் குருக்கள் இறக்கும் போது நானுமெனது சகோதரியும் தாயும் பரிசாரகப் பிராமணர்களுமேயன்றி வேறொருவரும் காரைதீவில் இல்லை. நானே இரண்டு கோயிற் பூசையையும் செய்து வந்தேன். கொஞ்சக் காலத்தின் பின் எனது சகோதரிக்கு கீரிமலையிலே உள்ள சுப்பிரமணியக் குருக்களின் மகன் மகாதேவக் குருக்களை மணம் செய்து வைத்தேன். நானும் அவரது மகள் பறுவத அம்மாளை விவாகம் செய்தேன். நானுமெனது மைத்துனனுமாக இங்கேயுள்ள கோயிற் பூசையை

யும் ஊர்க்காரியங்களையும் பார்த்து வந்தோம். பின்னர் போர்த்துக்கீசராச்சியம் போய் ஒல்லாந்தராச்சியம் வந்தது. அவர்கள் கிறீஸ்து வருஷம் 1658 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருஷம்* சித்திரை மாதம் ஊர்காவற்றுறையைப் பிடித்தனர். ஊர்காவற்றுறை பிடிபட்ட ஒரு மாசத்திற்குள் அநேக சைவசமயக் கோயில்களையும் இடித்துவிட்டு இந்த ஐயனார் கோவிலையும் இடிக்க வந்தபோது நாலுபேர் கண்தெரியாதவர்களாயும் இரண்டு பேர் நடக்க மாட்டாதவர்களாயும் போனார்கள். இது நடந்து கொஞ்சக்காலத்தின் பின் எங்களைப் பூசை செய்யாது தடுத்தனர். அவர்கள் போனபிற்பாடு விக்கிரகங்கள் எல்லாவற்றையும் நில் அறையில் வைத்து இரகசியமாய்ப் பூசை செய்து வரும் போது ஒரு நாள் வந்து கோயிலையும் இடித்து கடலுக்குள்ளே ஓர் கோட்டையும் கட்டினார்கள்.

அதன் பின் நில அறையில் விக்கிரகங்களுக்குப் பூசை செய்வதை அறிந்து சுவாமி எல்லாவற்றையும். கோயிற் சாமான்கள் சகலதையும் கிணற்றுக்குள்ளே போட்டு ''வீரன்'' என்பவனையும் வெட்டிப் பலிகொடுத்துப் போய் விட்டார்கள். தேரையும் வாகனங்களையும் கடலிலே விட்டு விட்டார்கள். ஆபரணங்களெல்லாவற்றையும் எடுத்துக் கொண்டார்கள்.

இப்படி இருக்கும் காலத்தில் எனக்குப் பிள்ளை பிறந்தது. அவர்களுக்கு அறிவிக்க வேண்டிய கட்டளைச் சட்டமிருப்பதனால் அவர்களுக்கு அறிவித்தேன். அவர்கள் வந்து தண்ணீர் தெளித்து ''தாமன்'' என்னும் பெயர் வைத்துப் போய் விட்டார்கள். குருக்கள் என்று பெயர் வைக்கப் படாதெனவும் சொன்னார்கள். நாங்கள் சாதியில் குரு இருக்கிறதேயன்றி மற்றச் சாதியில் இருக்கப்படாதெனவும் சட்டம் வைத்து இருந்தபடியால் எங்களுக்குரிய கிரி

---

* யாழ்ப்பாண வைபவமாலை: ''இப்படிச் சாலிவாகன சகாத்தம் 1571 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் ஆனி மீ 1ங் தினத்திலே யாழ்ப்பாணம் உலாந்தேசர் ஆட்சியின் கீழாயிற்று'' சாலிவாகன சகாத்தம் 1581 என்பதேசரி. அது ஆண்டுதான் ஏவிளம்பியாகும்.

யைகளை இரகசியமாய் முடித்து ''தாமோதரஐயர்'' எனப் பெயர் வைத்து வளர்த்து வந்தேன்.

சைவசமயம் என்ற பேச்சு அவர்களின் காதிற் கேட்கப்படாது. வீபூதியும் பூசப்படாது. நான் பகலில் எங்களுக்குரிய காணிகளை உழுதுவித்து வேலை செய்து பொழுது போனபின் வீடுவந்து இரகசியமாய் வீட்டுக்குள் இருந்து பூசை முதலியவைகளை முடித்துப் பின்பே சாப்பிட வேண்டும். இந்தக் கொடுமைகளைத் தாங்க ஏலாது பரிசாரகத்திற்கு வந்த வடகலை வைஷ்ணவப் பிராமணர்களும் சமுசாரமும் பிள்ளைகளும் இந்தியாவுக்குப் போய்விட்டார்கள். நான் ''வியாவில்'' என்னும் இடத்தைவிட்டு ''மணற்காடு'' மாரி அம்மன் கோவிலடியில் வந்து இருந்தேன். மாரி அம்மன் கோயிலையும் இரண்டுமுறை இடிக்க வந்தும் அம்மைநோயின் பயத்தால் இடிக்காமல் போய்விட்டனர்.

என்னையும் பூசை செய்யப்படாதெனத் தடுத்தனர். பூசை தவறினும் முத்துமாரி அம்மை வருவிப்பள். அதற்குச் சாட்சி கோயிலிடிக்க வந்தபோது உங்களுக்குத் தெரியும். உங்களுக்கேயன்றி இங்கேயுள்ள மற்றவர்களுக்கு அம்மை வந்ததில்லை. இந்தக் கோயிற் பூசைக்காகவே நான் இங்கே இருக்கிறேன். அல்லாவிடின் இந்த ஊரை விட்டுப் போய் விடுவேன் என்று சொல்ல ஒன்றும் பேசாது போய் விட்டார்கள்.

பின் எனது மகனுக்கு விவாகம் செய்ய நினைத்து கீரிமலையிலே உள்ள எனது சகோதரியின் மகள் ''நாராயண அம்மாளை'' விவாகம் முடித்து நானும் மகனுமாய்ப் பூசை செய்து வந்தோம். அந்த நாளில் மாரியம்மன் கோயில் கட்டிய முத்துத்தாண்டவ முதலியார் மகன் இராசரத்தின முதலியார் அவர்கள் மகன் வரசிங்க முதலியாரால் எனது மகனுக்கு ஓர் உறுதி எழுதப்பட்டது.

அவ்வுறுதி எப்படியெனில், 1749 ஆம் ஆண்டு பங்குனி மாதம்28ந்திகதி திங்கட்கிழமை பூருவபக்கத்திருதிகையும், சோதி நட்சத்திரமும் கொண்ட சுபமுகூர்த்தத்தில் எழுதிய சாசனத்தின் வாசகம்.

மேற்குறித்த ஐயமார்களே தங்களிஷ்டப்படி இந்தக் கோயிலிலே புராணம் வாசிக்கவும் பூசை திருவிழா நடத்தவும், வேள்வி செய்யவும் அதிகாரமுடையவர்களாய் இருக்கிறுர்கள். இக் கோயிலின் ஆராதனைக்காக வரும் பக்தர்கள் காணிக்கையாகக் கொடுக்கும் பணத்தை குறித்த ஐயமாரே ஏற்று அதை இக் கோயிலின் விருத்திக்காக உபயோகிக்கும் அதிகாரமுடையவர்களாக இருக்கிறுர்கள். இவ்வதிகாரமானது இவருக்கும் இவர் சந்ததி உள்ளவரைக்கும் சூரிய சந்திரர் உள்ளவரைக்கும் வரசிங்க முதலியாராகிய என்னுல் தாமோதர ஐயருக்குக் கொடுக்கப்பட்டது.

வரசிங்க முதலியார் கையொப்பம்

சாட்சிகள்; சங்கரன் சேதுவன்
சங்கரன் கதிர்காமன்

இந்த உறுதி எழுதி முடிந்த சிறிது காலத்தின் பின் எனது மகனுக்குப் பிள்ளைகள் பிறந்தன. முதலாவதுமகன்—கண்டோபண்டித ஐயர். ஐந்து பிள்ளைகள் பிறந்தார்கள். எனது மூத்த பேரனுக்கு மேருகிரி ஐயருடைய வமிசத்திலே உள்ள கணபதி ஐயருடைய மகள் உமை அம்மாவை விவாகம் செய்து வைத்தேன். இவ்வளவும் கனகசபாதிக் குருக்களாகிய என்னுல் எழுதப்பட்டது. எனக்கு வயது எழுபத்திரண்டு.

எனது பேரன் தாமோதர ஐயர் அவருடைய பிள்ளைகள் ஐந்து பேர், அவருடைய முதல்மகன் கண்டோபண்டித ஐயராகிய நான். எனது தகப்பன் மற்ற நால்வரில் இரண்டாவது மகன் புங்குடுதீவுக்கும் மூன்ருவது மகன் சுன்ஞகத்திற்கும் நாலாவது மகன் இராலிக்கும் ஐந்தாவது மகன் இணுவிலுக்கும் போய்விட்டார்கள். எனது தகப்பன் காலத்திலே ஒல்லாந்தர் இராச்சியம் போய் இங்கிலீசு இராச்சியம் 1799 இல் வந்து விட்டது. எனது தகப்பனுருக்கு எனது பிரபிதாமகர் கனகசபாபதிக்குருக்கள் விவாகம் செய்து வைத்தார். எனது தகப்பனுக்கு நாலு பிள்ளைகள்.

(க) முத்தையர்

(உ) இரங்கையர்

(ங) சுப்பையர்

(ச) தெய்வதயானை அம்மாள்.

எனது தகப்பனாகிய கண்டோ பண்டித ஐயர் முத்தை யராகிய எனக்கு கோதாவரியிலே இருந்து வந்த மேருகிரி ஐயருடைய சந்ததியிலே உள்ள சுப்பையருடைய (க) மகள் இலட்சுமி அம்மாவையும் எனது தம்பி இரங்கையருக்கு (உ) மகள் பாறுவதி அம்மாவையும் எனது இரண்டாவது தம்பி சுப்பையருக்கு சுப்பையருடைய மகள் சானகி அம்மாவை யும் எனது சகோதரி தெய்வதயானை அம்மாவுக்கு சுப்பை யருடைய மகன் கதிரேச ஐயரையும் விவாகம் செய்து வைத்தார்.

நான் விவாகம் செய்து (15) வருஷம் வரையில் பிள்ளை யில்லாதிருந்தது. நான் வெகுமனத்துக்கமுடையவனாய் இருக்கும் போது, திருச்செந்தூருக்குப் போய், கந்தசஷ்டி விரதம் இருப்பதாக எனது தகப்பனாருக்கு அறிவித்தேன். அவர் எங்கள் சந்ததித் தலைவராகிய மங்களேசுவரக் குருக் கள் திரு உத்தரகோசமங்கையிலிருந்து வரும்போது அவ் விடம் வைத்து விட்டு வந்த சுவாமியின் ஆபரணம் முதலிய சகல சாமான்களையும் எடுத்துக் கொடுத்துவிட்டு வரும்படி யும், அவர் ஆங்கே மறைத்து வைத்துவிட்டு வந்தமையால் இங்கே அவர்கள் பட்ட கஷ்டம் முதலியவற்றையும் ''சிவ சொத்து குலநாசம்'' என்பதற்கு சந்தேகமில்லை என்பதை யும் இன்னும் அனேக புத்திமதிகளையும் சொல்லி ஏட்டை யும் தந்து எனக்கு வேண்டிய பொருளும் தந்து, போய்வரு மளவும் என்னோடு ஆட்களையும் தந்து எனக்கும் என் சமு சாரத்துக்கும் ஆசீர்வாதம் செய்து ஊர்காவற்றுறைவரைக் கும் எங்களோடு வந்து எங்களைக் கப்பலிலேற்றி விட்டு வீட் டுக்குத் திரும்பினார்.

நாங்கள் பிரயாணமாய்ப் பாம்பன் வந்து பாம்பனிலே இறங்கி, இராமேசுரத்துக்குப் போய் அங்கேயுள்ள ஆரியப்

பிராமணப் பிள்ளையை அழைத்துக் கொண்டு (கங) மைல் தூரமுள்ள சேதுவையடைந்து, ஆரியரைக் கொண்டு சங் கற்பம் செய்வித்து தீர்த்தஸ்நானம் செய்து இராமேசு ரத்தையடைந்து, இராமலிங்கப் பெருமானையும் பறுவத வர்த்தினி அம்மாளையும் தெரிசித்து, சேதுமாதவரையும் சேதுகாவலரையும் தெரிசித்து அவ்விடத்தில் ஐந்து நாளி ருந்து ஐந்தாவது நாள் உவதீர்த்தமும் ஸ்நானமும் செய்து கோடி தீர்த்தமும் ஸ்நானமும் செய்து ஆரியருக்கு என்னு லியன்ற தெட்சணையும் கொடுத்து அவரால் ஆசீர்வதிக்கப் பெற்று அந்த இடத்தை விட்டு நீங்கி மறுபடியும் பாம்பன் வந்து ஓடம் வழியாய் வெற்றிலை மண்டபம் சேர்ந்து திருப் புராணி தெற்பசயனம் போய், அங்கிருந்து பிரயாணமாய் உத்தரகோசமங்கையை அடைந்தோம்.

ஆதிசிதம்பரக் குருக்கள் வீட்டிலேயே விடுதி எடுத்து இருந்தோம். இருக்கும் போது ஆங்கேயுள்ள குருக்கள்மார் களுடைய சரித்திரத்தை விசாரித்தேன். ஆதிசிதம்பரக் குருக்கள் சொல்லுவது — முன் முப்பத்திரண்டு வீட்டுக்கா ரர்களிருந்ததாகவும், இங்கே கலகம் நடந்தபோது பதி னெட்டு வீட்டுக்காரர் இன்ன இடம் என்பது தெரியாமற் போய்விட்டார்களென்றும் மறுபடி கஉ வீட்டுக்காரர் இருந்ததாகவும் மறுபடியும் இங்கே இரண்டு வருடமாகக் கலகம் நடந்ததாகவும், அப்போ நான்கு வீட்டுக்காரர் இவ்விடத்தை விட்டு வெளிக்கிட்டு ஒரு பகுதியார் கும்ப கோணத்திற்கும் இன்னொரு பகுதியார் செருத்தணிக்கும் இரண்டு வீட்டுக்காரர் யாழ்ப்பாணமும் போய்விட்டார் களென்றும் இங்கேயுள்ளவர்கள் சொல்லுகிறார்கள். இப்போ இங்கே இருப்பவர்கள் ஏழு வீட்டுக்காரர் என்ப தாகவும் சொல்லி இதெல்லாவற்றையும் நீர் ஏன் விசாரிக் கிறீர் என்று என்னையும் கேட்டுவிட்டு என்னுடைய கோத் திர சூத்திரத்தையும் விசாரித்தார். நானும் என்னுடைய கோத்திர சூத்திரத்தைச் சொல்லிச் செப்புப் பட்டயத் தையும் எடுத்துக் காண்பித்தேன். அதன் பிற்பாடு அவர் என்னைத் தங்களோடு சம்பந்தியாய் வைத்துப் போசனஞ் செய்தும் மிக்க மரியாதையும் வைத்திருந்தார்.

நான் அங்கேயுள்ளவன் என்பதை அறிந்த பிற்பாடு அங்கேயுள்ள சனங்களுக்கு இருந்த சந்தோஷம் அளவில்லை. நான் கொண்டுபோன ஏட்டையும் வாங்கிப் பார்த்து சுவாமியின் ஆபரணம் முதலிய சாமான்கள் இருக்கிற இடத்தையும் திறவுகோல்கள் வைத்த இடத்தையும் அறிந்து என்னை அச்சாமான்களை எடுத்துத் தரும்படி கேட்டார்கள். நானுமதற்குடன்பட்டு முத்து இராமலிங்கம்* என்னும் பெயரையுடைய சேதுபதி மகாராசாவை அழைப்பித்து அங்கேயுள்ள குருக்கள்மார் மற்றுஞ் சனங்களெல்லாரையும் அழைப்பித்து மங்களேசுவர சுவாமிக்கும் மங்களாம்பிகை அம்மனுக்கும் விசேஷ பூசை அபிஷேகம் செய்த பிற்பாடு மகாமண்டபத்தில் ஈசானிய மூலையில் இருக்குந் தூணில் யானைக்காசு முத்திரை இருப்பதாகவும் அதுக்குள்ளே துவாரஞ் செய்து திறவுகோல் வைத்திருப்பதாகவும் ஏட்டிலே எழுதியிருக்கிறது என்பதை சேதுபதிக்கு அறிவித்து சேதுபதியும் நானும் அங்கேயுள்ள குருக்கள்மார் முதலிய எல்லோரும் மகாமண்டபத்தில் ஈசானிய மூலையில் இருக்குந் தூணுக்குச் சமீபமாகப் போய் தூணில் யானைக்காசு முத்திரை இருப்பதை எல்லாருமாகப் பார்த்து யானைக்காசு முத்திரையை நானேயுடைத்து அதன்மேல் அரக்கு மெழுகை எடுத்து அதன்மேல் திறவுகோலை எடுத்து மங்களேசுவரசுவாமி கோயிலின் தெற்குப் பக்கத்திலே இருக்கிற போக்கை அறிந்து அங்கே போய் போக்கைத் திறந்து போக்குள்ளே எல்லாரும்போய் இரும்புப் பெட்டகத்தைத் திறந்தபோது அதற்குள்ளே சிறு தயிலாப்பெட்டி இருப்பது கண்டு அதை எடுத்துத் திறந்து பார்க்கையில் தங்க ஆபரணங்கள் வெள்ளி ஆபரணங்கள் பதக்கங்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன். முத்துமாலைகளும் பட்டுக்களும் பழுதாய்விட்டது. குடை கொடி சுருட்டி முதலியவைகளும் பழுதாய்விட்டது. செம்பு, இரும்பு, பித்தளை, வெண்கலம் முதலிய சாமான்கள் பழுதில்லாமல் இருக்கவும் எடுத்தேன். எல்லாச் சாமான்களையும் சுவாமி சன்னிதானத்திற்கு கொண்டு போய் நகை முதலியவைகளை சுவாமிக்குச் சாத்தி மகா உற்சவம் நடத்திய பிற்பாடு ஆபரணம் முதலிய சகல சாமான்களையும் சேதுபதிராசா முகதாவில் ஒப்பிக்கும்போது உமது முன்னோர் இருந்து நடத்

* *1868 — 1873* வரை சேதுபதியை ஆண்டவர்.

தினபடியே நீரே இருந்து இந்தச் சாமான்களையும் வைத்துக் கொண்டு இருக்கும்படியாகவும் எமது பிள்ளைகளுக்குப் பூசைப்பங்கைத் தருகிறதாகவும் இராசாவும் குருக்கள்மார்களும் கேட்டார்கள். இப்போ நம்முடைய பூசைப்பங்கை மற்றக் குருக்கள்மார்கள் செய்து தருவதாகவும் என்று என்னைக் கேட்டார்கள். நானதற்குச் சொல்லியது யாத்திரை செய்வதாக வந்தேனேயன்றிப் பூசைப்பங்குக்காக வரவில்லையென்றும் இந்தச் சாமான்களை நான் அறிந்து கொண்டு எடுத்துத் தராமற்போனுல் எனக்கு மகாபாதகம் வருமென்றும் நான் சொன்னேன். சொல்லியதை எல்லோரும் ஒத்துக்கொண்டார்கள். இன்றுமுதலாக எனது பேருக்கு மாசம் மாசம் அருச்சனை செய்ய வேண்டுமென்று அதற்குரிய காசையும் கொடுத்து மறுபடியும் நாலைந்து நாள் அவ்விடத்திலிருந்து சுவாமி தரிசனஞ் செய்து கொண்டு அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாகும் போது அங்கேயுள்ளவர்கள் என்னை விடமனமில்லாதவர்களாயிருப்பதை அறிந்து மறுமுறை வருவதாகவும் இப்போ திருச்செந்தூருக்குப் போகிறதாகவும் அவர்களுக்கும் சொல்லி அவர்களைச் சந்தோஷப்படுத்தி அவர்களுடைய ஆசி வார்த்தையை நான் பெற்றுக் கொண்டு அவ்விடத்தை விட்டு நீங்கித் திருச்செந்தூருக்குப் போய் அங்கேயுள்ள திரிசுதந்தரப்பிராமணர்களாகிய சுப்பையர் வீட்டில் விடுதி எடுத்து அவரை அழைத்துக் கொண்டு கோயிலுக்குப் போய் அவரைக் கொண்டு சங்கற்பஞ் செய்வித்து கந்தபுட்கரணி வதனுரம்பம் முதலாகிய இருபத்துநாலு தீர்த்தங்களிலும் ஸ்நானஞ் செய்து கோயிலுக்குள்ளே போய் சுப்பிரமணியரையும் சண்முகரையும் தரிசித்து சங்கற்ப பூர்வமாய் கந்தசஷ்டி விரதத்தை ஆரம்பித்து நானும் எனது சமுசாரமும் ஆறுநாளாய் உபவாசமாயிருந்தோம். ஆறுநாளுஞ் சென்ற பிற்பாடு அங்கே ஓர் மடங் கட்டுவிக்கவேணுமென்று நினைத்து பூஞ்சிக் காட்டிலிருக்கும் தேவர் சந்ததியரில் ஒருவர் மாறலாய் கிரையத்திற்கு நிலம் வாங்கிச் சாதனம் நிறைவேறியபின் அந்த இடத்தில் ஒரு மடம் ஸ்தாபித்து அம்மடத்திற்கு திரிசுதந்திரப்பிராமணரில் ஒருவராகிய சுப்பையரை தம்பதி சமேதராய் அந்த மடத்திலிருந்த மடத்தைத் தருமசாதனஞ் செய்து கோயிலுக்கு அருச்சனை

கட்டளை வைத்து சண்முகரையும் சுப்பிரமணியரையுந் தரிசித்து அவ்விடத்தைவிட்டு நீங்கி திருப்பெருங்குன்றம் வந்து சண்முகப் பெருமாள் திருமணக்கோலத்தைக் கண்டு தெரிசித்து பேரானந்தத்தை அடைந்து அவ்விடம் விட்டு நீங்கி மதுரைக்குச் சென்று சோமசுந்தரக் கடவுளையும் மீனாட்சியையும் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீரங்கத்தை அடைந்து இரங்கைப் பெருமானைத் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி திருவானைக்காவை அடைந்து ஜம்புகேசுரரையும் அகிலாண்டேசுவரியையுங் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி வைத்தீசுவரர் கோயிலுக்குப் போய் வைத்தீசுரரையும் வாலாம்பியையும் தரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சீர்காழிக்குப் போய் பிரமபுரீசுரரையும் தோணியப்பரையும் சட்டநாதரையும் திருஞான சம்பந்தருக்கு ஞானப் பாலூட்டிய பிரதிமையையுங் கண்டு தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கி சிதம்பரம் போய் நடராசர் சன்னிதானத்தை அடைந்து நடராசரையும் மாணிக்கவாசகருடைய மோக்ஷமாகிய இரகசியத்தையும் கண்டு தரிசித்து கனகசபாபதியையும் படிகலிங்கத்தையும் தரிசித்து மறுபடி ஆகாசலிங்கத்தையும் உமையம்மையாரையும் சிவகாமியையும் தரிசித்து தில்லைக் காளரியையும் இளமையினர் கோயிலுக்குப் போய், அங்கேயுள்ள சுவாமிகளையும் தரிசித்து தீஷதரால் அன்னம் அளிக்க அன்னத்தைப் பொசித்து அவ்விடத்தில் பத்து நாளிருந்து அவ்விடத்தை விட்டு நீங்கி இராமநாதபுரம் வந்து சேதுபதிமகாராசாவை அடைந்து மகாராசாவால் மரியாதை செய்யப்பெற்றும் அவர் கொடுத்த பட்டுப் பீதாம்பரம் ரூபாய் இவைகளையும் பெற்றுக் கொண்டு அவருக்கு ஆசீர்வதித்து அவரிடம் விடைபெற்றுக்கொண்டு இராமநாதபுரத்தை விட்டு நீங்கி மறுபடியும் உத்தரகோசமங்கைக்குப் போய் அங்கே நாலுநாளிருந்து அங்கேயுள்ள குருக்கள்மார்களோடு விருந்து சாப்பிட்டு அவர்களைச் சந்தோஷப்படுத்தி மங்களேசுரரையும் மங்களாம்பிகையும் தெரிசித்து அவ்விடத்தை விட்டு நீங்கும் போது, அங்கே உள்ளவர்கள் சந்தோஷமாக எங்களுக்கு ஆசீர்வாதம் செய்து அனுப்பினார்கள்.

பாம்பன் வந்து கப்பலேறி ஊர்காவற்றுறை வந்து கப்பலை விட்டிறங்கி களபூமியிலே இருக்கிற எனது தகப்பனுர் வீட்டுக்குப்போய் அவர்களால் நாங்களெல்லோரும் ஆசீர்வதிக்கப்பெற்று இந்தியாவுக்குப்போய் வந்த சரித்திரம் எல்லாவற்றையும் விபரமாய்ச் சொல்லியும் தகப்பனுர் வீட்டிலேயே கொஞ்ச நாளிருந்து மறுபடி மணற்காட்டிலே உள்ள எனது வீட்டில் வந்து இருந்தேன். இப்படி ஆறுவருஷமும் திருச்செந்தூருக்குப் போய் கந்தசஷ்டி விரதத்தை அனுஷ்டித்து ஆருவது வருஷத்தில் சண்முகப்பிரான் சந்நிதானத்தில் விரதம் உத்தியாபனஞ் செய்து முடித்து வீடு வந்து சேர்ந்தேன். சொற்பகாலம் சென்ற பின் இந்தியாவுக்குப் போய் அநேக ஸ்தலங்களைக் கண்டு தெரிசித்து திருப்பெருந்துறைக்குப் போய் அங்கே மாணிக்கவாசகருடைய உபதேசம் செய்த இடத்தைப் பார்த்து அங்குள்ள திருப்பணி விசேஷத்தையும் மடந்தைநாதரையும் யோகாம்பிகையையும் தரிசித்து அவ்விடத்திற் சில நாள் தங்கி அங்கேயுள்ள விநோதங்களைப் பார்த்துக் கொண்டு அவ்விடத்தை விட்டுப் பிரயாணமாய் வேதாரண்ணியம் வந்து சுவாமி தெரிசனம் செய்து பிரயாணமாய்க் கோடிக்கரைக்கு முத்து மீனுட்சி என்னும் படகில் பிரயாணமாய் ஊர்காவற்றுறையை அடைந்து மணற்காடு என்னும் பதியில் அக்கிரகாரத்தை அடைந்து முதியோர்களை நமஸ்கரித்து இளையோர்களை ஆசீர்வதித்து இருந்தேன்.

சிறிது காலத்தின்பின் எங்கள் முதியோரரால் ஸ்தாபிக்கப்பட்ட முத்துமாரி அம்மை ஆலயம் பழுதாயிருப்பதை அறிந்த அதைப் புதுப்பிக்க நினைத்து இலங்கையிலே அநேக இடங்களுக்குச் சென்று காசு வாங்கிவந்து திருப்பணி வேலை செய்து, மூலமூர்த்தி, உற்சவமூர்த்திகளை ஸ்தாபனஞ் செய்து துவசாரோகணத்திருவிழா வேள்வி முதலிய சிறப்புகளும் வெகுசிரத்தையுடனும் மன அன்பாயும் நடத்தி வருகிறேன்.

எனது பிள்ளைகள் பத்துப்பேர். நாலுபிள்ளைகள் சிறுவயதில் இறந்து விட்டார்கள். இப்போ ஆறு பிள்ளைகள் இருக்கின்றனர்.

இராமசாமி ஐயர். இவரது மனைவி சுந்தரேசையர் சின்னையா மகள் வேதநாயக அம்மா.

குமாரசாமி ஐயர். இவரது மனைவி பரமசாமி ஐயர் மகள் அம்மணி அம்மா.

சீனி ஐயர். இவரது மனைவி மார்க்கண்டேய ஐயர் மகள் தையல் நாயக அம்மா. இரண்டாவது மனைவி முருகேசு ஐயர் மகள் பொன்னம்மா.

உமையம்மா. இவவின் கணவன் முருகேசு ஐயர் மகன் பரமசாமி ஐயர்.

தையல்நாயக அம்மா. இவவின் கணவன் சுந்தரோடை சின்னையாவின் மகன் நீலகண்டக்குருக்கள்.

இராமசாமி ஐயர். இவர் மகன் சுந்தரேசுவர ஐயர். இவர் மனைவி கார்த்திகேச ஐயர் மகள். தெய்வதயானை அம்மா.

இவர் மகள் மங்கள அம்மா. இவவின் கணவன் கார்த்திகேச ஐயர் மகன் விசுவநாத ஐயர். சுந்தரேசுவர ஐயர் இவர் மகன்.

சரவணபவக் (ஐயர்)க் குருக்கள்.

குமாரசாமி ஐயர் – இவரது மகன்.

நாகமுத்து அம்மா இவவின் கணவன் கார்த்திகேசு ஐயர் மகன். வேதக்குட்டி ஐயர்.

விசுவநாத ஐயர்

சிவானந்த ஐயர்

சதாசிவ ஐயர்

சீனி ஐயர் இவரது மகன்.

இராமலிங்க ஐயர். எனது தம்பி

இரங்கையர் இவர் புத்திரர்கள்.

மார்க்கண்ட ஐயர் இவரது மனைவி முருகேச ஐயர் மகள் பொன்னம்மா.

கமலாம்பாள். இவவின் கணவன் முருகேச ஐயர் மகன் கார்த்திகேச ஐயர்.

சபாபதி ஐயர் இவரது மனைவி வெங்கடேச ஐயர் மகள் புவனம்மா.

எனது தம்பி இரங்கையர் வாகட சாஸ்திரத்திலே வல்லவர். கடவுள் பக்தியுள்ளவர். எனது தம்பி சுப்பையர். இவரது புத்திரர்கள்

கார்த்திகேச ஐயர்.

காமாட்சி அம்மா. தாமோதர ஐயர் இவர்களிருவரும் போன இடம் தெரியாது.

காமாட்சி அம்மா. இவளின் கணவன் சபாபதி ஐயர். மகன் சதாசிவ ஐயர். இதில் என்னுல் எழுதப்பட்ட விஷயம் இவ்வளவும் எனது தகப்பன் சொல்லியது. எனது காலத்திலே நடைபெற்றதுமாயுள்ளது. எனக்கு வயது எண்பத்தைந்து. திண்ணைக்களியிலே இருக்கிற பூரணபுட் கலாசமேத ஐயரும் சௌந்தரிநாயகீசமேத சுந்தரேசுவரும் எனது ஆன்மாவை இரட்சிப்பார்களாக.

முத்தையரது தம்பி இரங்கையர். இவரது புத்திரர்கள் — (க) மார்க்கண்ட ஐயர். இவரது மனைவி முருகேச ஐயர் மகள் பொன்னம்மா. இவர் சந்தானமற்றவராய்க் கைலாயமடைந்தார்.

சபாபதி ஐயர் இவர் மனைவி வெங்கடேச ஐயர் மகள். புவனம்மா. இவர் புத்திரர்கள்.

குட்டி அம்மா. இவளின் கணவன் உடுவில் சிகிவாகனக் குருக்கள் மகன் சின்னையாக் குருக்கள்.

தெய்வதயானை அம்மா. இவவிவாகத்துக்கு முன் கைலேயை அடைந்து விட்டா.

இரங்கநாத ஐயர். இவரும் விவாகமில்லாதவராய் இறந்து விட்டார்.

முத்தையரது தம்பி சுப்பையர். இவரது புத்திரர்கள்.

கார்த்திகேய ஐயர்.

தாமோதர ஐயர். இவர்களிருவரும் போன இடம் தெரியாது.

காமாட்சி அம்மா. இவவின் கணவன் சபாபதி ஐயர் மகன் சதாசிவ ஐயர் — சரவணபவக் குருக்கள் இவரது மனேவி கொட்டைக்காடு. அனந்தநாராயண ஐயர் மகள் திருவேங்கட அம்மா. இவரது புத்திரர் —

சோமசுந்த ஐயர். இவரது மனேவி விசுவநாத ஐயர் மகள் விசாலாட்சி அம்மா.

இவரது புத்திரர்கள் —

சிவபாக்கிய அம்மா. இவவின் கணவன் வட்டுக் கோட்டை வைத்தீசுவரக் குருக்கள் மகன் குமார சாமிக் குருக்கள்.

சபாரத்தின ஐயர். இவரது மனேவி பாலேக்காடு மாத் தூர் இரங்கநாத ஐயர் மகள் ஆனந்த இலட்சுமி அம்மா.

இவரது புத்திரர் —

ஈசுவர சர்மா.

நடராசா சர்மா

கெணேச சர்மா

ஈசுவரி அம்மா

ஐயலட்சுமி

சதாசிவ ஐயர். இவரது மனேவி நீர்வேலி செல்லக் குருக்கள் மகள் புவனேசுவரி அம்மா. இவரது புத்திரி ஞானும்பா

சதயோஜாத சர்மா

விமலாவதி

தேவசேனுவதி

சிவகடாட்சு ஐயர். (இவர் சிறுவயதிலிறந்துவிட்டார்.)

சிவகடாட்சஐயர். இவரது மனைவி பாலைக்காடு மாத்தூர் சீதாராமையர் மகள். தங்கம்மா இவரது புத்திரி —

யோகாம்பா. இவ சிறுவயதிலிறந்து விட்டா.

சிவசர்மா ஐயர். இவரது மனைவி சுளிபுரம் முத்துச் சாமி குருக்கள் மகள். சாரதாம்பா இவ சிறுவயதிலி றந்துவிட்டா.

சியாமளாதேவி. இவவும் சிறுவயதிலிறந்துவிட்டா.

சாம்பசிவ ஐயர் இவரது மனைவி நீராவி சபாரத்தின ஐயர் மகள். சரசுவதி அம்மா — இவரது புத்திரன் —

(க) குமாரசாமி ஐயர்

(உ) சிவானந்த ஐயர்

(ங) பரமேசுவர ஐயர்

வள்ளிநாயக அம்மா. இவவின் கணவன் தியாகரா சாக் குருக்கள். மகன் மார்க்கண்டேய ஐயர்.

தெய்வானை அம்மா. இவவின் கணவன் உடுவில் சிகி வாகனக் குருக்கள் மகன் நடராசா ஐயர்

இலட்சுமி அம்மா இவவின் கணவன் கந்தரோடை கனகசபாபதிக் குருக்கள் மகன் சுவாமிநாதக் குருக் கள்.

கணபதீசுவரக் குருக்கள். இவரது மனைவி சிவசிதம்பர ஐயர் மகள். சிவயோக சுந்தராம்பா. இவரது புத்தி ரர்கள் —

சௌந்தராம்மா. இவவின் கணவன் கந்தரோடை சுவாமிநாதக் குருக்கள் மகன் சிவசுப்பிரம்ணிய ஐயர்.

மங்களேசுவரக்குருக்கள். இவரதுமனைவி கந்தரோடை சதாசிவக் குருக்கள் மகள் புவனேசுவரி அம்மா. இவ ரது புத்திரர்கள்

நடராசாக் குருக்கள் — இவர் இறந்துவிட்டார் (சிறு வயதில்)

வாலாம்பிகை அம்மா. இவவின் கணவன் வடலி அடைப்பு பரமசாமிக்குருக்கள்.

மகன் கணேசசர்மா

சிவசுப்பிரமணியக் குருக்கள்.

சரவணபவக் குருக்கள்

கௌரி அம்மா

பத்மாவதி அம்மா

பெரியநாயகி அம்மா.

இரத்தின சபாபதிக் குருக்கள் இவரது மனைவி கந்த ரோடை சுவாமிநாதக் குருக்கள் மகள். அருந்ததி அம்மா. இவரது புத்திரர் சிவசிதம்பரசர்மா. சிறுவய திலே இறந்துவிட்டார்.

வைத்தீசுவரக்குருக்கள். இவர் மனைவி சுன்னாகம் மயி லணி சிவராமலிங்க ஐயரின் மகள் சாரதாம்பா. புத்தி ரர்கள்.

வேதாரண்யேசுவரக்குருக்கள்.

சிவயோகசுந்தராம்பாள். சிறுவயதிலிறந்துவிட்டார்.

பரமேசுவர சச்சிதானந்த சர்மா. சிறுவயதிலே இறந்து விட்டார்.

சச்சிதானந்த சர்மா

சிவயோக சுந்தரம்மா.

சாவித்திரி —

திருவேங்கிடநாயகி அம்மா. இவர் கணவன் கார்த்தி கேய ஐயர் மகள். விசுவநாத ஐயர்.

முத்துச்சாமிக்குருக்கள். இவரது மனைவி வேதக்குட்டி ஐயர் மகள் உமையம்மா. இவரது புத்திரர்கள் —

கனகசபாபதிக் குருக்கள். இவர் பிறந்த உடன் இறந்து விட்டார்.

கௌரியம்மா. இவவின் கணவன் சண்முக ஐயர் மகன் சுந்தர ஐயர். சிசுசர்மா ஐயர். இவர் மனைவி சபாரத்

தின ஐயர் மகள் நீலாய தாட்சி அம்மா. இவரது புத்திரி சிவகாம சௌந்தரி. இவ சிறு வயதிலிறந்துவிட்டா.

மனைவி யாழ். நீராவி சபாரத்தின ஐயர் மகள் அம்பிகை அம்மா.

மனைவி தம்பலகாமம் வைத்தீசுவரக் குருக்கள் மகள்.

சோமஸ்கந்த ஐயர். இவர் சிறுவயதிலிறந்துவிட்டார்.

காமாட்சி அம்மா. இவவின் கணவன் கோப்பாய் பொன்னையா மகன் குமாரசாமி ஐயர்.

சிவசுப்பிரமணிய ஐயர். சிறுவயதிலிறந்து விட்டார்.

இராசஇலட்சுமி அம்மா. இவவின் கணவன் ஆளவோலை ரத்தின ஐயர் மகன். கணேச ஐயர் குமாரசாமி ஐயர்.

மகன் விசுவநாத ஐயர். இவரது மனைவி உடுவில் சிசுவாகனக் குருக்கள் மகள் பராசத்தி அம்மா. இவர் புத்திரர் —

சுப்பையர். இவர் மனைவி செருவில் முத்துக் குருக்கள் மகள் நாகரத்தின அம்மா. இவர் புத்திரர்கள் —

வேதக்குட்டி ஐயர்.

குமாரசாமி ஐயர். இவர்கள் சிறுவயதிலிறந்து விட்டார்கள்.

சிவானந்த ஐயர். இவர் மனைவி கார்த்திகேச ஐயர் மகள் சுந்தரம்மா. இவர் புத்திரர்கள் —

ஞானம்பா. இவவின் கணவன் சுன்னகம் மயிலணி சபாபதிக் குருக்கள் மகன். சிவராமலிங்க ஐயர்.

முத்துக் குமாரசாமி ஐயர். இவரது மனைவி கோபால ஐயர் மகள் உமையம்மா. இவர் புத்திரர்கள் —

இராச இராசேசுவரி அம்மா. இவவின் கணவன் கொட்டைக்காடு சபாபதி ஐயர் மகன் தியாகராச ஐயர்.

இராச இராசேசுவர சர்மா.

செகன்நாத ஐயர்.

சோமாஸ்கந்த ஐயர். இவர்கள் சிறுவயதிலிறந்து விட்டார்கள்.

அமிர்தேசுவர சர்மா

மனோன்மணி அம்மா

சோமநாத சர்மா சோமவதி இரட்டைப்பிள்ளைகள்.

சதாதசிவ ஐயர். இவர் மனைவி இராமசாமி ஐயர் மகள் விசாலாட்சி அம்மா—இவரது புத்திரர்கள்.

விசுவநாத ஐயர். இவர் மனைவி சிவசிதம்பர ஐயர் மகள் சிவபாக்கிய சுந்தரம்மா. இவர் புத்திரர்கள்.

ஜெகதாம்பா. இவளின் கணவன் கந்தரோடை சாமி ஐயர் மகன் சேதுமாதவ ஐயர்.

மகாதேவசர்மா. இவர் மனைவி சண்டிருப்பாய் சண்முகரத்தினக் குருக்கள் மகள்.

நாகமுத்து ஐயர் இவரது மனைவி கார்த்திகேச ஐயர் மகள் நாகரத்தின அம்மா. இவர் புத்திரர்கள்.

கணேச ஐயர்.

ஹரி ஹர ஐவர்.

பத்மநாப ஐயர். சிறுவயதிலிறந்துவிட்டார்.

மாணிக்கவாசக ஐயர்.

திருஞானசம்பந்த ஐயர்.

சுலோசனா தேவி.

சுசீலாதேவி

சிவஞானசுந்தர அம்மா. இவவின் கணவன் வட்டுக்கோட்டை வைத்தீசுவரக் குருக்கள் மகன் குமாரசாமிக் குருக்கள். (ச) கமலாம்பா இவவின் கணவன் முத்துக்குருக்கள் மகன் சபாரத்தின ஐயர்.

சபாரத்தின ஐயர்.

சிவயோக சுந்தர அம்மா. சிறுவயதிலிறந்துவிட்டா.

சீனி ஐயர். புத்திரர் இராமலிங்க ஐயர். இவர் மனைவி அளவெட்டி தியாகராசக் குருக்களின் மகள். விசாலாட்சி அம்மா இவர் புத்திரி.

சௌந்தரம்மா. இவவின் கணவன் கணபதி ஐயரின் மகன் ஏரம்பு ஐயர். சீனி ஐயர் இரண்டாவது மனைவி. முருகேச ஐயர் மகள் பொன்னம்மா. இவர் புத்திரர்கள்.

பராசக்தி அம்மா. இவவின் கணவன் உடுவில் சேது மாதவக் குருக்கள் மகன். இராமசாமிக் குருக்கள்.

தேவகுஞ்சர அம்மா. இவவின் கணவன் கார்த்திகேச ஐயர் மகன். கோபால ஐயர்.

இரத்தின சபாபதிக் குருக்கள். இவர் மனைவி திரு கோணமலை முத்துச்சாமி ஐயர் மகள் கமலாம்பா. இவர் புத்திரர்கள்.

கெங்காபவானி அம்மா. இவளின் கணவன் கோபாலை யர் மகன். குமாரசாமி ஐயர்.

லோகநாத ஐயர். சிறுவயதிலிறந்துவிட்டார்.

சுதர்சனும்பா. இவவின் கணவன் தஞ்சாவூர் இரங்க சாமி ஐயர் மகன். கிருஷ்ண ஐயர்.

கருணகர ஐயர். இவர் மனைவி நீர்வேலி தியாகராசக் குருக்கள் மகள். காமாட்சி அம்மா. இவர் புத்திரர்.

சடாக்ஷர அம்மா.

கமலாம்பிகை அம்மா.

சுரேஸ்வர சர்மா.

கௌரிபதேசுவரி அம்மா. இவவின் கணவன் முத்துக் குருக்கள் மகன் நவரத்தின சர்மா.

வட்டய்யர் இவர் சிறுவயதிலிறந்துவிட்டார்.

## குருக்கள்மார் பரம்பரை

1. கல்யாணசுந்தரக்குருக்கள்

2. சிவசுப்பிரமணியக்குருக்கள்

3. கார்த்திகேயக்குருக்கள்

4. நடராசக்குருக்கள்

5. விசுவநாதக்குருக்கள்

6. காங்கேயக்குருக்கள்

|

7. ஆதிசிதம்பரக்குருக்கள்

|

8. மாணிக்கவாசகக்குருக்கள்

|

9. பரமேசுவரக்குருக்கள்

|

10. பாலசுப்பிரமணியக்குருக்கள்

|

11. கனகசபாபதிக்குருக்கள்

|

12. வையாபுரிக்குருக்கள்

|

13. குருசாமிக்குருக்கள்

|

14. மாணிக்கவாசகக் குருக்கள்

|

15. மங்களேசுவரக்குருக்கள்

|

16. சூரியநாரயணக்குருக்கள்

|

17. கனகசபாபதிக்குருக்கள்

|

18. தாமோதரஐயர்

|

19. கண்டோபண்டிதஐயர்

|

20. முத்தையர்

|

இராமசாமிஐயர் குமாரசுவாமிஐயர் சீனிஐயர்

விசுவநாதஐயர் சிவானந்தஐயர் சதாசிவஐயர்

சுப்பிரமணியஐயர் குமாரசுவாமிஐயர்

தியாகராஜஐயர் நாகமுத்துஐயர் சபாரத்தினஐயர்

சுந்தரேசுவரஐயர்

இராமலிங்கஐயர் இரத்தினசபாபதிக்குருக்கள்

சரவணபவக்குருக்கள் கருணாகரேசுவரஐயர்

சோமசுந்தரக்குருக்கள் **கணபதீசுவரக்குருக்கள்** முத்துக்குமாரசுவாமிக்குருக்கள்

| சோமசுந்தரக்குருக்கள் | கணபதீசுவரக்குருக்கள் | முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் |
|---|---|---|
| 1. சிவபாக்கியம் | 1. சௌந்தராம்பிகை | 1. கௌரியம்மா |
| 2. சபாரத்தினஐயர் | 2. மங்களேசுவரக்குருக்கள் | 2. சிவராசாஐயர் |
| 3. சதாசிவஐயர் | 3. இரத்தினசபாபதிக் குருக்கள் | 3. காமாட்சியம்மாள் |
| 4. சிவகடாட்சஐயர் | 4. வைத்தீசுவரக்குருக்கள் | 4. இராசலட்சுமி |
| 5. சிவசர்மா | 5. திருவேங்கடம்மாள் | |
| 6. சாம்பசிவஐயர் | | |

இஃதிவ்வாறு வளர்ந்து வந்த அந்தணர் பரம்பரை இன்று யாழ்ப்பாணம் எங்கணும் பரந்து நிலவுகின்றது. காரை நகரில் இன்றும் கோயில்கள் தோறும் இவர்கள் குடிபதிகளாக இருந்து சந்ததி சந்ததியாக கோயில்களிற் பூசகர்களாக விளங்குகின்றமையை நாம் காண்டல் கூடும். இவர்களின் வழி முறையில் வந்த சுப்பையர் கார்த்திகேச ஐயர் நாகமுத்தையர், சிவசிதம்பரஐயர் கணபதீசுவரக்குருக்கள் இவர்கள் பெரும் புலவர்களாகவும் தமிழறிஞர்களாகவும் விளங்கியுள்ளார்கள். காரைநகர் மக்களின் அபிமான

புருடராகவும் நற்குணசீலராகவும், வானசாத்திர நிபுண ராகவும் பிரசித்த நொத்தாரிசாகவும் ஊரும் உலகமும் போற்ற வாழ்ந்த கா. சி. மகேச சர்மா அவர்களும் இப் பரம்பரையைச் சார்ந்தவராவர்.

இது இவ்வாறு அந்தணர் குடும்ப உற்பத்தி அமைந்து கிடக்க, கார் காத்த வேளாளர் பரம்பரையினைப் பற்றி யுள்ள சங்கதிகளை ஓரளவுங் கூறுவதற்கில்லை. வேளாளர் பரம்பரையினைப் பற்றி எடுத்துரைக்க விரிவான ஆதாரங் கள் கிடைப்பதாக இல்லை. இங்குமங்கும் ஒன்றிரண்டு கூறப் பட்டுள்ளன. வேளாளருக்கு உறுதுணையாகப் பல்வகைக் குடி மக்களும் இங்கு வாழ்ந்து வருகின்றனர்.

# புதுமை

யாழ்நகர்த் தீவுப் பகுதிகளுள் முதற் தீவு என விளங்கும் காரைதீவு ஆனது தனது தீவுத் தன்மையை இழந்து குடாநாட்டுடன், ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலே கற்றெரு மூலம் சேர்க்கப்படலாயிற்று. பொன்னுலேக் கடலுக்கூடாகப் பாலங்களும் கற்றெருவும் போடப்பட்டு இணைக்கப்படலாயிற்று.

1878இல் யாழ்ப்பாணத்தில் இஞ்சினியர் வேலேயிலமர்ந்திருந்த முதலியார் F.M. ஆம்ஸ்ரோங் (Mudalyar F.M. Armstrong) அவர்கள் பொன்னுலேக் கடலுக்கூடாகக் கற்றெருவும் பாலங்களும் தொப்பிக்கட்டும் அமைத்துக் காரைதீவினைக் குடாநாட்டுடன் இணைத்தனர். இவர் செய்து முடித்த பொதுக்கட்டு வேலேகளில் இதனையே பெரும் பணியாக மக்கள் கருதினர்.

இந்தக் கற்றெரு போடப்பட்டதன் காரணமாக மக்கள் காரைதீவினைக் காரைநகர் என்று புதுநாமமிட்டு அழைக்க முன்வரலாயினர். கார்த்திகேயஐயர் மகன் சிவசிதம்பரஐயர் அவர்கள், தாம் பதிப்பித்த தட்சிண கைலாச

புராணத்தில் 1887இல் முதன்முதலாகக் காரைநகர் என்று எழுதிக் காட்டியுள்ளார்.

இதன் பின்னர் 1922இல் காரைதீவினைத் தரிசித்த சேர். பொன். இராமநாதன் அவர்கள், இவ்வூர் மக்கள் தமக்களித்த வரவேற்பில் பெரிதும் குதூகலமடைந்து ''இது தீவு அல்ல; நகர்'' என்று கூறிக் காரைநகர் என்ற பெயரினைச் சூட்டினார்.

மேலும் இலங்கைத் தீவில் ஒன்றுக்கு இரண்டு மூன்று காரைதீவுகள் வடக்குங் கிழக்கும் மேற்கும் அமைந்து கிடக்குந் தன்மை காரணமாக அரசாங்கத்தின் தந்தி தபாற் போக்குவரத்துக்கு இடையூறும் குந்தகமுமாக இந்த மூன்று காரைதீவுகளும் இருந்து வந்தன. இவற்றுள் மேல் பாலமைந்த காரைதீவு அவ்வளவு தொல்லை கொடுக்கவில்லை. அங்கு மக்கள் நிரந்தரமாகக் குடியிருக்காமையே தொல்லைக் குறைவுக்குக் காரணமாகும். வடக்குங் கிழக்கு முள்ளவை தொல்லை கொடுத்தன. ஆகவே ஆட்சியாளர் ஏதாவதொரு தீவின் பெயரை மாற்ற முயன்றனர்.

நாகரிகத்திலும் கலாசார பண்பாட்டிலும் கனதனத்திலும் சீர்சிறப்பிலும் மிக்கிருந்த யாழ்ப்பாணத்துக் காரைதீவு மக்களுக்கு அவர்கள் ஊர்ப் பெயரை மாற்றுவதில் முதலுரிமை அரசாங்கத்தால் வழங்கப்படலாயிற்று. இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்கள் ஏலவே சூட்டிய ''காரைநகர்'' என்ற பெயரினை 12. 9. 1923 தொடக்கம் ஆட்சியாளர் தகவுரையுடன் சூட்டி மகிழ்வாராயினர்.

பொன்னாலைக் கற்றெருவைத் தொடர்ந்து காரைநகரில் இருபாதைகள் திறக்கப்படலாயின. வலந்தலைச் சந்தியிலிருந்து ஒருதெரு தங்கோடை கருங்காலி பலிகாடு ஊடாகச் செல்ல மற்றொன்று களபூமிவழியாகச் சென்று இரண்டும் *ஊர்காவற்றுறையிற் சேரலாயின.

---

* ஊர்காவற்றுறை என்பது **Kayts** என்ற ஒல்லாந்த சொல்லின் மொழி பெயர்ப்பு. **Kayts** என்பதற்குக்''காவற்துறை'' என்பது பொருள். இந்தக் காவற்துறையில் கடலுள் ஒரு கோட்டையும் கரையில் ஒரு கோட்டையுமிருந்தன. கரையிலிருந்தது அழிந்துவிட்டது. கடலிலிருப்பது **Hamen Kiel** என்று பெயர் பெற்றது.

அரசாட்சியார் இவ்விரு தெருக்களையுந் திறந்துவிட்டு ஓய்ந்து நிற்கையில் கிளவ் மக்களில் ஒருவராகிய **சின்னக் கிளவ்*** காரைநகரில் வாழ்ந்திருந்து தாம் வதிந்திருந்த தெருவினைக் கற்பாதையாக மாற்றுவதில் முயன்று தமது சொந்தப் பணத்தில் கற்றெரு ஒன்று போடுவாராயினர். இதனை மக்கள் அக்காலத்தில் புது "உரோட்டு" என்று அழைக்கலாயினர். இப்பொழுது இது சிவன்கோவில் வீதி என அழைக்கப்படுகிறது. இந்தக் கற்றெரு கிராமச் சங்கத்தின் மேற்பார்வையிலிருக்கிறது.

கிராமச்சங்கம் ஏற்பட்ட காலத்திலிருந்து காரைநகரிற் பற்பல கற்றெருக்கள் தோன்றலாயின. மணற்றெருக்களாக இருந்த பெருந்தெருக்கள் யாவும் கற்றெருக்களாக மாறியிருந்தும் அவை செம்மை நிலைக்கு இன்னும் வரவில்லை. இவற்றுள் ஒன்று நடுத்தெரு வழியாகச் சென்று சடையாளியை வந்தடைகின்றது. சடையாளியை வதிவிடமாகக் கொண்ட வைத்திய கலாநிதி கு. தண்டாயுதபாணி அவர்கள் தமது சொந்தச் செலவில் தமது வீட்டடி மட்டும் வந்து நின்ற கற்றெருவைச் சிவன் கோவிலடிவரை நீட்டித் தாரிட்ட கற்றெருவாக மாற்றிவிட்டனர். சயம்பு வீதி சயம்புச் சட்டம்பியாரின் பெயரால் இந்துக் கல்லூரியிலிருந்து சிவன் கோயில் சென்றடைகின்றது.

ஆலடிச் சந்தியிலிருந்து கோவளம் வெளிச்சவீடு வரையும் கற்றெரு ஒன்று ஓடுகின்றது.

காரைநகர் சிவன்கோவிற் திருப்பணிச் சபையாரின் பெருமுயற்சி காரணமாகக் கோயில் புனருத்தாரணஞ்

---

* William Adam Clough retired surveyor of the F. M. S. was presented by H. E. the Governor at the Garden party at the old park on the 16th inst. with the I. S. O medal granted to him for his efficient and faithful services in the F. M. S. His excellency conversed with Mr. Clough for some time and then said that it gave him great pleasure to present the medal granted by His Majesty the King. Mr. Clough is an old boy of Jaffna College and a native of Karaidivu - Morning Star January 1919.

செய்யப்பட்டு அபிசேகம் நடைபெற்ற சமயத்தில் மின் சார வெளிச்சத்தைக் கோயிலுக்கு மட்டும் அரசாங்கம் 1970 ஆடி மாதத்தில் வழங்கியது.

தந்தி தபாற் கந்தோர் ஒன்றும் உபதபாற் கந்தோர் நாலும் இங்கு அரசாங்கத்தாற் தாபிக்கப்பட்டுள்ளன.

1898ல் S. F. கிறீன் வைத்தியர் ஞாபகமாகக் காரை நகரில், தபாற் கந்தோருக்கு முன்னேயுள்ள வளவில் ஆசுப் பத்திரி ஒன்று திறக்கப்படலாயிற்று. இங்கு இடாக்குத்தர் ஒருவர் கடமையாற்றினர். இப்பொழுது மூடப்பட்டு விட்டது.

# சமயம்

காரைநகரில் வாழும் மக்கள் யாவரும் சமயத்தாற் சைவர்களே. சைவாசார சீலராய் பத்திநெறியிற் றிளைத்தவராய், மக்கள் யாவரும் விடாப்பிடியாகத் தூய சைவ நெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதை இங்கு காணலாம். வடபால் காரைநகர் முழுவதற்கும் சொந்தமான சிவன் கோவில் பெருந்தலமாக ஈழத்துச் சிதம்பரமென நன்மக்களால் போற்றப்படத்தக்க வண்ணம் அமைந்து கிடக்கத் தீவின் பாகமாகிய குறிச்சிதோறும் கோயில்கள்; தெருக்கள் தோறும் கோயில்கள்; வீடுகள் தோறும் கோயில்கள் என்ற பாங்கரில் திரும்பிப்பார்க்குமிடமெல்லாங் கோயில்கள் இங்கு காட்சியளிக்கின்றன. பேரும் புகழும் வாய்ந்த சிவன் கோவில் ஒருபுறமிருக்க, சிவகாமியம்மன், பிள்ளையார், முருகன் முதலானோர்க்குத் திருக்கோயில்கள் பல எழுப்பப்பட்டிருக்கின்றன. காளி, வைரவர், ஐயனர், கண்ணகை, முதலியார் அம்மன் முதலாம் தெய்வங்களுக்கும் கோயில்களுள. ஆகவே காரைநகர் திருக்கோயிலில்லாத திருவில்லூரும், திருவெண்ணீறணியாத திருவில்லூருமல்ல, வீடுகள் தோறும் தேவார திருவாசகங்கள் ஓதப்படுவதைத் தெருநீளம் கேட்கலாம். காலந்தோறும் கோயில்

களிற் புராணங்கள் படித்துப்பயன் சொல்லப்படுவதைக் காதுகுளிரக் கேட்கலாம். கொட்டு மத்தளம் முழங்க இன்னிசைச் சல்லரிதாளமிட சங்கு நாதம் ஒலிக்கப் பாட்டுக் கச்சேரிகள் நடைபெறுவதைக் கோயில் வீதிகளெங்கும் கேட்கலாம்.

ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படுகின்ற சிவன் கோவில் காரைநகரின் ஈசானத்தில் பரந்தகன்ற பெருவெளியில் அமைந்து கிடந்து ஊருக்குப் பெருந்திருவாக விளங்குகின்றது. இங்குள்ள கோயில்களிற் காலத்தாற் பழைமையானது; நீள அகலத்தாற் பென்னம்பெரியது. கோயிலின் மூன்றும் வீதிபோற்பெருத்தவீதி யாமெங்கணும் கண்டதில்லை.

இக்கோயில் ஆதியில் ஐயனர் கோயில் என்றே அழைக்கப்பட்டது. ஏனெனில் ஐயனர் கோயிலே முதலிற் தோன்றியதாகும். இப்பொழுதும் கோயிலுக்குட் பிரவேசிக்கும்போது ஐயனர் வாசல் வழியாகச் சென்று முதலில் ஐயனரை வணங்கிப் பின்னர் சிவனை வணங்கிவலம் வந்து சிவன் வாசலால் வெளிவரவேண்டுமென்ற விதி தொன்றுதொட்டு இருந்துவருகின்றது. திருவிழாக்காலங்களில் ஏறுபடி மேளங்கள் வந்தால் அவர்கள் முதலில் ஐயனர் வாசல் வழிச்சென்று அவர்வாசலிற் சேவித்த பின்னரே தங்கள் சேவிப்பினைத் தொடங்குவர். ஐயனர் கோயில் தனித்திருந்த காலத்தே அவரை வணங்கித் திரும்பி முதுகுகாட்டி வருதல் வழக்கமில்லையென்று பெரியோர்கள் சொல்லக் கேள்வி. ஐயனரின் அட்டகாசம் அக்காலத்திலதிகமென்றும் சிவனுக்கு ஆலயம் எடுத்தபின் அடக்கம் என்றுங் கூறியுள்ளார், இதில் உண்மையுண்டு. ஆகவே முதலில் ஐயனர் கோயில் வரலாற்றை முன்னர் கூறுவாம்.

ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தே சேதுபதி இராச்சியமும் இராமேசுவரமும் யாழ்ப்பாண அரசுடன் தொடர்புற்றிருந்தமைக்குச் சான்றுகள் பல உள. ஆரியச்சக்கரவர்த்திகள் நாணயத்தில் ''சேது'' என்ற சொல் பொறிக்கப்பட்டிருந்தது. இதனை அவ்வகைக் காசுகளிற் பார்க்கலாம். இத்தொடர்பு காரணமாக அங்குள்ளார் இங்கு

ஈழம் வருதலும் இங்குள்ளார் அங்கு தென்னகத் தமிழகஞ் சேறலும் பெருவழக்கமாயிற்று. சேதுக்கரையினைக் காவல் புரிந்த வம்சத்தின் வழித்தோன்றலாகிய ''ஆண்டி''[1] என்னும் பெயரிய பெரியார் ஒருவர் காரைநகருக்கு வருவாராயினர். இவர் வியாவில் ஐயனார் கோயிலை வந்தடைந்து அங்குக் கோயில் அருச்சகராயிருந்த தாமோதர ஐயர் அக்கிரகாரத்திற் தங்கியிருந்தார். இருவரும் அதாவது ஆண்டியும் தாமோதர ஐயரும் ஒட்டிப்பிறவா இரட்டையரானார்கள்.

ஆண்டி இங்குற்ற காலத்தில்[2] ஐயனார் கோயில் சீரற்ற நிலையிலிருந்தது, இக்கோயில் வெடியரசன்[3] சந்ததியினர் கட்டியெழுப்பிப் பூசித்துவந்தனர் என்ற ஐதிகக் கதையுண்டு. வெடியரசன் சந்ததியினராகிய முற்குகர் ''பத்தினித்தெய்வமாகிய கண்ணகியை வணங்கவே மாட்டோம்'' என்று மீகாமனுக்குக் கூறிய சூளுரைக்கு இணங்க ஐயனார் அன்பர்களானார்கள்.

போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்திற்கு முன்னர் கட்டப்பட்ட இக்கோயிலை முதலிற் போர்த்துக்கீசர் இடிக்கமுயன்றனர். கோயிலின் சிலபாகங்களை இடித்துப் பாழாக்கினர் எனினும் முற்றாக இடித்தார்களல்லர். ஆனால் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இடிக்கப்படலாயிற்று. போர்த்துக்கீசரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளைத் திருத்தவும் புதுப்பிக்கவும் விரும்பிய ஒல்லாந்தர் பலசைவக்கோயில்களை இடித்துக் கல்லுகளை எடுத்துச் சென்று தங்களுக்கு வேண்டிய கட்டிடங்களைக் கட்டலாயினர். ஆமன்கீல் எனுங் கடற்கோட்டையைக்கட்ட பொன்னாலைத் திருமால் கோயிலும் வியாவில் ஐயனார் ஆலயமும் அழிக்கப்பட்டனவாகச் சரித்திராசிரியர் கூறுவர். அவ்வாறு ஐயனார் கோயில்

---

1. ஆண்டி என்பதுஇவரது இயற்பெயரன்று. ஆண்டிக்கோலங்கொண்டமையால் ஏற்பட்டதுபோலும். மணற்காட்டு மாரியம்மன் கோயிற் பூசகரும் மணியமுமாகிய தாமோதர ஐயர் காலத்தவர் (1749).

2. ஒல்லாந்தர் ஆட்சிக்காலம்.

3. வெடியரசன் 14-ம் நூற்றாண்டிற்குரியவன் என்பர்.

அழிக்கப்பட்டபோது அங்குவதிந்த ஆண்டி, ஐயனர் விக்கிரகத்தை எடுத்துப்போய் திண்ணைப்பிட்டி எனவழங்கும் தினகரன் பிட்டி[1] யண்மையிலிருந்த கேணிக்குள் மறைத்து வைத்தனர், ஆங்கர் ஆண்டி இருக்கவுந்தொடங்கினர். பாங்கரில் ஓர் அரசமரமுமிருந்தது. அந்தக்காலத்தில் அரசமரங்கள் தோறும் வைரவசூலம் வைப்பது பெருவழக்காயிருந்தது. கி. பி. ஏழாம் நூற்றுண்டு தொடக்கம் இந்தியத் தென்னகத்தில் சைவ நாயன்மாரின் ஆதிக்கம் பெருகிய காலத்திற் சமயகலாபனைகள் ஏற்படப் புத்தர் சமணர் ஆதிக்கம் வீழ்ச்சியடையலாயிற்று. மக்கள் சைவசமயத்தைத் தழுவலாயினர். அதே காலங்களில் இலங்கையிலும் சிறப்பாக யாழ்ப்பாணத்திலும் சமயகலாபனை ஏற்படப் புத்தசமயத்தவர்களாயிருந்த தமிழர்கள் சைவசமயத்தவர்களானுர்கள். அதன் பின்னர் அரசமரங்களினடியில் வைரவ சூலங்களை வைத்துவணங்கலாயினர். இதே பிரகாரம் இங்குற்ற ஆண்டி வைரவ சூலம் ஒன்றினை அரசமரத்தடியிற் தாபித்தனர்; பூசைவழிபாடுகளும் இபற்றுவாராயினர். ஐயனர் விக்கிரகம் கேணிக்குள் மறைந்துகிடந்தது. பின்னர் ஒல்லாந்தரின் கெடுபிடி ஓய ஐயனர் விக்கிரகம் வெளியே எடுக்கப்பட்டு வைரவ ஆலயத்தின் பாங்கர் வைக்கப்பட்டு வணங்கப்படலாயிற்று. இதனுல் கேணி ஆண்டிகேணியானதுபோல் ஐயனரும் ஆண்டிக்கேணி ஐயனரானுர். இன்னும் இந்த அரசமரம் சிவன்கோவில் இரண்டாம் வீதியிலே அக்கினி திசையிலிருப்பதைக் காணலாம். இதனுல் வைரவ சூலமும் ஐபனர் விக்கிரகமும் ஒட்டிப்பிறவா இரட்டையரானுர்கள்.

ஆண்டி கேணி ஐயனருஞ் சூலமும் மக்களின் பூசை வழிப்பாடுகளுக்கும் இலக்காகக் கோயில் பிரசித்தமாயிற்று. இஃதிவ்வாறு இருக்கின்ற காலத்தே அம்பலவி முருகர்[2] என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்துவந்தார். பத்தியிற்

---

1. தினகரன் என்ற நாமத்தையுடைய பிராமணன் வாழ்ந்த இடம் தினகரன் பிட்டி ஆயிற்று. பிட்டி என்பது புஷ்டி என்ற சங்கதமொழியின் சிதைவுபோலும்.
2. அம்பலவி முருகர் தோப்பு என்ருேர் வளவு இன்றும் விளாஊை என்ற இடத்திலிருக்கிறது.

சிறந்தவர்; சைவாசாரத்தில் கதித்தவர்; அடக்க ஒடுக்கம் நிறைந்தவர்; தருமசிந்தனையாளர். மரபாலுயர்ந்தவர்; களபூமியை வசிப்பிடமாகக் கொண்டவர், மாணு முதலியார் வம்சத்தில் வந்தவர். வாய்மை தூய்மை மெய்யன்பு மிக்க அம்பலவி முருகர் இந்த ஐயனர் விக்கிரகத்திற்குத் தனியாகக் கோயில் கட்டி எழுப்பி நித்திய நைமித்திய வழிபாடுகளியற்ற விருப்பங்கொண்டு தமது பேரவாவினை நிறைவேற்றினர். இதனல் ''அம்பலவி முருகன் வைத்த கல் மெய்யென்றால்'' என்று மக்கள் இன்றும் சூளுரை கூறுவதைக் கேட்கலாம். சிலகாலஞ் சென்றபின் அம்பலவி முருகர் ஐயனர் உற்சவமூர்த்தியையும் கோயிலிற் பிரதிட்டை செய்வித்தனர். இதனல் ஆண்டியும் அம்பலவி முருகரும் ஒட்டிப்பிறவா இரட்டையரானர்கள்.

கோயிற் திருப்பணிக்காகவும் பூசைக்காகவும் கமக்காரரிடம் நெல்லுத்தண்டியும் வந்தார் அம்பலவிமுருகர். கமக்காரர் சிலர் இவரைக் கண்டு சலிப்பதுமுண்டு. ''அம்பலவி முருகனும் வயிறுவளர்க்க வந்துவிட்டான்'' என்று வாயார வாழ்த்தியும் விட்டார்கள். இதனைக்கேட்ட அம்பலவி முருகர் அன்று தொடக்கம் சோறு சாப்பிடுவதை விட்டனர். உப்பின்றிச் சமைத்த இலைக்கறிகளையே உண்டுவந்தார். இதனல் கோயில் வளவில் முசுட்டை முல்லை அதிகமாக வளர்ந்தன. முசுட்டை தான் அம்பலவி முருகரின் பிரதான உணவாயிற்று. உப்பின்றித்தானுஞ் சாப்பிடக் கோயில் நிவேதனமும் அவ்வாருயிற்று.

இஃதிவ்வாறிருக்கையில் சிவாலயம் ஒன்றினை எழுப்பவும் அம்பலவி முருகர் உளங்கொண்டனர் கட்டினர். சிவலிங்கமும் இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்டது, பிரதிட்டா கும்பாபிசேகமும் நடைபெற்றது. இதனல் ஐயனர்கோயிலும் சிவன்கோயிலும் ஒட்டிப்பிறவா இரட்டையாயின. சோமஸ்கந்த மூர்த்தியையும் தாபிக்க நினைத்து தன் மகன் சண்முகத்தாருடன் இந்தியா சென்று தமது பொற்கடுக்கன்களையும் உருக்குவித்து வார்ப்பித்தனர். செவ்விதாக வார்ப்பு முடிந்தது. அம்பலவி முருகரின்

ஆருயிரும் நீங்கியது. மகன் சண்முகத்தார்[1] சோமஸ்கந்த மூர்த்தியைக் கொண்டு வந்து பிரதிட்டைசெய்தனர். பின்னர் சண்முகத்தாரால் பரிவார மூர்த்திகளாகிய விநாயகர் சுப்பிரமணியர் இவர்களுக்குங் கோயில் கட்டப்பட்டன. நடேசர் கோயிலும் சனீசுவரன் கோயிலும் இவர்காலத்திலேயே கட்டப்பட்டன. நடேசர் கோயில் கீலகவருடங் கட்டப்பட்டது. இது சம்பவத்தால் அம்பலவி முருகரும் [2]சண்முகத்தாரும் ஒட்டிப்பிறவா இரட்டையரானுர்கள்.

நடராசர் திருவுருவம் சிவன்கோவிலிலேயே வார்க்கப்பட்டது. இதனை வார்க்க உபகாரியாக இருந்தவர் மீசைக்காரன் சண்முகம் எனப்படுபவர். பேய்க்காசி வம்மிசத்தவர். இவருந் தமது கடுக்கனையும் உருக்கி நடேசர் உருவத்தை வார்ப்பித்தவர். சோழபுரத்துக் குருசாமி ஆசாரியர் இதனை வார்த்தவராவார். நடராசர் உருவம் வார்த்த பின் உருவ ஊர்வலம் 1907 ஆண்டு நடைபெற்றும் கும்பாபிசேகம் நடைபெறவில்லை. கும்பாபிசேகத்திற்கான பொருள் சேரவில்லை. இது கண்ட மீசைக்காரன் சண்முகம் ஆறுமாதகாலமாக அரிகண்டம் இட்டுக் கொண்டனர் என்பர். நடேசர் உருவம் ஏழெட்டு ஆண்டுகளாக, அபிசேகம் செய்யும்வரை நெல்லுக்குள் வைக்கப்பட்டதாகவும் கூறுவர். இக்காலத்தில் கோயில் மணியமாக இருந்த மாசிலாமணி அவர்கள் கும்பாபிசேகத்தை நிறைவேற்றிவைத்தனர்.

இவ்வகையில் விருத்தியடைந்த சிவன் கோவிலில் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. அற்புதமாகத் தோன்றிப் பென்னம் பெரியதோர் கோயிலாக விளங்கிக் கொண்டிருக்கும் இத்திவ்விய தலம்

---

1. சோமாஸ்கந்த மூர்த்தி எனவே ஒட்டிப்பிறவா இரட்டையர்.

2. சண்முகத்தாருக்குக் கடலிலாபத்து நேரிட்டுக் கரையடைந்தபோது காப்பாற்றிய அதிராம்பட்டினத்துச் சோனகரின் உதவிக்கு நன்றியறிதலாகக் காரைநகர் கிழக்குக் கடற்கரையையடுத்த வளவு அவர்கள் பேருக்கு எழுதிக்கொடுக்கப்படலாயிற்று. அது இன்றுஞ் சோனகவளவெனப்படும். மற்றும் விபரங்களுக்கு கணபதீசுவரக் குருக்கள் எழுதிய ஈழத்துச் சிதம்பரம் என்ற நூல் பார்க்கவும்.


உருப்பெற உதவியாக இருந்தவர்கள் யாவரும் ஒட்டிப் பிறவா இரட்டையர்களாக இருந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவ்விரட்டையர்களை வரிசைப்படுத்திக் காட்டுவாம்.

**ஆண்டியும் தாமோதர ஐயரும்**
**வைரவசூலமும் ஐயனர் விக்கிரகமும்**
**ஆண்டியும் அம்பலவிமுருகரும்[1]**
**கந்தன், சங்கரன் என்ற எருதுகள்.**
**கூழையன், வாலன் என்ற நாகபாம்புகள்**
**அம்பலவி முருகர், சண்முகத்தார்—மணியம்**
**சண்முகத்தார், சின்னத்தம்பி—மணியம்**
**சின்னத்தம்பி, மாசிலாமணி—மணியம்**
**மாசிலாமணி, துரையப்பா—மணியம்**
**சரவணபவக்குருக்கள், கணபதீசுவரக்குருக்கள்**
**(பெரிய குருக்கள் சின்னக்குருக்கள்)**
**சுப்பன், முருகன்—திருப்பணிக்காரர்**
**துரையப்பா, முருகேசு—மணியம்**
**முருகேசு, ஆண்டிஐயா—மணியம்**

காரைநகரில் ஐயனர் சிவன் கோவிலோடு ஆங்காங்கு மற்றும் கோயில்களுமுள. மணற்காட்டு மாரியம்மன் கோவிலும் சரித்திரப் பெருமை வாய்ந்ததாகும். போர்த்துக்கீச ஒல்லாந்தர் காலத்திற் கட்டப்பட்டதாக அறிகிறோம். பழைய மாதாங்கோயில்களுமுள.

---

1. அம்பலவி முருகரின் வம்மிசம்.



காரைநகரிற் கிறித்தவர்களுமுளர். இவர்கள் அமரிக்கன் மிசியோன்மாரைச் சேர்ந்தவர்கள். இந்த மிசியோன்மார், ஆறு தமிழ்ப் பள்ளிக்கூடங்களும் ஒரு ஆங்கில பாடசாலையுங் கட்டியவர்கள். வேதக்கோயில் ஒன்றுண்டு. இவர்களின் தொகை குறைவு. இவர்களிற் பெரும்பாலோர் சின்னணிச் சட்டம்பியார் பரம்பரையினர். இவர்களுட் கல்வியாலும் கனதனத்தாலும் பேர்புகழாலும் மிக்கவர் அல்லின் ஏபிரகாம் ஆவார். ஆசிரியராகவும் வானநூல் வல்லாராகவுந் திகழ்ந்தவர்.

# கல்வி

காரைநகர் பரப்பாலும் சனத்தொகையாலும் குறைவுள்ளதெனினும் வளத்தாலுங் கல்வியானுஞ் சிறந்து விளங்குகின்றது. இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்தே பதினைந்துக்கு மேற்பட்ட பாடசாலைகளிலிருந்து வருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கில பாடசாலைகள் இரண்டு இருந்து வந்தன. ஒன்று சயம்புச் சட்டம்பியாரின் தனிப்பெரும் ஆற்றலினாலுருவாயது. மற்றையது அமரிக்கன் மிசியோன்மாரின் தாபனம், அமரிக்கன் மிசியோன்மார் வேறும் பல தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் தாபித்திருந்தனர். இந்தப் பள்ளிக்கூடங்களில் காரைநகர் வாசிகளும் அச்சமயத்தைத் தழுவியவர்களுமான அப்புத்துரையும் அவர் பாரியராகிய சின்னக்குட்டியும், பேரார் ஆறுமுகம், சிவலைச்சபாபதி, கறுவற் சபாபதி, கோவிந்தர், நல்லதம்பி, ஆகியோர் தலைமையாசிரியர்களாகக் கடமையாற்றியுள்ளார்கள்.

சைவசமயப்பாடசாலை என்ற முறையில் சுப்பிரமணிய வித்தியாசாலை, வியாவிற்பாடசாலை என்பனவுமிருந்தன. மேலும் இந்த இருபதாம் நூற்றாண்டில் சுந்தரமூர்த்தி நாய

ஞர் பாடசாலை, மெய்கண்டான் பாடசாலை என்பன தாபிக்கப்படலாயின.

சுப்பிரமணியவித்தியாசாலையில் நாகமுத்துச் சட்டம்பியார், பஞ்சாட்சர ஐயர், சுப்பிரமணிய தேசிகர் முதலானோர் கல்விகற்பித்து வந்தனர்.

இவ்வகையிற் தோன்றிய தமிழ்ப்பாடசாலைகளில் மூன்றாம் அல்லது நாலாம் வகுப்பிற் தேறிய மாணுக்கர் அக்காலத்தில் ஆங்கில பாடசாலைகளாகிய சயம்புச் சட்டம்பியாரின் இந்துக் கல்லூரிக்கும் அமரிக்கன் மிசியோன் பாடசாலையாகிய சாமிபள்ளிக்கூடத்திற்குஞ் சென்று ஆங்கிலம் படித்து வந்தனர். சாமிபள்ளிக்கூடத்திற் படித்த கிறித்தவர் பலர் கல்விமான்களாகத் திகழ்ந்துள்ளார்கள். பொதுவாகச் சைவசமயப் பிள்ளைகள் சயம்புச் சட்டம்பியாரின் பள்ளிக்கூடத்தை நாடவே சாமிபள்ளிக்கூடம் மூடப்படலாயிற்று. அதனிடத்தை இப்போது **யாழ்ரன் கல்லூரி** வகித்து வருகின்றது.

சயம்புச்சட்டம்பியார் என்பவர் காரைநகருக்கு வந்திலரேல் இப்போது காரைநகரிற் பெருங்குடிமக்களாகத் திகழும் மலாய்நாட்டு பெஞ்சனியர்மார் தோன்றியிருக்கவே மாட்டார்கள். சயம்புச்சட்டம்பியார் காரைநகருக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. தன்னலங்கருதாது பொதுநலநோக்குடன் ஆங்கிலக்கல்வியைப் போதித்து வந்தனர். அந்த நாளையில் ஆங்கிலத்திற்குப் பெருமதிப்பு. ஆங்கிலமோகமே தலையாய இடத்தை வகித்து வந்தது. அவ்வாறு பெரும் மானமிருந்தும் அக்கல்வியை மாணுக்கருக்கு ஊட்டுவதில் சலியாது உழைத்தனர் சயம்புச்சட்டம்பியார். காலையில் மாலையில் பிள்ளைகளைத் தமது வீட்டுக்கழைத்துக் காசு பணம் வேண்டாது இலவசமாகவே பாடங் கற்பித்து வந்தனர். இவரிடத்தில் ஆங்கிலம் ஐந்தாம் வகுப்பு மட்டும் படித்த எத்தனையோ மாணுக்கர் மலாயா சென்று அரசாங்க உத்தியோகத்திலமர்ந்து அவர் பெற்ற சம்பளத்திலும் பார்க்கக் கூடிய பெஞ்சன் பெற்று வந்துள்ளார்கள்.

சயம்புச்சட்டம்பியார் கல்வியை மாத்திரம் மாணக்கருக்கு ஊட்டினவரல்லர். ஒழுக்கத்தையுங் கவனித்து வந்தார். சைவாசார முறைப்படி நெற்றியிற் திருநீறு பொட்டுடன் மாணக்கரை வரும்படி கட்டளையிடுவர். கௌபீனம் அணிந்திருக்காவிடில் மாணக்கர் அடிபடுவர். கடதாசி விளையாடல் காசு கட்டல் விலக்கப்பட்டகாரியம்.

வெள்ளிக்கிழமை தோறும் மாணக்கரைக் காலையிற் சிவன்கோவிலுக்கு வரவழைத்துப் பசனை செய்வர். வராதவரைத் தண்டிக்கவும் மறவார். சைவ வினவிடை பாடமாக்கிச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

சயம்புச் சட்டம்பியார் தமது ஆற்றல் கொண்டு உருவாக்கிய ஆங்கில பாடசாலைக்குத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பாடசாலையெனவும் பின்னர் இந்து ஆங்கில பாடசாலை எனவும் பெயரிட்டு வழங்கினர். தன்னந்தனியாகக் கொண்டு நடாத்த முடியாதபோது அதனை யாழ்ப்பாண இந்துக்கல்லூரியை நடாத்தி வந்த சபைக்குக் கையளித்து அச்சபையின் முகாமையில் நடைபெறவிட்டனர்.

ஆங்கிலக்கல்வியின் வளர்ச்சியைச் சயம்புச்சட்டம்பியார் கவனித்துக் கொண்டுவர அவருக்கு உறுதுணையாக நின்று தமிழ்க் கல்வியைப் போதித்துவந்தார் அம்பலச்சட்டம்பியார். அம்பலச்சட்டம்பியார் தமிழ் இலக்கணத்தில் மிகுந்த திறமைசாலியாக இருந்தார். கணிதத்திலும் வல்லுநர். இந்த ஆங்கில பாடசாலையிற் கற்றுத் தேறிய யாவரும் தமிழிலும் சிறந்த அறிவுடையவர்களாகவு மிருந்தனர். இந்தப் பெருமை அம்பலச்சட்டம்பியாரையேசாரும்.

இந்த ஆங்கில பாடசாலையின் முதற் தலைமை ஆசிரியர் சயம்பு ஆவார். அவருக்குப் பின்னர் ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர் பி. ஏ, என்பவர் தலைமையாசிரியரானர். 1914ம் ஆண்டு மட்டில் இருந்துள்ளார். அடுத்து காரைநகர் வாசியும் பெருங்குடிப்புதல்வரும் நல்லறிவாளருமாகிய பொன்னுடையார் வேலுப்பிள்ளை தலைமை ஆசிரியரானர். இவர் இளைப்பாறியதும் சயம்புச்சட்டம்பியாரின் மருகர் என். கந்தையா அவர்கள் தலைமையாசிரியராக

இருந்து முதுமை பிறக்க முன்னரே மரணத்திரையால் மறைக்கப்பட்டனர். இவர் தலைமையாசிரியராக இருந்த காலத்திலேதான் மாணுக்கர் சட்டைபெனியன் போட்டுப் பாடசாலைக்கு வரலாயினர். அவர்காலந்தொட்டுப் பிள்ளைகள் வெறும் மேலுடன் பாடசாலை வருவதில்லை. இவரினிடத்தைச் சீதராமையர் B. A. அவர்கள் எடுத்தனர். சீதாராமையருக்குப் பின்னர் திரு. ஏ. சரவணமுத்து அவர்கள் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். திரு. ஏ. சரவணமுத்து அவர்கள் காலத்திலே தான் பழைய மாணுக்கர் சங்கம் உருவாகியது. பழைய மாணுக்கர் சங்கத்தை உருவாக்கி அதனைக் கொண்டு நடத்துவதிற் கண்ணுங் கருத்துமாயிருந்தவர் காலஞ்சென்ற நா. பொன்னம்பலம் ஆவார். இவர் கணக்களார் பதவியிலிருந்த சமயத்தில் அகால மரணமடையலாயினுர்.

திரு. சரவணமுத்து அவர்கள் வித்தியாதரிசியாக நியமனம் பெற்று பாடசாலையை நீங்க திரு. இராசரத்தினமும் அவருக்குப்பின் திரு. கனகசபையும் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். திரு. கனகசபை கல்லூரியின் முதலதிபராக்கக் கடமையாற்றி இளைப்பாற திரு. ஆ. தியாகராசா M A; M.Lit அதிபராக நியமனம் பெற்றனர். 1927ம் ஆண்டு தொடக்கம் வெளியூர் ஆசிரியர்களே தலைமையாசிரியர்களாக இருந்து வந்தநிலைமையை இவரின் நியமனம் மாற்றியமைத்தது. கல்லூரிக்கும் இவரின் நியமனம் திருப்புமுனையாக மாறலாயிற்று. இருபத்தைந்து வருடங்களுக்குத் தொடர்ந்து அதிபராக இருந்த இவர் பாடசாலையின் நலனுக்கும் விருத்திக்கும் பெரிதும் உழைத்து வந்தார். இவருடைய காலத்திலே தான் கட்டிடங்கள் புதிதாகத் தோன்றலாயின. இலங்கையிலும் மலாயாவிலும் கட்டிட நிதிக்காகப் பணஞ் சேர்த்தனர். இதே சமயத்தில் திரு. ந. நடராசா K. C. அவர்களின் ஞாபகார்த்த மண்டபமும் அதனோடு சேர்ந்தநிலமும் இந்துக்கல்லூரியின் பிரயோகத்திற்கு விடப்படலாயின. விஞ்ஞான வகுப்புகளும் பரிசோதனைக்கூடமும் வளர்ந்து வரலாயிற்று. கல்லூரித்தரமுமுயர்ந்தது; அதிபரின் தரமும் உச்சமாய் உயர்ந்தது. யாழ்ப்பாணத்திலுள்ள ஒருசில கல்

லூரிகளே சிறப்புத்தர அதிபரையுடையனவாக இருந்தன. அவற்றுள் ஒன்று காரைநகர் இந்துக்கல்லூரியாகும். அதனை முதன் முறையாக வகித்தவர் திரு. ஆ. தியாக ராசா M. A. M. Lit. அவர்களாவார்.

இவ்வாறு வளர்ந்து வந்த கல்லூரியின் வளர்ச்சிக்கு உறு துணையாக இருந்த உதவி ஆசிரியர்களையும் நாம் மறக்க லாகாது. ஒரே போக்கில் ஒரே வாக்கில், வாழ்க்கையிலும் ஒழுங்கு முறையிலும் எதுவித மாற்றமுமில்லாதது போல் இக்கல்லூரியிலிருந்து மாற்றம் பெறாது இரு தலை முறைக்குமேல் மாணுக்கருக்குக் கல்வியறிவூட்டிய பெருமை திரு. ஆர். கந்தையா அவர்களுக்கே உரியதாகும். மாணுக் கர் வழியாகவோ பெற்ருர் வழியாகவோ முகாமையாளர் வழியாகவோ ஒரு சிறு பிரச்சினைக்கும் ஆளாகாதவர்; பிரமச்சாரியாக இருந்தகாலத்திலுஞ்சரி மணம் முடித்து வயதேறிய காலத்துஞ்சரி இவர்களையிட்டு எதுவித தகராறும் கிளம்பவில்லை எனலாம். குணத்தால் நடையால் தோற்றத்தால் தங்கம். படிப்பிக்கும்போது இடையிடையே நல்ல பகிடிகளைவிட்டு மாணுக்கருக்கு வெறுப்புத்தட்டாது பாடத்தை நடாத்திச் செல்வர். இவர்கள் படிப்பித்த காலத்தில் செ. கனகசபை என்பவ ரும் மகேசசர்மா அவர்களும் படிப்பித்து வந்தனர். முன்னை யவர் இளம்பிராயத்திலே மரணம் அடைந்தனர். மகேச சர்மா அவர்கள் நொத்தாரிசாகக் கடமையாற்றுவதற் காக பாடசாலையைவிட்டு நீங்கினர். பாடசாலையில் பிள்ளை களின் தொகையும் அதிகரித்தது. சாமிபள்ளிக்கூடமும் மூடப்படலாயிற்று. ஆசிரியர்களின் தொகை கூடலா யிற்று. திரு. மு. பொன்னம்பலவாணர், வே. சுப்பிரமணி யம், க. கணபதிப்பிள்ளை முதலானோர் ஆசிரியர்களாக நிய மிக்கப்படலாயினர். திரு. க. கணபதிப்பிள்ளை அவர்கள் பாட சாலையின் வெளிக்கருமங்களில் விசேடமாக விளையாட்டுப் பகுதியில் பெரிதும் உழைத்துவந்தவர். அகாலமரணமடை யப் பாடசாலை அவரின் நற்சேவையை இழந்தது. திரு. பொன்னம்பலவாணர், திரு. சுப்பிரமணியம் இருவரும் சேவைக்காலம் முழுவதும் இப்பாடசாலையிற் படிப்பித்து இளைப்பாறியுள்ளனர். இதேபான்மையில் ப. நாகலிங்கம்

எஸ். கந்தையா, ஆ. சிதம்பரப்பிள்ளை, நாகமுத்துப் புலவர் மகன் திரு. கனகசுந்தரம் என்பவர்களும் இப்பாடசாலையிற் படிப்பித்து இளைப்பாறியுள்ளார். சாமிபள்ளிக்கூடம் மூடப்பட அங்கு படிப்பித்த இரு வர் இப்பாடசாலையில் ஆசிரியராக நியமிக்கப்படலா யினர். திரு. செல்லையா, திரு. ஐயம்பிள்ளை என்பவர்களே அவர்கள். இருவரும் இப்போது இளைப்பாறியுள்ளார்கள்.

இவ்வாறு வளர்ந்துவந்த பாடசாலைகள், கல்லூரிகள் இவற்றால் காரைநகர் வாசிகள் கல்வியாற்பெரிதும் முன் னேறியுள்ளனர். சகலவிதமான உயர்தொழில்களில் அமர்ந் திருக்கின்றனர் பலர்.

சட்ட வல்லுநராகப் பலர் திகழ்ந்தனர்; திகழ்ந்து கொண்டுமிருக்கின்றனர். வானசாத்திரிகளாக உலகப்புகழ் பெற்றாருமிருந்திருக்கின்றனர். நூலாசிரியர்களாக விளங் கினாருமுளர். உரையாசிரியருமிருந்தனர். பத்திரிகை ஆசிரி யராகவுமிருந்துள்ளார் சிலர். நல்லாசிரியர்களாகக் கட மையாற்றுகின்றனர். பண்டிதர்களாகவும் புலவர்களாக வும் வித்துவான்களாகவும் பலர் இங்கு தோற்றியுள்ளனர். இவ்வாறு இங்குள்ளார் பலர் பல்லாற்றாலும் கல்வியறிவு மிக்கவராக விளங்குகின்றனர். இங்கு வதியும் மக்கள் நூற் றுக்குநூறு வீதம் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாகவே இருக்கின்றார்கள்.

இருவேறு உலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு

என்ற வள்ளுவர் வாக்கின்படி காரைநகர் வாசிகள் கல்வியாலுயர்ந்தவர்கள் ஒருபாலும் செல்வத்தால் மிக்க வர்கள் மறுபாலுமாக வாழ்ந்து வருகின்றார்கள். நாட்டின் நிலம் வளங்குறைந்ததெனினும் மக்களின் மனவளம் அவர் கள் பிறந்த பூமியைச் செழிப்பாக்கியுள்ளது.

# மடங்கள்

மடங்கள், சத்திரங்கள், தங்குமடங்கள் இவைகள் கட்டித் தானதருமங்கள் செய்வது பண்டைக்காலந்தொட்டுத் தமிழ் மக்களால் போற்றப்பட்டு வந்தது. இன்றும் அதனைத் தமிழ் மக்கள் செய்யத் தவறுவதில்லை. இவ்வகையிலமைந்த மடங்கள் ஊர்கள்தோறும் கோயில்களையடுத்தும் பெருவழிகளின் பாங்கரிலும் கட்டப்பட்டிருப்பதை யாழ்ப்பாணத்திலே எங்குங் காணலாம்.

தெருத்திண்ணைகள் அமைத்துக் குடத்தில் தண்ணீர் வைக்கும் வழக்கம் அக்காலத்தில் நிறைய இருந்தது. நெடுந்தூரம் கால்நடையிற் பயணஞ் செய்வார்க்கு இது முறை உதவியாக இருந்தது. இக்காலத்தில் இவற்றின் தேவை குறைந்து விட்டது. எனினும் கோயில்களின் பாங்கரில் அன்னசத்திரங்கட்டும் வழக்கம் நின்றுவிடவில்லை.

## பிள்ளைமடம்

இவ்வகையில் காரைநகரிலே முதன் முதலாகத் தோன்றிய மடம் ''பிள்ளைமடம்'' எனப்படும். ஊர்காவற்றுறை

யின் பாங்கரில் காரைநகர்க் கரையில் இது கட்டப்பட்டுள்ளது. இதனைக் கட்டியவர் கனகசபைப்பிள்ளை. அவரது பெயரின் ஈற்றிலுள்ள ''பிள்ளை'' என்னுஞ் சொல்லால் இன்றும் வழங்கப்பட்டு வருகின்றது. காரைநகரிற் கிராமச் சங்கம் தோன்றியபோது இந்த மடமே அதன் கந்தோராக அமைந்தது.

கனகசபைப்பிள்ளை காரைக்காலிலிருந்து வந்து காரைநகரிற் குடியேறியவர். மடத்துக்கு அண்மையிலுள்ள நிலங்கள் அவருக்குச் சொந்தமாக இருந்தன.

கனகசபைப்பிள்ளை கப்பற் போக்குவரத்து சரக்கேற்றல் இறக்கல் முதலாந்துறை முகத்தொழிலில் ஈடுபாடுடையவர். அதன்மூலம் பெருஞ் செல்வம் படைத்திருந்தார்.

ஒல்லாந்தர் அரசோச்சுங் காலத்தில் கி. பி. 1780ல் காரைநகர் வந்தனர். ஒல்லாந்தர் இவரின் சேவையைப் பெரிதும் போற்றினர். இவரைத் தங்கள் அரச சபையிற் சேர்த்து வண்ணார்பண்ணையில் வசிக்க மாளிகையோடு சேர்ந்த நிலமுங் கொடுத்தனர். நீர்வாவிக்குளம் இவராலேயே கட்டப்பட்டதென்பர். ஆங்குக் கோயிலுங் கட்டியுள்ளார்.

கனகசபைப்பிள்ளை விவேகமும் நற்குணமும் நேர்மையும் பொருந்தியவர். பரோபகார சிந்தனையாளர். ஒல்லாந்தர் இவரிடத்திற் பெருமதிப்புடையவராயிருந்தனர்.

## மணிவாசகர் மடாலயம்

சிவன் கோவில் வடகீழ் மூலையில் அமைந்திருக்கிறது. இற்றைக்கு நாற்பது வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டது. திரு. வீ. வே. சண்முகம் அவர்கள் இம்மடத்தில் அதிக கவனஞ் செலுத்திவந்தார். அன்னதானமுஞ் செய்து வந்தார். இப்பொழுது அன்னதானத்தை மணிவாசகர் சபை செய்து வருகின்றது.

## சிவ ஆச்சிரமம்

இலட்ச ரூபாக்களுக்கு மேற் செலவு செய்து தற்கால வசதிகளுக்கு இணங்க இதனைக் கட்டி முறைமைப்பிரகாரம் பரிபாலித்து வருகின்றார் திருமதி தங்கம்மா நடராசா அவர்கள். திரு. ந. நடராசா K. C. அவர்கள் பேரும் புகழும் வாய்ந்த நியாயவாதியாகத் திகழ்ந்து நீதியரசராக உயர்நீதிமன்ற ஆசனத்திலமர்ந்து நீதிவழங்கி வந்தவர். அன்னவரின் அருமைப் பாரியாரே திருமதி தங்கம்மா அவர்கள்.

தேவாரம், திருவாசகம் ஓதுதலும் ஓதுவித்தலும், சிவ சிந்தனைக்காக மௌன அனுட்டானம் செய்தலும், பசனை செய்தலும் இந்த ஆச்சிரமத்திற் தினந்தோறும் நடைபெற்று வருகின்றன. இவ்வகைச் சமய வழிபாடுகளில் ஈடுபடும் பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டு வருகின்றது. வெள்ளிக்கிழமை தோறும் பெருங்கூட்டம் இங்கு கூடுகின்றது. பெண்மணிகளுக்கென்றே இந்த ஆச்சிரமம் அமைக்கப்பட்டதெனினும் ஆண்களுக்கு விலக்கன்று.

# காரைநகர்ச் சபைகள்

காரைநகரின் கல்வி, கலாசாரம் பண்பாடு, சமயம் பொதுநலம், தொழில் இவற்றின் அபிவிருத்திக்காகப் பல சபைகள் காலந்தோறும் தோன்றலாயின. அவ்வாறு தோன்றிய சபைகள் சிலவற்றைப்பற்றிக் கூறுவதே இதன் நோக்கமாகும். தொகுத்துரைக்க எடுத்த சபைகள் வருமாறு.

1. காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச்சங்கம்.

2. காரை இந்து வாலிபர் சங்கம்.

3. சைவமகாசபை.

4. காரைச்சங்கம்: Karai Union, Kuala Lumpur.

5. காரை அபிவிருத்திச்சபை.

6. மணிவாசகர் சபை.

---

1915ல் உருவாய காரை இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கம் 1918ல் ''காரை இந்துவாலிபர் சங்கம்'' ஆகி அது

வும் பின்னர் 1924ல் ''சைவமகாசபை'' ஆயிற்று. * இச்சபை 1967ல் பொன்விழாவுங்கண்டது.

காரைச்சங்கம் என்ற சபை மலாயாவில் உதயமானது. மலாயாவுக்குச் சென்று அங்கு உத்தியோகம் புரிந்த காரைநகர் மக்களால் உருவாயது. காரைநகரின் அபிவிருத்திக்காகப் பல்லாயிர வெள்ளிகளை உதவியுள்ளது. சிவன் கோயிற் திருப்பணி, இந்துக்கல்லூரிப் புதிய கட்டிடம் இவற்றிற்கே பெரிதும் பயன்படலாயிற்று.

காரை அபிவிருத்திச்சபை கொழும்பில் வசிக்கும் காரைநகர் மக்களால் நடாத்தப்பட்டு வருகின்றது. காரை ஒளி என்ற சஞ்சிகையும் இச்சபையினர் இப்போது அச்சிட்டு வெளிப்படுத்தி வருகின்றனர். காரைநகரின் முன்னேற்றம் நோக்கி உழைத்து வருகின்றனர்.

மணிவாசகர் பேரால் சபையொன்று காரைநகரில் நற்பணி புரிந்து வருகின்றது. திரு. க. வைத்தீசுவரக்குருக்களின் விடாமுயற்சியாலும் அயரா உழைப்பினாலும் இது உருவாயது. ஆண்டுதோறும் மார்கழித் திருவெம்பாவை உற்சவகாலத்தில் சொற்பொழிவாளர்களை ஈழம், தென்னகம் எங்குமிருந்தும் வரவழைத்து திருவாதிரைப் பெருவிழாவினை ஈழத்துச்சிதம்பரத்திற் சிறப்பாகக் கொண்டாட வழிவகை செய்து வருகின்றது. இச்சபை, தலதரிசனத்திற்கும் பத்திவழிபாட்டிற்கும் வரும் அடியார்க்கு அன்னதானமுஞ் செய்து வருகின்றது.

---

* இதன் விபரம், ''காரைநகர்ச் சைவமகாசபைப் பொன்விழா மலர்'' என்ற சிறப்பு மலரிற் காண்டல் கூடும்.

# இடப் பெயர் விளக்கம்

"வடமாகாணத்துள்ள சில இடப்பெயர்களின் வரலாறு''* என்றோர் நூலுண்டு. இந்நூலில் யாழ்ப்பாணத்து இடப்பெயர்களிற் பெரும்பாலானவை சிங்களமொழியோடு சம்பந்தமானவை என்று எடுத்துக்காட்டியுள்ளார், அதன் ஆசிரியர். அது முற்றிலும் உண்மையன்று. தமிழ்ப் பெயர்கள் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுப் பின்னர் அம் மொழியிலிருந்து சிதைந்து வழங்குகின்றன என்பதே முற்றிலும் உண்மை. மோகப்ப (Morgappa) என்றால் ஆங்கிலப் பெயரல்ல. முருகப்பன் என்ற பெயர் ஆங்கிலத்திற்குப் போய்ப்பின்னர் அங்கிருந்து தமிழிற்கு வரலாயிற்று. அவ்வாறே வன்டக்கோன் (Vandakone) வேந்தர்கோனின் திரிபு. கொவிங்ரன் (Govington) கோவிந்தன் என்பதன் திரிபு. இவ்வாறு மாறிய பெயர்கள் பல உண்டு. மக்களின் பெயர் இவ்வாறாயின் இடங்களின் பெயர்களைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா? சென்னையிலுள்ள அம்பட்டன் பாலம் போல் மாறியிருக்கும்.

---

* இந்நூலை எழுதியவர்: ச.குமாரசுவாமி, யாழ்ப்பாணம் பொலிசுக் கந்தோர் தலைமை இலிகிதர். தெல்லிப்பளை வாசி க. வேலுப்பிள்ளை எழுதிய "யாழ்ப்பாண வைபவகௌமுதி'' என்ற நூலின் பிற்பகுதியாக அச்சில் வந்துண்டு.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணக்குடா நாட்டில் வாழ்ந்த தமிழர் யாவரும் புத்தசமயத்தவர்களாகிப் பாலி சிங்கள மொழிகளிற் தேர்ச்சியடைந்தவர்களாகவுமிருந்திருப்பர். அரைகுறைப்படிப்பு முடையவர்களாகவுமிருந்திருப்பர். தமிழ்மொழியின் மேன்மையுணர்ந்த இக்காலத்திலும் தனித்தமிழ்ப் பெயர்களை விரும்பாது சங்கத மொழித் தேர்ச்சியில்லாமலே சங்கத மொழிப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகளுக்குச் சூட்டுவர். அவ்வாறே புத்தர்களாயிருந்த தமிழர் நவமும் மோடியும் நோக்கித் தங்கள் ஊர்ப்பெயர்களுக்குச் சிங்களமொழிச் சொற்கள் தேடிச் சூட்டியிருப்பர். சின்னவெளி என்ற இடப்பெயர் இணுவில் என்று மாறியுள்ளது. மேல்வெளி என்பது உடுவில் ஆயிற்று. கொக்குவெளி என்பது கொக்குவில் ஆயிற்று. பெரியவட்டை 'மாவத்தை' யாகிப் பின்னர் மாவட்டையாகி இருக்கின்றது. தோடையடி என்பது தோடம்பே ஆகித் தொடம்பை என நிற்கின்றது. காரைவெட்டை என்ற இடம் கரவெட்டி ஆயிற்று. இவ்வாறு தமிழில் வழங்கிய இடப்பெயர்களிற் பெரும்பாலானவை சிங்களத்திற்கு மாறிப் பின்னர் தமிழில் வந்தடைந்துள்ளன.

காரைநகரிலுள்ள சில பல குறிச்சிகள் இவ்வாறே மாற்றமடைந்துள்ளன. அவற்றை விளக்குமுகமாகவே இத்தனையும் எழுதலாயிற்று.

இடப்பெயர் விளக்கத்தை இங்கு எழுதிக்காட்டும் போதும் முதலில் மேலே எடுத்துக்காட்டிய நூலிலுள்ளதை எழுதிக்காட்டிப் பின்னர் எமது விளக்கம் தரப்பட்டதாகவே வாசகர்கள் கருதல் வேண்டும். கேள்வியடையாளம் விளக்கமுடியாமையைக் குறிக்கும்.

| | |
|---|---|
| காரைநகர் : | காரை தீவு: காரை மரங்கள் நின்றபடியால் காரை தீவு என்றாயிற்று. பின்னர் காரைநகர் ஆயிற்று. |
| வலந்தலை : | வல—ஒருமரம், குகை, பேய், இரத்தம், சேனை. வலன் — சட்டிபானை, தல—பனை, பள்ளம், தாழ்ந்த நிலம். |

| | |
|---|---|
| களபூமி: | போர்க்களம் என்று பொருள் கூறுவர். கடலையடுத்துள்ள கற்பூமியினைக் களபூமி என்றும் மக்கள் வழங்குவர். இது கருத்துப் பொருத்தமுடைத்து. |
| பலிகாடு : | பலிகொடுத்த காடு என்று பொருள் கூறுவர். பாழ்காடு, 'அதாவது அழிந்தகாடு என்ற பொருள் சிறந்து தோன்றுகின்றது. |
| நீலன்காடு : | நீலன் + காடு |
| வடகாடு: | வடக்கு + காடு |
| தோப்புக்காடு : | தோப்பு + காடு. தொகுப்பு > தோப்பு ஆயிற்று. |
| மணற்காடு : | மணல் + காடு. |
| கருங்காலி: | ? |
| தங்கோடை : | தன் – நாவல், 'கொட' என்னுஞ் சிங்களச் சொல் கொடை, ஓடை, கோடை, உடை எனவிகாரப்பட்டு விளங்குகின்றது. காடு என்ற தமிழ்ச் சொல் கொட எனமாறியதுபோலும். கிராமப்புறத்தானை நாம் காட்டான் என்று வழங்குவது போல் சிங்களத்தில் கொடையா என்று வழங்குவர். இது ஆராயற்பாலது. |
| | நாவற்காடு—தங்கோடை என மாறியது போலும். கந்தரோடை, அங்கொடை நோக்குக. |
| பாலாவோடை : | பாலா – தென்னை, மஞ்சள், மல்லிகை, பாலைக்காடு என்பதன் திரிபு. |
| சக்கலாவோடை: | சவர்க்களக்காடு என்பது சக்கலாவோடை ஆயிற்றெனலாம். |

சாம்பலோடை: சாம்பல் + ஓடை

வளுப்போடை : ? + ஓடை

சணவோடை: ? + ஓடை

கோவளம் : கடலுள் நீண்டிருக்கும் தரைப்பாகம் கோவளம் எனப்படும். தனித்தமிழ்ச் சொல்.

தூம்பிற்பிட்டி: நீர் விழுந்தோடும் வழி தூம்பில். இங்கு காரைநகர் கிழக்குக்கடல் வடக்குப் பெருங்கடலுள் விழுந் தோடுகின்றது கொள்ளுப்பிட்டி, உடுப்பிட்டி நோக்குக. பிட்டிய — வெளிநிலம், விளையாடுமிடம். புஷ்டி > புட்டி > பிட்டி ஆயிற்று போலும்.

இடைப்பிட்டி: இடை + பிட்டி.

தீனுப்பிட்டி: நியனு—ஒரு மரம், புத்தன்.

மணற்பிட்டி: மணல் + பிட்டி

மூக்கப்பிட்டி: ? + பிட்டி

மாரும்பிட்டி: ? + பிட்டி

வேரப்பிட்டி: ? + பிட்டி

என்னுங்கப்பிட்டி: ? + பிட்டி

உதிராப்பிட்டி: ? + பிட்டி

விளானை : சிங்களம் விலான. இது ''விலா—வன'' என்பதன் சிதைவு போலும். அதன் பொருள் செதுப்புநிலஞ் சார்ந்த காடு அல்லது சோலை ஆகும். சேற்றுநில மென வுங் கொள்ளத்தகும். கண்டிநாட்டிலுள்ள ''விலான — பல்லகம்'' கொழும்பைச் சார்ந்த ''தன்—விலான' என்னுங் கிராமப் பெயர்களிலேயிருக்கும் ''விலான'' என் னும் பதத்தைப் பார்க்க. 'ஆன' என்பது

'வன' என்னுஞ் சிங்களச் சொல்லின் சிதைவெனக் கொள்ளப்படும்.

ஆகவே விள என்பதும் வனம் ஆகின்றது; ஆனே என்பதும் வனம் ஆகின்றது. எனவே விளங்குமாறில்லே. வெளிவனம் என்பது விளானே ஆயிற்று போலும். விளமர முள்ள இடமுமாயிருக்கும். சங்கானே, மருதானே நோக்குக.

கிளுவனே: கில—எலுமிச்சை, பாழ்நிலம், கிவிலு—விளாமரம்.

தன்னே: தன—தென்னே, தென்னேயடி தன்னேயா யிற்று போலும். தன்னேயமக அந்தாதி ஒன்று காரைநகர் கார்த்திகேயப் புலவ ராற் பாடப்பட்டுண்டு.

திக்கை: திக்காய் எனவழங்கப்படுவது. இருப்பிடம் எனப்பொருள்படுவதுமான ''கெய'' என் னுஞ் சொல்லே சிதைந்தது போலும்.

கெய என்பது இருக்கை என்பதன் சிங்க ளத்திரிபாகும். திரு — இருக்கை — திக்கை ஆயிற்றுபோலும். திக்கைத் திரிபந்தாதி என்ற நூல் கார்த்திகேயப் புலவராற் பாடப்பட்டுள்ளது. திக்கரை என்று வழங் குவர். துறட்டிக்கை, வேரக்கை நோக்குக

போசிட்டி: போயிட்டி என்றும் வழங்குவர் ''சிட்டி என்பது இருக்கை எனப்பொருள்படுவதும் சிங்கள இடப்பெயர்கள் பலவற்றிற் காணப்படுவதுமான ''ஹிட்டிய'' அல் லது ''சிட்டிய'' என்னும் சிங்களச் சொல் லின் சிதைவென்க''. போசிட்டியிலுள்ள போ'' அரசமரம்.

திருப்போசை வெண்பா என்னும் நூல் கார்த்திகேயப் புலவராற் பாடப்பட்டது கருங்காலி முருகமூர்த்தி கோயில் இங் குண்டு. மயிலிட்டி, தம்பசிட்டி நோக்குக.

நீலிப்பந்தனை: நீலி என்பது கண்ணகி. கண்ணகி அம்மன் இருக்கும் இடம் நீலிப்பந்தனை. பத்தனை என்பது பந்தனை ஆயிற்று. பத்தனை என்பது புற்றரை.

சடையந்தனை: ?

கரப்பிட்டியந்தனை: ?

வாரிவளை: ''வளை, வல—காடு, வளை வல என்பன தமிழ்ச் சொல்லன்று என்பதூஉம் சிங்களச் சொல்லின் சிதைவே என்பதூஉம் தெளிவாகும்.''
வாரி வெளி என்பது வாரிவளை ஆயிற்றென்பதே பொருத்தமுடைத்து. வாரி என்பது வெள்ளம் எனப்பொருள்படும்.

பொன்னுவளை: கல்வளை கழுதாவளை நோக்குக.

யாத்தரவை: பெருந்தரவை என்பதின் சிங்களத் திரிபு.

தரவை: பண்படுத்த முடியாத இடத்தைத் தரவை என்பர்.

வியாவில்: சிங்: யாயவில. யாய — பெருவெளி. பெருவெளி என்பதன் சிங்களமாற்றம். இணுவில், உடுவில் நோக்குக.

நந்தாவில்: ''சுவர்க்கலோகத்திலே சக்கரன் ஸ்நானம் செய்யும் வாவி, வண்ணுத்தி. சிங்களவர் வண்ணுனை மாமா என்பர். வண்ணுத்தியை நந்தா என்பர்.''

கொதிராவில்: ?

விக்காவில்; ?

மொந்திபுலம்: புலம் என்பது தமிழ்ச் சொல். வயல் என்பது கருத்து.

கோதிப்புலம்: கோதி + புலம்

அறுகம்புலம்: அறுகு + புலம்

கொட்டைப்புலம்: கொட்டை + புலம்

வேதரடைப்பு. அடைப்பு தமிழ்ச் சொல்

பூதனடைப்பு: பூதன் + அடைப்பு

கொள்ளடைப்பு: கொள் + அடைப்பு

வாழையடைப்பு: வாழை + அடைப்பு

கொத்தாகியடைப்பு: ?

மடத்துக்கரை: மடம் + கரை. அத்துச்சாரியைப் பெற்றுப்புணர்ந்தது.

ஓடற்கரை: ஓடல் + கரை.

குண்டங்கரை: ? + கரை

ஆலடி: ஆல் + அடி. மரத்தின் பெயரைக் குறித்து அதனோடு ''அடி'' என்பதை ஈற்றில் வைத்து இடங்களுக்குப் பெயர் வழங்கும் வழக்கம் தமிழ் மக்களிடத்தே பாரம்பரியமாக வளர்ந்துவந்திருக்கிறது. புளியடி, நாவலடி, மகிழடி, இத்தியடி. முதலாம் பெயர்களை நோக்குக. சிங்கள மக்கள் ''அடி' என்ற சொல்லுக்குரிய சமபதமாகிய 'பே, பை' என்ற விகுதிகளைப்பயன் படுத்துவர். மாதம்பை மினிப்பை தொடம்பை நோக்குக. இதேபான்மையில் யாழ்ப் பாணத் தமிழ்ப் பெயர்களையும் மாற்றியுள்ளார்கள். கோப் பாய், சண்டிருப்பாய், மானிப் பாய் நோக்குக.

சின்னலடி: சிறுமை + ஆல் + அடி.

மருதடி: மருது + அடி.

தச்சன்பனையடி: தச்சன் + பனை + அடி.

மாதாங்கோவிலடி: மாதாவின் கோவிலடி > மாதாங் கோவிலடி.

ஆயிலி: ஆயிலி மரம் நின்ற இடம்.

செம்பாடு: செம்மை + பாடு. செம்பாடு

மாவட்டை: மகா + வட்டை. மாவட்டை

சின்னமாவட்டை: சின்ன + மா + வட்டை

ஊரி: ?

மாப்பாணவூரி: ? + ஊரி

நடுத்தெரு: நடு + தெரு

கள்ளித்தெரு: கள்ளி + தெரு

பறையகண்டி: பறையர் + கண்டி

மல்லிகை: ?

நட்டுப்பாளி: ?

மானிடல்: ?

சத்திரந்தை: சத்தா—புத்தன். இலந்த என்பதன் திரிபே ஈறிலிருப்பது. சத்திர + வந்த = சத்திரந்தை. வந்த; பறட்டைக் காடுள்ள மேட்டுப்பூமி.

எட்டுக்கட்டி: ?

தம்பன்: தம்ப ஒரு சாதிநாவல். தம்ப + வனம் = தம்பன்.

பயிரிக்கூடல்: ?

சடையாளி: ?

இலந்தைச்சாளை: இலந்த என்ற சிங்களச்சொற்கு பறட்டைக்காடுள்ள மேட்டுப்பூமி என்று பொருள்.

ஆலந்தோடை: ?

மாதடை: ?

உறுமாதடை: ?

| | |
|---|---|
| சோமன்கலட்டி: | ? |
| தலவோலை: | கொல்லை என்பதன் திரிபு ஒலையா கும், கோலை, ஒல்லை, கொல்லை, குலை என்பனவும் இடப்பெயர் ஈறி லுள. கொல்லை சிங்களமாக மாறிப் பின்னர் அதன் திரிபு தமி ழில் வழங்குகின்றது. |
| புட்டியோலை: | புட்டி + கொல்லை=புட்டியோலை. |
| வேரைக்குளம்: | வெகர என்பது விகார என்பதன் எலுமொழி வடிவம். புத்தர் கோவில் என்பது பொருள். விகாரை + குளம் = வேரைக்குளம். |
| பக்தர்கேணி: | பக்தர் + கேணி |
| கேசடை: | ? |
| காரப்புரியல்வடலி: | ? |
| இராசாவின் தோட்டம்: | இராசா + தோட்டம் |

# பெருமக்கள்

கல்வி செல்வம் எனுமிரண்டும் பெருக வாழும் மக்கள் மத்தியில் பெருமக்கள் தோன்றுமலிருக்கவே முடியாது. காரைநகர் கல்வியாலுயர்ந்தும் செல்வத்தாற் செழித்தும் ஈழவளநாட்டில் தனக்கென ஓரிடத்தை வகித்து நிலவுகின்றது.

மக்கள் வெகு முயற்சி மிக்கவர்கள். எடுத்த கருமங்களைத் தொடுத்து முடிப்பதில் விடாப்பிடியாய் முயன்றுநிற்குந் தன்மை வாய்ந்தவர்கள். யாருக்கும் விட்டுக்கொடுக்காதமனப்பான்மையுள்ளவர்கள், நியாயம் நீதிக்குக் கட்டுப் பட்டவர்கள். உலகம் ஒப்பவும் உவக்கவும் ஒழுகுபவர்கள்; மதானுசாரம் மிக்கவர்கள்.

இல்லறமாயினுஞ் சரி துறவறமாயினுஞ்சரி அதனைச் சீர்மையுடன் கொண்டு நடத்துபவர். கணவன் மனைவி பிரிவினை மருந்துக்குங் கிடையாது. பெண்கள் மாத்திரமன்று ஆண்களும் கற்பு நெறி தவருதவர்கள். நல்ல புதல்வர்களைப் பெற்று அவர்களைப் பெருவிருப்புடன் வளர்த்துப் பெரு வாழ்வு வாழப் பழக்கியெடுப்பர். வாயை

வயிற்றை ஒறுத்துப் பிள்ளைகளின் கல்வி உயர்ச்சிக்காகச் சிக்கன வாழ்வு நடத்துபவர்.

பொதுநல வாழ்க்கைக்கு பெருமதிப்புக் கொடுத்துக் கோயில்குளம், பாடசாலை இவற்றைச் சீருஞ் சிறப்புமாக நிருவாகம் பண்ணி வருபவர். செல்வர்க்கழகு சூழவிருத்தல் என்ற முதுமொழிக்கிணங்க இனசனபந்துக்கள் அண்டை அயலார் புடைசூழ சகவாழ்வு நடாத்தும் தன்மை வாய்ந்தவர்கள். வீடுகள் தோறும் நடைபெறும் வைபவங்களில் இத்தன்மை தெள்ளிதிற் புலப்படும்.

ஊறிப்பழுத்த சைவநன்மக்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற காரைநகரிலே பழக்க வழக்கங்கள் பழைமை வாய்ந்தவையாகவேயிருக்கின்றன. பழைமையிற் பிடிவாதமுடையவரெனினும் புதுமைக்கு இடமளியாதவர்களல்லர்.

**முன்னைப் பழம் பொருட்டு முன்னைப் பழம் பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே**
**உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்**
**உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே**
**பாங்காவோம்.**

**அன்னவரே எங்கணவராவார் அவருகந்து**
**சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்**
**இன்னவகையே யெமக்கெங்கோன் நல்குதியேல்**
**என்ன குறையு மிலேமேலோர் எம்பாவாய்.**

என்ற வாசகர் பெருமான் மணிவாக்குகளை ஆண்டு தோறும் கோயில் குளத்தோடு தெருக்களெல்லாம் இரவு பகலாகக் கேட்டுக் கேட்டு அதிற் திளைத்துநிற்கும் மக்கள் எவ்வாறு பழைமையை மறக்க முடியும்; புதுமைக்கு எவ்வாறு முட்டுக்கட்டையிட முடியும்.

**"உன்னடியார் தாள் பணிவோம்**
**ஆங்கவர்க்கே பாங்காவோம்"**

என்ற பான்மையிற் பெரிதும் ஒழுகுபவர். "உன்னைப் பிரானாகப் பெற்ற சீரடியோம் உன்னடியார் தாள்பணி

வோம்'' என்று தங்களையே தாழ்த்திக் கொள்ளும் பழக்க முடையவர்கள். ஆகவே பெருமை சிறுமை என்ற பாகு பாடின்றி மக்கள் ஒருமித்துச் சமூகமாய் வாழ்ந்து வருகின் றனர்.

மங்கையர் கற்புடை மகளிராகத் திகழ்கின்றனர். கற் பெனப்படுவது சொற்றிறம்பாமை என்ற வாக்கிற்கிசைய கணவரின் சொற்படி நடப்பர், மாதர். ஏன்? 'அன்னவரே எங்கணவராவார் அவருகந்து சென்னபரிசே தொழும் பாய்ப் பணிசெய்வோம்' என்பதே இங்கு வாழும் பெண்க ளின் மூடுமந்திரம்.

ஊருக்கென்றே சில பழக்கவழக்கங்களிருக்கின்றன, விவாகம், மரணம் இவற்றிற்கான சிறப்பு முறைகளுள. கூடிக்குலாவிக் காரியங்களை நடத்துவர். குலகோத்திர அனுசாரங்களை முறைப்படி கடைப்பிடித்து ஒழுகுபவர்.

இவ்வகைப் பாரம் பரியத்தில் ஒழுகிவரும் மக்களிடத் திலே தான் கல்வி கலாசாரம் பண்பாடு மிகுந்திருக்கும். இந்தியாவின் மேம்பாட்டிற்கு 'இரண்டாயிர வருடப் பண்பாடே' காரணமென்று ஸ்ரீநிவாச சாஸ்திரியார் கூறி யிருந்தார். அஃதேபோல் காரைநகர் மக்களும் பாரம் பரியம் மிக்கவர்கள்; கல்வி கேள்விகளில் நிறைந்தவர்கள்; பழக்க வழக்கங்களிற் சிறந்தவர்கள்; உழைப்பால் உயர்ந் தவர்கள்; ஆகவே கலாசாரம் பண்பாடும் உடையவர்கள்.

இவ்வகை முன்னேறிய சமூகத்தில் பெருமக்கள் பலர் தோன்றுவர் என்பது அனுபவபூர்வமான உண்மை. ஆகவே காரைநகரில் பெருமக்கள் பலர் தோன்றி மறைந்துள்ள ரெனினும் மக்களின் இதயத்தில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளார்கள். இவ்வாறு தோன்றிய பெரியார்களை யும் அவர்களின் ஆற்றல், தொண்டு, பெருமை இவற்றை எடுத்துரைத்தலே இவ்வதிகாரத்தின் நோக்கமாகும்.

## சுப்பையர்

வைதீகப் பிராமணராகிய இவரது முன்னோர்கள் இந்தியாவிலே கோதாவரி நதித் தீரத்திலுள்ள ஒரு நாட்

டிலே குடியிருந்தார்கள். இவரது பிதாவாகிய மேருகிரி ஐயர் † அந்நாட்டில் நிகழ்ந்த கலககாரணத்தால் 1770ம் வருடம் வரையில் நாகபட்டினத்தில் உருவேறிக் கோவளத் துறையிலே இறங்கிக் காரைதீவிலிருந்த பிராமணருடன் சம்பந்தங் கலந்தவர். அவருக்கு மூத்த மைந்தனுகிய இவர் தமது தந்தையைப் போலவே தெலுங்கு, ஆரியம், தமிழ்களில் வல்லவர். சங்கீதசாகியத்திலே மிக்கபாண்டித்தியமுடையவராய் வடதேசத்துக்குப் போக்கு வரவு செய்து சங்கீதச் சுப்பையர் என்று வழக்கமாய் அழைக்கப்பட்டார். நல்லை நாயக நான்மணிமாலை காரைக்குறவஞ்சி என்னும் இரண்டு பிரபந்தங்கள் இவரால் இயற்றப்பட்டன. இவர் காலம் கி. பி. 1795.

கண்டோபண்டித ஐயர் மகன் முத்தையர் இவருடைய மகளாகிய இலட்சுமி அம்மாவை வதுவை செய்தனர். சுப்பையர் சந்ததி இருந்து வந்த இடம் இவையெல்லாம் உத்தரகோச மங்கைப் பிராமணர் பரம்பரையிற் கூறப்பட்டவற்றுடன் ஒத்திருக்கின்றன.

---

† இவர் கோதாவரி தீரத்திலே குடியிருந்த மிராசுதாராகிய வேங்கடேச ஐயரின் இரண்டாம் புத்திரர். ஒரு நாள், கூத்துப் பாக்கப்போய் வந்து விடிந்து எட்டுமணி வரையும் உறங்கினர். ஆற்றிலே போய் நீராடி வந்த தமையனுர் இவர் எட்டுமணிவரையும் நித்திரை செய்வதைத் தாயாரிடம் ''பூ விற்ற கடையில் புல்லு விற்குங் காலஞ் சமீபித்து விட்டது; ஒன்றில் மேருகிரி என் கண்ணிற் காணுமற் போக வேண்டும் அல்லது நான் போக வேண்டும்'' என்று சொல்லிப் போந்தனர். இதனைக் கேட்டுக் கொண்டு படுத்திருந்த மேருகிரி ஐயர் ஆற்றுக்குப் போவார் போல் பாசாங்கு பண்ணிக் கொண்டு 1762ஆம் ஆண்டு வரையில் பிறந்த இடத்தை விட்டகன்று தென் தேசத்தை நோக்கி வந்து தஞ்சாவூரிலே கரந்திட்டாங் குடியிலே, பரசிராம அக்கிரகாரத்தில் தங்கினர். அவ்விடமிருக்குங் காலத்திலே தமிழ் மொழியினை மிகு கவனமாகக் கற்றுச் சமர்த்தராணுர். அந்நாளில் யாழ்ப்பாணத்திற்கு இந்தியர் பலர் போக்குவரத்தாயிருப்ப அவர்களுடன் இவரும் 1770ஆம் ஆண்டு வரையில் நாகபட்டினத்தில் உருவேறிக் கோவளத்துறையிலே இறங்கிக் காரைதீவிலே திருவுத்தர கோசத்தால் வந்து குடியேறியிருந்த கனகசபாபதிக் குருக்கள் மரபிலே மணஞ் செய்து கொண்டனர். சிவபூசாதுரந்தரர். இக்கதை பாரம்பரியமாகக் கேட்கப்பட்டு வருகின்றது.

## முருகேசையர்

மேருகிரி ஐயரின் மகன் சுப்பையர். இவர் காரைக் குறவஞ்சி பாடியவர். சுப்பையரின் மகன் கார்த்திகேய ஐயர். கார்த்திகேய ஐயரின் மகன் தான் முருகேச ஐயர் ஆகிய இவர். முருகேசையர் சிறந்த புலவர். இவரின் புதல்வராகிய கார்த்திகேய ஐயரும் (1819—1898) பெரும்புலவர். முருகேசையர் முத்தமிழ் வித்தகராக விளங்கியவர். இயற்றமிழ் நூல்களாகத் தன்னையமக வந்தாதி, திக்கையந்தாதி, பாரதம்—மாவிந்தம் முதலிய நூல்களை ஆக்கியுள்ளார். நாடக நூலாகிய 'குருக்கேத்திர நாடகம்'* இவராற் பாடப்பட்டது.

---

* இது 'குருக்கேத்திரன் போர்' எனவும் அழைக்கப்படும். குருக்கேத்திரன் என்ற அரசன் தன்மனைவியுடன் ஆகாய மார்க்கமாகச் செல்லும் போது வெற்றிலை உண்டு உமிழ்ந்த எச்சில் கண்ணபிரான் கரத்தில் விழ கண்ணபிரான் வெகுண்டெழுந்து உமிழ்ந்தவனைக் கொல்லுமாறு சக்கராயுதத்தை ஏவக் குருக்கேத்திரன் என்பான் இந்திரன் இயமன் முதலானோரிடம் அபயங் கேட்டு அவர்கள் மறுக்கவே அருச்சுனனிடஞ் சென்று வணங்கி அபயமும் பெற்றனன். கண்ணபிரான் துரியோதனனாதியர் படையினுதவியுடன் பஞ்சபாண்டவரை எதிர்த்து அவர்களை ஒருவர் பின் ஒருவராகக் கொன்று பின்னர் மீட்டெழுப்பிக் குருக்கேத்திரனையும் மன்னித்து அருளினார். கண்ணபிரான் துரியோதனனாதியோரின் சேனைப் பலத்தை அழிப்பதற்கே இவ்வுபாயஞ் செய்தனர் என்பர்.

இந் நாடகத்தில் சுவை மிக்க பாடல்களுள. கட்டியகாரன் தரு மிக அழகாக அமைந்திருக்கிது.

வாழை கரும்புகள் நாட்டுங்கோ நல்லவளமானபந்தலைப் போடுங்கோ
கொச்சி வழுதலை நாட்டுங்கோ இரண்டு கூடாரப்பந்தலைப் போடுங்கோ
தூணுக்குத் தூணாக நாட்டுங்கோ நல்லதூண்டாமணி விளக்கேற்றுங்கோ
மாவிலைக் கும்பங்கள் வையுங்கோ நல்லமகாதோரணங்களைப் போடுங்கோ.

அருச்சுனன் சொல்விருத்தமொன்று காட்டுதும்.

வடிவுள்ள குருக்கேத்திரா நான்வகுத்திடுவார்த்தை கேளாய்
நொடியினி லிங்கேவந்து நுடங்கி மெய்தியங்கி வாடி
யடியினில் விழுந்து போற்றி யடைக்கலமென்று சொன்ன
கெடியெலாம் எனக்கிப்போது கிளர்த்துவாய் கிளர்த்துவாயே.

தன்னையமக அந்தாதி இவராற் பாடப்பட்டு முற்றுப் பெருதிருந்தது. முதல் எழுபது பாடல்களை இவர் பாடி வைத்திருக்க மிகுதி முப்பதினையும் மகன் கார்த்திகேயப் புலவர் பாடி முடித்தாரெனக் கூறுவர். தன்னையமக அந்தாதி முற்றுப் பெற்றும் அச்சேறியதாக இல்லை. ஏட்டுப்பிரதியாகவே இன்றும் உண்டு. அதிற் சில செய்யுள்கள் வருமாறு:

**காப்பு**

**திருவளர் தாமரைச் சேக்கையிலன்னங்கள்**
**சேர்ந்துறங்கி**
**மருவுறு தென்றன்னை யந்தாதிபாட மலைமகளார்**
**உருவுறு பாகத் தரனன்பி னோடங் குவந்துதத்த**
**கருவுறு யானை முகனே யருள் செய்து காப்பதுவே.**

**நூல்**

**கணபதியார மணிந்தோ னிமையவர் கைதொழுமுக்**
**கணபதி யாரியை தன்சுதன் மூலந் தனிற்கவினுர்**
**கணபதி யார்வமுற் றேன்றன்னை தன்னிற் களிப்புடன்**
**வாழ்**
**கணபதி யாரென்று சொல்வர் பிறவி கடந்தவரே.**

**மாழை முதற்பொருவேலினன் றன்துணை வானெழிலார்**
**மாழை முதற்பொரு ளானேனற் றன்னையில் வைகும்**
**பெரு**
**மாழை முதற்பொரு வில்லா னடியன்றன் பால்**
**வருங்கால்**
**மாழை முதற்பொரு நோய்தீர்த்து வாழ்விப்ப**
**னஞ்சலென்றே.**

திக்கையந்தாதியில் சில பாடல்கள் பின்வருமாறு:

**விநாயகர் காப்பு**

**திங்களஞ் சென்னிய னின்னருளாறு முகச் செம்மன்**
**மேன்**
**மங்களஞ் சேர்திக்கை யந்தாதி பாடலிம்**
**மாநிலத்தோர்**

தங்க ஏலமரநீர்த்திடும் யானைத் தலையுடைய
வெங்கள் பிரான்றிருப் பாதத்தை வாழ்த்தி
யிறைஞ்சுவனே.

நூல்

புரந்தக னன்றரு சேயா சகர்புழ கிக்கவருள்
சுரந்தக னன்றனை யன்னோர்கள் வாழ்திக்கை
யான்றுலங்கிப்
பரந்தக னன்முக னைக்கொன்ற வன்துணை
வன்பத்திமெய்
யரந்தக னன்று வருகினு மச்ச மடைதலின்றே

பாரதக் கதையில் மாவிந்தப் பகுதியை 'மாவிந்தம்' எனப் பெயர் சூட்டி நானூறு செய்யுள்கள் மட்டிற் பாடியுள்ளார். இதுவும் ஏட்டுப் பிரதியாகவேயிருக்கின்றது. இந்த ஏட்டினைப் புலவர் அவர்கள் தமது கைப்பட வெகுதானிய வருடம் ஆவணிமாதம் (1878) ஏட்டில் எழுதியுள்ளார். அதிற் சில பாடல்கள்.

காப்பு — விநாயகர்

உம்பருக்கு மூலகுக்கு மொத்துள
தம்பமாகித் தரித்துடன் றுங்குவ
பைம்பொன் மேருவிற் பாரதந்தீட்டிய
கம்பமெய்க் கழியானை கழல்களே

சிவபெருமான்

திருமகட்சிறை சதுர்முகத்திறை தெளிவிலாமரு
ணிலைமையா
யருநிலத்துயர் ககன மொட்டியு மடிமுடித்தலை
யறியொணு
இருவருக்குமுன் னடுவு தித்திடு மெரியழற்கட
வுளர்காண்
மருமலர்க் கொடு சதிசெய்கிற்பவர் வானமீதுறை
தேவரே.

**மூண்டகோப முருக்கி முனைப்புலன்
தூண்டுமாசை துடங்குதலின்றியே
யாண்டிருந்த போதினு மன்பினுல்
வேண்ட வேண்டுவதெய்திடு மெய்ம்மையிர்;**

---

**கோத்திரம் :**

மேருகிரிஐயர்
|
சுப்பையயர்
|
கார்த்திகேயஐயர்
|
முருகேசையர்
|
கார்த்திகேயஐயர் — *1819 — 1898*

நாகநாதையர் | நடராசக்குருக்கள் | சிவசிதம்பரஐயர்

(சிவசிதம்பரஐயர்)
|
கா. சி. மகேசசர்மா **F. R. A. S.**
*16 - 5 - 1892 — 7 - 12 - 1965*

# கார்த்திகேயப் புலவர்

*1819 – 1898*

*ஈழவள நாட்டிலே, யாழ்ப்பாண மாவட்டத்திலே, திருக்கோயில்கள் நிறைந்த காரைநகரிலே, சுத்தாத்து வித சித்தாந்த வைதிக சைவப்பிராமண குலத்திலே மேரு கிரி முனிவர் மரபிலே தயை நீதி சத்தியம் பொறுமை முத லாம் நற்குணங்களோடு கல்வியறிவும் பொருந்திய முரு கேசையரின் கற்புடை மனைவியாரின் திருவயிற்றிலே சாலி வாகன சகாத்தம் 1741க்குச் சமமாகிய வெகுதானியவரு டம் பங்குனி மாதம்† எட்டாந்தேதி வெள்ளிக்கிழமை இடபலக்கினத்திலே கார்த்திகேயப்புலவர் பிறந்தனர்.*

*ஐந்து வயதில் வித்தியாரம்பஞ் செய்யப்பட்டது. ஊரில் வாழ்ந்த சுவாமிநாத தேசிகரிடம் சங்கதமொழியி னைப் பயின்றனர்; தந்தையாராகிய முருகேசையரிடம் ஆத்திசூடி கொன்றை வேந்தன் வெற்றிவேற்கை நல்வழி நன்னெறி முதலாம் நீதி நூல்களையும் மற்றும் நிகண்டு நைடதம் பாரதம் புராணங்களையும் வேறும் பிரபந்தங்களை யும் கற்றும் பொருள் கேட்டும் வந்தார்.*

*பன்னிரண்டு வயது நடந்து வருகையில் கந்தபுராணத் தில் தாரகன் வதைப் படலத்திலே,*

**செய்யவார்சடையீசனல்கிய சிறுவனிங் கொருவன் பொரக்**
**கையிழுத்து முகத்தினூடு கவின்கொள் கோடு மிழந்தனன்.**
**மையலெய்தி விழுந்தனன் பொரும் வலியதானையு மாண்டன**
**வையவீங்கொரு தமியனின்றனன பூகிதாவென தாண்மையே**

*என்னும்பாவை அதற்குரிய இசையோடு வாசிக்கத் தெரி யாமற் தட்டுப்பட்டனர். தந்தையார் எவ்வளவோ தூரம் வற்புறுத்திச் சொல்லிக் கொடுத்தும் அப்பாட்டின்*

---

† வெகுதானிய வருடம் பங்குனி மாதமாகையால் இது கி.பி. 1819க்குச் சமனாகும்.

இசையை இவர்விளங்கிக் கொள்ளவில்லை. தந்தையார் கோபித்துக் கம்பாலடித்து வைதனர். இதனைக்கண்ட புலவரின் பாட்டியாராகிய இலட்சுமியம்மாள் ''உமது ஐயா வாளை அடியாதே'' என்று சொல்லி விலக்கினர். ''எனது ஐயாவாளை இவனை யான் படிப்பியேன்'' என்று சொல்லி விட்டனர்.

இவர் அன்று தொடக்கம் ஒருவருட காலமாக மாடாடு மேய்க்கும் பையன்களோடு கூடி விளையாடிக் கொண்டு திரிந்தார். இதனைக் கண்ட பாட்டியார் தங்கள் சொந்தமாகிய திக்கைத்தலத்து முருகப்பிரானை பூசிக்கும் வண்ணம் புத்தி புகட்டித்தானும் பேரனுமாக முருகப் பிரானை வழிபாடு செய்து உபாசித்துக் கொண்டு வந்தனர். தெய்வசித்தம் ஏற்பட்டது போலும். பரம்பரைச் சைவவேளாளரும் பெருங்கல்விமானுமாகிய சண்முக உபாத்தியாயரிடம் கல்வி கற்க ஒப்புவிக்கப்பட்டனர். கல்வியுஞ் சித்தித்தது. ஏட்டிலெழுதும் பயிற்சியுமிக்கது. பதினைந்தாவது வயதில் ஏட்டில் அட்சரசுத்தியாக வடிவாக எழுதும் பயிற்சியுடையரானுர். 1886ம் ஆண்டிலே இலண்டன் மாநகரத்தில் நடைபெற்ற சர்வபொருட்காட்சிச்சாலைக்கு இவரால் ஏட்டில் எழுதப்பட்ட திருக்குறள் நாலடியார் நிகண்டாதியன பார்வைக்கு வைக்கப்பட்டு மெச்சப்படலாயிற்று. ஊர்காவற்றுறை நீதிபதி கு. கதிரைவேற்பிள்ளை* மூலம் ஏடுகள் அனுப்பப்பட்டன.

பின்னர் வரகவியென்று போற்றும் வண்ணம் தந்தையார் இயற்றிய ''தன்னையமக அந்தாதியைப் பூர்த்தி செய்து தமது கவித்துவத் தன்மையை வெளிப்படுத்துவாராயினர். கங்காதர சாஸ்திரியாரால் 'புலவர்' எனப் பட்டஞ் சூட்டப் பெற்றவர். அப்போது இவருக்கு வயது பதினெட்டு.

---

* கௌரவ பாலசிங்கம் அவர்களின் தகப்பனுர். C. W. கதிரைவேற்பிள்ளை எனப் பொதுவாக அழைக்கப்படுபவர். தமிழ்ச்சொல் அகராதி இவரால் ஆக்கப்பட்டது.

அக்காலத்தில் நெல்லு முதலியவற்றை மதிக்கவும் வேறும் பல அரசாங்க அலுவலாகச் சேனுதிராய முதலியார்† காரைநகருக்கு வந்து பத்துப்பதினைந்து நாள்கள் முருகேசையர் வீட்டிற் தங்குவது வழக்கம். இதனுல் இவருக்குச் சேனுதிராய முதலியாரைக் குருவாகப்பெறும் வாய்ப்புக் கிடைத்தது. இராமாயணம், பாரதம், காரிகை நன்னூல் முதலாம் நூல்களை முதலியாரிடம் பாடங்கேட்டனர்.

தந்தையார் பாடிவைத்திருந்த குருக்கேத்திர நாடகத்தைத் திருத்தியும், விளக்கியும், புதுக்கியும் அக்காலத்தில் களபூமியில் வசித்துக் கொண்டிருந்த உடையார் பரமநாதர், மணியகாரன் காசிநாதர், இருமரபு முயர்ந்த மானுமுதலியாரின் வழித்தோன்றலாகிய பேரம்பலம், செட்டியார் கந்தர் முதலாம் கனதனவான்களின் வேண்டுகோளின் படி விளையாடுவித்து அரங்கேற்றி வைத்தனர். (கி. பி. 1844) அப்போது இவர்க்கு வயது இருபத்தைந்து.

கார்த்திகேயப் புலவர் தமது இருபத்தெட்டாவது வயதில் அரங்கநாதபண்டிதரின் செல்வப்புதல்வியாகிய கமலாம்பாளை விதிப்படி விவாகஞ் செய்தனர். மகாவைத்தியரும் புராணப் பிரசாரகருமமாகிய அரங்கநாத பண்டிதர் கனகசபாபதிக் குருக்களின் மரபினர்.

ஊரிலுள்ள பிரமுகர் பலர் நாடகப் பிரியராய் இவரை நாடகம் எழுதித்தருமாறு கேட்க சூரபன்மன் நாடகம், பாரதத்திற் சொல்லப்பட்ட சந்திரவண்ணன் நாடகம் இவற்றைப் பாடி ஆடுவித்து அரங்கேற்றினர்.

கார்த்திகேயபுலவர் வாழ்ந்து வந்தகாலத்திலே காரைநகரிலே மிசியோன்மாரும் போதகர்களும் வீடு வீடாகச் சென்று தங்கள் மார்க்கத்தைச் சமய விவாதங்கள் மூலம் பரப்பி வந்தனர். பிராமணர்களைப் பரிகசிக்கும் நோக்கமாகப் பாடல்களும் பாடிக்காட்டினர். பாடலொன்று வருமாறு.

---

† சேனுதிராயர் காலம்: 1780—1840

**பிறந்தபோது பூணுநூல் குடுமியும் பிறந்ததோ**
**பிறந்துடன் பிறந்ததோ பிறங்த நூற்களங்கெலாம்**
**மறைந்த நாலுவேதமும் மணத்து ளேயுதித்ததோ**
**நிலம்பிளந்து வானிழிந்து நின்றதென்ன வல்லிரே.**

இது பாடலைக் கேள்வியுற்றபுலவரும்.

**உதித்தபோது சட்டைதொப்பி தானுங் கூடவுற்றவோ**
**மதித்த ஞானஸ்நானமும் வலிய வந்துநேர்ந்ததோ**
**விதித்த பைபிலானதுங் கண்மெய்யுளத் துதித்தவோ**
**கதித்த பேச்சைவிட்டனுதி கடவுளைக் கருதுமே.**

என்றுபாடி நையாண்டிசெய்தனர்.

இத்துடன் புலவர் நின்றுவிடாது ''கிறிஸ்துமத குடாரம்'' என்னும் நூலை இயற்றினர். இந்நூலில் மூன்று சூத்திரங்கள்:

I. ''வயிறு வளர்க்க மனுச் செய்ததன்றி யியல்பாய்க் கடவுளியற்றியதன்றெனல்''.

II. ''பணமுதற் பொருளினுற் பற்றினரன்றிக் குணமதனுல் வந்து கூடினரன்றெனல்''.

III. ''சைவமதவழி தங்கு ஞானத்தன்றிக் கைவர முத்தியிற் கலத்தலரிதெனல்.''

இந்த மூன்று சூத்திரங்களின் மேல் ஒவ்வொன்றிற்கும் ஐம்பது விருத்தமாய் நூற்றைம்பது விருத்தத்தையுடையது, இந்நூல். இக்கண்டனநூலை எழுதியபோது இவருக்கு வயது முப்பத்திரண்டு.

இப்படியிருக்கு நாளிலே பிள்ளைகளின் கல்வி விருத்திக்காகப் பாடசாலை ஒன்றினைத்தாபிக்க வேண்டுமென்று புலவர் அவர்களைப் பல்லோரும் வேண்ட விரோதிகிருது வருடம் தைமாதம் (கி. பி. 1852) ஓர் வித்தியாசாலையை உருவாக்கி வேதனம் பெற்றுக் கல்விகற்பிக்கத் தொடங்கினர். பலர் இவரிடத்திற் பாடங் கேட்டுள்ளனர். மு. குமாரசுவாமி ஐயர், மு. சீனிஐயர், கா. வேதக்குட்டிஐயர்,

இராமசுவாமிஐயர், கா. மார்க்கண்டேய ஐயர், சி. கந்தப்பபிள்ளை, அ. கணபதிப்பிள்ளை, அ. சோமநாதர், இ. சண்முகம், பொ. நாரணபிள்ளை, வே. அம்பலவாணன் முதலானோர் பாடங்கேட்ட முதல்வர்களிற் சிரேட்டராவார். புலவரின் புத்திரர்களாகிய நாகநாதையர், நடராசக் குருக்கள், சிவசிதம்பர ஐயர் ஆகிய மூவரும் மற்றவர்களுடன் சேர்ந்து பாடங்கேட்டு வந்தனர். இவர் மற்றவர்களின் பிழைகளை நேர் நேராய்க் கண்டிக்குங் குணமுடையவர். இதனாற் சிலர் வெகுண்டெழுதலும் உண்டு எனினும் அவற்றையெல்லாம் பொருட்படுத்தாது கற்றலிலும் கற்பித்தலிலும் ஆறுமுகநாவலர் அவர்களுடைய பிரசங்கங்களுக்குப் போய் அவற்றைக் கேட்பதிலும் காலத்தைக்கழித்து வந்தனர். அப்பொழுது இவருக்கு வயது நாற்பத்துநாலு.

உருதிரோற்காரி வருடம் தைமாதத்தில் (1864) அர்த்தோதய புண்ணிய காலம் வந்ததால் புலவரும் அவருடைய மாணுக்கர் சிலருமாக இராமேசுவரம், திருபெருந்துறை, உத்தர கோசமங்கை, மதுரை, திருப்பரங்குன்றம், முதலிய புண்ணியதலங்களைத் தரிசித்துத் திரும்பிவந்து பழையபடி கல்வி கற்பிக்கும் முயற்சியில் ஈடுபடலாயினர். அந்நாளிலே தமது உபாசனமூர்த்தியாகிய திக்கை† முருகக்கடவுள் மீது ''திக்கைத்திரிபந்தாதி'' எனவோர் அந்தாதி பாடினர். இதேகாலத்தில் சண்டிருப்பாயிலிருந்த தமது மைத்துனராகிய கார்த்திகேயக்குருக்களிடம் சுத்தவாதுளம், மிருகேந்திரம், பௌஷகாரம் முதலிய நூல்களுக்குப் பாடங்கேட்டனர். அப்பொழுது இவருக்கு வயது ஐம்பத்திரண்டு ஆயிற்று.

அந்நாளிலே சிதம்பரம் முதலாந் தலங்களைத் தரிசிக்க விரும்பினர். ஆங்குச் சென்றனர். அங்கு தங்கியிருந்த காலத்தே ''திருத்தில்லைப்பல் சந்தமாலை'' என்னுமொரு பிரபந்தத்தைச் செய்தனர். புலவருக்கு அப்போது ஐம்பத்தெட்டு வயதாயிற்று.

---

† திக்கை: களபூமியிலுள்ள திக்கரை என்னுமிடம்.

இஃதிவ்வாறிருக்கின்ற காலத்திலே யாழ்ப்பாணத்தில் ''இலங்கை நேசன்'' (1875) எனப் பெயரிய புதினப் பத்திரிகை உதயமாயிற்று. அப்பத்திரிகைக்குப் பலருஞ் சிறப்புக்கவி கூறினர்கள். புலவரையும் சிறப்புக்கவி கூறுமாறு பலருங் கேட்டனர். புலவரும் வேதாகமப் பிராமணராகையால் வேதாகம புராணேதிகாசசாராதிகளையடக்கி ஓர் சிறப்புக்கவி கூறினர். அச்சிறப்புக்கவி ஈசுவரவருடம் சித்திரைமாதம் (கி.பி. 1877) வெளிவரலாயிற்று. அக்கவியைக் கண்டு வியப்படையாதார் யாருமிலர். அக்கவியின் மூலம் புலவர் அறிவின் நுட்பதிட்பம் இலகுவில் அறிதற்கேதுவாயிற்று. அக்கவி வருமாறு:

## நூற்றெட்டுச் சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்

சீருலவுமேன்மாடமீதுலவுகூடகச்
　　செங்கையார்கூந்தறன்னைச்
செல்லெனப்பயின்மயில்களபிநயநடந்தரத்
　　தென்டிரைக்கடலைமொண்டு
திங்களளவும்மலர்ப்பொங்கர்படிகருமுகில்பெய்
　　தில்லைமழையவணியதனில்
தெள்ளிதிற்பள்ளவயலுள்ளெலாநிறையவே
　　செந்நெலுயர்கன்னலென்னச்
செழித்துத்தளிர்த்தினியகதிரீன்றுமுதிர்வுறத்
　　தெரிகளமருளபுளகிதச்
செவ்விதிற்றங்குலத்தெய்வத்தைவழிபாடு
　　செய்துகதிர்கொய்துபெய்து
செங்கணேருடுபகடுமங்கிசைஇப்போருருத்
　　தீர்த்துப்பலாலமதனைச்
சிதைவிலாதுதறிநெற்றூற்றியேபோற்றிமுன்
　　சிவபிரானுக்கியன்ற
திறமுதவியுறுமளவிலிறைகடமைமுறையீந்து
　　செப்புமனுநூ லின்விதி
தென்புலத்தவர்தெய்வமன்பொடுவிருந்துறவு
　　சேர்தார்தமக்குமருளித்
தினமுமறுசிகைநீக்கியுறுதவரொடுண்டுமகிழ்

செல்வருறையொல்காவியல்
தேங்கிநீங்காதுதிருவோங்கிநல்வளப்பமலி
தென்னிலங்காபுரத்துத்
திருக்ககலிருக்காதிமறைகளுங்காமிகா
தியவாகமத்துறைகளும்
திதிகெழுமுசைவமுதன்முதிருரையுமனுமுதற்
றிகழுமிருதிகளினிரையுஞ்
சிவரகசியாதியிதிகாசமுந்கேத்ராதி
சீர்க்கணிதபிரகாசமுஞ்
சித்திமுதலாந்திராவிடநூலுமறிவினைத்
தேற்றுமுபநிடதமேலுஞ்
சிட்சையாதியனநல்லங்கமுந்நாவலர்
செறிந்தகல்விச்சங்கமுஞ்
செப்புகற்பாதானபும்ஸவனமோடு
சீமந்தவுன்னயனவிஷ்ணுப்

பேருலவுபலிசாதநாமோபநிஷ்கிரமண
பேணனப்ராசனகன
பின்வியத்செளளோபநயனசமிதாதான
பேதில்வேதாத்தியயன
பெற்றசதுர்விரதச்சமாவர்த்தமணமொடும்
பேசுமௌபாசனதி
பிரியாதுதிரிகாலசந்தியொடனுட்டான
பினமிலாமறையவர்களும்
பேணுமூவிதமானபத்தியுந்நாலதாய்ப்
பெறுமுபாயச்சித்தியும்
பேறுகொள்ளீந்தானவங்கமும்மிகவன்மை
பெருகறுகுணத்துங்கமும்
பெட்போடுபுணர்ந்தாறுறுப்பிறெடுநன்னீதி
பிறழாமலேபுணர்ந்து
பேசுகாசினிமானையாசையிற்றுங்கியாள்
பெருமிடல்கொளிறையவர்களும்
பீதாம்பரமுதலவானபட்டுத்துணி
பிறங்குபலபொற்புறுபணி

பெருவிலைமதிப்பேறுமுத்துமுதனவமணி
பேரிரசவஸ்துகளணி
பீடுடையயவையாதிதானியசமூகம்
பெருத்ததெங்காதிசாகம்
பெலமேறிரும்பாதிநவலோகமினியசெம்
பீராதிபலமனேகம்
பெயராத்ரகம்முதற்கந்தவகையணிதரும்
பெட்புறுசுகந்தத்தொகை
பிசைபலசரக்குகளிசையயாபாரஞ்செய்
பிரசாதமுறுவணிகரும்
பிரபலமதாய்நிலத்திற்பொருளையீட்டிவரு
பேரதனையெங்குநாட்டி
பெம்மானெனப்பலுயிர்கட்குமிட்டுண்டுமகிழ்
பெருமையதிகாரர்தாமும்
பிரமசரியங்கிருகத்தநிலையுயர்வனப்
பிரத்தநற்சன்னியாசமும்
பிஞ்ஞகனதாலயத்தலகிட்டுமெழுகியடி
பேணுமேலானசரியை

ஏருலவுசரணபெருவிரலாதிமூலவரை
யீருருவமாகவும்பின்
இதுதொட்டுவதுமட்டுமோருருவமாகவு
மிருதயங்களமுறைசெய்நா
எய்திடும்புருவநடுகைகொடுமிரந்திரத்
திவையினிடைபிங்கலைகடாம்
இசைந்துநடுநாடியுளசைந்துகீழாகியைந்
திண்டுமுகுளங்களுடனே
இரணியத்தாமரையினூல்போலரந்திரமா
விருபுறமுமமிர்தமூறி
இருப்பதாய்ச்சிந்தித்துருப்படுஞ்சுழுமுனையி
லிதயகமலந்தன்னிலும்
எனச்சொலிக்கின்றதாவிடமூக்கில்வாயுவை
யிழுத்துளேகும்பித்துமேல்
இரையுமூங்காரத்தின்மனதைவைத்தவ்வளியை
யெய்தமேனேக்கியும்பட்

டென்றிருதயாதியிற்றுன்றுமுகுளத்துக்
கிசைத்திடும்பூரகத்தால்
எதிரதோமுகமுகைகள்விகசிதமதாவங்
கிலங்கிடக்கும்பித்ததின்
இயம்பாதுமேனேக்கவாயும்படென்றைந்
திசைத்துப்பின்கரந்தியா
வினியாவியோசனைசெய்துயர்பூதசுசிமுத
லியற்றுமந்தரியாகமோ
டெந்தையைந்துருவொன்றின்முந்தருச்சனைபுரிந்
தேத்தியிடுவாய்த்தகிரியை
இலகுமணிகரிமகிபிராத்திப்ராகாமியம்
மீசத்துவமொடுவசித்துவம்
இயமநியமம்மிக்கவாதனமப்ராணனை
யியல்பிற்றடுத்திடல்பிர
தயாகாரமுயர்தியானத்தொடுந்தாரணை
யெய்தருபெருஞ்சமாதி
ஏற்றகுணமொடுபுலனடக்கிவருவாயுவை
யெழுப்பியிருநெறியடைத்திட
டிறுகுமொருநெறிதிறந்தினியதாண்டவசிலம்
பிசையொடும்போகியைந்தும்

நேருலவுமேகமாந்தன்மைகண்டருளொளியி
னெறிபுக்கழுந்துயோகம்
நிந்தனையில்பலகலைகளாகமத்துறையுமிக
நிரவுவயிரவநன்வாமம்
நிகரில்காளாமுகமகாவிரதபாசுபத
நெறியிலுயர்சைவமிக்க
நேயமுறுமுலகாயதத்தொடருகம்புத்த
நீதமாயாவாதமேல்.
நீங்கரியமீமாஞ்சபாஞ்சராத்திரநெறிக
ணேர்மையிற்பார்த்துணர்ந்து
நித்தியவனித்தியநைமித்திகந்தனையொரீஇ
நீணிருவிகற்பமாகி
நிச்சயம்முப்பொருளெனக்கண்டுமுன்புபுரி
நிருபந்தனக்கீட்டதா

நிறுவுசிற்றுணர்வொழிந்துமுற்றவுணர்வதாய்
நிற்குமத்துவிதஞான
நிட்டையொடுதொட்டசிவசிட்டர்கண்மிகுத்திடு
நிகரில்யாழ்ப்பாணநகரில்
நிகழுமுத்திராட்சரப்பணிசெயந்திரமெனுந்
நேடன்னேவயினுதித்து
நிதியுதவுமுதியவர்கள்பதியிற்கிடந்தன்பர்
நெஞ்சமதனிற்றவழ்ந்து
நீடுறுமெழுத்தசைகள்கூடுசீர்பந்தமடி
நேர்தொடையொடாசுமதுரம்
நிறைசித்ரவித்தாரலக்யலக்கணமுணரு
நிபுணர்நாவினினமர்ந்து
நிலைகொள்பலபுதினமதெனுங்குதலைபேசிநன்
னீதியினர்புடையினின்று
தேடிவருபாதுகாவலனினியபாலியர்
நேசனல்லுதயதாரா
நினைவருந்தினவர்த்தமானுதிதோழரொடு
நீடவேகூடியாடி
நிலவலயமெங்கணும்மலைவகலவுலவியே
நிலைகொணலமலியிலங்கை
நேசனென்னும்மகவுமாசின்றியேமிகவு
நீடூழிவாழிமாதோ.

அக்காலத்தில் மிசியோன்மார் கிறித்து சமயத்தைப் பரப்பும் நோக்கமாகக் காரைநகரிலே அநேக பள்ளிக் கூடங்களைத் தாபித்து வேதனமில்லாமற் படிப்பிக்கத் தொடங்கினர்: இதனுற் பிள்ளைகள் மிசியோன்மார் பாட சாலைகளுக்கே செல்வராயினர். இதனுல் புலவரிடத்துக் கீழ் வகுப்புகளிற் படித்த மாணுக்கர் குறைந்தனர் என்ரு லும் பாரதம் கந்தபுராணம் முதலிய நூல்களுக்குப் பொருள் கேட்க விரும்புவோர் தொடர்ந்து கற்றுவந்த னர். புலவர் சோதிடம் வைத்தியம் முதலாம் கலைகளிலும் தலைசிறந்தவர். அவற்றையுஞ் செய்து வந்தனர்.

விக்கிரமவருடம் ஆவணிமாதத்திலே 1880ம் ஆண்டு ''உதயபானு''* என்னும் பத்திரிகை தொடங்கலாயிற்று. சிலேடை, மடக்கு, இட்டோத்திரம், யமகம் முதலாம் பாக்கள் செய்வதிற் புலவர் யாதொரு சிரமமுமின்றிச் செய்யும் பாண்டித்தியம் வாய்ந்தவர். பத்திரிகைக்கும் பானுவுக்குஞ் செய்திருக்குஞ் சிலேடை சான்றுபகரும். உதயபானு பத்திரிகைக்கு அவ்வாறு செய்த சிறப்புச் செய்யுள் வருமாறு.

**தாரகை கண்மறையத் துன்மதிசாய்ந்தோடத்**
**தடுத்தெதிர்வஞ்சரை யழித்துத் தங்குமந்த**
**காரவிருளினையோட்டி வெளியதாக்கிச் சந்தேகமன்றி**
**யுறுபொருளை யாரு**
**மோரவே தெரித்துண்மையினை யுணர்த்தியுலக**
**மெங்குஞ் சென்றெவரு முவந்து போற்றச்**
**சேருதயபானு வினையவனிமீதிற்றிகழு முதயபானு**
**வெனச் செப்பலாமே.**

புலவர் செய்யுள் நூல் பல இயற்றியுள்ளார். அவற்றுடன் சோதிட நூலாகிய 'விதானமாலை'' என்பதனைத் திருத்தி உரையில்லாத பாட்டுகளுக்கு உரையுஞ் செய்து விஷு வருடம் புரட்டாசி மாதம் (கி. பி. 1881) வெளிப்படுத்தியுள்ளார். விதானமாலைப் பதிப்பிற்கு சி. வை. தாமோதரம்பிள்ளை சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் முதலியவர்கள் சிறப்புக் கவிகள் கொடுத்துள்ளார்கள். அப்பொழுது இவருக்கு வயது அறுபத்து மூன்று.

புலவர் தமது அறுபத்தொன்பதாவது வயதில் சர்வதித்து வருடம் ஐப்பசி மாதம் (கி. பி. 1887) தக்ஷண கைலாச புராணம் என்ற தலபுராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினர். அப்பொழுது இவருக்கு வயது அறுபத்தொன்பது ஆயிற்று.

---

* சரவணமுத்துப்பிள்ளையால் நடாத்தப்பட்டது. ''சைவ உதயபானு'' என்றும் அழைப்பர்.

சித்திரபானுவருடம் சித்திரை மாதம் (கி.பி. 1882) ''விஞ்ஞான வர்த்தனி''[1] எனப்பெயரியவோர் பத்திரிகை தொடங்கலாயிற்று. அதற்கும் புலவர் சிறப்புக்கவி கூறி யுள்ளார். அது வருமாறு:

**மயக்கந் தீராகம நூல்பாவும் பார்த்து மனமதனைப்**
**புலன் வழிசெல்லா மற்போர்த்து**
**தயக்கரிய மார்க்க விருடன்னைத் தீர்த்துச் சற்சனருக்**
**கிடுக் கனுருதருளைக் கூர்த்து**
**பயக்க வருமரன் புகழதனைச் சொல்லியார்த்துப்**
**பாங்கான முத்திவழியதனிற் சேர்த்து**
**வியக்கவுறு மெய்ஞ்ஞானிதனைப் போற்பாரின்**
**விஞ்ஞான வர்த்தனியுமே விற்றன்றே.**

அக்காலத்தில் சென்னையில் வாழ்ந்து வந்த சி. வை. தாமோதரம்பிள்ளை யாழ்ப்பாணத்திற்கு வந்து கொழும் புத்துறையிற்[2] தங்கியிருந்தபொழுது புலவர் அவரைச் சந் தித்து அளவளாவலாயினர். பிள்ளையவர்கள் பேச்சிடையில் புலவர்களுக்கிடையில் நடைபெறும் சம்பிரதாய முறையில் ''கற்றைச்சடையுடைத் தேவே கயிலைக்கறைக்கண்டனே''. என்னுங் கடைசியடியைக் கொடுத்து முதன்மூன்றடியை யும் பூர்த்தி செய்யுமாறு புலவரைக் கேட்டனர். புலவரும்,

**எற்றைக்கு முன்னடிபேணுவரமே யெனக் கருள்வை**
**பற்றைக் களைந்திடு ஞானியர் போற்றும் பழம்**
**பொருளே**

---

1. முத்ததம்பிச்செட்டியாரால் ஆரம்பிக்கப்பட்டது. மெய்ஞ்ஞான அச்சி யந்திரசாலையிற் பதிப்பிக்கப்பட்டது.

2. கொழும்புத்துறையிலிருந்த வெற்றிவேலுமணியம் என்பவருடைய இல்லத்தில் தங்கியிருப்பது வழக்கம். மணியத்தின் சகோதரி மகன் குமா ரசாமிச் செட்டியார். சிலப்பதிகாரம் முதலிய நூல்களைச் சாமிநாதையர் பதிப்பித்த ஞான்று ஏட்டுப்பிரதி கொடுத்து உதவியவர்களில் குமார சாமிச் செட்டியாரும் ஒருவர். இவர் விருப்பத்திற்கிணங்கி ஐயரவர்கள் கொழும்புத்துறை இலந்தைநகர் தண்டபாணி விருத்தம் முத்துக்குமாரர் ஊசல் முதலியன பாடியுள்ளார். வெற்றிவேலுமணியத்தின் மகன் வேலுப்பிள்ளை. வேலுப்பிள்ளையின் மகன் கனகசபை. கனகசபையின் மகனே பத்திராசிரியர் திரு. வீ. கே. பீ. நாதன் அவர்கள்.

**பெற்ற முகைத்திடு மங்கையெயோர் பங்கபிறையுலவு**
**கற்றைச் சடையுடைத் தேவேகயிலைக்**
**கறைக்கண்டனே.**

இதனைக் கேட்ட பிள்ளையவர்கள் பெருவியப்பும் கெழு தகைமையுமுற்றனர். அப்பொழுது இவருக்கு வயது எழு பத்துநாலு.

புலவர் தமது அந்திய காலத்தை வீணுய்ப்போக்காது கடவுளைப் பாடித் துதிப்பதிலும் பிரபந்தங்கள் இயற்றுவதி லுங் காலம் போக்கினர். திருப்போசைவெண்பா, நகுலே சரியமகவந்தாதி, வண்ணைத் திரிபந்தாதி, திண்ணை புரத் திரிபந்தாதி முதலிய பிரபந்தங்கள் பாடப்பெற்றன. இவற் றைப் பாடும்போது இவருக்கு வயது எழுபத்தெட்டா யிற்று.

புலவர் அவர்கள் தமது எண்பதாவது வயதிலே விளம் பிவருடம் புரட்டாதி மாதம் எட்டாந்தேதி (கி.பி. 22.9 1898) குருவாரத்தன்று மரணத்திரையால் மறைக்கப்பட லாயினர்.

நாகநாதையர், நடராசக்குருக்கள், சிவசிதம்பர ஐயர் என்ற மூன்று புதல்வர்களும் சுந்தரம்மாள் என்னும் புதல் வியுமிருந்தனர்.

கார்த்திகேயப் புலவரவர்கள் தேகவியோகத்தைக் குறித்து சி. வை. தாமோதரம்பிள்ளை, அ. வேன்மயில்வா கனச் செட்டியார், திருமயிலை வித்துவான் சண்முகம் பிள்ளை, அவரின் புதல்வர்கள் மூவரும் *சரமகவிகள் பாடி யுள்ளார்கள்.

---

* இச்சரமகவிகளையும் வேறும் விபரங்களையும் "கார்த்திகேயப் புலவர் சரித்திரம்" பார்க்குக. இது நூல் புலவரின் கனிட்ட புத்திரரும் மதுரைத் தமிழ்ச் சங்கவித்துவானும் இந்துமதபிரசாரகருமாகிய சிவசிதம்பர ஐய ரால் எழுதப்பட்டு புலவரின் துவிதீய குமாரராகிய நடராசக்குருக்களால் கொக்குவில் சோதிட யந்திரசாலையில் 1908ல்அச்சிற் பதிப்பிக்கப்பட்டது.

**அருளப்பநாவலர்:—** இவர் காரைநகரிற் பிறந்தவர், தெல்லிப்பழையில் வசித்தவர், சமயாசாரத்தால் கத்தோலிக்கர். பூலோக சிங்கமுதலியார் என்ற நாமமுமுடையவர்.

திருச்செல்வர் காவியஞ் செய்த பெரும் புலவர். காவியத்தில் இருபத்துநாலு படலமும் ஆயிரத்துத் தொளாயிரம் பாடல்களுமுள.

நூலின் சிறப்புப் பாயிரத்தில் பிறந்த இடம் புகுந்த இடம் இவை எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

**சொல்லினருள் பெருகுதவச் செல்வரா யன்கதையைத்**
**தேர்ந்து நுண்ணூற்**
**றுல்லியமோர்ந் திடும்புலவர் மகிழ்தூங்க விருத்தத்தாற்**
**சொற்றிட்டானு**
**னல்லிசைநா டகமியலின் தமிழ்தெரிநா வினன்சதுர**
**நாகரீகன்**
**தெல்லிநக ரருளப்பன் தென்காரைப் பூலோக சிங்கன்**
**ருனே.**

**அருணசல உபாத்தியாயர்:—** *1864 – 1920.* ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சுயமொழிக் கல்வி இலவசமாகக் கற்பிக்கப்பட்டது. ஆங்கிலம் சம்பளக்காசு பெற்றுப் படிப்பிக்கப்பட்டது. இப்பொழுது எந்த மொழிக்கல்வியும் இலவசம். இவையெல்லாம் அரசாங்கஞ் செய்த நன்மைகள். ஆனல் இதற்கப்பால் உண்டி உறையுள்வழங்கிக் கல்வி கற்பித்த பெரியார்கள் இருவர் யாழ்ப்பாணத்திலே வாழ்ந்தார்கள். ஒருவர் நாவலர் பெருமானின் தமையனர் தம்புவின் மகன் கைலாசபிள்ளை. மற்றையவர் அருணசல உபாத்தியாயர்.

கைலாசபிள்ளை காவிய பாடசாலை நடாத்த நினைத்தார். பாடசாலை நடாத்த மாணக்கர் தேவை. மாணக்கருக்கும் வேட்டையாட வேண்டியதாயிற்று. பெருமக்கள் புலர்மூலம் சிலர் சேர்ந்தனர். உணவுச் செலவுக்காக மாதம் ரூபா 6.00 கைலாசபிள்ளை அவர்களாற் தமது

சொந்தப்பணத்திலிருந்து கொடுபடும். பாடசாலையில் வாசம்; வில்லூன்றியில் மலசலவிடுதலை, இந்தக் காவிய பாடசாலையிற்படித்த மூவர் இன்று மிருக்கின்றனர். உண் மைபொய் கேட்டுப் பார்க்கலாம். ஆனுல் இன்று?

இதே மனப்பான்மையில் சைவ ஆசிரியர்களை உணவு உண்டிகொடுத்து உருவாக்க வேண்டுமென்ற பெருமைமிக்க எண்ணங்கொண்டவர் அருணுசல உபாத்தியாயர். காரை நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தெல்லிப்பளை அமரிக்கமிசியோன் பாடசாலையில் ஆசிரியராகப் பயிற்சி பெற்றவர். ஆனுல் மதம் மாற மறுத்தனர். ஆகவே பயிற் சிக் காலத்தைப் பூரணமாக முடிக்கவில்லை.

கைலாசபிள்ளைக்கோ பூர்வீக சொத்தும் உத்தியோக மும்; இவருக்கோ பூர்வீகசொத்துக் கொஞ்சம். அவற்றை யும் விற்றுச் சைவாசிரியர்களை உருவாக்க வேண்டுமென்று யாழ்ப்பாணமுங் கொழும்பும் அலைந்தவர். விடியுமுன்னரே கைலாசபிள்ளை வாசலில் அவர் கதவுதிறக்கும் வரை குந்தி யிருப்பர். மெலிந்து நலிந்த உடம்பினர்; கறுத்த மேனி யர்; வறுமையிற் செம்மைநடையினர்; திரைசெறிந்த தேகம்; ஒடுங்கி உள்வாங்கிப் போன வயிறு; உடலாலும் உள்ளத்தாலும் சோகமுந்தாகமுமுடையார்போற் காட்சி யளிப்பர். முண்டொன்றைக் கட்டித் துண்டொன்றினுற் போர்த்திக்கொள்வர். இவரின் தமிழ்த்தொண்டு பேருக் கும் புகழுக்குமல்ல. இவருக்கு ஊரும் சதமல்ல. பேருஞ் சதமல்ல. சமய வாழ்க்கையே இவரின் சிந்தனை, நினைவு, எண்ணங் கவலையெல்லாம்.

சிற்றம்பலம் சங்கரப்பிள்ளையின் அருந்தவப்புதல்வர். பத்தினியம்மாள் தாய். சைவவேளாண் மரபினர். பெற் ருர் பெருநிலக்கிழாரென மதிக்கப்பட்டவர்கள்.

ஆரம்பக்கல்வி ஆசிரியர் பயிற்சிக் கல்வி எல்லாம் அம ரிக்கமிசியோன் பாடசாலைகளிற் கற்ருராயினும் மதம் மாரு தவர். சைவசமய பாடசாலைகள் உருவாக்குவதிற் பெரி தும் உழைத்தவர்.

சயம்புச் சட்டம்பியாரின் ஆங்கிலபாடசாலை, சுப்பிர மணிய வித்தியாசாலை, வியாவில் சைவபரிபாலன பாட சாலை இவற்றின் தோற்றத்திற்கு உறுதுணையாக இருந்த வர். 1889ல் சுப்பிரமணிய வித்தியாசாலை உதயமாயிற்று. இதே காலங்களில் திரு. சயம்புச் சட்டம்பியாரின் விடாப் பிடியால் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் ஆங்கில வித் தியாசாலை ஆரம்பமாயிற்று. திரு. கா. வேதக்குட்டி ஐய ரின் சகாயத்தினுல் வியாவிற் சைவபரிபாலன பாடசாலை ஆரம்பமாயிற்று. மேற்கூறிய இருதமிழ்ப் பாடசாலைகளி லும் வேதனமின்றிப் படிப்பித்தார், அருணுசல உபாத்தி யாயர்; 1914ம் 1915ம் ஆண்டுகளில் வண்ணை நாவலர் பாடசாலையில் தலைமை ஆசிரியராகவும் பணிபூண்டவர்.

இவ்வாருகச் சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் புரிந்த இவர் நாவலருக்கு அடுக்கவைத்துப் போற்றப்படக் கூடியவரென்று திரு. த. கைலாசபிள்ளையவர்கள் கூறியுள் ளார். இவரின் சிறந்த சேவையினைத் தொடர்ந்து செய் தவர் யாழ்ப்பாணம் இராசரத்தினம் ஆவார்.

அருணுசல உபாத்தியாயரின் அருஞ்சேவைக்கு ஆதார மாக ஆக்கமும் ஊக்கமுமளித்தார், வள்ளலார் திரு. வை. ஆறுமுகம் அவர்கள்; திரு. மு. குமாரவேலு, கா. சிவசிதம்பர ஐயர், கா. வேதக்குட்டி ஐயர் இவர்க ளும் பக்கபலமாகவிருந்தனர்.

கிறித்தவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்ப எங்ஙனம் துடித்து நின்ருர்களோ அங்ஙனம் இவரும் சைவசமயத் தைப் பரப்புவதிற் தன்னந்தனியாகப் போதிய பொருள் வருவாயின்றித் துடியாய்த்துடித்தனர்.

உற்ருரை வேண்டேன், உறவினரைவேண்டேன் என்ற பான்மையிற் திரிந்த இவருக்குப் புத்திரர் மூவர். ஒருவர் இளம்வயதிலேயே இறந்துவிட்டார். சிவப்பிரகாசம், சிவ பாதம் என்பவர்கள் மற்றுமிருபுத்திரர்கள். இருவரும் ஆசிரியர்களே. சிவப்பிரகாசம் பயிற்றப்படாத ஆசிரியர். சிவபாதம் பயிற்றப்பட்ட ஆசிரியர். இன்று இளைப்பாறிப் பொதுச் சேவையில் ஈடுபட்டு உழைத்துவருகின்ருர்.

**பிறக்கிராசியார் காசிப்பிள்ளை:—** *—1857,* பிறக்கிராசி காசிப்பிள்ளை என்று காரைநகர் மக்களாற் பேரன்புடன் அழைக்கப்படுமிவர் தான் முருகேசர் திசைநாயகம்* என்ற நியாயதுரந்தரர். காரைநகரிலே தங்கோடை எனுங் குறிச்சியிலே 1857ம் ஆண்டு பிறந்தனர்.

கொழும்பு இராச கல்லூரியிற் (Royal Academy) கல்வி கற்றுத் தேறியவர்; புலமைப் பரிசில் பெற்றவர்.

நியாயதுரந்தரராகையினுல் நீதி நியாயத்திற்குக் கட்டுப்பட்டு நன்னெறியில் வாழ்ந்த பெருமகனுர்.

தருக்கசாத்திரம், வானசாத்திரம் இவற்றில் நிபுணர்.

சமயாசாரசீலர்; தேவார திருவாசகங்களை இனிமையாக பாடவல்லார்.

**அல்லின் ஏபிரகாம்:—** *1865—1922.* காரைநகரிலே பயிரிக்கூடல் என்னுங் குறிச்சியிலே 1865ம் ஆண்டிலே அல்லின் ஏபிரகாம் பிறந்தவர். கந்தப்பர் சுப்பிரமணியம் தந்தையாராவார். தாயார் பார்வதி. பஞ்சம் கொள்ளை நோய் நிகழ்ந்த 1876ம் ஆண்டிலே கொள்ளை நோய் காரணமாக பெற்ருேர் இறந்துபட்டனர்.

அமரிக்க மிசியோன்மாரின் சேவை காரைநகரிற் பரவிக் கொண்டு வருகின்ற காலத்தில் சிறுவராக இருந்த இவர் தெல்லிப்பளை விடுதிப் பாடசாலையிற் சேர்ந்து படித்தனர். கல்விப் புலமை காரணமாக ஆசிரியர் பயிற்சிச் சாலையிற் சேர்க்கப்பட்டனர். இப்பாடசாலையிலுள்ள ''சான்டஸ்'' மண்டபம் பாடசாலைப் பிள்ளைகளாலேயே கட்டப்பட்டதாம். மண்டப விருந்தைக்குரிய கைமரங்கள் காரைநகர்ப் பிள்ளைகளால் உதவப்பட்டவை என்பர்.

1883ல் கல்வி அதிபதியின் சான்றுடன் பயிற்சி பெற்ற இரண்டாந்தரப் பத்திரம் பெற்றுப் பயிற்சிச் சாலையிலிருந்து வெளியேறினர்.

---

* காரைநகர் சைவமகாசபைப் பொன்விழாமலரிலிருந்து இவர் சரிதம் எடுக்கப்பட்டுள்ளது.

14.6.1888ல் ஐந்து வருடம் யாழ்ப்பாணக் கல்லூரியிற் பயின்று கலைமாணிப் பட்டதாரியானார். பட்டதாரியான பின்னர் தாம் ஆசிரியராகப் பயிற்சி பெற்ற தெல்லிப்பளை ஆசிரியர் பயிற்சிச் சாலையில் மூன்று வருடங்களுக்கு ஆசிரியராக அமர்ந்திருந்தனர்.

1896ல் கல்கத்தா பல்கலைக்கழகத்துப் பட்டதாரியுமானார். அக்காலந்தொட்டு B. A.; F. A. வகுப்புகளுக்குத் தமிழும் கணிதமும் படிப்பித்து வந்தனர். 1908ம் ஆண்டு வரையில் தமிழ் கற்பிப்பதை நிறுத்தினாராயினும் கணிதத்தை தனது மரணபரியந்தம் படிப்பித்து வந்தனர்.

ஆர்னோல்ட் சதாசிவம்பிள்ளை இறந்த பின்னர் உதய தாரகைப் பத்திரிகைக்கு ஆசிரியராகவும் (1897 – 1909) விளங்கினர்.

1910ம் ஆண்டிற் தோன்றிய ஆலிஸ் வால் நட்சத்திரம் பற்றி வானியல் ஆராய்ச்சி செய்து பின் நிகழக்கூடிய சங்கதிகளைவெளிப்படுத்திக் காட்டியமை காரணமாக 12. 1. 1922 அன்றுஇலண்டன் F. R. A. S. என்றசங்கத்தின் மகிமை அங்கத்தவராகச் சேர்க்கப்பட்டனர். இச்சங்கத்திற் சேர்க்கப்பட்ட முதல் இலங்கை மகன் இவராவார்.

சமயாசார சீலராக இருந்தமையினால் தென்னிந்திய ஐக்கிய கிறித்தவ சபையின் செயலாளராகக் கடமை புரிந்துள்ளார்.

மது விலக்கு இயக்கத்திற் சேர்ந்து பெரிதும் உழைத்தனர். இவ்வுழைப்பின் பலனாக அவர் இறந்த ஞான்று யாழ்ப்பாணத்தில் மது இல்லாமல் ஒழிந்தது.

இவர் நல்லாசிரியராகத் திகழ்ந்தமையினால் நல்ல அறிவு நூல்களையும் எமக்கு ஆக்கித் தந்துள்ளார். வான நூல் வல்லுநராகையால் ''வானாதிசயங்கள்'' என்னும் நூலை எழுதியுள்ளார்.

மது விலக்கில் ஈடுபட்டுழைத்தமை காரணமாக ''மது விலக்குக்கும்மி'' ஒன்றினைப் பாடியுள்ளார்.

மதானுசாரராக இருந்து பல கிறித்தவ தேவாரங்களை யும் கீர்த்தனங்களையும் பாடியுள்ளார்.

கணிதநூலும் எழுதியதாக அறிகின்றோம். 1922ம் ஆண்டு யூலாய் மாதம் 7ந் தேதியன்று மரணத்திரையால் மறைக்கப்பட்டனர்.

**நாகமுத்துப் புலவர்:— *1857—1939.***

"தலந்திகழுங் காரைநகர்த் தலத்தின் ருரு
தனுக்கோடிப் பிள்ளைசெய்த தவத்தின் சூனு
கலந்திகழு முழவர்குலங் களிக்குந் தேனு
கருதுமெய்மை சைவமின்ன கசியு மேரு
புலந்திகழு நாகமுத்துப் புலவரேறு"

என்று சுப்பிரமணிய வித்தியாசாலைப் பிரதமாசிரியர் திரு. சி. தில்லையம்பலம் அவர்களாற் போற்றப்பட்ட நாக முத்துப்புலவர், வேலாயுதர் தனுக்கோடிப்பிள்ளைக்கும் கந் தப்பர் சேதுநாயகிக்கும் தவப்பெருந் தனிப்புதல்வனுகப் பிறந்து சிறியதாயாரின் பராமரிப்பில் வளர்ந்தவர். சிறு வயதிற் திண்ணைப் பள்ளிக்கூடத்திற் படித்தபின்பு இலக் கண இலக்கியப்படிப்பினை நெவின்ஸ் சிதம்பரப்பிள்ளையி டம் கற்றறிந்தவர். சிதம்பரப்பிள்ளை அவர்களையே தமது ஆசிரியராகப் போற்றியுள்ளார்.

திருவாழ் சிவபிரான் பதாம் புயத்தினைத் தேசிகனுர்
உருவாழ் சிதம்பரம்பிள்ளை நெவின்சை யுளத்திருத்தி

என்று தெய்வ வணக்கமுங் குருவணக்கமுஞ் செய்துள் ளார்.

சிதம்பரப்பிள்ளையவர்கள் இறந்தபோது பாடிய சரம கவிகளிலொன்று வருமாறு:

தாங்கு புகழ் கம்பன் தனிக் காளமேக கம்பன்
ஆங்கில லற்றின்பாடை யாய்ந்தனரோ - பொங்குவட
தென்மொழியில் நேர்வர் சிதம்பரப்பிள்ளை யுன்போற்
பன்மொழிநேர் வாரோ பகர்.

நாகமுத்துப்புலவர் அவர்கள் எடுத்தடிமடக்காய்ப் பாடக் கூடியவர். பேசும் பொழுதும் இலக்கண அமைதியுடன் பேசுபவர். சிறுபிள்ளைகள் போற் பழகுஞ் சுபாவமுடையவர். கவிகள் பாடிய வண்ணமே காலத்தைப் போக்கும் புலவரேறு.

பள்ளிக்கூட ஆசிரியராக முப்பத்தைந்து ஆண்டுகள் படிப்பித்துள்ளாராகையால் நாகமுத்துச் சட்டம்பியார் என்றும் அழைக்கப்பட்டனர். இவரின் மாணுக்கர் பலர் மலாயா சென்று உத்தியோகத்திலமர்ந்திருந்தனர்.

சிதம்பரப்பிள்ளை சுப்பிரமணியம் தாபித்த சுப்பிரமணிய வித்தியாசாலையிலேயே மாற்றமெதுவுமின்றிப் படிப்பித்தவர். அதேபான்மையில் இவரின் ஏக புத்திரன் காரை நகர் இந்துக்கல்லூரியிற் படிப்பித்து இளைப்பாறியுள்ளார். இவர் தம்முடைய நண்பர்கள், பரிசிலர் மேற் பாடிய சீட்டுக்கவிகளில் மாதிரிக்கொன்று காட்டுதும்; சண்முகம் ஆசைப்பிள்ளை அவர்கள்-கட்டளைக் கலித்துறை.

**சகராசர் சேகரன் கோத்திரன் காரைத் தனிநகரான்**
**மகராசன் சண்முகம் சேயாசைப் பிள்ளை மகிழ்ந்தறிக**
**மிகராசர் போற்றிடு நாகமுத்தாசான் விடுகடிதம்**
**வகராச சேகர வென்மிடி நீக்கிநீ வாழியவே.**

இவ்வாறாக நூற்றுக்கு மேற்பட்ட கவிகளை இயற்றியுள்ளார். இவையெல்லாவற்றையும் அடக்கி ''திருமங்கல வாழ்த்துச் சீட்டுக்கவித்திரட்டு'' என்றோர் நூலை உருவாக்கி அபிமானப் பிரபு ப. க. ஆ. பூபாலபிள்ளை அவர்களின் பொருளுதவியால் நாவலர் அச்சுக்கூடத்தில் பதிப்பித்து 1914ல் வெளிப்படுத்தியுள்ளார்.

''காரைநகர் திண்ணபுர சுந்தரேசர் திருப்பதிகம்'' என்றோர் நூலையும் அத்துடன் திருவூஞ்சல், எச்சரிக்கை, பராக்கு என்பனவும் பாடியுள்ளார். இவையெல்லாம் ஈழத்துச்சிதம்பரம் என்ற நூலில் வெளிவந்துள்ளன. இவையன்றி, கலிகால வேடிக்கைக்கும்மி, மலாய் நாட்டு மனோரஞ்சிதக் கும்மி என்பனவும் இவராற் பாடப்பட்டனவாகும்.

**அம்பலச் சட்டம்பியார்:—** *–1935* சீரார் காரைத் திருவளர் பதியிற் பரம்பரையடிமை குடிமையாதிக்க மிரா சவுத்தியோக மெழிலார் செல்வம் பொருந்து பூநீதி முதலி கோத்திரத்தில் மாண்புமிக்க கனகரம்பலவாணரவர் வழித்தோன்ற லாஞ்சண் முகமென்பவருக்கும் வற்று வழி வழியதனிற் பெற்ற சட்டம்பி சங்கரப்பிள்ளையின் மகள் சின்னுச்சிப்பிள்ளையும் செய்த தவத்தினல் வந்துதித்த மகத் துவமைந்தன் அம்பலவாணர். தெல்லிப்பளையில் அமரிக் கன் மிசியோன் பாடசாலையில் திரு. ஜெருமையா, பண்டி தர் அல்லின் ஏபிரகாம், F. R. A. S. ஆகியோரிடம் இலக்கி யமும் இலக்கணமும் சோர்வுபடாது கற்றுத் தேர்ச்சிபெற்ற ஆசிரியராகப் பட்டம்பெற்று சிலநாள் ஆசிரியராக இருந்த பின்னர் மலாய் நாட்டில் ரவுண் ஓவசியராக வேலைபார்த் தனர். பின்னர் தன்தாய் நாட்டிற்குத் திரும்பி ஆங்கில வித்தியாசாலையில் **(Hindu English School, Karainagar)** தமிழ்ப்பண்டிதராகப் பதினெட்டு ஆண்டு தொண்டாற்றி னர். அன்றியும், அரசினரின் உதவிநன்கொடைப் பண மின்றி, பிற சமய வித்தியாசாலையாரின் எதிர்ப்பு பெரிதும் தலைப்பட்டு, இவ்வித்தியாசாலை அலைகடலில் அகப்பட்டுக் கரைகாணுது தத்தளிக்கும் மரக்கலம் போன்று, தனக்கு வழி காட்டுவார் யாரும் உளரோவென்று கதறிய 1910ம் ஆண்டில் ஓர் ஆசிரியராக அற்பவேதனத்துடனமர்ந் துழைத்தாரென்பதை யாவரே மறுப்பார்.

கையில் கடிகாரங் கொண்டு, கடமையில் ஒரு நொடி யும் பிந்தாது, காலத்தை வீண் போக்காது கல்வியூட்டிய ஆசிரியர் ஒரு சிலரே. கற்றல் கேட்டல் கோவிற் பழக்கம் என்னும் முதுமொழிகள் மூன்றிலும் வரத்தக்க அறிவுப் பயனை மாணவர்க்கு வகுப்பிலேயே அளிக்கும் ஆற்றலோடு வேளாண் வாழ்க்கையும், தாளாண்மையும், உலகியலறித லும், நிலைஇயதோற்றமும், பொறையும், நிறையும், பொச்சாப்பின்மையும், அறிவும், உருவும், ஆற்றலும், புக ழும், சொற்பொருளுணர்த்தும் சொல்வன்மையும், கற் போர் நெஞ்சங்காமுறப்படுதலும் ஆகிய ஆசிரியர் இலக் கணங்கள் பெரிதுமடைந்து மற்றும் ஆசிரியர்களுக்கு முன் மாதிரியாகவும் விளங்கினர்.

இவ்வாசிரியரிடம் கற்றுத்தேறிய மாணவர்கள் மலாய் நாட்டில் பெரிய உத்தியோகங்களிலமர்ந்து தங்கள் நிலை பரத்திற்கு மூலகர்த்தாவாக இருந்த அம்பலச்சட்டம்பி யாரை என்றும் போற்றுகின்றனர்.

இவருடைய தமிழின் திறமையை அறிந்த, யாழ்ப் பாண இந்துக்கல்லூரியின் அதிபர் திரு. நெவின்ஸ் செல்வத் துரை B. A, J. P, M. B. E. அவர்களால் வருடந்தோறும் நடத்தும் வகுப்பேற்றப் பரீட்சைகளுக்கு 1921, 1922, 1923 ஆண்டுகளில் சோதினை நடாத்தும்படி நியமனம் செய்த னர். இலக்கணத்தில் இவர் ஓர் திறமைவாய்ந்தவரென்ற றிந்தே இவ்வண்ணமாக திரு. நெவின்ஸ் செல்வத்துரை அவர்கள் அன்னாரின் சேவையை வேண்டினர். மகாபார தத்தை நன்ருகக் கற்று ஐயந்திரிபற உரைசொல்ல வன் மையுடையவராயிருந்தார்.

ஐந்து பெண் சகோதரங்களுக்கு ஓர் அரிய சகோதர ணுக அமைந்தார். மூத்த சகோதரியின் மைந்தன், சற் குணஞ் சிறந்து புத்தியினுயர்ந்து காலமிடங்கட்கேற்கவே கருமம் யுத்தியால் முடித்திடும், கருமவீரன் ''ரைம்ஸ்'' சங்கரப்பிள்ளை ஆவார்.

1933ம் ஆண்டு ஆசிரியர் பதவியினின்று இளைப்பாறித் திண்ணைக்களிச் சௌந்தராம்பிகை சமேதரரான சுந்தரேஸ் வரப் பெருமானின் திவ்வியபாதாரங்களைப் போற்றினர். 1935ம் ஆண்டு மார்ச்சு மாதம் பத்தாந்தேதி இப்புவி தன்னையிகந்தே யப்பன் சிவனருளடைந்து வாழ்ந்தனன்.

இவருக்குப் புத்திரர் நால்வர். கனகசபை சிரேட்ட புத்திரன், சிவில் சேவையிலமர்ந்து உத்தியோகம் புரிந்து இளைப்பாறியுள்ளார். சமாதான நீதவான் பட்டமும் பெற் றவர். காரைநகர்ச் சிவன்கோவிற் திருப்பணிச்சபை செய லாளராக இப்பொழுது பணிபுரிகின்ருர். மற்றையவர் என் னுடன் மாணுக்கன், குலநாயகம் என்பான். நியாயதுரந்த ரர்.

**சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை:—** (மொட்டையர்) நேர்மை நிதானஞ் சீரிய நீதி தானதருமந்தவத்தோடு செல்வமான மாண்புடைவள்ளற் பெருங்கொடையாதிய வற்றுலவ னியிலெவருமொருவாற்றுனு மொப்பிலையிவற் கென்றுலகம் புகழ்ந்திடவோங்கு புகழ் செறிபெரியோ னென்னும் பெரும் பெயர் புனைந்தவன்; கிராமக்கோட்டு நீதிமன்னனு யூருக்கேற்றவுயர் திருத்தங்களை வழுவாது ஞற்றுமாண்புறு மகிபன்; தன்னையெதிர்த்த தகையினர் தாழவுந் தன்னைச் சேர்ந்த தகையினரோங்கவும் திடமன வுறுதி சொற்சோர்விலாதான்; பயிரிற்கூடற் சுப்பிரமணியராலயமுடனேயர் பலரேத்த மயான பூமியின் மதிப்புறு மடமுமுலகமுள்ளளவு மலைபோல் விளங்கிடத்தன்னந் தனியே தன்பொருளதனுற்றுபித்து நடாத்திய தகுதிசேர் வள்ளல். மேழிச் செல்வங் கோழைபடாதென ஔவை சொற்படியகன்ற நிலங்களையாண்டனுபவிக்குமளப்பிலாக் கமத்தோன்.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை முகாமையாளன்; அம்பலச்சட்டம்பியாரின் அருமைசேர் மைத்துனன். சிவன்கோவில் வீதி தரவைதாண்டித்தலம்வரை நீட்டினேன். இத்தகைய மாண்பினன் சங்கரப்பிள்ளை கணபதிப்பிள்ளை, இருந்தனன் காரைநகர் தன்னில். பிள்ளை மடத்தைப் பேணிக்காத்த பெருமகன். காரைநகர் கிராமச்சங்கத்தின் முதற்தலைவர்.

**கணபதியார் பாறுபதி:—** காரைநகர் களபூமியில் வசித்தவர். இவர் தமது பொருளைச் சிவன் கோயிற் திருப்பணிக்காகச் செலவு செய்தவர்.

அக்காலத்திருந்த சிவன் கோவில் ஆதிமூலம் இவரின் உபயத்தினுலேயே கட்டப்பெற்றது. தானுக நின்று மேற்பார்வை செய்து கோயிற் திருப்பணிவேலை செய்வித்து வந்தனர்.

பேச்சுச் சம்பிரதாயம் மிக்கவர். கோடேறி வழக்குப் பேசுவதிலும் தீரர். பிறக்கிராசி அப்புக்காத்தில்லாமலே வழக்காடவும் வல்லவர்.

அப்புக்காத்தர் தம்பிப்பிள்ளை சோமசுந்தரம், ஆ. ச. சங்கரப்பிள்ளை சகோதரர்கள் ஆகியோருக்கும் இவர் பாட்டி முறையினர்.

**நொத்தாரிசு சி. கந்தர்:—** இவர் களபூமியிலிருந்து நொத்தாரிசுத் தொழில் புரிந்தவர்.

இவரின் இரண்டாவது மகள் சின்னப்பிள்ளை, வைத்திலிங்கம் என்பவரை வதுவை செய்து புத்திரர் இருவரைப் பெற்றனர். மூத்தவர் அம்பலவாணபிள்ளை; தமிழ் உபாத்தியாயராக இருந்து இறந்து விட்டனர். இவருடைய நற்றவப் புதல்வனே வைத்திய கலாநிதி வைத்திலிங்கம் என்பவர். இவர் காரைநகரின் விருத்திக்காகப் பெரிதும் உழைத்து வருகின்றார்.

இளையவராகிய எஸ். வி. கந்தையா விக்ரோறியாக் கல்லூரியிற் பயின்று சீனியர் சோதனையிலே இலங்கையில் முதலாமிடத்தைப் பெற்றுச் சித்தியடைந்தவர். இவர் சிறிது காலம் ஆசிரியராக இருந்தவர். பின்னர் தபாற் கந்தோர்ப்பகுதியில்பெரும் உத்தியோகத்திலமர்ந்திருந்தவர்.

**நொத்தாரிசு சங்கரப்பிள்ளை:—** களபூமியில் வசித்தவர். இவரின் மகன் கந்தப்பர். சயம்புச் சட்டம்பியாரால் ஆரம்பிக்கப்பட்ட திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் வித்தியாசாலைக்கு அத்திவாரக்கல் வைத்த பெருமை இந்தக் கந்தப்பருக்கே உரியது. தற்போது பிறக்கிராசியும் சமாதான நீதிபதியும் ஆக இருக்கிற ஆறுமுகம் கனகசபை அவர்களுக்குக் கந்தப்பர் பேரனுவார்.

**காப்புக்காரப் பெரிய மணியகாரன்:—** இவரின் இயற்பெயர் தெரியவில்லை. மலாயன் பெஞ்சனியர் பணக்காரப் பொன்னம்பலத்திற்குப் பேரனுவார். இவர் தீவுப் பற்றுக்கு மணியகாரனுக இருந்தவர். திரு. பொன்னம்பலத்தின் மகனுகிய டாக்ரர் பரமசாமி திரு. ஆ. சங்கரப்பிள்ளையின் மூத்தமகளை மணம்முடித்தவர்.

**பொன்னுடையார் வேலுப்பிள்ளை:—** நொத்தாரிசு சி. கந்தர் என்பவர் களபூமியிலிருந்து நொத்தாரிசு வேலைபார்த்தவர். இவரின் மூத்தமகளின் மகளைப் பொன்னுடையார் வேலுப்பிள்ளை மணஞ் செய்தனர்.

இருவரும் இல்லறத்தை நல்லறமாக நடாத்தி வருகையில் இரகுநாதர், வயித்திலிங்கம், பொன்னையா, சதாசிவம், தில்லைநாதன், நாகலிங்கம் என்ற பெயர்களையுடைய புத்திரர்களைப் பெற்றனர்.

பொன்னுடையார் வேலுப்பிள்ளை கற்க வேண்டிய ஆங்கிலக் கல்வியைக் கற்றுத்தேறி வட்டுக்கோட்டை ஆங்கில பாடசாலையிற் படிப்பித்துப் பின்னர் ஊரிலுள்ள சாமி பள்ளிக்கூடத்தில் தலைமை ஆசிரியராக இருந்தனர். அதன் பின்பு சயம்புச்சட்டம்பியாரின் இந்துக்கல்லூரியில் பலவருடங்கள் தலைமை ஆசிரியராக இருந்து இளைப்பாறினர்.

இவரின் மூத்தமகனாகிய இரகுநாதர் பல பள்ளிக்கூடங்களில் ஆசிரியராகத் தொழில் புரிந்தவர். இளைப்பாறிப்பல வருடங்கள் சென்று இறந்துபட்டனர். இரகுநாதரின் புத்திரனே வைத்திய கலாநிதி கனகசுந்தரம். ''ரைம்ஸ் ஒவ் சிலோன்'' (Times of Ceylon) சங்கரப்பிள்ளையின் மருகர். தற்போது சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் அங்காதிபாதப்பேராசிரியராகக் கடமையாற்றுகிறார். இவரே காரைநகரிற் தோன்றிய முதற் பேராசிரியராவார்.

வயித்திலிங்கம் சேவையராக உத்தியோகம் புரிந்து இளைப்பாறியிருக்கின்றார்.

பொன்னையா அப்போதிக்கரியாக இருந்து இளைப்பாறியிருக்கின்றார்.

தில்லைநாதன் தொடக்கத்தில் ஆசிரியராக இருந்து பின்னர் அப்புக்காத்தாகி நியாயதுரந்தரர் தொழில் புரிந்து வருகின்றார்.

**முகாந்திரம் சைவத்திருவாளர் க. முத்துக்குமாரு:—** இவர் காரைநகரில் பேரும்புகழுமாய் வாழ்ந்த சைவக் கந்தையா அவர்களின் மூத்த மகனுவர். இவர், அக்கால முறைப்படி, சட்டம்பி கந்தர் அவர்களால் நடாத்தப் பெற்ற திண்ணைப்பள்ளிக்கூடத்தில் ஆரம்பக் கல்வியைப் பெற்ருர். பின், யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரியிற் சேர்ந்து ஆங்கிலங் கற்று, 'கேம்பிறிட்ஸ்' பல்கலைக்கழகம் நடாத்தும் 'யூனியர்' பரீட்சையில் தேறினுர். காரைநகரிலிருந்து முதன் முதல் அரசபணியில் சேர்ந்த பெருமை இவர்க்கே உரியது. பகிரங்க வேலைப் பகுதியில் கடமையாற்றியமை காரணமாய் இக்கிராமத்தைச் சேர்ந்த பலர் ஓவசியர் வேலை பெறும் வாய்ப்பைப் பெற்றனர்.

கொழும்பு மாநகரில் பல அரசாங்க பகுதிகளில் கடமையாற்றிய பின், 1922—1927 வரை யாழ்ப்பாணம் பிஸ்கால் கந்தோரில் பிரதம இலிகிதராய்ப் பணியாற்றி இளைப்பாறினர். 1928ம்ஆண்டு, கிராமச்சபை ஆரம்பமானபோது மக்களாற் தெரியப்பட்ட கிராமக்கோட்டு நீதவானுய் 1930ம் ஆண்டு வரையில் பணியாற்றினுர். அரசாங்க சேவையில் நற்பணி செய்தமைக்குச் சான்ருக, 1931ம் ஆண்டில் 'முகாந்திரம்' பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்டார்.

காரைநகரின் மதியமாய்ச் சிறப்புற விளங்கும் சைவ மகாசபைக்கு, 10 வருடத்திற்கு மேலாய்த் தலைவராகப் விளங்கியதோடு, சபை உபயோகத்திற்காகச் சபையின் தென்மேல்பாக அறையையுங் கட்டி உதவினுர்கள்.

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச்சங்க அதிகாரசபை அங்கத்தவருள் ஒருவராய்ப் பல ஆண்டு பணிசெய்தார். மூளாய் ஐக்கிய சங்க வைத்தியசாலை அதிகாரசபையிலுமிருந்து, அதன் வளர்ச்சிக்காகவும் உழைத்துள்ளார்.

புளியன்குளம் விநாயகராலயப் பரிபாலகர் சண்முகம் விதானையாருடன் சேர்ந்து ஆலயப்பணியிலும் ஈடுபட்டிருந்தார்.

''தனக்கென வாழாப் பிறர்க்குரியனுய் வாழ்ந்து 75ம் வயசில் இறையடி சேர்ந்தார்.

**ஏ. ஆர். சுப்பிரமணியம்:** இராமர் அம்பலவாணரின் மகன். காரைநகரிலே படிப்பால் மிக்க பழைமை வாய்ந்தவர் இவர். தமிழ் நன்கு கற்றவர்; ஆங்கிலத்தில் பி. ஏ. பட்டதாரி. யாழ்ப்பாணக் கல்லூரியிற் படித்துத் தேறியவர். சட்டக்கல்லூரியிற் சேர்ந்து அப்புக்காத்தாஞர். நியாயதுரந்தரராகத் தொழில் புரிந்து வருகையில் நீதிபதியாக நியமிக்கப்பட்டவர். திருக்கோணமலையில் மாவட்ட நீதிபதியாகக் கடமை புரிந்தவர்.

திரு. சுப்பிரமணியத்தின் தகப்பனுராகிய அம்பலவாணர் தமிழில் நல்லறிவு வாய்க்கப் பெற்றவர். இவர் பலருக்குத் தமிழ் கற்பித்தவர். இவர் சிறுவயதினராக இருந்த காலத்தில் அவரது தகப்பனுராகிய இராமருடன் நல்லூர்க் கந்தசாமி கோயிலுக்குப் போய் அவ்விடம் நடைபெறும் கந்தபுராணப்படிப்பைக் கேட்பது வழக்கம். ஒருவிசை பயன் சொல்லிய ஒருவர் பாட்டின்பயனைச் சரியாகச் சொல்லவில்லை. அப்பிழையை அம்பலவாணர், சிறுபிள்ளையாக இருந்தும் சுட்டிக்காட்டிச் சரியான பயனையுஞ் சொல்லிச் சபையோரை மகிழ்வித்தனர்.

திரு. ஏ. ஆர். சுப்பிரமணியத்திற்கு சிதம்பரப்பிள்ளை என்ற தமையனுர் ஒருவர் இருந்தார். இவரும் ஆசிரியராயிருந்து இறந்துவிட்டார்.

திரு. சுப்பிரமணியம் அவர்களுக்கு இருவர் புத்திரர். மகள் ஒருவர். மூத்தமகனுகிய அளகு சுப்பிரமணியம் சீமையிற் படித்தவர். ஆங்கிலத்தில் சிறுகதை எழுதும் திறமை வாய்ந்தவர். இளையமகனுகிய டி.கே. சுப்பிரமணியம் கடற்றெழிற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையிலொருவராக இருக்கின்ருர்.

மகளை மணஞ்செய்தவர் திரு. சபாபதி இராசநாயகம் ஆவார். அமரிக்கமிசியோன்மார் பாடசாலையில் அக்காலத்

திற் படிப்பித்த சிவலிங்கச் சபாபதியின் மகன் இவர். இவர் தபாற்கந்தோர்ப் பகுதியில் தந்திப்பிரிவின் பிரதான எஞ்சினியராகவும் பிரதித் தலைமை அதிபதியாகவும் உத்தியோகம் புரிந்து இளைப்பாறியுள்ளார்.

தொடர்ந்து பல ஆண்டுகளாகத் திருக்கோணமலையில் மாவட்ட நீதிபதியாகக் கடமை புரிந்த திரு. அம்பலவாணர் றிச்சேட் சுப்பிரமணியம் இளைப்பாறிய பின்னர் சில ஆண்டுகள் தமது ஊரில் வாழ்ந்த பின்பு மகனையும் மருமகளையும் பார்ப்பதற்காகத் திருக்கோணமலை சென்றபோது அங்கே 1961 பங்குனி 27 அன்று மரணமடைந்தனர். திருக்கோணமலை அவரின் ஆவியையும் உடம்பையும் ஒரு சேர ஈர்த்துக் கொண்டது.

**கணபதியார் பரமு, சின்னத்தம்பி சின்னப்பு, வேலுப்பிள்ளை சின்னக்குட்டி:—** இவர்கள் மூவரும் களபூமி மக்களின் தேர்த்திருவிழாப் பிரதிநிதிகள். காரைநகர் சிவன் கோவிலில் பங்குனியிலும், மார்கழியிலும் நடைபெறும் தேர்விழாவினைச் சீர்பெற நடாத்தும் பொறுப்பு இவர்களுக்குரியது.

கணபதியார் பரமு என்பவர் பரம உடையாரின் பேரன்.

சின்னத்தம்பி சின்னப்பு என்பவர் பேரும் புகழுமான வைத்தியர்.

வேலுப்பிள்ளை சின்னக்குட்டி என்பவர் பெருங் கமக்காரன், இவருடைய மகன் இப்பொழுது மலாயன் பெஞ்சனியராக இருக்கிறூர். இவருடைய பேரனுகிய கிருஷ்ணபிள்ளை கட்டிடக் கலைஞராகக் கொழும்பில் தொழில் புரிகின்றூர்.

இவர்களின் பெரு முயற்சியினுலேதான் சிவன் கோவிலிருக்கும் பெரிய தேர் கட்டப்படலாயிற்று.

**கந்தப்பர் சுப்பிரமணியம்:—** அக்காலத்தில் கொந்திருத்துச் சுப்பிரமணியம் என்ருல் காரைநகர் மக்களுக்கு மாத்திரமல்ல இலங்கை வாழ் மக்கள் யாவருக்குந் தெரியும். காரை நகரிலே களபூமியிற் பிறந்து வளர்ந்தவர்.

பணம் படைத்தவர். ஆகவே தான தருமங்கள் செய்வதிற் பின்னிற்கவில்லை.

களபூமி சுந்தரமூர்த்திநாயஞர் பாடசாலையைக் கட்டியெழுப்பியவர் இவராவார். இவரே அதன் முதல் முகாமையாளர். பின்னர் திரு. ஆ. சங்கரப்பிள்ளை பொறுப்பேற்றனர்.

கிட்டங்கியடியிலிருக்கும் பிள்ளையார் கோவிலுக்குத் தனது செலவிற் தேரொன்று செய்து கொடுத்தவர்.

**ஆறுமுகம் சங்கரபிள்ளை:—** 'உடையது விளம்பேல்'. என்ற நல்லுரைக்கு இலக்கியமாக விளங்கியவர் திரு. ஆ. சங்கரப்பிள்ளை அவர்கள். பென்னம்பெரிய தான தருமங்களும் சின்னஞ்சிறிய தானதருமங்களும் புரிந்த புண்ணியவான் இவர். வலதுகை செய்ததை இடதுகை தெரியாது இவர் செய்த உதவிகள் பல. இவரின் உதவி பெற்று நடைபெற்ற ஆலயக் கட்டிடங்கள், பள்ளிக்கூடங்கள், வீடு வாசல்கள் பல. பல வகையாலும் உதவி பெற்ற பலர் காரைநகரிலும் மற்றுமிடங்களிலும் வாழ்ந்து வருகின்றனர்.

தந்தையார் கோவிந்தர் ஆறுமுகம்; தாயார் விசுவர் சண்முகம் மகள் கற்பகம். தெய்வானை என்பவர் இவரின் ஏகசகோதரி. சகோதரி தெய்வானை களபூமி வேலாயுதர் கந்தப்பு என்பவரை மணம் புரிந்தவர். இவர்கள் மகனே திரு. க. ஆறுமுகம். இவர் தமது தாய்மாமஞகிய சங்கரப்பிள்ளையின் மூன்ரும் புத்திரியை விவாகஞ் செய்துள்ளார்.

திரு. ஆ. சங்கரப்பிள்ளை அவர்கள் சிறு வயதில் தமது தாயாரை இழந்துவிட்டார். தகப்பனுரும் மறுதாரஞ் செய்து கொண்டார்.

இவருக்குப்படிப்பில் அதிகம் நாட்டமில்லை. தொழில் துறை செய்வதிலே அதிகம் விருப்புடையரானர். சிறிய தகப்பனர் ஓவசியர் சிதம்பரப்பிள்ளையின் கீழ் சிறு ஓவசிய ராகச் சில காலம் தொழில் புரிந்தார். இதனைச் சில காலத் தின்பின் கைவிட்டனர்.

இஃதிவ்வாறிருக்கின்ற காலத்தில் திரு. க. பரமு என் பவர் மடுவக்கொல்லையில் கொந்திருத்து வேலைகள் பல செய்து வந்தார். சங்கரப்பிள்ளை இவரிடஞ் சென்று அவ ரின் தொழில் முறையில் மனேச்சராகக் கடமை புரிந்தார். மிகவும் கெட்டித்தனமாகத் தொழில் புரிந்து சம்பளக் காசினை மிச்சம் பிடித்தும் மற்றும் பலரின் உதவிகொண்டும் ஆசுப்பத்திரிக் கொந்திருத்தினைத் தன்பொறுப்பில் எடுத்து நடத்தத் தொடங்கினர். ஆறுமுகம் விசுவலிங்கம், கந்தப் பர் சுப்பிரமணியம் (பெருங்கொந்திருத்துகள் செய்தவர்) இவருக்குக் காலத்தாலுதவிபுரிந்தனர். இவரின் பெரு முயற்சி காரணமாகவும் மற்றும் நல்லோர்பேருதவியினு லும் முன்னேறி இலங்கை முழுவதிலுமுள்ள ஆசுப்பத்திரி கள், மறியல் வீடுகள் இவற்றிற்கெல்லாம் கொந்திருத்துக் கள் எடுத்து அரசுமெச்சச் சீராக நடத்திவந்தனர். இத ஞல் இவரைக் ''கொந்திருத்துச் சங்கரப்பிள்ளை'' என்பர்.

மதுவரிப் பகுதியினரின் சாராயத்தைப் போத்தலில டைத்துக் கொடுக்கும் கொந்திருத்து இவருக்கே முதன் முதலாகக் கொடுக்கப்பட்டது. கொந்திருத்தினை இலங் கையின் சகல பாகங்களிலும் நடாத்தி வந்தார். கொந்தி ருத்து நடாத்திய சகல இடங்களிலும் இவருக்குச் சொந்த மான வீடு வாசல்கள் காணிபூமிகளிருந்தன.

காணிவயல், தென்னை, இறப்பர், தேயிலைத் தோட் டங்களையும் ஆங்காங்கு விலைக்குப் பெற்றுக் காரைநகர் வாசிகளுக்கும் மற்றையோர்க்கும் வேலை வாய்ப்புச் செய்து கொடுத்தனர்.

இவ்வகையாகத் தொழிலிலும் பணத்திலும் முன்னே றிக் கோடீசுவரனுனர். சுயமுயற்சியால் முன்னேறிய பெரு மகனர் என்று போற்றும் வண்ணம் சாந்தம், பொறை,

தயை என்ற அருங்குணங்கள் படைத்த பெருங்குன்ருக விளங்கினுர். பணப் பெருமை அல்லது குணப்பெருமை, அல்லது குலப்பெருமை அறவே கிடையாது. சாதாரண பெனியன் முழத்துண்டு இவற்றுடன் காட்சியளிப்பர். பெரு மக்கள் சகவாசமிருந்தும் அவர்களோடு கூடிப்பழகும் சந் தர்ப்பங்களைத் தவிர்த்து நடப்பர்.

அரசாங்கத்தின் கொந்திருத்து முறை முற்ருக நீக்கப் பட்டுச் சந்தைப்படுத்துந் துறையினர் அதனை மேற்கொள்ள இவருடைய கவனம் வேருேர் திசையிற் திரும்பியது. ஆரம்பகல்வி கற்று வருங்காலத்தில் அச்சகமொன்றினைச் சுற்றிப்பார்த்து அதுபோல் அச்சகம் வைத்து நடாத்த வேண்டுமென்ற எண்ணம் அவர்மனதிலுதித்தது. அந்த எண்ணம் நிறைவேறும் வாய்ப்பு 1947ல் உருவாயது. ''ரைம்ஸ் ஒவ்சிலோன்'' (Times of Ceylon) தாபனத்தை வாங்கி அதன் பணிப்பாளர் சபைத் தலைவராக இருந்தார்.

மகாதேசாதிபதியாக இருந்த சேர் ஒலிவர் குணத்தில காவின் உற்ற நண்பராகவும் விளங்கினுர். மாட்சிமை பொருந்திய எலிசபெத் II மகாராணியார் இலங்கை வந்த போது இராணியின் அழைப்பில் தமது இரண்டாம் மகளாகிய சொர்ணம் என்பவருடன் இராணிமாளிகை சென்று இராணியின் விருந்தினராகவுமிருந்தனர். இராணியினுற் சேர்பட்டம் வழங்கப்படுவதற்கு இவரிடஞ் சம்மதம் கேட்டபொழுது அதனைப்பெற மறுத்துவிட்டார்.

இவ்வாறு திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் அடக்க ஒடுக்கமாகவும் சோலிசுரட்டின்றி காரைநகர் மக்களின் அபிமான புருடனுக விளங்கினுர். அவரின் அடக்க ஒடுக் கத்திற்கு எடுத்துக்காட்டாக அவர் செய்த புண்ணிய கிருத் தியங்கள் பல. இவை பலருக்குத் தெரியாதவை.

1. காரைநகர்ச் சிவன் கோயிற் சபை கட்டப்பட்ட காலத்தில் அவ் வேலையில் ஈடுபட்டுழைத்த விநாயகர் தில்லையம்பலம் மூலமாகத் தமது பெயர் தெரிவியாமலே பணங்கொடுத்து உதவினுர்.

II. காரைநகர் சிவன்கோவில் நவக்கிரகங்களைத் தாபிக்கக்கோயில் எடுத்தார்.

III. களபூமி திக்கரை முருகமூர்த்தி கோயிலில் பிள்ளையார் மூலத்தானம் கட்டினுர்.

IV. களபூமி சுந்தரமூர்த்தி நாயனுர் பாடசாலையில் வகுப்பறைகள் கட்டினுர். அப்பாடசாலையின் மனேச்சராகவும் இருந்தனர்.

இவ்வாறு பேருபகாரியாக உற்ருர் உறவினர் ஊரவர் மற்றையோர் போற்றும் வண்ணம் பெருவாழ்வு பெற்று வாழ்ந்தார்.

இவர் வள்ளியம்மை என்னும் பெண்மணியை மணந்து விளானே என்னுமிடத்தில் பெரியதோர் வீடுகட்டி வாழ்ந்து வருங்காலத்தில் நாலு பெண்களுக்கும் ஆண்பிள்ளை ஒருவருக்கும் தந்தையானுர்.

முதலாவது மகளாகிய பரமேஸ்வரி வைத்திய கலாநிதி பொ. பரமசாமியை மணம் முடித்துள்ளார்.

இரண்டாவது மகளாகிய சொர்ணம் வைத்திய கலாநிதி இ. கனகசுந்தரத்தினே விவாகஞ் செய்து இப்பொழுது சிங்கப்பூரில் இருக்கின்ருர். அங்கு டாக்ரர் கனகசுந்தரம் பேராசிரியராக இருக்கின்ருர்.

மூன்ருவது மகள் பத்மாசனி, சொந்த மைத்துனராகிய திரு. க. ஆறுமுகத்தை வதுவை செய்து மதுள்சீமாத் தோட்டத்தில் வாழ்ந்து வருகின்ருர்.

ஏக புத்திரனுகிய திரு. விசுவநாதன் 'ரைம்ஸ் ஒவ் சிலோன்' தாபனத்து நம்பிக்கைப் பொறுப்பாளர்களில் ஒருவராக இருந்து வருகிருர்.

கடைசி மகளாகிய சிவகாமசுந்தரி வைத்திய கலாநிதி கனகரத்தினத்தை முடித்து அவரிறந்துபட வேருெருவரை முடித்து வாழ்ந்து வருகிருர்.

திரு. சங்கரப்பிள்ளை நிறத்தாலும் குணத்தாலும் தங்கம், சாதாரண உயரமுடையவர். சாதாரண உடையினர்; சைவாசாரம் மிக்கவர். கோயிற் தரிசனை மறவாதவர். சிறுவயதிற் பழகின பழக்கத்தின்படி காரைநகர் சிவன் கோவில் விடியற்காலப் பூசையினையே பெரிதும் விரும்பியவர். மற்றவர்கள் கண்ணுக்குப்படாமலே மெல்ல ஆலய வழிபாடு செய்து கொள்பவர். காரைநகர் ஈழத்துச் சிதம்பரமாகிய சிவன் கோவிலில் நடைபெறும் திருவெம்பாவைத் திருவிழாக் காலத்தில் பூபாள இராகத்திற் திருப்பள்ளியெழுச்சிபாடும் நேரத்தில் கோயில் திறப்பதற்கு முன்னரே களபூமியிலிருந்து நடந்து வந்து நிற்பவர் திரு. சங்கரப்பிள்ளை ஆவார். கோயில் வழிபாட்டிற்கு அவர் அங்கு நிற்பது மற்றவர்களுக்குத் தெரிந்தாலும் சிவன் கோயிற் கதவை அக்காலத்திற் திறக்கவரும் மொட்டை அம்மாவுக்கு இந்த மகான் கொடுப்பது தெரியாது; கொடுக்குந் தொகையும் எவ்வளவென்று யாருக்குந்தெரியாது. ஆருக்குத்தான் தெரியும் இவர் பெருமை.

**வைரமுத்து சபாபதிப்பிள்ளை, வைரமுத்து ஆறுமுகம்:—** அண்ணன் தம்பி இருவருஞ் சைவாசாரம் மிக்க நற்பெருங்குடியிற் பிறந்தவர்கள். மற்றையோர் காணப் போசனஞ் செய்யாதவர்கள். சிவபூசாதுரந்தரர். நாளும் பொழுதும் இறைவனை மறவாதவர்கள். வர்த்தகப் பெருமக்கள். துறைமுகத்தடி வர்த்தகர்கள்.

வியாபாரத்தொடு கப்பல் வைத்து ஏற்றுமதி இறக்குமதி செய்தவர்கள். பர்மாவரை உருக்களையனுப்பி நெல் அரிசி கொணர்ந்தவர்கள்.

சபாபதிப்பிள்ளை முதலாம் உலகயுத்த காலத்தில் கப்பல்வைத்து ஈட்டிய பொருளைக் கொண்டு துறைமுகச் சித்திரகூடச் சித்திவிநாயகர் கோவிலைச் சொந்த முறையிற் கட்டிமுடித்தார்.

துறைமுகத்தில் மாத்திரமன்று யாழ்ப்பாண நகரிலும் வியாபாரதாபனத்தை நிறுவிக் காரைநகர் மக்களுக்கு முன்னோடியாக விளங்கினார்களிருவரும்.

ஆறுமுகம் போதிய தானதருமங்கள் செய்தவர். கோப்பாய் ஆசிரியர்கலாசாலையை அருணாசல உபாத்தியாயர் தொடங்கிய காலத்தே அதன் பராமரிப்புக்கும் பயிலும் ஆசிரியரின் உண்டி உணவிற்கும் தோன்றாத்துணையாக நின்று உதவியவர். வியாவிற் பாடசாலை கட்ட உபகரித்தவர்.

தற்போது யாழ்ப்பாணத்தில் வீரகத்திப்பிள்ளை அன்சன்ஸ் என்ற தாபனக் கட்டிடம் ஆறுமுகத்திற்கே முன்னர் சொந்தமாக இருந்தது. யாழ்ப்பாணம் ஐக்கிய பண்டசாலை தாபித்த முக்கியத்தர்களில் ஒருவர் இவர்.

மூத்தவராகிய சபாபதிப்பிள்ளைக்குப் புத்திரிகள் மூவர். புத்திரன் ஒருவர். சுவாமிநாதன் அவர் பெயராகும். மூத்த புத்திரியைக் காரைநகர் கிழக்கு விதானையராக நற்பணி பல புரிந்த இ. வைத்திலிங்கம் வதுவை செய்தனர். இவர் 1865—ற் பிறந்தனர்; 1925—ல் இவ்வுலக வாழ்வு துறந்தனர்.

இளையவராகிய ஆறுமுகத்திற்கு மகனொருவருளர். கணபதிப்பிள்ளை என்ற நாமமுடையார். புகைவண்டிப் பகுதியில் உள்ளகக் கணக்காய்வாளராக உத்தியோகம் புரிகின்றார். ஆறுமுகத்திற்கு மகளுமொருவர்; மீனாம்பாள் என்றபெயருடையாள். வியாவிற் பாடசாலையில் என்னிடம் படித்தவர். கட்டுவன் வாசியான தாமோதரம்பிள்ளையை முடித்துப் பெண்கள் மூவரையும் ஆண் ஒருவரையும் பெற்றவர். மீனாம்பாளின் மூத்த மகளாகிய இந்திராணி பயிற்சி பெற்ற ஆசிரியர்; கௌரி என்ற புத்திரி புவியியற் சிறப்புப் பட்டதாரி. இளைய மகள் பவானி, காரைநகர் மக்களின் அபிமான புருடராகிய சுப்பிரமணியதேசிகர் அவர்களின் இளைய மகனை—பட்டதாரி—வதுவை செய்துள்ளார்.

**வேலாயுதர் சண்முகம்:—** நற்பெருங்குடியிற் பிறந்த இவர் யாழ்ப்பாணப் பட்டினத்தில் புடைவை வியாபாரத்தில் பெருஞ் செல்வம்படைத்தவர். கந்தையா, வேலுப்பிள்ளை, காங்கேசபிள்ளை என்ற புத்திரர் மூவர்.

வேலுப்பிள்ளை பட்டதாரி ஆசிரியராக இருந்து நடுத்தர வயதிலிறந்து விட்டனர்.

சண்முகம் என்பவருக்கு ஆறுமுகம் என்பவர் இளைய சகோதரர். இவரும் தமையனைப் போல் புடைவை வியாபாரத்தில் செல்வம் படைத்துச் சீரும்சிறப்புமாக வாழ்ந்தவர். இவரின் மகன் குமாரவேலு. குமாரவேலுவின் புத்திரரே வைத்தியகலாநிதி தண்டாயுதபாணி ஆவார்.

**க. செல்லப்பா, க. சிவகுருநாதர்:—** (எட்டியாந்தோட்டை) எட்டியாந்தோட்டையில் பெரியதோர் வியாபாரத் தாபனத்தை நடாத்தியவர்களாகையால் இவர்களை ஊரவர்கள் எட்டியாந்தோட்டைச் செல்லப்பா, எட்டியாந்தோட்டைச் சிவகுருநாதர் என்றழைப்பர்.

திரு. செல்லப்பா தருமசிந்தனையாளர். உள்ளத்தாலும் பேச்சாலும் ஒன்றுபட்டவர். உள்ளத்திலுள்ளதே இவரின் பேச்சினல் வெளிவரும். உள்ளொன்றுவைத்துப் புறம் பொன்றுபேசுவார். உறவு கலவாமை வேண்டுமென்ற வாக்கியத்திற்கு இலக்கியமானவர்.

சாதாரண உடையினர்; சாதாரண போக்கினர். இவ்வகைப் போக்குவாக்கினைச் செல்வந்தரிடத்துக் காண்பது அரிது. யாரெவரென்று பாராது யாவருடனும் அன்பாகப் பேசும் பழக்கமுடையவர்.

ஊரின் விருத்திக்காகப் பல தொண்டுகள் புரிந்தார். சைவமகாசபையில் எப்பொழுதுங் காணலாம். காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு முகாமையாளர் இல்லாது ஊரவர்கள் சலித்துக்கொண்டபோது அதனைக் கையேற்று நடாத்திவந்தவர். முகாமையாளராக இருந்த காலத்தில் பாடசாலையைத் தினசரி தரிசித்து வந்து கடமையைச் சரிவர நடாத்திவந்தார்.

இவரின் மகன் வேலுப்பிள்ளை தொடர்ந்து தந்தையின் வியாபாரத்தில் ஈடுபாடுடையவராக உழைத்துவருகின்ருர். கொழும்பு பாலத்துறையிலோர் தாபனமும் காரை

நகரில் இன்னோர்தாபனமும் தந்தை பேரால் நடாத்திவரு கின்றார்.

திரு. செல்லப்பாவின் தம்பியார் சிவகுருநாதர். சிவகுருநாதர் அவர்களும் எட்டியாந்தோட்டையில் வியா பார தாபனம் வைத்திருந்தவர். செல்வம் பெருக்கியவர். தருமகருமங்கள் பல செய்துள்ளார்.

இவரது மகனாகிய நடராசா தந்தையைப்போல் பெரிய வியாபார தாபனத்தைக் கொழும்பில் தோற்றுவித் துள்ளார். ''யாழ்ரன்'' தாபனம் கொழும்பு முதலாங் குறுக்குத்தெருவில் பெரும் புடைவைக் கடையாக விளங்கு கின்றது. நடராசாவின் மகன் சிவராமனும் வியாபாரத் துறையில் சிறப்புற்று விளங்குகின்றார். சிவகுருநாதரின் மகளை வட்டுக்கோட்டைத் தொகுதியின் பாராளுமன்றத் துப் பிரதிநிதியாகிய திரு. ஆ. தியாகராசா M. A. M. Lit. மணம் புரிந்துள்ளார்.

**கந்தானைக் கந்தையா:—** இலங்கையின் மேல் பாலுள்ள கந்தானையிற் கடைவைத்துப் பெருஞ் செல்வம் படைத்தவராகையாற் கந்தானைக் கந்தையா என்று மக்க ளால் அழைக்கப்பட்டார்.

சிவன்கோவிலில் நடைபெறும் திருக்கலியாண விழாவி னைப் பெரும் எடுப்பில் உற்றார் உறவினர் ஊரார் போற் றப் பலவருடங்களாக நடாத்திவந்துள்ளார்.

இவருக்கு சண்முகநாதன், வைத்திலிங்கம், சுப்பிர மணியம் என்ற புத்திரர்கள் முதற்தாரத்தாலுளர். இவர் கள் மூவரும் தந்தையின் வர்த்தக தாபனத்தைத் தொடர்ந்து நடாத்திவருகின்றனர்.

**சண்முகம் வேலுப்பிள்ளை பொன்னம்பலம்:—** *1901 — 1963.* காரைநகர் தங்கோடையிற் பிறந்தவர். வர்த்தகத் துறையில் பெரும் ஈடுபாடுடையவர். கொழும் பிலே பெரிய வர்த்தக தாபனத்தை உருவாக்கிய பெருமை இவருக்கு உரியதாகும்.

பீடித் தொழிலை இலங்கையில் முதன் முதலாக செய்து காட்டியவர் இவர். இலங்கையில் மாத்திரமல்ல இந்தியா

விலும் இத்தொழிற்தாபனத்தை உருவாக்கி அங்குள்ளார் பலருக்கு வேலை வாய்ப்பு அளித்த பெருமை காரைநகரிற் பிறந்த இலங்கை வாசியாகிய இவருக்குண்டு.

வர்த்தக தாபனங்கள் மூலம் படைத்த செல்வத்தைத் தான தருமங்களிற் செலவு செய்தனர். யாழ்ரன் கல்லூரியைக் கட்ட உதவினர். மூளாய் ஆசுப்பத்திரியில் சிகிச்சை மண்டபம் ஒன்றினைக் கட்டியுள்ளார். கதிர்காம யாத்திரைகாரருக்கென ஆங்கோர் மடம் கட்டியிருக்கிறார். கொழும்பு இராமகிருஷ்ண மடத்து நூல்நிலையம் இவரின் பொருளுதவி பெற்று உருவானது.

*7. 3. 1901*ல் பிறந்து *30. 9. 1963*ல் இவ்வுலக வாழ்வை நீத்தனர்.

இவருக்கு ஆண்கள் இருவர், பெண்கள் இருவராக மக்கள் நால்வருளர். சீவரத்தினம், செல்வரத்தினம் என்பவர்கள் புதல்வர்கள். சீவரத்தினம் வர்த்தகப் பட்டதாரி. உலத்தர் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ளார். கமலா தாபனத்தின் சொந்தக்காரரர்.

இளைய மகன் செல்வரத்தினம். எஸ். வி. பொன்னம்பலம் அன் சன்ஸ் தாபனத்தின் முதலாளியாக தொழில் புரிகின்றூர்

புத்திரிகளிலொருவர் இராசகல்லூரியில் (Royal College) படிப்பிக்கும் பட்டதாரியாகிய திரு. தர்மலிங்கம் அவர்களை மணம் முடித்துள்ளார். மற்ற மகள் அம்பலவாணர் என்பவரை விவாகஞ் செய்துள்ளார்.

**பண்டாரவளை வேலுப்பிள்ளை** : காரைநகர் கோவளத்திற் பிறந்தவர். வியாபாரத்தில் ஈடுபட்டுப் பண்டாரவளை சென்று பெரியதோர் வியாபார தாபனத்தை உருவாக்கிச் செல்வம் பெருக வாழ்ந்தவர்.

இவரின் செல்வம் செல்வாக்குக் காரணமாக இவருடைய மகன் துரைராசா பண்டாரவளையிற் கண்ணியம் மரியாதையுடன் நல்ல வழியில் வந்த சம்பாத்தியத்தைக்

காப்பாற்றி அதனை விருத்தியாக்கிக் கொண்டிருக்கின்றார். இதனால் பண்டாரவளையில் இரு வியாபார தாபனங்களை யுடையவராய் விளங்குவதுடன் அப்புத்தளையிலும் ஓர் தாபனத்தையுந் திறந்துள்ளார்.

பண்டாரவளை நகரசபையில் அங்கத்தவராக இருப்ப துடன் பல ஆண்டுகளாக அதன் உபதலைவராகவுமிருந்து வருகின்றார்.

வேலுப்பிள்ளையின் மகளை எஸ். ஆர். செல்லத்துரை யின் மகனும் பட்டதாரியுமாகிய தேவராசன் வதுவை செய்துள்ளார்.

சி. க. **ஆறுமுகம்** —: வெள்ளையர் ஆறுமுகம் என்று மக்களால் அழைக்கப்படுபவர். பிரபல துறைமுக வியாபாரி. துறைமுகத்தடியில் பெருஞ் செல்வாக்குடையவர். வியா பாரத்தினாற் பெரும் பொருளீட்டியவர்.

வியாவிற் சைவபரிபாலன பாடசாலைக்கு உடையார் நாகலிங்கம் முகாமையாளராக இருந்த போதிலும் ஆசிரி யர்களுக்குச் சம்பளம் கொடுக்கும் முகாமையாளராக இவ ரிருந்து பெருஞ் சேவை புரிந்தனர்.

இவரின் மக்களில் ஒருவராகிய கதிரவேலு தந்தையின் வர்த்தகத் தொழிலை நடாத்துகின்றார். இளைய மகனாகிய சின்னத்தம்பி சோதிடம் மருத்துவம் பொதுச் சேவை இவற்றில் ஈடுபாடுடையவராக இருக்கின்றார்.

**சண்முகம் வேலுப்பிள்ளை:**— இவரின் தந்தை யாரை ஆலடிச்சண்முகத்தார் என்பர். தந்தையைப் போல் தனையனும் நல்ல உயரமும் தோற்றமும் வாய்ந்தவர்.

முதலில் இவர் புகையிலைவியாபாரஞ் செய்தமையினால் புகையிலைக்கார வேலுப்பிள்ளை என்று அழைக்கப்பட்ட னர். பின்னர் நகைவியாபாரஞ் செய்தனர். இதனால் நகைக்கார வேலுப்பிள்ளை என்றும் அழைத்தனர்.

இவருக்கு ஒரேயொரு மகள். திரு. அ. முருகேசு அவர்கள் இவரின் மருகர். திரு. முருகேசு அவர்கள் தபாற் கந்தோர்ப் பகுதியில் பெரும் பதவியினராக உத்தியோகம் புரிந்து இளைப்பாறியவர்.

அக்காலத்திலே காரைநகரில் முதன்முதலாகப் பெருந்தொகைப் பணத்தையும் வீடுவாசல்களையும் தமது ஏக புத்திரிக்குச் சீதனமாகக் கொடுத்தவர் என்பர். உள்ளூரிலிருந்து உழைப்பாலுயர்ந்த தனவந்தர் இவர்.

ஆசைப்பிள்ளை, செல்லையா இருவரும் இவரின் சகோதரர்கள். இருவரும் மலாயாவில் உத்தியோகம் பார்த்து இளைப்பாறி ஊரிற் சீருஞ்சிறப்புமாக இருந்தவர்கள்.

**நகைக்கார ஆறுமுகம்:—** யாழ்ப்பாணப் பட்டினத்தில் நகை வியாபாரத் தாபனத்தை நிறுவிய காரை நகர் மக்களுள் முதலிடத்தை வகிப்பவர் இவர். பொதுவாக நகைக்காரன் என்பர். மொந்திபுலத்திற் பிறந்தவர். யாழ்ப்பாணப்பட்டினத்தில் வாழ்ந்தவரெனினும் காரை நகர் சிவன்கோயில் பங்குனி உற்சவ நாலாந்திருவிழா இவருடைய உபயம். அன்றையத் திருவிழா மக்களுக்கெல்லாம் பெருவிழா.

இவரது தொழிலையும் இந்தத் திருவிழாவினையும் பெருமைப்படு முறையில் இவரின் மகன் யப்பான் கனகசபை நடாத்தி வந்தமை யாவருமறிந்ததே. கனகசபையின் மகன் லோகநாதன் பட்டதாரியாகவும் பட்டயம் பெற்ற கணக்காளராகவும் இருக்கின்றார்.

**உடையார் இ. நாகலிங்கம்:—** இவர் உடையாரல்லர். ஆனாற் குணசீலம் உடையவர். நற்பண்புடையவர். செல்வம் செல்வாக்குடையவர். இவரின் தந்தையார் அரசாங்கத்தில் அந்தக்காலத்திலே உள்ள ''உடையார் வேலை'' பார்த்தவர். ஊரிற் பெருஞ் செல்வாக்குடன் உடையார்வேலை பார்த்தவர் எனினும் உடையார்மிடுக்கு என்ற அற்பகுணம் படைத்தவரல்லர்.

உடையார் மகனுனபடியால் இவரை ''உடையார் நாகலிங்கம்'' என்றே மக்கள் அழைப்பர்.

காந்தித்தொப்பி கதர்வேட்டி சேட்டு அணிந்த ஆசானுபாகராய்க்காட்சி அளிப்பவர். செக்கச்சிவந்த மேனி. அளவான உயரம். இளமையிற் பாதரட்சையின்றி பல மைல் தூரம் நடக்கவல்லவர். தினசரி சைவமகாசபைக்கும் தமது இல்லத்திற்கும் இடைப்பட்ட இருமைல் தூரத்தை நடைபோட்டுப் பழகியவர்.

பொதுநலச் சேவையே தமது பெருந்தொண்டாகக் கருதியவர். இவர் இந்தியாவிற் படித்தகாலத்தில் அங்குள்ள பெரியாரின் போதனைசாதனைகளை நேரிற் கண்டறியும் வாய்ப்புப்பெற்றவர். இளம் முறுக்குள்ள வயதில் சைவமகாசபை இவரின் சீவநாடி; பின்னிட்ட காலங்களில் வியாவிற் பாடசாலை இவரின் கண்ணுங்கருத்து. இவரே அதற்கு முகாமையாளரெனினும் தமது கையால் உதவி நன்கொடையைப் பெற்று அதில் ஒருபங்கு வீதத்தை வெட்டியெடித்து ஆசிரியருக்குச் சம்பளங் கொடுத்தாரலலர். அந்தப்பொறுப்பு பலிகாடு ஆறுமுகம் முதலாளியாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அந்தக்காலத்துப் பாடசாலை முகாமையாளருக்குள் இவர் தனித்தன்மைவாய்ந்தவர். பாடசாலைக்கு நாள் தவருது செல்லும்பான்மையுடையவர். காலையிலும் போவார்; மாலையிலும் போவார். மாலையிற் போகும்போது மல்லித் தண்ணீர்கொண்டு செல்வர். வரமுடியாத ஆசிரியருக்குப் பதிலாகப் படிப்பித்துங்காட்டுவர். பாடசாலையை நாள் தோறும் தொடக்கிவைப்பவரும் இவர்; முடித்துவைப்பவரும் இவர். அடியேனும் அங்கு ஆசிரியராகப் பணிபுரிந்தவன். இந்த முகாமையாளர் எனக்கு வாய்க்காதுபோயிருந்தால் நான் ஆசிரியராகப்பயிற்சி பெற்றிருக்கவேமாட்டேன். நிலைபேருன ஆசிரியராக்கிய பெருமை இவருக்கே உரியது. என்னைப்போல் வேறும் பலரை இவர் ஊக்குவித்து உயர்த்தியுள்ளார்.

சைவமகாசபையிலும், பாடசாலையிலும் நெசவு நிலையங்களையுண்டாக்கிக் காரைநகரில் முதன்முதலாக நெசவுத் தொழில் பரப்ப உபகாரமாக இருந்தவர்.

காரைநகரிற் பேச்சுக்கலையை வளர்த்தவர். பெரியார்களை அழைப்பித்துச் சொற்பொழிவாற்றுவிப்பதிற் சலியாது உழைத்தவர்.

பழக இனியர்; பேச இனியர்; கள்ளங்கபடமில்லாதவர். பொதுத்தொண்டே இவரின் ஆசையும்பாசமும்.

உத்தியோகத்தை நாடாது, தமது உயர்ச்சியைவிரும்பாது காரைநகரின் பொதுநலனுக்காக உழைத்த உத்தமர். என்றென்றும் இவர் நினைக்கப்படுவாராக.

உடையார் நாகலிங்கத்தின் மக்களில் ஒருவராகிய திருநாவுக்கரசு காரைநகரில் கிராமசேவகராகக் கடமையாற்றுகிறுர்.

**பஞ்சாட்சர ஐயர்:** — *1889 – 1953* காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் நெடுங்காலமாகத் தலைமை ஆசிரியராக இருந்தவர். நாகமுத்துப்புலவர், சுப்பிரமணியதேசிகர் முதலானேர் உடனுசிரியர்களாக இருந்தவர்கள்.

ஒழுக்கமும் நேர்மையும் நிறைந்தவர். செம்பொன் மேனியர். சிவபூசை தவருதவர். சோதிடசாத்திரத்திலும் வல்லவர். கோயில்களில் நடைபெறும் புராணப்படிப்புக்கு உரை சொல்லும் தகைமை வாய்ந்தவர்.

திண்ணைபுரவெண்பா என்ற நூலினை இயற்றியவர். சுப்பிரமணிய வித்தியாசாலைப் பழைய மாணுக்கரால் அச்சேற்றப்பட்டது.

தமிழ் மக்களாற் பெரிதும் மதிக்கப்பட்டவரும், தமிழறிஞரும் வித்தியாதரிசியுமாயிருந்த முகாந்திரம் சதாசிவ ஐயரின் சகோதரி மகனுவார் இவர்.

பஞ்சாட்சர ஐயர் மருதடிப்பிள்ளையார் கோயிலுடன் நெருங்கிய தொடர்புவாய்ந்தவர். மருதடி இரட்டைமணி மாலை என்ற நூலையும் இயற்றியுள்ளார்.

**கா. சி. மகேச சர்மா, F. R. A. S.:** — *1892 — 1965* முருகேசையரின் மகன் கார்த்திகேயப் புலவர்; கார்த்திகேயப் புலவரின் இளைய மகன் சிவசிதம்பர ஐயர். சிவசிதம்பர ஐயரின் மகனே மகேசசர்மா. தந்தையாராலிடப்பட்ட பெயர் சிவஞானசுந்தரசர்மா. வியாவிற் பாடசாலையிற் தமிழ் கற்றனர். பின்னர் காரைநகர் இந்துக்கல்லூரியில் ஆங்கிலம் கற்றனர்.

தந்தையார் இறந்ததன் காரணமாகப் பெரியதந்தையாரின் முயற்சியினால் பருத்தித்துறை ஆட்லி கல்லூரியிற் படித்து சீனியர் பரீட்சையில் சித்தியடைந்தனர். அங்குள்ள வேலாயுதம்பிள்ளை பாடசாலையிற் சிலகாலம் படிப்பித்தனர். சொந்தஊர் வந்து இந்துக்கல்லூரியிற் படிப்பித்துவருகையில் அரசாங்க இலிகிதர் சேவையிற் சேர்ந்து கேகாலைக் கச்சேரியில் நியமனம்பெற்றார். உணவுப்பிரச்சினை காரணமாக 22 நாள் வேலைபார்த்துவிட்டு இலிகிதர் வேலையைத்துறந்து மறுபடியும் இந்துக்கல்லூரியிற் சேர்ந்து படிப்பித்தனர்.

மூன்றுவாரக் கேகாலைக் கச்சேரி வேலை இவரை நொத்தாரிசு வேலையிலிருத்தல் வேண்டுமென்ற ஆசையினை ஊட்டியது. 1923-ம் ஆண்டு நடைபெற்ற நொத்தாரிசுப் பிரவேச பரீட்சையில் முதலாவதாகச் சித்தியடைந்தனர்.

வானசாத்திரத்திலும் கருத்துக்கொண்டு அதனைத் தன்வலியப்படித்துத் தேர்ச்சியடைந்தனர். திசைநாயகம் பிறக்கிராசியாரும் (காசிப்பிள்ளை) இப்படிப்பில் இவருக்கு உதவி செய்தனர்,

நொத்தாரிசு இறுதிப்பரீட்சையில் தேறிச் சங்கானையிலிருந்து தொழில்புரிந்தனர். 1928 ஆவணி மாசத்தில் இவரின் முதலாம் உறுதி எழுதப்படலாயிற்று. பின்பு புத்தூ

ரில் நொத்தாரிசாக இருந்தனர். 1930—ம் ஆண்டில் காரை நகரிற் கடமையாற்றத் தொடங்கினுர்.

1936—ல் வானசாத்திரத்துறையில் மேலும் முயன்று பிரித்தானிய வானசாத்திர சங்கத்தில் அங்கத்தவரானுர். 1943—ல் F.R.A S. மகிமை அங்கத்துவம் கிடைத்தது. சாதகம் கணிப்பதில் வெகுநிபுணராகவுமிருந்தனர்.

நொத்தாரிசு வேலையை நேர்மையாகவும் நீதியாகவும் யாவரும் போற்றும்வண்ணம் பார்த்தனர். மக்களின் அபிமான புருடனுகத்திகழ்ந்தனர்.

1965-ம் ஆண்டு தசம்பர் மாதம் 7 ந் தேதி இறைவனடி சேர்ந்தனர்.

**சுப்பிரமணிய தேசிகர்:—** இவர் பருத்தித்துறையூரினரெனினும் காரைநகரில் மணம்முடித்திருந்தவர். ஈமக்கிரிகைச் சைவக் குருக்களாக மக்களின் மனத்திருத்திக்கிசையப் பணிபுரிந்தவர். பெரியோர்சிறியோர் என்ற பாகுபாடின்றிக் கிரிகையினைச் சீரும்சிறப்புமாக முற்றும் முழுவதுமாக நிறைவேற்றிவைப்பர்.

காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்வி கற்பித்தவர். பஞ்சாட்சர ஐயருடன் நெருங்கிப் பழகியவர்.

சைவமகாசபையுடன் மிகுந்த தொடர்புகொண்டு வேதாகம சாரங்களையுடைய சைவப்பிரசங்கங்கள் மூலம் சமயமும், சங்கநூல்கள், புராணங்கள் இவற்றைப் பயன்படுத்திச் செய்யும் சொற்பொழிவுகள் மூலம் தமிழும் வளர்த்தவர்.

இன்று இவரின் மகன் தந்தையின் தொழிலைத் தகவுற நடாத்திவருகின்றுர்.

**விசுவநாதர் துரையப்பா:**— பயிற்சி பெற்ற ஆசிரியராக இலங்கை அரசாங்கபாடசாலைகளிற் தலைமை ஆசிரியராக விளங்கியவர். நெல்லியடி கோப்பாய்ப் பாடசாலை

களின் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் பேரும் புகழுமாகக் கடமை புரிந்தவர்.

கோப்பாய் சாதனு பாடசாலையிற் தலைமை ஆசிரியராக இருந்த காலத்தில் காரைநகர் மாணுக்கர் பலர் அப் பாடசாலையிற் சேர்ந்து படித்து ஆசிரியர்களாக முன்னேற நல்வாய்ப்புகள் செய்து கொடுத்தவர்.

இவருக்கு இருவர் புத்திரர். மூத்தவராகிய குமாரசுவாமி கணக்காளர் உத்தியோகத்திலிருக்கிருர். இளையவராகிய விசுவநாதன் பட்டதாரியாகி யாழ்ப்பாணக் கல்லூரியிற் படிப்பிக்கின்ருர்.

**ஆறுமுகம் சங்கரப்பிள்ளை:—** ஆசிரியராகக் கடமை புரிந்து இளைப்பாறியவர். இலங்கையின் பலபாகங்களில் தலைமை ஆசிரியராக இருந்தவர். இவரின் சகோதரர் கணபதிப்பிள்ளையும் சாமி பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தவர்.

சங்கரப்பிள்ளை ஆசிரியருக்கு பிள்ளைகள் நால்வர். மூத்த மகளாகிய மங்கையர்க்கரசி சொந்த மைத்துனராகிய திரு. முருகேசுவை மணம் முடித்துக் கிராம முன்னேற்றத்திற்காக உழைத்து வருகின்றனர். இவரின் பெருமுயற்சியால் நீலிப்பந்தனையில் நெசவுசாலை உருவாகி நடைபெற்று வருகின்றது. சமூகசேவையிலும் முன்னின்று உழைத்து வருகின்ருர்.

**எஸ். ஏ. நாதன்:—** ஆறுமுகநாதன் என்பது இவரின் முழுப் பெயர். மலாயாவில் பத்திரிகை ஆசிரியராக அமர்ந்து பின்னர் தாய் நாடாகிய காரைநகருக்குத் திரும்பி வந்து ஆசிரியராகப் பணி புரிந்தனர்.

சாதுரியமாகவும் கலகலப்பாகவும் கேட்டார்ப்பிணிக்குந்தகையதாகவும் பேசவல்லவர். ஆங்கிலம் தமிழ் இரண்டும் சரளமாகப் பேசும் ஆற்றல் வாய்ந்தவர். விஞ்ஞாபனங்களை ஆங்கிலத்தில் எழுதும் போது எடுத்தடி மடக்காய் நின்றநிலையில் சரமாரியாகப் பொழியக் கூடியவர்.

இவரின் மூத்த மைந்தன் பாலசுப்பிரமணியம் இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்ருர். அடுத்த மகனுகிய நடராசா பட்டதாரி ஆசிரியராகக் கடமை ஆற்றுகின்ருர்.

**கார்த்திகேய உபாத்தியாயர்:**—இவர் களபூமிச் சுந்தரமூர்த்தி நாயனுர் பாடசாலைத் தலைமை ஆசிரியர். இப் பாடசாலையின் உயர்ச்சிக்குக் காரண கருத்தாவாக இருந்தவர். தமிழ்ப் பாடசாலைகளில் பரிசளிப்பு விழா நடாத்துவதற்கு முன்னேடியாய் இப் பாடசாலையில் ஆண்டுதோறும் பரிசளிப்பு விழா நடாத்திக் காட்டியவர். இவருக்குப் புத்திரர் ஒருவர். பெயர் சிவசெந்தில்நாதன் அப்போதிக்கரியாகக் கடமையாற்றுகிருர். இவர் செல்லப்பா வேலுப்பிள்ளையின் மகளை வதுவை செய்துள்ளார்.

**அருளம்பலவனுர் சு. பண்டிதர்:**— காரைநகர் உயர் குடியில் பிறந்த அருளம்பலவனுரின் தந்தையார் பெயர் சுவாமிநாதன். சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பகல்வி உயர்தர கல்வி இரண்டினையும் பஞ்சாட்சர ஐயர், சுப்பிரமணிய தேசிகர் முதலாம் நல்லாசிரியர்களிடம் கற்றுத் தேர்ச்சியடைந்தனர்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியிற் பயின்று ஆசிரியரானுர். தாம் படித்த சுப்பிரமணிய வித்தியாசாலையிலேயே, தம்மைப் படிப்பித்த குரவர்களுடன் பல ஆண்டுகள் படிப்பித்தனர்.

1963ம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச் சங்கம் நடாத்திய பண்டிதர் பரீட்சையிற் சித்தியடைந்தனர்.

பெரும்பாணுற்றுப்படை, பதிற்றுப்பத்து திருவாசகம் முதலாம் நூல்களுக்கு விரிந்த உரைகள் எழுதிப் பேரும் புகழும் பெற்றனர்.

பதிற்றுப்பத்தின் உரைவளங்கண்ட இலங்கைச் சாகித்திய மண்டலத்தினர் ஆயிரம் ரூபா பரிசாக அளித்தனர். காரைநகர் மக்கள் இதனைப் பாராட்டி விழா எடுத்துப்

பொன்னுடை போர்த்துப் பொற்கிழியும் வழங்கி ''சங்க நூற் செல்வர்'' என்ற பட்டமும் அளித்தனர்.

1910 சித்திரை 11ம் நாளன்று பிறந்த அருளம்பலவ ஞர் 1966ம் ஆண்டு வைகாசித் திங்கள் 7ம் நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தனர்.

பண்டிதர் அவர்களின் மூத்த மகன் — பட்டதாரி — மகேசுவரநாதன் உள்நாட்டு இறைவரித்துறையிற் பதவி உத்தியோகத்தராகக் கடமையாற்றுகின்றார். மகளும் ஒரு வர் பட்டதாரி; மற்றுமோர் மகனும் பட்டதாரி.

**நமசிவாயம் நடராசா K. C.** *1897—1947.* சிதம் பரப்பிள்ளை வீரகத்தி திரு. நடராசா அவர்களின் பிதாப் பிதா. நமசிவாயம் இவரின் தந்தையார் பெயர். தந்தை யார் மலாயாவில் உத்தியோகம் புரிந்தவர். அக்காலத்தில் காரைநகரிற் கூடிய இளைப்பாற்றிச் சம்பளம் பெற்றவர் இவராவார்.

திரு. நடராசா அவர்கள் உயர் நீதி மன்றத்தில் திறமை மிக்க அப்புக்காத்தாகத் தொழில் புரிந்தவர். இவ ரின் சட்ட நுணுக்கப் பயிற்சியினையும் தொழிலாற்றுந் திற மையினையும் உணர்ந்த அரசாட்சியார் K. C. பட்டமு மளித்து இவரை உயர்நீதிமன்ற நீதியரசராக நியமித்தனர். நியமிப்புப் பெற்றுச் சில ஆண்டுகளால் இறைவனடி சேர்ந் தனர்.

பயபத்தியிற் சிறந்தவர்; நல்லொழுக்கம் நிறைந்தவர்; செல்வம் படைத்தவர். திருவாசகத்தில் பெரிதும் ஈடுபாடு டையவர். படைத்த செல்வம் முழுவதையும் தமது அரு மைப்பாரியாரிடத்து ஒப்படைத்து நிறைவெய்தினர். பாரி யாரும் கணவன் பணித்த வழி நின்று தானதருமங்கள் புரிந்து அறவழியிற் சம்பாதித்ததைப் புண்ணியகருமங்களிற் செலவு செய்வதற்காகக் காப்பாற்றி நற்பெரும் பணிகள் ஆற்றி வருகின்றார்.

இந்துக் கல்லூரிக்கு நடராசா ஞாபகார்த்த மண்ட பம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. மண்டபத்தோடு

சேர்ந்த நிலமும் பாடசாலைக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. பாடசாலையின் பாங்கரின் பிரசவமனை, மருந்தகம், கட்டப் பட்டு அரசாங்கத்திற்குக் கையளிக்கப்பட்டிருக்கிறது. இவ ரின் சொந்தப் புத்தகாலயத்து நூல்கள் யாவும் பல்கலைக் கழகத்திற்கு அளிக்கப்படலாயின.

யாவற்றிற்கும் மேலாக இலட்சத்திற்கு மேலாகச் செலவு செய்து சிவன் கோவிலின் அண்மையில் சிவ ஆச்சிர மம் கட்டப்பட்டுப் பாரியாரால் வெகு கண்ணியமாகவும் திறமையாகவும் பரிபாலிக்கப்பட்டு வருகிறது. அன்ன தானம் நித்தியம் நடைபெற்று வருகிறது.

நடராசா அவர்களுக்குச் சகோதரர் ஒருவரிருந்தனர். சின்னத்துரை என்பது அவரின் நாமம். மருத்துவத்துறை யில் இவரின் நாமம் விளங்குகின்றது. கீழைத் தேசங்களி லுள்ள ஆங்கில வைத்தியர்களில் முதன்மையான பட்டங் கள் பெற்றவர். நீதாசன முறையோடு சம்பந்தப்பட்ட வைத்திய பரிசோதனைகளிற் திறமை வாய்ந்தவர். உத்தி யோகக் கடமையாற்றுங் காலத்து அகால மரணத்துக் காளானார்.

**பிறக்கிராசியார் அருமைநாயகம்:—** தில்லையம் பலம் நொத்தாரிசுவின் மகன். அல்லின் ஏபிரகாமின் மரு மகன். அமைதியாக வழக்கறிஞர் தொழில் புரிந்து காரை நகரில் வாழ்ந்திருந்தவர். பின்னிட்ட காலத்திலே யாழ்ப் பாண நகரிற் குடிபதியாய் வாழ்ந்தவர். அப்புத்துரைச் சட்டம்பியாரின் மூத்த மகனாகிய திரு. மதியாபரணம் B. A. இவரின் மகளை வதுவை செய்துள்ளார்.

**பிறக்கிராசியார் ஆறுமுகம்:—** காரைநகர் வலந் தலையிற் பிறந்து வளர்ந்தவர். இளம் வயதிற் 'கிறிக்கெற்' ஆட்டத்திற் திறமை மிக்கவர். முதுமையிலும் எங்களுடன் சேர்ந்து விளையாடினவர்.

சைவசமய பத்தர். தேவார திருவாசகங்களை இவர் எப்பொழுதும் பாடிக் கொண்டிருப்பர். கோட்டிலும் வீட்டிலும் பாடுவார். வெள்ளிக் கிழமை தோறும் காலைப்

பூசையில், காரைநகர் சிவன் கோவிலில் இவர் பாடுவதை மக்கள் கேட்டு அனுபவித்துள்ளார்கள். சயம்புச் சட்டம்பியாரின் பசனைக் கோட்டியுடன் சேர்ந்தும்பாடுவார்.

கோட்டுக்குப் போகும் போது குதிரை வண்டியிற் செல்வார். குதிரை வண்டிக்காலம் போனபின் சிறிய மோட்டார்க்காரொன்று வைத்திருந்தனர்.

ஆணழகன்; சிவந்தமேனியன்; சுற்றியுடுத்த உடையினன். புத்திரிகளிருவர். மூத்தமகளைத் திரு. ச. சுந்தரமூர்த்தி அவர்கள் விவாகஞ் செய்தவர். இவர் இனமுறையாலும் மருகர்; மணமுறையாலும் மருகர். இளைய மகளை மருமகன் முறையான மா. வேலுப்பிள்ளை மணம் முடித்தனர். இவர் பிறக்கிராசியாராகத் தொழில் புரிந்தவர்.

**சங்கரப்பிள்ளை சுந்தரமூர்த்தி:—** பிறக்கிராசி ஆறுமுகத்தின் மருகர். காட்டர் சங்கரப்பிள்ளையின் மகன். கொழும்பு பெரிய தபாற் கந்தோரிற் பெரும் பதவியினராகக் கடமையாற்றிய சி. க. சண்முகம் அவர்களின் மைத்துனர்.

அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப்பாறிய பின்னர் சமய அலுவல்களில் ஈடுபட்டு ஈழத்துச் சிதம்பரம் எனப்படும் சிவன் கோவில் நந்தவனத்தைச் செம்மைப்படுத்துவதிற் பெரிதும் முயன்றவர்.

**சிதம்பரப்பிள்ளை கந்தப்பர் சண்முகம்:—** சண்முகத்தின் பிதாப்பிதா சிதம்பரப்பிள்ளை. சிதம்பரப்பிள்ளைக்கு இருவர் புத்திரர் வீரகத்தியும், கந்தப்பரும். கந்தப்பர் நீதியரசர் ந. நடராசா K. C. அவர்களுக்குப் பேரன் முறையினர். கந்தப்பருக்குப் புத்திரர் நால்வர். சிதம்பரப்பிள்ளை, சோமசுந்தரம், நாகலிங்கம், சண்முகம். ஆச்சிப்பிள்ளை என்ற ஒரேயொரு மகள். மூத்தவராகிய சிதம்பரப்பிள்ளை இலண்டன் சென்று பாரிஸ்ரர் பட்டம் பெற்றவர். இறங்கூன் பினுங்கு என்ற இடங்களிற் நியாயதுரந்தரராகத் தொழில் புரிந்தவர்.

சோமசுந்தரம் மலாயாவில் மருத்துவப் பகுதியில் உத்தியோகம் புரிந்து இளைப்பாறி ஊர்திரும்பிப் பெருமதிப்புடன் வாழ்ந்தவர். இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்காக உழைத்தவர். இவரின் சிக்கன வாழ்க்கையினிமித்தம் இவரைச் செட்டியார் என்பர். பகுத்தறிவு வாதியாகத் திகழ்ந்தவர். இவரின் மூத்த மகன் பிறக்ரர் இராமச்சந்திரன். சிவராமன் இன்னேர் மகன்.

நாகலிங்கம் மலாயாவில் பெருந்தோட்ட அதிபராக இருந்தவர். இவரின் மூத்தகுமாரராகிய வைத்தியகலாநிதி சம்பந்தர் இன்று மூளாய்க் கூட்டுறவு ஆசுப்பத்திரியில் யாவரும் மெச்சும் பான்மையில் இடாக்குத்தராகக் கடமையாற்றுகின்ருர்.

கந்தப்பரின் இளைய புத்திரனே சண்முகம். இவரை இனசனத்தார் 'அப்பு' என்று அழைப்பர். இலங்கைத் தபாற்கந்தோர்ச் சேவையிற் சிரேட்ட பதவி வகித்தவர். காரைநகர் மக்களிற்பலர் இவர் உதவி பெற்றுத் தபாற்கந்தோர்ப் பகுதியில் நல்ல உத்தியோகத்திலிருந்து வருகின்றனர்.

வட்டுக்கோட்டைத் தொகுதிக்குப் போட்டியிட்ட சுந்தரசிவம் M. A. சண்முகத்தின் மூத்தகுமாரனுவார். மூத்த மகளை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபராகிய திரு. ந. சபாரத்தினம் B. A. விவாகஞ் செய்துள்ளார்.

**அருணுசலம் சண்முகம்:—** காரைநகரிற் பிறந்து வளர்ந்து படித்து மலாயாவில் உத்தியோகம் பார்த்து இளைப்பாறிப் பின்னர் பிறந்தகம் வந்து யாழ்ப்பாணம் பறங்கித் தெருவில் நகை அடைவு பிடிக்கும் தொழிலைச் செய்தவர். காரைநகரில் இப்போதிருக்கும் நகை அடைவு பிடிகாரர் யாவரும் இவரைப் பின்பற்றியே இத் தொழிலைச் செய்கின்றனர். இவரின் தம்பிமார் தம்பிப்பிள்ளை, தம்பையா இவர்களும் இத்தொழிலைச் சிறப்புற நடாத்துகின்றனர்.

இவர் சிதம்பரப்பிள்ளை கந்தப்பரின் ஏக புத்திரியாகிய ஆச்சிப்பிள்ளையை வதுவை செய்தவர். வைத்திய கலாநிதி

சம்பந்தன் அவர்கள் இனத்தாலும் மணத்ததாலும் இவ ருக்கு மருகர்.

இவர் வித்திட்டு வளர்த்த தொழிலை மூத்த மகனுகிய மகாதேவா மேலும் விருத்தி செய்து தொழில் புரிகின்ருர்.

மலாயாவிலிருந்து ஊர் திரும்பியதும் பொதுச் சேவை யிலீடுபட்டு முதலிற் சிவன் கோவிற் திருப்பணிச் சேவை யிற் காலமும் பொருளுஞ் செலவு செய்பவராயினர். முன் னர் சின்னப் பொடியர் வேலுப்பிள்ளை தொடக்கிவைத்த இக் கைங்கரியத்தில் இவர் பெரிதும் ஈடுபட்டுழைத்தனர். 'காரைநகர்த் திண்ணபுரம் சுந்தரேசுவரர் ஆலய உற்பத்தி வரலாறும் திருப்பணி வேண்டுகோளும்' என்ற நூலினைப் பிரசுரித்துத் திருப்பணி புரிந்தவர். சிவன் கோவில் உள் வீதி மண்டபம் சண்முகம் அவர்களின் உபயமாகும்.

**அருணுசலம் முருகேசு:—** அருணுசலத்தின் மகன் இவராவர். முற்கூறிய சண்முகத்தின் சகோதரர். தபாற் கந்தோர்ப் பகுதியில் பெரும்பதவி உத்தியோகத்திலமர்ந் திருந்து இளைப்பாறியவர். கடமை தவருத உத்தமர். காரைநகர் மக்களிற்பலர் தபாற்கந்தோர்ப் பகுதியில் உத் தியோகம் பார்க்க வாய்ப்பளித்தவர். சண்முகம் வேலுப் பிள்ளையின் ஏகபுத்திரியாகிய நேசரத்தினத்தை வதுவை செய்தவர்.

இவருக்கு புத்திரிகள் நால்வர். மூத்த புத்திரியை திரு. பத்மநாதன் விவாகம் முடித்திருக்கின்ருர். இவரும் தபாற் கந்தோர்ப் பகுதியில் பதவி உத்தியோகத்திலிருக்கின்ருர். இளைய மகளை வைத்திய கலாநிதி மு. கனகராயர் மணம் முடித்துள்ளார்.

**நா. பொன்னம்பலம்:-** காரைநகர் வலந்தலை நடுத் தெருவிற் பிறந்து வளர்ந்தவர். காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலையிற் தமிழ் படித்துப் பின்னர் இந்துக் கல்லூ ரியில் ஆங்கிலம் கற்று அதன் மேற்படிப்புக்காக யாழ்ப்பா ணம் இந்துக் கல்லூரியிற் சேர்ந்து படித்துத் தேறியவர்.

அரசாங்க இலிகிதர் சேவையிற் சேர்ந்து கணக்காளர் என்ற பெரும்பதவிக்கு உயர்த்தப்பட்டவர்.

காரைநகர் இந்துக்கல்லூரியின் பழைய மாணுக்கர் சங்கத்தை உருவாக்கியவர் இவரே. இவரே அச்சபையின் முதற் செயலாளர். இவருடன் சேர்ந்து உழைத்தவர் மொறக்கோ சுப்பிரமணியம் எனப்போற்றப்பட்டுவந்த K. K. சுப்பிரமணியம்.

பழைய மாணுக்கர் சங்க ஆதரவில் காரைநகரிற் பெரிய விளையாட்டுப் போட்டிகளை நடாத்துவதில் வெற்றி கண்டவர்.

சுதுமலையில் விவாகம் முடித்தவர். மாவட்ட வித்தியா தரிசியாக இருந்த திரு. தம்பிப்பிள்ளையின் புத்திரியே இவரின் பாரியார்.

எல்லோரும் போற்ற இல்லற வாழ்க்கையை நடாத்திய காலத்தே அகால மரணத்திற்குள்ளானுர்.

குணத்தாற் குன்று. நடையால் அமைதி; சிந்தனையாற் சீரியர், உணவாற் சைவம்.

**வைரமுத்து வைத்தியர்:-** சுளிபுரத்தில் வாழ்ந்த பெரிய பரியாரியாரின் மகனே இந்த வைத்தியர். ஏதோ தகராறு காரணமாகக் காரைநகரில் வந்து வசித்தவர்.

பெயராலும் தொழிலாலும் வைத்தியர் ஆகிய இவர் இருதாரக்காரன். முதற்தாரத்து மகன் நாகலிங்கம் என்பவருக்கு மூத்ததம்பி அல்லது தம்பையா, கந்தையா (குஞ்சர்) சுப்பிரமணியம் (துரையர்) பரமசாமி என்ற புத்திரர் களிருந்தனர். இவர்கள் யாவரும் தொழிலால் வைத்தியர். சுப்பிரமணியம் என்பவருடைய மகனே சமாதான நீதவானும் வைத்தியரும், பிறப்பிறப்பு விவாகப் பதிவாளருமாகிய இராசசேகரம்.

வைரமுத்து வைத்தியர் இரண்டாந்தாரமாகச் சிவன் கோவில் மணியகாரனுக இருந்த சண்முகத்தார் மகளை

விவாகஞ் செய்து செல்லையா, இராமலிங்கம், முத்தர் என்ற புத்திரர்களையும் மற்றும் புத்திரிமார் நால்வரையும் பெற்றார். செல்லையாவின் மகனாகிய கனகசபை சயம்புச் சட்டம்பியாரின் பாடசாலையிற் படிப்பித்து வருகையில் இளம்பிராயத்தில் அகால மரணமடைந்தனர். என்னுடைய ஆசிரியருமாவார்.

இரண்டாந்தாரத்துப் புத்திரிகளிலிருவரை ஒருவர் பின்னொருவராக எட்டியாந்தோட்டைச் செல்லப்பா மணம் முடித்தனர். இலட்சுமி இரண்டாந்தார மனைவியின் பெயர். செல்லப்பாவிற்கும் இலட்சுமிக்கும் பிறந்த மகனே கே. எஸ். வேலுப்பிள்ளை ஆவார்.

வாயு மண்டலப் பகுதியிற் கடமையாற்றும் வைத்திலிங்கம் என்பவர் மேலே கூறிய இராமலிங்கம் என்பவரின் மகனாவர். இராமலிங்கம் மலாயாப் பெஞ்சனியர்.

வைரமுத்து வைத்தியர் சுளிபுரத்திலிருந்து வந்தமையால் அங்கு அவர் குடும்பத்தினருக்குச் சிறைக் குடும்பங்களிருந்தன. காரைநகரில் இவரிருந்த காலத்தும் அவர்கள் வந்து தொண்டுகள் செய்தனர். இப்பொழுது அவர்கள் இட்டம் போய்விட்டனர் போலும்.

**பரியாரி செல்லர்:-** செல்லையா என்பதே இவரின் பெயர். மக்களின் செல்லப் பெயரே செல்லர். இவர் பிறப்பு இறப்பு, விவாகப் பதிவுகாரராக இருந்தனராயினும் பரியாரி என்றே அழைக்கப்படுவர். கட்டுகளுக்குப் போடும் சேர்வை மிகவும் பேர்போனது, மேலை நாட்டோடு சேர்ந்த வைத்தியத்திற் பயிற்சியுடையவர். சிரங்கிற்குப் பூசும் கெந்தக எண்ணெய் இவரின் பாரம்பரியச் சொத்து.

இவர் சிதம்பரப்பிள்ளையின் மகளை விவாகஞ் செய்தவர். சிதம்பரப்பிள்ளைக்கு மூவர் புத்திரர். கந்தர், ஐயம்பிள்ளை, சின்னப்பு எனப்படுவர். கந்தரின் மூத்தமகன் கணபதிப்பிள்ளை. இவர் மலாயாவில் உத்தியோகம் பார்த்து இளைப்பாறியிருக்கின்றார். கணபதிப்பிள்ளையின் மூத்த மக

ஞகிய பாலகிருஷ்ணன் புகையிரதப்பகுதியிற் கடமையாற்றுகிருர். அடுத்த மகன் மகேசன் பட்டதாரி ஆசிரியர்.

ஐயம்பிள்ளையின் மகன் சிவலிங்கம் பயிற்சி பெற்ற ஆசிரியராகி இளைப்பாறியுள்ளார்.

சின்னப்பு என்பார் யாழ்ப்பாணப் பட்டினத்திற் சென்று வாழ்ந்தார். இவருடைய மக்களில் ஒருவர் எஞ்சினியராக இருக்கின்ருர். புத்திரிகள் பட்டதாரிகளாகி ஆசிரியர்களாக இருச்கின்றனர். செல்லரின் மக்கள் அருமைநாயகம், அருளம்பலம், குணநாயகம், விசுவநாதன் என்பவர்களாவார். மகள் ஒருவருளர்.

**இராமலிங்கம் வைத்தியலிங்கம்** :-காரைநகர் கிழக்கு விதானையாராகக் கடமை பார்த்தவர். சைவப் பெருமக்கள் குடியில் 1885 ஆடியிற் பிறந்தவர்.

''காரைநகர் திண்ணபுர மான்மியம்'' என்ற நூலினை எழுதியவர்.

24–5–61ல் விதானையாக இருந்து இளைப்பாறிக் கொண்டிருக்குங்காலையில் மரணத் திரையால் மறைக்கப் பட்டனர்.

பழுத்த சைவம். நீதி நியாயம் பேணிக் காத்தவர். யாவருக்குமொப்ப விதானையாராகக் கடமை புரிந்தவர். ஊரின் பொது அலுவல்களில் மற்றும் பெரியோர்களுடன் சேர்ந்து நன்கு உழைத்தவர்.

இவருக்கு இராமநாதன், சோமசுந்தரம், பொன்னம்பலம் என்ற மூவரும் புத்திரர். இராமநாதன் ஆசிரியராக இருந்து இறந்து விட்டனர். சோமசுந்தரம், பொன்னம்ட'லம் அரசாங்க உத்தியோகத்திலிருந்து இளைப்பாறியிருக்கின்றனர்.

**தேர்க்காரக் கந்தையா:—** வாரிவளைப் பிள்ளையார் கோயிற் தேரினைச் சித்திரமயமாக ஆக்கிய பெருமை இவருக்குரியது. எனவே தேர்க்காரக் கந்தையா என்பர். வாரிவளைப் பிள்ளையார் கோயில் இவருக்கும், இந்தத் தேருக்கும் பின்னரே வெகு பிரசித்தமடையலாயிற்று. சித்திரை வருடப் பிறப்பன்று தேர்த்திருவிழா நடைபெற்று வருகின்றது.

திரு. கந்தையா அவர்கள் நீர்கொழும்பு கொச்சிக் கடையில் வியாபாரஞ் செய்து வந்து பெருஞ் செல்வம் படைத்தவர். படைத்த செல்வத்தையும் நல்ல வழியிற் பயன்படுத்தியவர்.

இவரின் மகன் கணேசன் நீர்கொழும்பிலே பெரும் வியாபாரத்தில் ஊக்கஞ் செலுத்தித் தந்தையின் நற்பெயரை நிலைநிறுத்தி வருகின்றார்.

**சிருப்பர் வேலுப்பிள்ளை:—** மூச்சிலும், பேச்சிலும் காரைநகர் அபிவிருத்தி பற்றியே பேசுவதில் மிகவும் ஆர்வங் காட்டியவர். காரைநகர் வேதரடைப்பில் பிறந்து வளர்ந்தவர். சிறுப்பர் உத்தியோகத்திலிருந்தவர். ஏறிய வயதடையுமுன்னரே இறைவனடியைத் தழுவிக் கொண்டனர்.

**கந்தப்பர் குமாரவேலு சங்கரப்பிள்ளை:—** யாழ்ப்பாணத்தில் பிரபல வியாபார தாபனத்தை உருவாக்கியவர். இன்று அவருடைய மகன் இரத்தினம் அதனை நிருவகித்து வருகின்றார். இரத்தினம் உறுவான்வளை நாகமுத்துவின் மகளை வதுவை செய்துள்ளார்.

சங்கரப்பிள்ளை மருதடிப் பிள்ளையார் கோயிலடியில் வசித்தவர். பிள்ளையார் கோயிலுக்குப் பல ஏக்கர் நெல்விளை நிலத்தை எழுதியுள்ளார்.

சங்கரப்பிள்ளை மனைவியின் சகோதரி மகனே பிறக்ரர் எஸ். கே. பொன்னம்பலம். இவர் கொழும்பு மாநகரிற் தொழில் புரிகின்றார்.

**சிவஸ்ரீ சு. சரவணபவக்குருக்கள்:—** *(பெரிய குருக்கள்)* — இவர்கள், **1864**ம் ஆண்டு ஆனி மாசத்தில் ஜனனமானார்கள். இவர் காரைநகரிலிருந்த கார்த்திகேயப் புலவரிடத்திலும், வடலியடைப்பு என்னும் ஊரிலிருந்த வேலுப்பிள்ளை உபாத்தியாயரிடத்திலும் கல்வி கற்றார். வியாவில் ஐயனார் கோவிலிலும், மணற்காடு மாரியம்மன் கோவிலிலும் பூசகராகவும், ஸ்தானிகராகவும் இருந்தார். பின் ஈழத்துச் சிதம்பரம் என வழங்கும் சிவன் கோவிலில் பூசகராக நியமிக்கப் பெற்றார். பூசகராகக்கடமையாற்றிய இவர் சில வருஷங்களின் பின் இந்தியாவுக்குச் சென்று வைத்தீஸ்வரன் கோவிலிலுள்ள சிவசுப்பிரமணியக் குருக்களால் ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்ற பின் சிவன் கோவிலில் துவஜாரோகணம் முதலிய நைமித்திகக் கிரியைகள் இவர்களாலே செய்யப்பெற்றன. சரித்திரப் பெருமை வாய்ந்த (ஈழத்துச் சிதம்பரம்) ஐயனார் கோவிலில் புனராவர்த்தன கும்பாபிஷேகமும் இவர்களாலேயே செய்யப் பெற்றது. இவர்கள் புராண படனத்திலும் சிறந்து விளங்கினார்கள்.

இவர்களுக்கு சோமசுந்தர ஐயர், வள்ளியம்மா, தெய்வநாயகி அம்மா, இலட்சுமி அம்மா, **கணபதீசுவரக் குருக்கள்** முத்துக்குமாரசுவாமி ஐயர் என்னும் பிள்ளைகள் பிறந்தார்கள். இவர் சென்ற பிரமாதி வருஷம் கார்த்திகை மாதம் சிவலோகப் பிராப்தியாயினர்.

**சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள்:—** *(சின்னக் குருக்கள்) (1888 — 1967)* நீர் வளமும் நில வளமும் மலை வளமும் மிக்குப்பொலிந்து திகழும் ஈழமணித்திருநாட்டிலே யாழ்ப்பாணத்துக் காரைநகர்ப் பெரும்பதியிலே, ஈழத்துச் சிதம்பர தேவஸ்தானத்திலிருந்து எழும் வேத, கீத நாதங்கள் திக்கெட்டும் பரவித் திருவருளைப் பொழிகின்றன. இத் தேவஸ்தானத்தின் உயிராய், உள்ளமாய், உணர்வாய் இருந்து, அவனருளாலே அவன் தாள் வணங்கி அல்லும் பகலும் அரன்பணிபுரிந்து, **அண்மையில்** அவன் தாள் அடைந்தவர் **சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள்,**

''இறைமலி நகர்'' எனப் பல்லோராலும் போற்றப் படும் காஞ்சிபுரம் அறநெறி தழைக்க இறைபணி ஓம்பும் அந்தணர்கள் நிறைந்த திருப்பதி. இவ்வந்தணர்களுள் ஒழுக்கத்தால் மேம்பட்ட சில குடும்பத்தினர், இராமநாதபுர மன்னர் சோமசுந்தர சேதுபதி மஹாராஜாவின் வேண்டுகோளின்படி திருவுத்தரகோசமங்கைக்கு வந்து அங்குள்ள ஆலயத்திற் சந்ததி சந்ததியாகப் பூசை செய்து வரலாயினர். பல்லாண்டுகளின் பின்னர் இங்கே வைசூரி நோயும், கலகமும் ஏற்படவே இவர்கள் திருவுத்தரகோச மங்கையை விட்டு நீங்கி இராமேஸ்வரம் வந்தார்கள்.

ஈழத்து ஐயனார் கோவிலிற் பூசை செய்வதற்கு, அறிவும் ஆற்றலும் தகுதியும் தண்ணளியும் நிறைந்த குருக்கள் மாரை அழைத்து வரும்படி முத்துமாணிக்கஞ் செட்டியார் என்பவர் இந்தியாவுக்குச் சென்றார். உத்தரகோசமங்கையிலிருந்து இராமேஸ்வரம் வந்திருந்த ஒரு குருக்கள் குடும்பத்தினர், செட்டியாரின் அழைப்பின் பேரில் ஈழநாட்டுக்கு வந்து வியாவில் ஐயனார் கோவிலின் பூசைப் பொறுப்பை ஏற்றனர்.

போர்த்துக்கீசர், தம் இந்துமத எதிர்ப்புக் கொள்கையினால், வியாவில் ஐயனார் கோவிலை இடித்துச் சேதப்படுத்தினர். அந்நிய ஆட்சியாளரின் அட்டூழியங்களைச் சகிக்க முடியாமல், அக்காலத்திலிருந்த குருக்கள்மார், ஐயனார் கோவிலை விட்டு நீங்கி மணற்காட்டு மாரியம்மன் கோவிலுக்கு வந்தனர். பழம்பெருமை மிக்க இக் குருக்கள் பரம்பரையிலே தோன்றியவர்தான் சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள் அவர்கள்.

இவர், *10–3–1888*–ல் சிவஸ்ரீ சரவணபவக் குருக்கள் திருவேங்கடம்மா ஆகியோரின் புத்திரராகப் பிறந்தார். ஆரம்பத் தமிழ்க் கல்வியை, காரைநகர் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் திரு. அருணாசல உபாத்தியார், திரு. நாகமுத்து உபாத்தியார் ஆகியோரிடம் கற்றார். (யாழ்ப்பாணத்திலே ஒரு சைவாசிரியர் கலாசாலை உதயமாவதற்கு மூலபுருஷராக இருந்தவர் இந்த அருணாசல உபாத்தியாயர் அவர்களே). காரைநகரைச் சேர்ந்த ஸ்ரீ இ. முருகேச

ஐயர் என்பவரிடம் சமஸ்கிருதம் பயின்றார். பின்னர் துணைவி அப்பாத்துரைக் குருக்கள், வடலியடைப்பு அருணாசல சாஸ்திரிகள் கந்தரோடை வைத்தியநாத சாஸ்திரிகள் ஆகியோரிடம் சமஸ்கிருதம் கற்றுவிட்டு அல்வாய் இராமலிங்கக் குருக்கள் (மாப்பிளைக் குருக்கள்) அவர்களிடம் குருகுல முறையில், சைவசமயக் கிரியா விஷயங்களைத் துறைபோகக் கற்றார். மாப்பிளைக் குருக்களிடம் பயின்றபலருள் இவரே முதன் மாணாக்கர். தன் மாணாக்கனின் மதி நுட்பத்தையும் கிரியைகளிலுள்ள ஈடுபாட்டையும் கண்டு வியந்து மகிழ்ந்த மாப்பிளைக் குருக்கள், தாம் கடமைபுரியச் செல்லும் ஆலயங்களுக்கெல்லாம் தம் பிரதம உதவியாளராகவும் பக்கதிவாசிப்பவராகவும் ஸ்ரீ கணபதீசுவரக் குருக்கள் அவர்களையே அழைத்துச் செல்வார்.

ஈழத்தின் சிறந்த தமிழ்ப் புலவர்களுள் ஒருவராகத் திகழ்ந்த கார்த்திகேயப் புலவரின் பேர்த்தியும், சிறந்த தமிழறிஞராகிய சிவசிதம்பரஐயரின் மகளும், காரைநகரிற் பிரபல நொத்தாரிசாக விளங்கிய மகேஹசசர்மா அவர்களின் சோதரியுமாகிய சிவயோகசுந்தராம்பாள் அவர்களை 16.3.1906—ல் கணபதீசுவரக் குருக்கள் திருமணஞ் செய்தார். 8.4.1915—ல் காஞ்சிபுரம் சென்று, சிவஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் அவர்களால் ஆசாரியாபிஷேகம் செய்யப் பெற்றார். இதேயாண்டு ஆனித்திங்களில் காஞ்சீபுரம் குமரகோட்டத்துச் சுப்பிரமணிய ஸ்வாமி கோவிலில் நடந்த 33 குண்ட உத்தம மஹாயாகத்தை உடனிருந்து கவனிக்கும் பேறு பெற்றார்.

ஒவ்வொரு நாளும் சிவபூசையும் ஆலய வழிபாடும் செய்து முடித்த பின்னரே உணவு உட்கொள்ளும் வழக்கமுடையவர் இவர். கோவிற் பணிக்கென ஆலயக்கதவுகளைத் திறந்து கொண்டு உள்ளே சென்றார் என்றால், அப்பணிகளை ஒழுங்காகவும் வேத, ஆகம, நெறிப்படியும் செய்து நிறைவேற்றும்வரை, உணவோ, நீராகாரமோ எதுவுமே உட்கொள்ளாது சுறுசுறுப்புடன் இயங்குவார். இவர் ஆசார சீலர்; அறவொழுக்கமுடையவர்; நேர்மை மிக்கவர்; ஆயிரந்தான் கொடுத்தாலும் தன் நற்கொள்கை

யினின்று சிறிதும் தவற மாட்டார். சைவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களுட்பெரும்பாலானவற்றை முறைதவருது அனுஷ்டித்து வந்தார். கோபுரவாசலுக்குள்ளே செல்லும் எவரையும் இவர் சமமாகவே நடாத்துவார். உயர்நீதி மன்றத்து நீதியரசராக இருந்தாலென்ன, சாதாரண ஏழைக் குடிமகன் என்ருலென்ன, இறைவன் சன்னிதியில் இவர் எவ்வித தாரதம்மியமும் காட்டமாட்டார்.

தன் உடல், பொருள், ஆவி, ஆகிய அனைத்தையும் ஈழத்துச் சிதம்பரேஸ்வரனுக்கு அர்ப்பணித்த பெரியார் இவர். இத்தேவஸ்தானத்திலே தொடர்ச்சியாக 64 ஆண்டுகள் சேவை செய்த பெரும் பேறு வாய்க்கப் பெற்றவர் இவர்.

மற்றைய தேவாலயங்களையும் இவர் மறக்கவில்லை. அழைப்பு வந்தவுடன் அகமிக மகிழ்ந்து அவ்வாலயங்களுக்குச் சென்று தம் பணியைச் செவ்வனே செய்து முடிப்பார். நல்லூர்க் கைலாசபிள்ளையார் கோவில், திருமலைப் பத்திர காளி கோவில், சாந்தையர்மடம் பிள்ளையார் கோவில், முதலிய பல கோவில்களின் கும்பாபிஷேகம் குருக்களவர்களாற் செய்யப்பட்டன. நயினுதீவு நாகபூஷணி அம்பாள் கோவில் புங்குடுதீவுச் சிவன்கோவில் திருமலைச் சிவன் கோவில், சித்தன்கேணி மஹா கணபதிப்பிள்ளையார் கோவில் முதலிய ஆலயங்களின் கும்பாபிஷேகத்தில் இவர் சர்வபோதகராகச் சிறப்புடன் பணியாற்றினுர். சைவ சமயக் குருக்கள்மார் பலருக்கு ஆசாரியாபிஷேகம் செய்து வைத்து, அவர்களை ஆலயப்பணி செய்ய வைத்த பெருமைக்குரிய இவர், கர்வம் சிறிதுமின்றி எந்நாளும் அடக்கமேயுருவாக வாழ்ந்து வந்தார். இவர் பிரதம குருவாக இருந்து சிறப்புடன் நடாத்திவைத்த உபநயனங்கள், விவாகங்கள் சாந்திகள் எண்ணிலடங்கா.

ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானத்தின் வடக்கு ரத வீதியிலமைந்த ஸ்ரீ கணபதீசுவரக் குருக்களவர்களின் இல்லம், ஒரு சமயச் சர்வகலாசாலையைப் போன்றே விளங்கிய தெனலாம். ஆயிரக்கணக்கான ரூபா மதிப்புடைய ஏடு

கள், பத்ததிகள், தமிழ், சமஸ்கிருத நூல்கள் இங்குள்ளன. மற்றையோரிடம் இல்லாத பல அபூர்வ ஏடுகள் இவரிடமுள்ளன. இக்காலத்தில் அச்சுவாகனம் ஏறிய நூல்கள் பல, குருக்களவர்களிடம் ஏட்டுருவிலேயே இருக்கின்றன வென்றால், அவற்றின் தொன்மையை ஒருவாறு ஊகிக்கலாமன்றோ? யந்திரங்கள், ஓமகுண்டங்கள் முதலியவற்றைப் பல்வேறு வர்ண மையினால், மிகவும் தெளிவாகச் சித்திரமாகத் தீட்டி வைத்திருக்கின்றார். சமய சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்வதற்கு இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து இவரிடம் பலர் வந்து கொண்டிருப்பார்கள்.

''ஈழத்துச் சிதம்பரம்'' என்ற பெயரில் குருக்களவர்கள் எழுதிய நூல், சமய வரலாற்றுப் பிரியர்களுக்குப் பெருவிருந்தாயமைந்துள்ளது. ஈழத் தமிழர்களின் வரலாற்றை அறிய விரும்புவோர்க்குப் பல முக்கியமான செய்திகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. இந்தியா, இலங்கைப் பத்திரிகைகள் பலவும், இலங்கை வானொலியும் சைவத் தமிழ் அறிஞர் பலரும் இந்நூலைப் பெரிதும் பாராட்டியுள்ளனர். இந்துசாதனம், ஞானதீபம், சுவதரும போதம் போன்ற பத்திரிகைகளில் குருக்களவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வெளிவந்துள்ளன.

ஸ்ரீ கணபதீசுவரக் குருக்கள் அவர்கள், அகில இலங்கைச் சைவ சமயக் குருமார் சபையின் தலைவராக 14 ஆண்டுகள் கடமையாற்றினார். இந்து ஆலய பரிபாலனச் சட்டத்தை எதிர்த்து, குருக்களவர்களின் தலைமையில் அ. இ. சைவசமயக் குருமார் சபை, அப்போதைய பிரதமரான கௌரவ டி. எஸ். சேனநாயக்கா அவர்களைப் பேட்டி கண்டு, தம் முயற்சியினால் ஓரளவு வெற்றியும் பெற்றது. திருக்கேதீஸ்வர குருகுல பஞ்சாயத்துச் சபையில் குருக்களவர்கள் ஓர் அங்கத்தவராக இருந்து சேர். கந்தையா வைத்தியநாதன் போன்ற பெரியோர்களுடன் உழைத்தார். அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கம், அகில இலங்கைப் பிராமண குரு சமூக சேவா சங்கம், அகில இலங்கைக் குருப்பிரம்ம வித்தியார்த்தி சபா, ஈழத்துச்

சிதம்பரம் திருப்பணிச் சபை, காரைநகர் மணிவாசகர் சபை முதலியவற்றின் போஷகராகவும் இவர் இருந்து வந்தார்.

சைவ சமயக் கிரிகைகளில் ஒப்பாரும் மிக்காருமின்றி விளங்கிய ஸ்ரீ கணபதீசுவரக் குருக்கள் அவர்களை, பழனி வேதாகம பாடசாலை அதிபர் ஈசான சிவாச்சாரியார், அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசாமிக் குருக்கள் போன்ற பெரியார்கள் மனமாரப் பாராட்டியுள்ளனர். குருக்கள் அவர்களின் தலைமையில், கந்தரோடை வட்டாக்கையம் மன் கோவிலில் சொற்பொழிவாற்றிய சென்னைப் பல்கலைக் கழகத்துச் சமஸ்கிருதப் பேராசிரியர் ஸ்ரீ துரைசாமி சாஸ்திரிகள், குருக்களவர்களின் ஆழ்ந்த சமஸ்கிருத அறிவையும் தெளிவான உச்சரிப்பையும் பாராட்டினர். சைவ சமயத்துக்குக் குருக்களவர்கள் செய்த சேவையைப் பாராட்டி அகில இலங்கைச் சைவ சமய குருமார் சபையும், சைவாபிமானிகளும் *21–10–62* இல் இவருக்குப் பொன்னுடை போர்த்திப் பொற்பதக்கமும் சூட்டினர். 'வேதாகம கிரியா பூஷணம்' என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது. அகில இலங்கை குருப்பிரம்ம வித்தியார்த்தி சபையினரால் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்படும் வேதாகம பாடசாலை, குருக்களவர்களின் பெயரால் — கணபதீசுவர குருகுல வித்தியாலயம் என வழங்கப்படுகின்றது.

அல்லும் பகலும் ஈழத்துச் சிதம்பரேஸ்வரரின் திருவடிகளையே எண்ணிய ஸ்ரீ கணபதீசுவரக் குருக்களவர்கள் *1967*–ம் ஆண்டு பங்குனி மாதம் *13*ந் திகதி பிற்பகல் *3* மணியளவில் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

**சிதம்பரப்பிள்ளை ஆறுமுகம்:—** சின்னச்சியைச் சிதம்பரபிள்ளை விவாகஞ் செய்து ஆறு ஆண்களையும் இரண்டு பெண்களையும் பெற்றனர். ஆண்களுள் இளையவரே ஆறுமுகம்.

திரு. சி. ஆறுமுகம் வியாபாரத்தில் ஆர்வங் கொண்டு யாழ்ப்பாணப் பட்டினத்தில் வர்த்தக தாபனத்தை நிறுவி

னூர். ப. க. சி. ஆறுமுகம் என்ற விலாசத்தை உடையது அத் தாபனம். சாமி கந்தையாவும் இவருடன் வியாபாரத் தில் சேர்ந்திருந்தவர்.

திரு. ப. க. சி. ஆறுமுகத்தின் மகனுகிய நடராசா பட்டதாரியாகிய பின்னர் ஆ. ச. சங்கரப்பிள்ளை சகோ தரர்களில் ஒருவரான திரு. ஆறுமுகம் என்பவரின் மூத்த மகளை வதுவை செய்துள்ளார்.

சிதம்பரப்பிள்ளையின் மூன்ருவது மகன் பரமாந்தி. பர மாந்தியின் சிரேட்ட புத்திரன் ஆறுமுகம் உபாத்தியாய ராக இருக்கின்ருர். இளைய மகன் சிதம்பரப்பிள்ளை வியா பாரத்தில் ஈடுபட்டிருக்கின்ருர்.

சிதம்பரப்பிள்ளையின் நான்காவதுமகன் சண்முகம். சண் முகத்தின் மகன் கனகரத்தினம் யாழ்ப்பாண நகரில் 'சீ. எஸ். கனகரத்தினம்' என்னும் விலாசத்தில் வியாபாரத் தொழிலை நடாத்தி வருகின்ருர்.

**சின்னையா பொன்னையா:—** பொன்னையா அர சாங்க உத்தியோகத்திலமர்ந்திருந்தவர். ஜெயிலராகக் கடமையாற்றியவர். பொன்னையாவிற்கு மூவர் புத்திரர். மகள் ஒருவர். ஆண்களில் ஒருவர் டாக்ரராகவும் மற்றை யவர் எஞ்சினியராகவும் இருக்கின்றனர். மகள் பட்டதாரி யாக விளங்குகிருர்.

பொன்னையாவிற்குச் சகோதரிகள் மூவர். சுந்தரி, தங் கம்மா, பொன்னு என்போர் அவர்கள். சுந்தரி என்பாரின் பேரப் பிள்ளையே சோதிநாதன் என்ற கிரிக்கேற்று விளை யாட்டு வீரன். தங்கமாவின் மகன் தான் டாக்ரர் வைத்தி லிங்கம். பொன்னுவின் மகளே திரு. ஆ. ச. ஆறுமுகத்தின் மனைவியார்.

**ஆறுமுகம் சண்முகம் சங்கரப்பிள்ளை:**—*1907–1959.* இலங்கையிலே ஏ. எஸ். சங்கரப்பிள்ளை சகோதரர்கள் வர்த்தக தாபனங்களை அறியாதார் யாரும் இருக்க முடியாது. கண்டி மாநகரிலே வீடிக்கடையை உருவாக்கி அதனைப் பிரபல வியாபாரமாக்கிய பெருமை சங்கரப்பிள்ளை, கந்தையா, ஆறுமுகம் என்ற சகோதரர் மூவர்க்குமுரியது. 'வீடிக்கடைச் சங்கரப்பிள்ளை' எனப் பெரும் புகழுமாக வர்த்தக உலகிலிருந்தவர்.

காரைநகர் களபூமியிற் பிறந்து வளர்ந்தவர்; கல்வியில் ஈடுபடாது தொழிலில் நாட்டமுடையவராய் 1934ம் ஆண்டிலே கண்டி மாநகரிலே 'ஏ. எஸ். சங்கரப்பிள்ளை சகோதரர்கள்' என்ற விலாசத்திலே வர்த்தக தாபனம் ஒன்று உருவாயது. நாலு வருடக் கடும் உழைப்பின் பயனாக 1938ல் கொழும்பு நகரில் பென்னம் பெரியதோர் வீடிக்கடைத்தாபனம் அமைக்கப்படலாயிற்று.

வியாபாரப் பெருக்கம் ஏற்படப் பற்பல இடங்களிலும் கிளைத்தாபனங்களும் பெருகச் செல்வஞ் செல்வாக்கொடு பெருமதிப்புமுண்டாக இலங்கை அரசாங்கமும் இவரது தொழில் மேன்மை நோக்கி 1956ல் இவருக்கு ''முகாந்திரம்'' என்னும் பட்டமளித்துக் கௌரவித்தது. அரசும் மகிழ்ச்சியடைந்தது; மக்களும் பெருமகிழ்ச்சியுற்றனர்.

திரு. ஆ. ச. சங்கரப்பிள்ளை அவர்கள் உற்றாரும் உறவினரும் மற்றும் பொதுமக்களும் வாடிக் கலக்கமுறும் வண்ணம் நடுத்தர வயதிலே 1959ம் ஆண்டிலே நற்பெருங்கதி அடையலானார் இவரின் பூத உடல் ஒழிந்தாலும் புகழுடப்பு இன்றும் என்றும் நிலவும் என்பதிற் சந்தேகமில்லை.

யாழ்ப்பாணம், தம்புள்ளை, கலகா, எழுதுமட்டுவாள், காரைநகர் முதலாமிடங்களிலுள்ள கிளைத்தாபனங்களும் தம்புள்ளை, வவனியா, பரந்தன், பளை, யாழ்ப்பாணம், எழுதுமட்டுவாள் புன்னாலை முதலாம் இடங்களிலுள்ள பெற்ரோல் தானங்களும் இவரின் பெயரை நிலை நிறுத்தும்.

காரைநகரில் சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர் என்ற மூவர் பேராலும் பாடசாலைகளுள. சயம்புச் சட்டம்பியாரின் ஆங்கில பாடசாலை திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடசாலையாகும். வியாவிற் சைவபரிபாலன பாடசாலை; திருநாவுக்கரசர் பாடசாலை; களபூமிப் பாடசாலை சுந்தரமூர்த்திநாயனார் பாடசாலை; மணிவாசகருக்குமோர் பாடசாலை ஆகவேண்டுமென்று கருதிய திரு. ஆ. ச. சங்கரப்பிள்ளை பாலாவோடையில் அவர் பேரால் ஒரு பாடசாலை கட்டியெழுப்பிக் காரைநகரில் நால்வருக்கும் பாடசாலைகளிருக்கும் வகை செய்த புண்ணிய சீலர். பாலாவோடையில் பாடசாலை கட்டியதுடன் திருத்தியடையாது அங்குள்ள பழைமை வாய்ந்த அம்மன் கோவிலையும் அழகுறக் கட்டி எழுப்பியுள்ளார். உள் வீதி மண்டபம் பெருஞ் செலவிற் கட்டப்பட்டுண்டு. தேருங்கட்டப்பட்டு வருகிறது.

இவருக்குப் பெண்கள் மூவர்; ஆண்கள் நால்வர். முதலாவது மகளினை வைத்திய கலாநிதி வைத்திலிங்கம் வதுவை செய்துள்ளார். மூத்தமகனாகிய இராசரத்தினம் தந்தையாரின் தொழிலில் ஈடுபட்டுழைக்கின்றார். ஞானப் பிரகாசம் என்ற பெயருடைய இரண்டாவது மகன் இலண்டன் மாநகரில் கணக்காளருக்கான கல்வி கற்று வருகின்றார். இளையவர்கள் இருவரும் செல்வராசா, பாலச்சந்திரன்; தந்தையாரின் தொழிலில் ஈடுபட்டுள்ளார்கள்.

திரு ஆ. ச. சங்கரப்பிள்ளைக்குத் தம்பிமார் இருவர். கந்தையா என்பவர் ஒருவர். மற்றையவர் ஆறுமுகம். திரு ஆ. ச. கந்தையா (1909–1957) யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிற் கல்வி பயின்று தபாற் கந்தோர் அதிபராகக் கடமையாற்றிப் பின்னர் இளைப்பாறித் தமையனாரின் வர்த்தகத்தில் பெரிதும் முயன்றுழைத்தவர். காரைநகர் கிராமச் சபைத் தலைவராக இருந்தவர். அரசாங்கம் இவருக்கு சமாதான நீதவான் பட்டம் வழங்கியுள்ளது. இவரும் நடுத்தர வயதில்அகால மரணத்திற்காளானார். இவரின் புத்திரர்களாகிய இராசநாயகம், பாலசுப்பிரமணியம் தந்தையாரின் தொழிலை நடத்தி வருகின்றனர்.

சங்கரப்பிள்ளை, கந்தையா என்பவர்களின் இளைய சகோதரராகிய திரு. ஆறுமுகம், சகோதரர்கள்பேரில் நிறுவப்பட்ட தாபனங்களைக் கவனித்துக்கொண்டு வருகின்ருர். மூவரின் பெயராலும் நிறுவப்பட்ட தாபனங்களின் சொத்து முதல் இவையெல்லாம் இன்றும் மூவரின் பேரிலும் பங்குப் பிரிவினை செய்யப்படாது யாவருக்குஞ் சொந்தமென்ற அடிப்படையில் நிருவகிக்கப்பட்டுவரும் பான்மை மெச்சுதலுக்கும் பெருமைக்குமுரியதாகும்.

திரு. ஆ. ச. ஆறுமுகம் அவர்களுக்கு ஐந்து பெண்களும் ஆண்களிருவருமுளர். ஆண்களிலொருவர் இராசலிங்கம்; ஞானமலர் களஞ்சியம் என்ற தாபனத்தை நிருவகித்து வருகின்ருர். மற்றையவர் பாலேந்திரன்; பட்டதாரியாகியிருக்கின்ருர். பெண்மக்களில் மூத்த புத்திரியாகிய இராசமலரை இரஞ்சன அச்சக முதல்வர் திரு. ஆ. நடராசா வதுவை செய்துள்ளார், இரண்டாவது புத்திரியாகிய பாலாம்பிகையை இலங்கைப் போக்குவரத்துச் சபையில் ஆராய்ச்சியாளராகக் கடமையாற்றும் ந. கணநாதன் வதுவை செய்துள்ளார்.

# வகையுந் தொகையும்

## நூலாசிரியர்கள்:

1. **சுப்பையர்:**
   - (i) நல்லைநாயக நான்மணிமாலை.
   - (ii) காரைக் குறவஞ்சி.

2. **முருகேசையர்:**
   - (i) தன்னையமக அந்தாதி.
   - (ii) திக்கையந்தாதி.
   - (iii) மாவிந்தம்.

3. **கார்த்திகேயப்புலவர்: *1819—1898.***
   - (i) திருப்போசை வெண்பா — 1924.
   - (ii) நகுலேசுவரி யமக அந்தாதி.
   - (iii) வண்ணைத் திரிபந்தாதி.
   - (iv) திண்ணைபுரத் திரிபந்தாதி.
   - (v) குருக்கேத்திரன் போர் — நாடகம்.
   - (vi) சூரபன்மன் நாடகம்.
   - (vii) சந்திரவண்ணன் நாடகம்.
   - (viii) திருத்தில்லைப் பல்சந்தமாலை.

4. **கா. சிவசிதம்பர ஐயர்:**

(i) காலிக்கதிரேசர் அடைக்கலப்பத்து — 1887.

5. **நாகமுத்துப் புலவர்:** 1857 — 1939.

(i) திருமங்கல வாழ்த்துச் சீட்டுக்கவித்திரட்டு – 1914.

(ii) காரைநகர்த் திண்ணபுர சுந்தரேசர் திருப் பதிகம், திருவூஞ்சல்.

(iii) மலாய்நாட்டு மனோரஞ்சிதக் கும்மி.

(iv) கலிகால வேடிக்கைக் கும்மி.

6. **இ. வைத்தியலிங்கம்:- 1885 — 1961**

(i) காரைநகர் திண்ணபுர மான்மியம் — 1960.

7. **ச. பஞ்சாட்சர ஐயர்:** 1889—1953.

(i) மருதடி இரட்டைமணிமாலை.

(ii) திண்ணபுர வெண்பா.

8. **அரு. சண்முகம்:**

(i) காரைநகர்த் திண்ணபுரம் சுந்தரேசுவரர் ஆலய உற்பத்தி வரலாறு — 1947.

6. **கணபதீசுவரக்குருக்கள்:** 10.3.1888—13.3.1967.

(i) ஈழத்துச்சிதம்பரம் — 1961.

## உரையாசிரியர்கள்

**கா. சிவசிதம்பர ஐயர்**

I. கந்தபுராணம் — சில படலங்கள்

**பண்டிதர் சு. அருளம்பலவனார்: 11.4.1910—20.5.1966**

I. பத்துப்பாட்டு

அ. திருமுருகாற்றுப்படை

ஆ. பெரும்பாணாற்றுப்படை

II. பதிற்றுப்பத்து

III. திருவாசகம்

## பதிப்பாசிரியர்கள்

I. மு. கார்த்திகேயப்புலவர்—1819—1898

1. விதானமாலை

II. கா. சிவசிதம்பர ஐயர்

1. தட்சிண கைலாசபுராணம்—1887.

## பத்திரிகை ஆசிரியர்

**சபாரத்தின ஐயர்**

கலிகாலதீபம்

## ஆசிரியர்கள்

1. அருணாசலச்சட்டம்பியார்
2. சயம்புச்சட்டம்பியார்
3. அம்பலச்சட்டம்பியார்
4. நாகமுத்துச்சட்டம்பியார்
5. அப்புத்துரைச்சட்டம்பியாரும் அவர் பாரியாரும்
6. சபாபதிச்சட்டம்பியார்—சிவலை
7. சபாபதிச்சட்டம்பியார்—கறுவல்
8. பேரார் ஆறுமுகம்
9. வேலுப்பிள்ளை உபாத்தியாயர்—சம்பராமூர்த்தி கேணியடி
10. கா. சி. மகேச சர்மா
11. செல்லையா கனகசபை
12. பொன்னுடையார் வேலுப்பிள்ளை
13. ஆறுமுகம்
14. வீரகத்திப்பிள்ளை

15. பஞ்சாட்சரஐயர்
16. சுப்பிரமணியதேசிகர்
17. அல்லின் ஏபிரகாம்
18. வே. ச. வேலுப்பிள்ளை
19. ஆ. கணபதிப்பிள்ளை
20. ஆ. சங்கரப்பிள்ளை
21. வி. துரையப்பா
22. மு. இரத்தினசிங்கம்
23. எஸ். ஏ. நாதன்
24. கார்த்திகேய உபாத்தியாயர்
25. கே. கணபதிப்பிள்ளை

## நியாய துரந்தரர்கள் — பிறக்கிராசிமார், அப்புக்காத்துமார்.

1. முருகேசர் திசைநாயகம்
2. ஏ. ஆர். சுப்பிரமணியம் — மாவட்ட நீதிபதி
3. ந. நடராசா K. C. உயர்நீதிமன்ற நீதியரசர்
4. ஐ. ஆறுமுகம்
5. தி. அருமைநாயகம்
6. கே. கே. சுப்பிரமணியம் (மொறக்கோ) அப்புக்காத்தர்
7. மா. வேலுப்பிள்ளை

## மணியகாரர்

1. காப்புக்காரப் பெரியமணியகாரன் — (இயற்பெயர் தெரியவில்லை)

## உடையார்மார்

1. சின்னத்தம்பி அம்பலவாணன் 1840
2. சண்முகம் கந்தப்பன்
3. பரமு உடையார்

4. காசிநாத உடையார்

5. தில்லைநாத உடையார்

6. இராமலிங்க உடையார்

7. பொன்னுடையார்

## விதானைமார்

1. கந்தர் வேலுப்பிள்ளை

2. வைத்திலிங்கம் — குஞ்சு விதானையார்

3. ப. சண்முகம்

4. இ. வைத்தியலிங்கம்

## நொத்தாரிசுமார்

1. விஞசித்தம்பிச் சட்டம்பியார் – களபூமி.

2. சின்னத்தம்பி கந்தர் – களபூமி – 1840

3. சங்கரப்பிள்ளை - சின்னுணிச் சட்டம்பியார்

4. சங்கரப்பிள்ளை – களபூமி.

5. வீ. ஈ. டீ. தில்லையம்பலத்தார்

6. கா. சி. மகேசசர்மா

## பிறப்பு இறப்பு விவாகப் பதிவுகாரர்

1. பரியாரி செல்லர்

2. க. ஞானப்பிரகாசம்

## பதவி உத்தியோகத்தர்கள்

1. முகாந்திரம் முத்துக்குமாரு

2. தி. கனகசுந்தரம்

3. மு. பரமநாதர்

4. சி. க. சண்முகம்

5. ச. சுந்தரமூர்த்தி
6. நா. பொன்னம்பலம்
7. அ. முருகேசு
8. சாமி. கதிரவேலு
9. சிறுப்பர் திருச்சிற்றம்பலம்

## பிரபல ஒப்பந்தக்காரர் வர்த்தகர்கள் முதலியோர்

1. கந்தப்பர் சுப்பிரமணியம்
2. ஆ. சங்கரப்பிள்ளை
3. ஆ. ச. சங்கரப்பிள்ளை
4. எட்டியாந்தோட்டைச் செல்லப்பா
5. எட்டியாந்தோட்டைச் சிவகுருநாதர்
6. பண்டாரவளை ச. வேலுப்பிள்ளை
7. வேலாயுதர் சண்முகம்
8. வேலாயுதர் ஆறுமுகம்
9. வைரமுத்து சபாபதிப்பிள்ளை
10. வைரமுத்து ஆறுமுகம்
11. கந்தானைக் கந்தையா
12. சண்முகம் வேலுப்பிள்ளை பொன்னம்பலம்
13. சி. க. ஆறுமுகம்
14. சண்முகம் வேலுப்பிள்ளை
15. நகைக்கார ஆறுமுகம்
16. க. கு. சங்கரப்பிள்ளை
17. ப. க. ஆறுமுகம்
18. தேர்க்காரக் கந்தையா
19. ஹொரணை வைத்திலிங்கம்
20. இங்கிரியா கணபதிப்பிள்ளை

முருகேசர்

வேயுதர்

கணபதிப்பிள்ளை | செல்லப்பா | முருகேசர் | அம்பலவாணர்

செல்லப்பா — பொன்னையா

முருகேசர் — சபாரத்தினம், இரத்தினசிங்கம்

அம்பலவாணர் — சண்முகம் — வேலுப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை, செல்லம், ஆசைப்பிள்ளை, செல்லையா, சவுந்தரம்

மீசைக்காரச் சண்முகம்

முத்தர் <——> முத்தர் (கணபதிப்பிள்ளை)

தம்பையா, அகிலாண்டம், சங்கரப்பிள்ளை, சின்னக்குட்டி, ஞானமுத்து

சிதம்பரப்பிள்ளை

கந்தப்பர்

சின்னக்குட்டி <——> சின்னக்குட்டி

சிதம்பரப்பிள்ளை, சோமசுந்தரம், நாகலிங்கம், சண்முகம், ஆச்சிப்பிள்ளை

செல்லையா

சிவகாமிப்பிள்ளை <————————> சிவகாமிப்பிள்ளை

தங்கப்பிள்ளை | சிவகோமளம் | அன்னம்மா | தருமலிங்கம் | அருளானந்தம் | F. X. C. நடராசா (இந்நூலாசிரியர்) | பவளம் | விநாயகமூர்த்தி | தவமணி | பஞ்சாட்சரம்

## ஆசிரியரைப் பற்றி........

### விருத்தம்

1. செந்தமிழின் பண்ணையெனச் சிறந்தோங்கும்
காரைநகர் செம்மை வீற
வந்தலரும் நல்லிசையார் வள்ளலுயர்
செல்லையா நல்கும் மைந்த
சிந்தைசெயல் மிகத்தூயோய் திறனுய்வும்
புலமார்ந்தோய் செந்நாச் செல்வ
தந்தையினும் தண்ணளியோய் நடராச
நின்புலமை தழைத்து வாழி.

2. அலகில்சுவைத் தீந்தமிழை ஆய்ந்துணர்ந்த
நடராச அறிஞர் உள்ளம்
நிலவுபுலம் நிழலாட நீபடைத்த
நூற்சிறப்பை நினைந்து போற்றித்
தலைமைபெறும் ஈழத்துச் சாகித்திய
மண்டலத்தார் தமிழ்த்தாய் வாழக்
கலைஞருளம் களிபூப்பப் பரிசிலளித்
துமைமதித்தல் கண்டோம் வாழி.

3. முன்னுரையைப் புதுக்கியுரை மொழியாமல்
முதல் நூல்கள் முழுதும் ஆய்ந்து
கன்னலினும் இனியசுவைத் தமிழ்க்கடலுள்
கலைச்சொற்கள் காணும் பண்பால்
தன்னைநிகர் தானுன தமிழ் அறிஞ
நடராசச் சான்றேய் உன்தன்
அன்னையிவள் காரைநகர் ஆனந்தத்
தேன்பருகி ஆர்ந்தாள் வாழி.


4. ஈழமுந்த மிழுமெனநீர் இயற்றியருள்
நூல்வழியை இனிது போற்றி
ஆழமுடன் ஆராய்வும் அமைந்தபெரும்
நூலொன்றை ஆக்கும் வண்ணம்
வாழவே பல்லாண்டு செந்தமிழ்த்தாய்
நினக்கருளை வழங்கி வாழ்வாள்
சூழறத்தின் பயன்பெருகத் தொண்டாற்றும்
நடராச தொழுதோம் வாழி.

5. அற்புதமும் ஆராய்வும் அருள் நெறியும்
அலையெறியும் ஆன்றேர் வாழ்வின்
பொற்புணரும் நடராச புதுக்கலங்கள்
தமிழன்னை புனைந்து வாழ
நற்பனுவல் பலபடைத்து நாவலன்போல்
தமிழ்மரபை நாளுங் காத்துக்
கற்பனைக்கும் எட்டாத முழுமுதலின்
கருணையினுல் கனிந்து வாழி.

**வித்துவான் க. வேந்தனுர்**

இரஞ்சனு அச்சகம்,
98, விவேகானந்தர் மேடு,
கொழும்பு - 13.

# காரைநகர்



தூம்பில்பிட்டி
தீர்த்தக்கரை
கலங்கரை விளக்கம்
சாம்பலோடை மயானம்
திருமதி தங்கம்மா நடராசா மடம்
சிவன் கோயில்
குளம்
கோவளம்
தாவை
முல்லைப்பிலவு
வடகாடு
மல்லிகை
சடையாளி
இருத்தலடி
மாப்பாணவூரி
நெல்வயல்
புதுறோட்டு
பெரியமணல்
வலந்தலை
தங்கோடை
நடுத்தெரு
ஆலடி
மருத்துவ நிலையம்
வாகையடி
யாழ்நகர் கல்லூரி
மணற்காட்டு மாரியம்மன் கோவில்
அஞ்சல் அலுவலகம்
இடைப்பிட்டி
இந்துக்கல்லூரி
சின்ன ஆலடி
பிரசவ விடுதி
பயிரிக்கூடல்
வலந்தலைச்சந்தி
மடத்துக்கரை அம்மன் கோவில்
மொந்திபுலம்
வாரிவளை
பிள்ளையார் கோவில்
நெல்வயல்
சத்திரந்தை
கருங்காலி
தில்லை மயானம்
முருகமூர்த்தி கோயில்
பொன்னாவளை
ஆலடி
களபூமி
திக்கரை


முல்லைப்பிலவு
வடகாடு
இருத்தலடி
மல்லிகை
சலடயாளி
மாப்பாணவூரி
நெல்வயல்
புதிரேட்டு
பெரியமணல்
வலந்தலை
தங்கோடை
நடுத்தெரு
ஆலடி
மருத்துவ நிலையம்
வாகையடி
யாழ்நகர் கல்லூரி
மணற்காட்டு மாரியம்மன் கோயில்
அஞ்சல் அலுவலகம்
இடைப்பிட்டி
இந்துக்கல்லூரி
சின்ன ஆலடி
பிரசவ விடுதி
வலந்தலைச்சந்தி
பயிரிக்கூடல்
மடத்திக்கரை அம்மன் கோவில்
மொந்திபுலம்
வாரிவளை
பிள்ளையார் கோவில்
நெல்வயல்
சத்திரந்தை
மயானம்
கருங்காலி
பொன்னுவளை
முருகமூர்த்தி கோயில்
ஆலடி
களபூமி
திக்கரை
முருகமூர்த்தி கோயில்
நீலங்காடு
விளானை
பலிகாடு
நெல்வயல்
கப்பல் கட்டும் நிலையம்
இராசாந் தோட்டம்
பாலாவோடை
கடற்கோட்டை
கடற்படை நிலையம்
அம்மன் கோயில்
கோயில்கள்
பள்ளிக் கூடங்கள்
உப அஞ்சல் அலுவலகங்கள்
துறைமுகம்
தோப்புக்காடு

